

விகடன் பிரசுரம்
தமிழக வரலாற்றில்
களப்பிரர் காலம்
டி.கே.இரவீந்திரன்

# தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம்

டி.கே.இரவீந்திரன்

விகடன்
பிரசுரம்

Title :
THAMIZHAKA VARALATRIL
KALAPPIRAR KAALAM
© T.K.RAVINDRAN

விகடன் பிரசுரம்: 936

நூல் தலைப்பு:
தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம்

நூல் ஆசிரியர்:
© டி.கே.இரவீந்திரன்

முதற்பதிப்பு : மே, 2016

விலை : ₹ 135

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

முதன்மை உதவி ஆசிரியர்:
அ.அன்பழகன்

உதவி ஆசிரியர்:
ஜெ.கலைவாணி

கிராஃபிக் டிசைனர்:
த.வினோத்

வடிவமைப்பு:
ப.ஷங்கர், தே.ஆறுமுகம், ப.சுப்பிரமணி

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னனு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: books@vikatan.com

# பதிப்புரை

தமிழக வரலாற்றில் மூவேந்தர்களுக்கு உள்ள இடத்தினைப் போன்றே களப்பிரர் என்பாருக்கும் இடமுண்டு. தமிழகத்தின் இருண்ட காலம் களப்பிரர்களின் காலம் என்று சொல்லப்படுகிறது.

களப்பிரர் தென்னிந்தியாவை ஆண்ட அரசர்கள். களப்பாளர் என்றும் இவர்களை வரலாற்றாளர்கள் குறிப்பிடப் படுவதுண்டு. தமிழகத்தை ஏறக்குறைய கி.பி. 300 – கி.பி. 600 காலப்பகுதியில் ஆண்டார்கள் என்றும் அறியப்படுகிறது. இவர்கள் காலத்தில் சமண சமயம், பௌத்த சமயம் தமிழகத்தில் சிறப்புற்று இருந்தது. இவர்கள் பாலி மொழியை ஆதரித்ததாகவே தெரிகிறது. எனினும், தமிழ்மொழியும் இலக்கியமும் வளர்ந்தது. இவர்களது ஆட்சிக்காலமும், இவர்களது கால தமிழ்ப் படைப்புகளும் பின்னர் வந்த சைவ அல்லது இந்து சமயத்தவர்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

களப்பிரர்கள் எங்கிருந்து வந்தனர்? இவர்களின் மூலம் என்ன? தமிழகத்தில் இவர்கள் வலிமைபெற்றதற்கான பின்னணிகள், தமிழகத்தினுள் படையெடுத்த காலம், அவர்கள் ஆரம்பத்தில் தோற்கடித்த மன்னர்கள் யார்? எவர்? என அத்தனை விவரங்களையும், கிடைக்கப்பெற்ற சான்றுகளின் அடிப்படையில் இந்நூலில் தந்துள்ளார் நூலாசிரியர்.

களப்பிரர் காலத்தை விளக்கும் கல்வெட்டுச் சான்றுகள், இலக்கியங்களில் ஆங்காங்கே காணப்படும் சில தகவல்கள் போன்றவற்றை திரட்டித் தந்துள்ளார் நூலாசிரியர். களப்பிரர் காலத்து சமயங்கள், களப்பிரரின் நாணயங்கள், களப்பிரர் காலத்து மொழி வளர்ச்சி, சமயங்கள், கலைவளர்ச்சி என களப்பிரர்களைப் பற்றிய அரிய தகவல்களை ஆய்வு நோக்கில் இந்த நூல் சொல்கிறது.

தமிழக வரலாற்றில் தவிர்க்கமுடியாத அரசர்களான களப்பிரரை மட்டுமல்ல தமிழகத்தின் வரலாற்றையும் அறிய பக்கத்தைப் புரட்டுங்கள்.

# முன்னுரை

தமிழகத்தின் வரலாற்றைத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து கொள்ள போதிய சான்றுகள் இந்நாள்வரை கண்டறியப்படவில்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தி. ‘கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தக் குடி’ எனும் பழம்பெருமை பேசிவரும் நம்மில் அத்தொன்மையை உலகறிய எடுத்துரைக்கும் வல்லமை வந்து சேரவில்லை என்பதும் பெருங்குறையே. சில வரலாற்றுச் செய்திகள் மீது புனை கதைகள் பூசி மெழுகி பின்னர் அதனையே வரலாறாக எண்ணி வந்த காலமொன்றும் நமக்குண்டு.

ஆங்கிலேயர்கள் இங்கே காலூன்றிய நாட்களில்தான் இந்த துணைக் கண்டம் முழுவதற்குமான வரலாற்று ஆய்வுகள், மெல்ல மெல்ல படிப்படியாகத் துவக்கமிட்டன. நமது மூதாதையர்கள் விட்டுச் சென்ற இலக்கியங்களின் தொகுப்பை வைத்தே இந்த மண்ணின் பழைய வாழ்வியலைப் புரிந்துகொள்ளும் நிலை இருந்தது; இப்போதும் இருக்கிறது.

‘சங்க காலம்’ என்றொரு செழுமையான காலம் தமிழ் நிலத்தில் இருந்ததும், அந்நாட்களே தமிழின் வளமைக்கும் தமிழரின் செழுமைக்கும் உரை கல்லாய் விளங்கியது என்றும் வரலாற்றுக் குறிப்புகள் சில கோடிட்டுக் காட்டியபோதும், அதனை முழுமையாகப் புரிந்துகொள்ள இயலா அவலம் நம்மைப் பெரிதும் வாட்டுகிறது.

சங்க காலத்துக்குப் பின்னர் அதாவது கடைச்சங்க காலத்தின் இறுதியில் இங்கே நிகழ்ந்த அரசியல் மாற்றங்கள் என்னவாக இருந்தது என்றும், சில நூற்றாண்டு காலத் தமிழகத்தின் வரலாறு எப்படி அமைந்தது என்றும் அறியா நிலை ஒன்று வரலாற்று ஆய்வாளர்களுக்கே இருந்து வந்தது. அறிய முடியா அக்காலக் கெடுவை ‘இருண்ட காலம்’ எனக் குறிப்பிட்டு வரலாற்று நிபுணர்கள் விலகிக் கொண்டனர். ஆனால் இத்தகைய நிலைமைக்கும் ஒரு விடிவாக வந்து சேர்ந்தது ‘வேள்விக்குடிச் செப்பேடு’ எனும் ஆராய்ச்சித் தகவல்.

1920-ம் ஆண்டு வெளியிடப்பட்ட ‘வேள்விக்குடிச் செப்பேடு’ எனும் பாண்டிய அரசு பரம்பரையின் பட்டய வாசகங்களுக்கு பின்னர்தான் இந்நிலத்தைக் களப்பிரர் என்னும் மரபினர் ஆட்சி புரிந்துள்ளார்கள் எனும் செய்தி வெளியுலகுக்கு எட்டியது. அதன்பின்பு படிப்படியாக கிடைக்கப்பட்ட துண்டுதுண்டான செய்திகளின் அடிப்படையில் களப்பிரர் என்னும் மரபினரைப் பற்றி நாம் அறிந்து வருகிறோம். ஆனாலும் சற்றேறக்குறைய ஒரு நூற்றாண்டை நெருங்கும் இவ்வேளையிலும் (வேள்விக்குடிச் செப்பேடு வெளிவந்த நாள்முதல்)

*களப்பிரர் பற்றி முழுமையாக நம்மால் இன்னமும் உணரமுடியவில்லை என்பதும் வெட்கக் கேடானதே! இதற்குக் காரணம் பலவாக இருந்தாலும், நமது தேடுதல் வேட்கையின் வேகம் குறைந்ததே முதன்மையெனக் கூறலாம்.*

*களப்பிரர் காலத்தைக் குறிப்பிட்டு எழுதியவர்கள் பலரும் அதனை இருண்ட காலம் என்று ஒற்றை வரியில் குறிப்பிட்டுச் சென்றார்கள். அவர்களைப் பற்றிய வரலாறு எழுதப்படாமலிருக்கக் காரணம் ஏதெனப் பார்த்தால், அவர்கள் காலத்தில் எழுந்த கல்வெட்டு சாசனங்கள், செப்பேடு சாசனங்கள், நாணயங்கள் என பழம்பெருஞ் சான்றுகள் ஏதும் கிடைக்கப்பெறாமையே. ஓரளவு தகவல்களைத் தரக்கூடியவை, அக்காலத்தே எழுதப்பட்ட சமய, இலக்கிய நூல்களே என்பதை மறுக்க இயலாது.*

*அவற்றின் வழியே பின்னாட்களில் கிடைக்கப்பெற்ற வரலாற்று ஆதாரங்களைச் சேர்த்து, தமிழறிஞர்கள் மற்றும் வரலாற்று ஆய்வாளர்கள் பலரும் திரட்டிய சான்றுகளை ஒருங்கிணைத்து, இந்த வரலாற்று நூலை எழுதுவதில் நான் முனைப்பு காட்டியுள்ளேன். இதற்கு உதவிகரமாக அமைந்த எனது முன்னோடிகளாம் தமிழ் மற்றும் வரலாற்று ஆய்வாளர் அனைவரது ஆக்கங்களுக்கும் இச்சமயம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.*

*இந்த நூலில் குறிப்பிட்டுள்ள சான்றுகளைத் தவிர, வேறு சான்றுகள் இனி கிடைக்கப்பெறினும், ஒருவேளை கிடைக்கப் பெற்றும் அவை எனது அறிவுக்கெட்டாமலிருப்பினும், சுட்டிக் காட்டப்பட்டால் இனிவரும் நாட்களில் களப்பிரர் வரலாறு முழுமையடைய அவை உதவக்கூடும் என நம்பி அப்பணியினை உங்களிடம் விட்டுவிடுகிறேன். இந்நூலை எழுத எனக்கு வாய்ப்பளித்து பெருமைப்படுத்திய விகடன் பிரசுரத்தாருக்கு எனது நன்றியினை காணிக்கை ஆக்குகின்றேன். நன்றி!*

அன்புடன்
டி.கே.இரவீந்திரன்



## டி.கே.இரவீந்திரன்

பெற்றோர் கேரள மாநிலத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். தந்தை கிருஷ்ணன் நாயர்; தாய் பாறுக்குட்டி அம்மாள்.

பழனி, அருள்மிகு பழனியாண்டவர் கலைக் கல்லூரியில் தன் கல்வியைத் துவக்கினாலும் அதை முழுமை செய்யாமல், பணியில் சேர்ந்த பின்னர் பெரியார் பல்கலைக்கழகத்தில் இதழியல் பட்டயப் படிப்பை முடித்தார். சமீப காலம் வரை தமிழகத்தின் பிரபலமான மாலை முரசு நாளிதழில் சிறப்புச் செய்தியாளராகப் பணிபுரிந்தார். இதே நாளிதழின் மலையாள மாத இதழ் நவீனத்தில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்னைகள், சமச்சீர்க் கல்வி போன்ற தலை நிகழ்வுகள் பற்றிய எழுத்துகளால் பேசப்பட்டவர். தமிழ், மலையாளம் ஆகிய இரு மொழிகளிலும் சிறுகதை, கட்டுரை, நாவல்களைப் படைத்துள்ளார். ‘விவேகி’, ‘கொல்லம்’, ‘பவித்ரேயன்’ ஆகிய புனைபெயர்களில் இவர் மலையாளத்தில் எழுதியுள்ளார். வரலாற்றை மையப்படுத்திய எழுத்துகளில் ஆர்வம் மிகுதி.

இவர் மொழிபெயர்த்த ‘வரலாற்றுடன் பயணித்த மாமனிதர்’ மற்றும் இவர் எழுதிய ‘மாமன்னர் அக்பர்’, ‘பகதூர்கான் திப்பு சுல்தான்’, ‘மொகலாயர்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்!’ ஆகிய நூல்கள் விகடன் பிரசுரத்திலிருந்து வெளிவந்திருக்கின்றன.

மனைவி பிரேமா இல்லத்தரசி. பவித்ரா, நித்யா என்னும் இரண்டு மகள்கள்.

**இந்த நூல்...**

*எனது எழுத்தாற்றலுக்கும் இலக்கிய தாகத்துக்கும்*

*ஊக்கமளித்து, எனக்கென்று ஒரு முகவரியைத் தந்த*

***'மாலை முரசு'** நாளிதழின் முன்னாள் நிர்வாக இயக்குநர்*

*மனித நேயர் மறைந்த **பா. ராமச்சந்திர ஆதித்தனார்***

*அவர்களின் மறையாத நினைவுகளுக்கு...*

**உள்ளே...**


1. தமிழக வரலாறு
2. கடைச்சங்க காலம்
3. களப்பிரர் வருகை
4. களப்பிரர்களின் மூலம் - சில ஆய்வுகள்
5. களப்பிரர் எப்பகுதியினர்?
6. முத்தரைய மன்னர் - சுவரன்மாறன்
7. கள்வர் கள்வன்; சில விளக்கங்கள்
8. களப்பிரர்கள் (வந்த) காலம்
9. களப்பிரர் - களப்பாழர் - கள்வர்
10. களப்பிரர் பற்றிய சான்றுகள்
11. யாப்பருங்கலம் காட்டும் களப்பிரர்
12. களப்பிரர் கால ஆட்சியாளர்கள்
13. களப்பிரர் காலத்தில் பிற அரசுகள்
14. களப்பிரர் காலத்தில் இலங்கையின் அரசியல் சூழல்
15. இலங்கையில் பாண்டியர் ஆட்சி
16. பாண்டியர் மரபுக்குப் பின் இலங்கை அரசியல்
17. கோநாட்டு மன்னர்கள்
18. களப்பிரர் காலத்துச் சிற்றரசர்
19. கண்ணுக்கெட்டிய களப்பிரர் சான்றுகள்
20. களப்பிரர்களும் சமயங்களும்!
21. களப்பிரர்களின் நாணயம்
22. தமிழ்மொழியும் களப்பிரர் காலமும்

23. பழமையும் புதுமையும்

24. களப்பிரர் காலத்து சைவ சமய இலக்கியங்கள்

25. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

26. களப்பிரர் ஆட்சியில் தமிழ்ச் சங்கம்

27. களப்பிரர் காலத்து கலை வளர்ச்சி

28. பிற்சேர்க்கை

29. இறையனார் அகப்பொருளும் நக்கீரர் காலமும்

30. வீழ்ச்சியுற்ற களப்பிரர்

# 1

# தமிழக வரலாறு

தமிழக வரலாறு பற்றிய ஆய்வுகள், அதனை சங்க காலத்துக்கு முந்தையவை, சங்க காலத்தவை மற்றும் சங்க காலத்துக்குப் பிற்பட்டவை என முப்பகுதியாகப் பிரித்துக் காட்டுகின்றன. சங்க காலத்தவை மற்றும் அதற்கு முந்தையவை பற்றிய செய்திகளை நமக்கு ஓரளவு கோடிட்டுக் காட்டுபவை தமிழ் இலக்கியங்கள் என்றால் அதில் மிகையில்லை.

இவ்வாறு இந்நிலத்தின் வரலாற்றை நமக்குத் தெளிவாக்கும் பணியினைச் செய்துவரும் இலக்கியங்கள் பலவும் சங்க காலத்தில் பல்வேறு புலவர்களால் ஆக்கப்பட்டவை. சங்கப் புலவர்கள் என்ற சொற்றொடர், ஒரு குழுவாக இணைந்து செயலாற்றிய புலவர் பெருமக்களை குறிக்க எடுத்தாளப்பட்ட சொற்றொடர் எனினும் இது, குறிப்பாக மதுரையில் அமைந்த சங்கத்தையே சுட்டிக் காட்டுவதாகும்.

தமிழ் மொழியின் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்து தமிழக வரலாறும் ஒருங்கே நம்மால் புரிந்துகொள்ளத் துணைபுரியும் இலக்கியங்கள், பெரும்பாலும் இந்த சங்கப் புலவர்களின் படைப்பாகவே அமைவதால், தமிழக வரலாற்றுச் செய்திகளை நாம் அங்கிருந்துதான் தேட வேண்டியுள்ளது.



**அரிக்கமேடு அகழ்வாராய்ச்சி சான்றுகள்**

பிற்காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும், விடுதலைக்குப் பின்னரும் இங்கே நடைபெற்ற பல்வேறு அகழ்பொருள் ஆராய்ச்சி மூலம் தொல்பொருள் துறை நம்மிடையே எடுத்துக்காட்டிய சான்றுகள் சிலவும் வரலாற்றை கண்முன் எடுத்தியம்பும் நற்பணிக்கு ஆக்கம் விளைத்துள்ளது.

தமிழர்களின் வரலாறு, அவர்களது மொழியான தெள்ளு தமிழின் தொன்மையைப் பொறுத்து, தொன்மை (பழமை) வாய்ந்தது என்பது வரலாற்று ஆய்வாளர்கள் கருத்து. இந்தத் தொன்மையை வரையறை செய்து கால அளவை குறிப்பிட்டுக்காட்ட இன்னமும் வரலாற்று ஆய்வுகள் வெளி வரவில்லை.

சங்க காலத்தின் எல்லையினை வரையறை செய்த ஆய்வாளர்கள், அது கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதி அல்லது மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் அதற்கு முந்தைய வரலாற்றை எவராலும் உறுதி செய்து கூற இயலவில்லை என்றாலும், அக்காலம் தமிழக வரலாற்றின் சிறப்பு மேலோங்கிய காலம் என்பதைப் பல்வேறு சான்றுகள் உரைக்கின்றன. தடைகள் பல கடந்து பரவிய “மௌரியப் பேரரசர் அசோகனின் (சாம்ராஜ்யம்) பேரரசானது தமிழகத்தின் எல்லை வரை பரவியிருந்தது என்பதை அவனது கல்வெட்டுகள் எடுத்துக் கூறுகின்றன. இது தமிழ் நிலத்தை வெற்றிகொள்ள அசோகனால் இயலாது போனது அல்லது தமிழ் மண்ணின் வலுவான அரசியல் நிலைமை அவனைத் தடுத்தாட் கொண்டது எனப் பொருள் கொள்ளலாம்.





**அரிக்கமேடு அகழ்வாராய்ச்சி சான்றுகள்**

தமிழ் நிலம் அந்நாளில் வாணிபத்தில் சிறந்து வளம் பெருக்கியதால் பொன்னைக் கொழித்து சிறப்புடன் திகழ்ந்தது. இந்தியப் பகுதிக்குள் கங்கைக் கரை வரை தமிழர்கள் தங்களது வாணிபத்தை எடுத்துச் சென்றிருந்தனர். மதுரையில் நெய்யப்பட்ட பருத்தி ஆடைகளும், பல்வேறு நுண் கலைகள் பொதிந்து உருவாக்கப்பட்ட ஆடை வகைகளும், வேறு பல பொருட்களும் மகத நாட்டிற்கு வந்து விற்பனை ஆனதென சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் கோடிட்டுக் காட்டுகிறது.



சீனா, மலேசியா, ஜாவா, போர்னியோ போன்ற கிழக்காசிய நாடுகளுடனும், கிரேக்கம், ரோம், எகிப்து போன்ற ஐரோப்பிய நாடுகளுடனும் தமிழர்களின் வாணிபத் தொடர்பு நீண்டிருந்தது.

கி.மு. 1000 ஆண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் சாலமன் என்னும் அரசனது காலத்தில் தங்கம், வெள்ளி, தந்தம் போன்ற பொருட்களுடன் குரங்குகள், மயில்கள் ஆகியனவும் இங்கிருந்து 'நாவாய்' எனப்படும் சிறு வாணிபக் கப்பல்களில் சென்றன என்று ஆய்ந்து குறிப்பிடு கிறார் வரலாற்றறிஞர் வி.கனகசபை பிள்ளை அவர்கள் தமது *The Tamils 1800 years Ago* என்ற நூலில். இதே கருத்துகளை கே.ஏ.என். சாஸ்திரி தமது *History of South India* என்ற நூலிலும் எடுத்துரைக்கிறார்.

இத்தகைய வணிகத் தொடர்புகள் மொழிச் சொற்களையும் ஆங்காங்கே தூவி விட்டு வந்துள்ளமையும் நமக்கு வரலாற்றால் அறிய முடிகிறது. கபி, தோகை போன்ற சொற்கள் (*Kapim, Tukim*) யூதர்களின் மொழியிலமைந்த விவிலிய (பைபிள்) நூலில் இடம் பெற்றுள்ளன. மேலைநாட்டு ஆய்வாளரில் ஒருவரான ஸ்டிராபோ என்பவர், வருடந்தோறும் 125 கப்பல்கள் செங்கடல் நாடுகளிலிருந்து இந்தியாவுக்குச் சென்றன என்று குறிப்பிடுகிறார். தென்னாட்டிற்கும் சீன நாட்டிற்கும் இடையே கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே நெருங்கிய தொடர்பு இருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் உரைக்கின்றன. காஞ்சியில் ஒரு சீனத் தூதுவராலயம் இயங்கியதற்கு ஆவணச் சான்று இருப்பதாக கே.ஏ.என். சாஸ்திரி தமது *History of South India* நூலில் குறிப்பிடுகிறார்.



**அகஸ்டஸ் சீஸர்**

முதன்முதலாக தமிழ்நாட்டுடன் கடல்வழி வாணிபத் தொடர்பு கொண்ட ஐரோப்பியர் 'ஹிப்பாலஸ்' என்ற கிரேக்கர் என்றும் இவர் அராபியர்கள் மற்றும் இந்திய வாணிகர்களின் கூற்றை அடிப்படையாக் கொண்டு இச்செயலில் ஈடுபட்டார் என்றும் செய்திகள் கூறுகின்றன.

இந்தியாவிலிருந்து அதிலும் குறிப்பாக தமிழ் நிலத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மிளகு மற்றும் முத்துக்கள் போன்றவை ரோம் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டு வாங்கப்பெற்றன. விலையைப் பொருட்படுத்தாமல் அவர்கள்

*இந்தப் பொருட்களை வாங்கிக் குவித்ததால் வருடந்தோறும் 5,50,00,000 ரோமாபுரித் தங்க நாணயங்கள் (4,86,979 பவுன்கள்) தமது நாட்டிலிருந்து இந்திய நாடு அபகரித்துக் கொண்டதாக கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த 'பிளைனி' ஆதங்கப் படுகிறார்.*

*ரோமானியப் பெண்கள் தென்னிந்திய முத்துக்களை மேனியெங்கும் பூட்டி அழகு பார்த்தனர். அவர்களது இந்த அலங்கார மோகத்தினால் நாட்டின் செல்வம் பெரும் பகுதி தம் நாட்டை விட்டு வெளியேறுவதைப் பொறுக்க முடியாமல், பிளைனி கீழ்க்கண்டவாறு குறைபட்டுக் கொள்கிறார்.*



**பிளைனி**

*"Our Ladies glory in having pearls suspended from their finger's or two or three of them dangling from their ears. delighted even With the ratting of the pearls as they Konck against each other, and now, at the present day, the poorer classes are in the habit of saying that a pearl worn by a women in public is as good as a lictor (an officer of the magistrate) walking before her. Nay, even more than this they put them on their feet, and that not only on the laces of their sandals but all over their shoes"* என்பது பிளைனியின் கூற்று *(Pliny chapter IX)*

*இது தவிர வரலாற்றறிஞர் சத்திய நாராயண ஐயர் தமது 'ஹிஸ்டரி ஆப் இந்தியா' என்ற நூலில், நீரோ மன்னனின் அரண்மனையில் முத்துக்கள் பதிக்கப்பட்ட தந்தங்களை கால்களாகக் கொண்ட 500 மேசைகள் இருந்தன என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாட்டைச் சேர்ந்த தேக்கு மரங்கள் ஊர் (Ur) மற்றும் பாபிலோன் நகரங்களின் அழிவுச் சிதைவு களிலிருந்து காணக் கிடைத்துள்ளன.*

*வெளிநாட்டு வாணிகத்தால் பொன்னைச் சுமந்து வரும் வணிகக் கப்பலை பாராட்டுமுகமாகக் கம்பன் அவற்றைக் 'கலம் சுரக்கும் நிதியம்' என்று குறிப்பிடுகிறார். கிரேக்க, ரோமானிய நாடுகளுடனான வாணிபம்*

*அந்நாட்டிலிருந்து பொன்னை மட்டுமல்லாது அந்நாட்டு மக்களையும் இங்கே குடியமர்த்தச் செய்துள்ளன. அவர்கள் இங்கே தமிழ் மன்னர்களின் மெய்க்காப்பாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டனர். காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு யவனச்சேரி இருந்ததாக (யவனர் என்பது அந்த நாட்டினருக்கு தமிழ்மண் அளித்த பெயர்) சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. மேலும் யவனர்களின் தாமிர நாணயங்களை அச்சிடும் சாலையொன்று மதுரையில் இருந்ததாகவும் கூறுவர். (தமிழ் இந்தியா - எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை)*



**கிரேக்க நாணயங்கள்**

*கி.மு. முதலாம் நூற்றாண்டில் ஆட்சியிலிருந்த பாண்டிய மன்னன் ஒருவன், அகஸ்டஸ் சீஸரின் நட்பை நாடி அவரது அவைக்கு இரண்டு முறை (கி.மு.26, கி.மு.20) அரசியல் தூதுவர்களை அனுப்பிவைத்ததாக ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில், மதுரை மாநகரின் கோட்டை வாயிலை காவலருள் சிறப்புமிக்க, திறம்மிகு வாளேந்திய யவனர்கள் காத்து நின்றனர் என்று குறிப்பிடக் காண்கிறோம். அந்நூலின் அடைக்கலக் காதையில், மதுரை மாநகரக் கோட்டையில் வைக்கப்பட்ட பல்வேறு கருவிகள் பற்றியும் அறிய முடிகிறது. அந்த கருவிகள் 'ஆர்க்கிமட்டீஸ்' என்ற அறிவியல் வித்தகரால் கண்டுபிடிக்கப்பட்டவை என்றும், அவை யவனர்களின் தொடர்பால் தமிழகம் வந்து சேர்ந்தன என்றும் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் குறிப்பிட்டுள்ளார்.*

*இவைகளுக்கு மேலும் வலு சேர்ப்பவையாக அமைந்துள்ளன 'அரிக்கமேடு', ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி கண்டுபிடிப்பு களின் மூலம் கிடைத்துள்ள கிரேக்க, ரோம நாணயங்கள். இவ்வாறு தமிழ் நல்லுலகம் வாணிபத்தால் பொருள் ஈட்டி வளங்கொழிக்க வாழ்ந்த வாழ்வில் அவர்தம் ஆட்சியாளர் களான வேந்தர்தம் பங்கும் சிறப்புறத் திகழ்ந்தது.*

*"நெல்லும் உயிரன்றே! நீரும் உயிரன்றே*

*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"*

*என்னும் புறப்பாடல் அரசன்பால் மக்கள் வைத்திருந்த மதிப்பினைச் சொல்கிறது. இந்தக் காலச் சூழலில் செல்வச் செழிப்புடன் கல்வியும் வளர்ந்தது.*

மன்னனுடன் சமுதாயத்தில் பெண்டிர் உட்பட அனைவரும் கல்வியறிவு பெற முடிந்தது. கற்றறிந்த புலவர்கள் செந்நாப் புலவர்களாக, வெறும் பரிசுக்காக மட்டும் பாடல் இயற்றாதவர்களாக மன்னர்தம் தவற்றை இடித்துரைக்கும் சான்றாண்மைப் புலவராய்த் திகழ்ந்தனர்.



**அரிக்கமேடு அகழ்வாராய்ச்சி**

அனைத்து வகையிலும் சிறப்புமிக்கதாய் திகழ்ந்த இக்காலத்தில்தான் வள்ளுவர் இயற்றிய திருக்குறளும், இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகியவை தோன்றியிருக்க வேண்டும். பாட்டும் தொகையுமாய் வருணிக்கப்படும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் இக்காலத்தை ஒட்டியே தோன்றியிருத்தல் கூடும். எனவே இக்காலம் தமிழக வரலாற்றில் ஒரு பொற்காலமாய்த் திகழ்ந்தது என்பதே உண்மை.

தமிழகத்தின் வரலாறு என்றால் அது தமிழ் மக்களின் வரலாறு என்றாகிறது. அந்த வகையில் தமிழ் மக்களின் வரலாறு தமிழ் மொழியின் வரலாறாகவும் கருதப்படுவதில் தவறில்லை! தமிழ் மக்களைப் பற்றிப் பேசப் புகுந்த பழந்தமிழ் செய்யுள் ஒன்று

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன் தோன்றி(ய) மூத்தக்குடி'

(புறப்பொருள் வெண்பாமாலை)

என்றுரைக்கின்றது. இச்சொற்றொடர் தமிழனின், தமிழ் மொழியின் பழமையைப் பறைசாற்றக் கூறப்பட்டவை. திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர், தொன்று தொட்டு என்னும் சொற்றொடருக்கு (ஒழிபியல்) குடிமை அதிகாரத்துள் ஐந்தாவது குறளில்) விளக்கம் சொல்ல வருகையில் சேர, சோழ,

பாண்டியர் போன்று படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வருதல் எனப் பொருள் உரைக்கின்றார்.

இங்கே முடியுடை மூவேந்தர்களும் இத்தொன்மையான தமிழ் நிலத்தைப் படைப்புக் காலந்தொட்டே அரசாண்டு வந்தனர் எனும் செய்தியினைப் புகுத்து கின்றார்.

இனித் தமிழ் நிலம் என்பது யாதெனும் கேள்விக்கு அதனை வரையறை செய்து எல்லையை விளக்கும் பனம்பாரனார்,

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்

தமிழ்கூறு நல்லுலகம்"

என்று அறுதியிட்டுச் சொல்கிறார். இவ்வாறு பனம்பாரனார் குறிப்பிடும் தென் குமரி என்பது தற்போதுள்ள குமரிமுனை அல்ல என்றும் இந்துப் பெருங்கடல் இன்றைய நிலை அடைவதற்கு முன்னர் அப்பகுதியில் விரிந்து பரந்த நிலப்பரப்பொன்று இருந்தது என்றும் அங்கு குமரியாறும், தொடர் அடுக்குகளுடன் அமைந்த மலைப்பகுதியும் இருந்தன என்றும் ஆராய்ச்சி யாளர்கள் சான்று நிறுத்திக் கூறியுள்ளனர்.



**இளங்கோ அடிகள்**

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்

குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள..."

(சிலப்பதிகாரம் மதுரை நாடுகாண்: 19-20)

என்னும் சிலப்பதிகார வரிகள் இன்றைக்கு இந்துமாக்கடல் நிலவி வரும் பகுதி, பண்டை நாளில் ஓர் பெரு நிலமாக இருந்து வந்தது எனவும் இந்நிலப் பகுதியினுள் பஃறுளியாறு, குமரியாறு, குமரிக்கோடு (மலை) எனும் ஆறுகளும், மலையும் இருந்தனவென்றும், அவை ஆழிப்பேரலையால் (கடல்கோள்) கடலுள் புகுந்து காணாமற் போயின என்றும் அறிவுறுத்துகின்றன.

"மலிதிரை பூர்ந்துதன் மண்கடல் வௌவலின்"

(கலித்தொகை 104)

என்ற கலித்தொகை அடியும் இதனை வலியுறுத்துகிறது. அடியார்க்கு நல்லார் இந்நிலப் பரப்பு நாற்பத்தொன்பது நாடுகளாகப் பிரிக்கப்பட்டு தமிழ்நாட்டின் தென் பகுதியாகத் திகழ்ந்ததென வரையறை செய்து சொல்கின்றார்.

இவ்வுண்மையினை மேனாட்டு நிலநூல் வல்லறிஞர்களாகிய ஸ்காட் எலியட், ஏர்னஸ்டு ஹெக்கல் முதலியோரும் வலியுறுத்திப் பேசுகின்றனர். நாம் குமரி நாடு என்று குறிப்பிடும் இப்பகுதி, அவர்களால் இலெமூரியா என்று அழைக்கப்படுகிறது. இந்நிலப் பகுதி நீரினுள் அமிழும் முன்னர் விந்திய மலைக்கு அப்பால் இருந்த வட இந்தியப் பகுதிகள் நீரினுள் மூழ்கியிருந்தன என்பர் அறிஞர்கள். இதை இமயப் பகுதியில் இன்றைக்குக் கண்டெடுக்கப்பட்ட கடல் விலங்குகளின் எலும்புக் கூடுகளின் கற்பதிவுகள் (Fossils) நமக்கு உணர்த்தவல்லன.




**அசோகரின் பேரரசு**

இனி இத்தொன்மை நிலத்தில் தமிழர்கள் வாழ்ந்து வந்தனர் எனும் செய்தியினை சிலப்பதிகாரம், புறநானூறு, கலித்தொகை போன்ற நூல்களால் உணர முடிகிறது. ஆக தமிழ் நிலத்தின் தொன்மையான வரலாற்றுக்கு எல்லை எதுவென அறுதியிட்டுக் கூறும் நிலை எழவில்லை என்பதை இதுவரை எடுத்துக்காட்டப்பட்ட செய்திகள் உரைக்கின்றன.

ஏனைய பழமையான மொழிகள் எதற்கும் அமையாத சிறப்பாக, சங்கம் அமைத்து அதன்வழி வளர்ச்சியை எட்டிய மொழியெனும் பெருமை தமிழுக்கே உரித்தானது. இவ்வாறு உருவான சங்கங்களும் வெவ்வேறு காலங்களில் அமையப் பெற்று தமிழின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றியுள்ளன. கற்றறிந்த நல்லோர்கள் புலமை மிக்கவர்கள் எனப் பலரும் குழுமியிருந்து செயலாற்றும் வழக்கம் அந்நாளில் தமிழ் நிலத்துள் பரவலாக இருந்திருக்கக் கூடும். எனினும் பாண்டியர்களின் தலைநகராம் மதுரையில் அமைந்த புலவர் குழாம் அமைப்பே சங்கம் என்று சிறப்பிக்கப்பட்டது. இனிச் ‘சங்கம்’ என்பது ஒரு வடமொழிச் சொல்லாக இருப்பதால் அது பிற்காலத்தில் உருவான வழக்கென்றும், முன்னர் அதற்கு வேறு சொல் வழங்கியிருக்க வேண்டும் என்பதும் சில தமிழ் ஆய்வாளர்களின் கருத்தாகும். மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்தது என்பதற்கு சங்க நூல்களில் சான்றுகள் பல உள்ளன.




“இமிழ்குரல் முரசம் மூன்றுட னாளுந்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே!”

(புறம்: 58: 12-13)

“நிலனாவில் திரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொல் புதிதுண்ணும் பொழுதன்றோ”

(கலித்தொகை:35)

"தென்தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்"

(மணிமேகலை: 25-139)

எனச் சான்றுகளை எடுத்துக்காட்டிச் சொல்லலாம். இத்துடன் சின்னமனூர் செப்பேடு குறிக்கும்,

'மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச்

சங்கம் வைத்தும்'

என்ற வரிகளும் பாண்டியர்கள் மதுரை நகரில் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த செய்தியினை எடுத்துரைக்கின்றன. இவையல்லாமல் சங்கத்தைப் பற்றிய வரலாற்றைக் கூறும் ஆதி நூல்களாக களவியலுரையின் பாயிரமும், அடியார்க்கு நல்லாரின் உரையுமே அமைந்துள்ளது. பாண்டியர்கள் தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்களை நிறுவினர் என்ற செய்தியும் இவை நமக்கு உணர்த்துகின்றன.

தலைச்சங்கத்தில் அகத்தியனாரும், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவரும் உட்பட 549 புலவர்கள் வீற்றிருந்து தமிழாய்ந்தனர். இவர்களுடன் சேர்த்து 4,449 புலவர்கள் பாடல் இயற்றிப் பாடினர். அவைகள் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை எனப் பலவாகும். 4440 ஆண்டுகள் இந்த சங்கம் செயல்பட்டிருந்தது. இச்சங்கத்தை செழுமையுடன் நடத்திப் புலவர்களை ஆதரித்தவர்கள் காய்சினவழுதி முதல் கடுங்கோன் வரையிலான 89 பாண்டிய அரசர்கள். இவ்வரசர்களில் எழுவர் கவியரங்கில் கலந்துகொண்டனர். இச்சங்கம் அமைந்த தென் மதுரை கடல்கோளால் அழிவுற்றது.

இதனை அடுத்து உருவான இடைச்சங்கம் கபாடபுரத்தில் துவங்கப்பட்டு இயங்கி வந்தது. இவ்விடைச் சங்கத்தில் அகத்தியனார், தொல்காப்பியனார், இருந்தையூர்க் கருங்கோழி மோசியார், வெள்ளூர் காப்பியன், சிறு பாண்டரங்கன், திரையன் மாறன், துவரைக் கோமான், கீரந்தை என ஐம்பத்தொன்பது புலவர்கள் வீற்றிருந்து தமிழாய்வு மேற்கொண்டனர்.

இவர்களுடன் சேர்த்து 3,700 புலவர்கள் பாடல் இயற்றிப் பாடினர். அவ்வாறு பாடப் பட்டவைகளில் பெயர் அறியப்படுவன கலியும், குருகும், வெண்டொளியும், வியாழமாலை அகவலும் ஆகும். இவர்களுக்கு மூல நூற்களாக அகத்தியமும் தொல்காப்பியமும், மாபுராணம், பூதபுராணம், இசை நுணுக்கம் ஆகியவை அமைந்தன. இச்சங்கம் 3,700 ஆண்டுகள் இருந்தது. இச்சங்க காப்பாளர்கள் பாண்டிய மன்னர்கள் வெண்தேர் செழியன் முதலாக முடத்திருமாறன் வரை 59 பேர்கள் ஆவர். இவருள் ஐவர் கவியரங்கில்

பங்குபெற்றவர்கள். இச்சங்கம் அமைந்த கபாடபுரம் கடல்கொள்ளப்பட்டு அழிவுக்குள்ளானது.

அடுத்து உருவான கடைச்சங்கம் இன்றைய மதுரை நகரில் அமைந்தது. இதனுள் சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர் கிழார், இளந்திருமாறன், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார், மதுரை மருதனிள நாகனார், மதுரைக் கணக்காயனார் மகனார், நக்கீரனார் உள்ளிட்ட நாற்பத்தொன்பது புலவர் பெருமக்கள் வீற்றிருந்தனர். இப் புலவர்கள் உட்பட நூற்று நாற்பத்தொன்பது புலவர்கள் பாடல் இயற்றிப் பாடினர். அவ்வாறு பாடப்பட்டவை நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்தும் வரியும், சிற்றிசையும் பேரிசையும் உட்பட பலவாகும். இவர்களும் அகத்தியம், தொல்காப்பியம் ஆகியவற்றை முந்நூற்களாகக் கொண்டு பாடல் இயற்றினர். 1,850 வருடங்கள், இந்த சங்கம் செயல்பட்டது எனச் சொல்லப்படுகிறது. இச்சங்கம் பாண்டிய மன்னர்கள் முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதி வரையிலான நாற்பத்தொன்பது அரசர்களால் போற்றிப் பேணப்பட்டு வந்தது. இவர்களுள் மூவர் கவியரங்கில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

இவ்வாறு இந்த சங்கங்களைப் பற்றிய வரலாறு எடுத்துரைக்கப்பட்டபோதும் அதனுள் கூறப்படும் சில மிகைப்படுத்தப்பட்ட, இயற்கைக்குப் பொருத்தமற்ற செய்தி களின் கலப்பினால் இந்த சங்கச் செய்தியினை புனையுரை என்று ஏற்கத் தயங்கும் போக்கும் சில ஆய்வாளர்களிடையே உருவாகியிருப்பதும் உண்மை. திரு.கே.என் சிவராஜ பிள்ளை, திரு. சேஷகிரி சாஸ்திரியார், திரு. வையாபுரிப்பிள்ளை ஆகியோர் இச்சங்க மறுப்பு அணியில் முக்கியமானவர்கள். சங்கம் இருந்தது உண்மை. ஆயின் செய்திகள் அனைத்தும் உண்மையல்ல என்று வாதிடுபவர்கள் திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளை, திரு. கே.எஸ். சீனிவாசப் பிள்ளை, திரு. இரா. இராகவையங்கார் முதலியோர். சங்கம் இருந்ததும் அதுபற்றியச் செய்திகளும் உண்மையே என உரைக்கும் வகையில் வாதிடுபவர்கள் கா.சு. பிள்ளை மற்றும் ஞா.சா. துரைசாமிப் பிள்ளை ஆகியோர்.

சங்கச் செய்திகளைப் புனையுரை என்று வாதிடும் திரு. K.N. சிவராஜ பிள்ளையின் கூற்றுப்படி, "தமிழ்ச் சங்கம் என்றதொரு ஆராய்ச்சி அமைப்பு எப்போதுமே இருந்த தில்லை. முச்சங்கங்களைப் பற்றிய செய்திகள் யாவும் கற்பனையே!" என்கிறார். அடுத்து வாதிடும் திரு. சேஷகிரி சாஸ்திரி மற்றும் திரு. வையாபுரிப்பிள்ளை ஆகியோர் "முதல் இரண்டு சங்கச் செய்திகளும் கட்டுக் கதைகளே. எனவே இந்த ஆராய்ச்சியினால் பயனில்லை. கடைச்சங்கங்களைப் பற்றிய சில செய்திகள் உண்மையானவை; பல கற்பனைகள்" என்கின்றனர். (திரு.

*சேஷகிரி சாஸ்திரியார் - Essays on Tamil Literature, திரு. வையாபுரிப்பிள்ளை- இலக்கிய சிந்தனைகள்) இனி, முச்சங்கங்களும் இருந்தன என்றும் களவியலுரை கூறும் செய்திகள் பல உண்மையானவை; சில புனைந்துரை என்றும் கருத்தைப் பதிவு செய்கின்றனர்; திரு. கா.சுப்பிரமணியப் பிள்ளை, திரு. கே.எஸ். சீனிவாசப் பிள்ளை, திரு இரா. இராகவையங்கார் ஆகியோர்.*

*இவ்வாறு மூவகைக் கருத்துக்களை முன்வைத்து வாதிடும் இவர்களது ஆய்வுகளைச் சற்று பார்ப்போம்.*

## முதலாமவர் காட்டும் சான்றுகள்

*1. சங்கம் என்ற சொல் சிலப்பதிகாரம், மணிமேகலை காலம் வரை தமிழ் இலக்கியங்களில் எங்கும் காணப்பெறாமை; சங்கங்களைப் பற்றிய செய்திகள் முதன்முதலில் களவியல் உரையில்தான் காணப்படுகின்றன. அதற்கு முன்பு தமிழகத்தில் அச்செய்திகள் வழக்கில் வராமை.*

*2. தமிழ்நாட்டில் பொதுமக்கள் எவருக்கும் அச்செய்தி தெரியாமலிருத்தல்.*

*3. சங்க இலக்கியங்களிலிருந்து (அவ்வாறு பாராட்டப்படும் நூல்களிலிருந்து) அறியக்கூடிய அரசியல், சமூகவியல் கருத்துகள், சங்கங்களின் வாயிலாக அவற்றின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றி வந்தன என்று உய்த்துணரவும் துணை செய்யாமை.*

*4. முச்சங்கங்களும் ஏறக்குறைய 10,000 ஆண்டுகள் நடைபெற்று வந்தமையும், புலவர், அரசர் எண்ணிக்கை ஆகியவையும் பகுத்தறிவுக்குப் பொருந்தாமை.*

*5. சேர, சோழர்கள் சங்க வளர்ச்சிக்குத் துணை செய்யாமல் பாண்டியர்கள் மட்டும் சங்கம் வைத்து தமிழைக் காத்தனர் என்ற செய்தி.*

*6. கடவுளரும், முனிவரும் சங்கம் மருவித் தமிழ் வளர்த்தது இயற்கைக்கு முரணாகத் தென்படுதல்.*

*7. தலை, இடைச் சங்கங்கள் நடந்துவந்த தென் மதுரையும் கபாடபுரமும் அழிந்துபோனதால் வடமதுரையில் மூன்றாவது சங்கம் நடந்தமை வரலாற்றுக்குப் பொருந்தாமை.*

*8. மதுரை என்னும் வடமொழிச் சொல் (பெயர்)லானது மிகப் பழமை வாய்ந்த காலத்தே வழக்கில் இருந்திருக்கும் என்பதை நம்ப முடியாமை.*

*9. தலை, இடைச்சங்க நூல்கள் பற்றிய செய்திகள், மற்றும் சில பெயர்கள் மட்டும் உலவிவர, நூற்கள் ஏதும் காணப் பெறாமை.*

10. சங்கங்களைப் பற்றிய கருத்துகள் காலத்திற்கு காலம் வளர்ந்து வராமல் அருகி வருகின்றமை. பொற்றாமரைப் பொய்கை, சங்கப் பலகை பற்றிய செய்திகள் முதன்முதலாக பெரும்பற்றப்புலியூர்த் திருவிளையாடற் புராணத்தில்தான் கிடைக்கின்றன. களவியல் உரையில் கூட இது இல்லை. சமணச் சங்கங்களைக் கண்டு மேற்கூறிய முச்சங்க கருத்துகள் கற்பிக்கப்பட்டிருக்கலாம்.

முதலாமாவரின் மேற்கண்ட கருத்துகளை பலரும் பின்வருமாறு மறுத்துரை செய்கின்றனர்.

"முச்சங்கங்கள் இருந்தன எனவும், அவ்வவ் சங்கங்களில் இன்னின்ன புலவர், இன்னின்ன அரசர் இருந்தனர் என்றும் அவர்கள் இன்னின்ன நூல்களை ஆக்கித் தந்தனர் என்றும் கற்பனையாகவே இடைப்பட்ட நாட்களில் பலரும் கற்பித்துக் கூறிவிட்டனர் என்று அவற்றைத் தள்ளுவது தவறேயாகும்."

– தமிழ் இலக்கியம்: ஞா.சா. துரைசாமிப்பிள்ளை.

"தமிழ்நாட்டில், முச்சங்கங்கள் வெவ்வேறு காலத்தில் இருந்தன என்பதை நம்பாமல் இருப்பதற்கு இடமில்லை."

– கா.சு. பிள்ளை.

இதுதவிர, தமிழ்ச் சங்கங்களின் உண்மைக்குச் சங்க காலத்திற்கு சற்றே பிற்பட்ட காலத்து உருவான நூல்களும் சைவ, வைணவக் குரவர்களின் பாடல்களும் சான்று பகர்கின்றன.

"மதுரைத் தொகை ஆக்கினான்" – சம்பந்தர்

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக்கு அருளினோன் காண்" – நாவுக்கரசர்

"உறைவான் உயர்மதில் கூடலின் ஆய்ந்தஒண் தம்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ" – திருக்கோவையார்

'சங்கத் தமிழ்' – திருப்பாவை

'சங்க முகத் தமிழ்' – பெரிய திருமொழி

இனி சங்கத்து நூல்களில் சங்கம் என்ற சொல் வழங்கா திருப்பது மூலம் சங்கத்தின் உண்மையை மறுக்கலாகாது. தேவாரம் முதலிய நூல்களில்தான் முதன்

முதலில் 'சங்கம்' என்ற சொல் காணப்படுகிறது. வேத காலத்து வடமொழி இலக்கியத்திற்கூட சங்கம் என்ற ஒரு சொல் இல்லையென அறிஞர் பெருமக்கள் கூறுகின்றனர். அடுத்து வந்த இதிகாசங் களில் சங்கம் என்பது, ஒரு சாதாரணக் கூட்டத்தை குறிக்கும் சொல்லாக எடுத்தாளப்பட்டுள்ளது, பின்பு சமண, பௌத்த காலத்தில்தான் சங்கம் 'சதிசங்கம்' என்ற பொருளில் வழங்கப்பட்டு வந்துள்ளது. இந்த உண்மையை உரையாசிரியர் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர்.

எனவே சங்கம் என்பது பிற்கால வழக்குச் சொல்லாக இருப்பினும் தமிழாய்ந்த புலவர்கள் திரண்டிருந்த சபைக்கு கூடல் என்றோ குழு என்றோ நற்றமிழ் பெயர் ஏதேனும் இருந்திருக்கக் கூடும் என்றும் அது பிற்காலத்தில் சமண, பௌத்த ஆளுமைக்குப் பின்னர் வழக்கொழிந்து சங்கமெனும் அக்கால நடைமுறைச் சொல்லால் அழைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் அதற்கு இங்கு நடைபெற்ற மாற்று இனத்தவர் (களப்பிரர்) ஆட்சியே காரணமாக இருக்கலாம் என்றும் கருத வாய்ப்புள்ளது.

தவிர, முதல், இடைச் சங்க நூல்கள் இன்றைக்கு வழக்கில் இல்லாதது கருதி சங்க உண்மையை மறுப்பது சாத்திய மில்லை. "பெருங்கதை" அல்லது "உதயணன் கதை"யை இயற்றிய 'கொங்குவேள்' என்பவரது தமிழ் கல்விப் பெருமையினை விளக்க வந்த அடியார்க்கு நல்லார், சிலப்பதிகார உரைப் பாயிரத்தில், "இரண்டாம் ஊழிக் காலத்தில் கபாடபுரத்தில் அமைந்திருந்த இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தரு திருவிற்பாண்டியன் அவைக்களத்து அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், சிறுபாண்டரங்கனாரும் மதுரை ஆசிரியர் மாறனாரும், துவரைக்கோமானும், கீரந்தை யாருமென்றித் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் உள்ளிட்ட மூவாயிரத்து எழுநூற்றுவர் தம்மாற் பாடப்பட்ட கலியும், குருகும், வெண்டொளியும் முதலிய செய்யுளிலக்கிய மாராய்ந்து செய்த உதயணன் கதையுள்ளும்" என்று எழுதியிருப்பதை நோக்குங்கால், அக்கொங்குவேள் காலத்தில் இடைச்சங்க நூல்களில் சில இருந்தன என்பதும், அவை அக்காலத்திலிருந்த ஏனையோராலும் ஆராயப்பெற்று வந்தன என்பதும் தெரிகின்றன.

"அவை கொங்கு வேளிரால் ஆராயப் பெற்றதற்கு மேற்கூறிய உதயணன் கதையிற் காணப்படும் சில அரும்பதங்களுக்கும், இனிய வாக்கியங்களுக்கும் அரிய பழைய நூல்களின் கருத்து களுக்கும் இக்காலத்தில் ஆதாரம் கிடைக்காமையே தக்க சாட்சியமாகும்." என்று டாக்டர் ஐயர் அவர்கள் தமது சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும் (பக். 8) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இனி புலவர்கள், அரசர்கள் எண்ணிக்கையும் - சங்கம் நடைபெற்ற ஆண்டுகள் பற்றியுள்ள குறிப்பும் நம்பகத்தன்மை அற்றவை என்பதை நோக்கும்போது, வேறு சில வரலாற்று ஆய்வுகளை இங்கே மேற்கோள்

காட்டவேண்டியது அவசிய மாகிறது. பண்டைய நாகரிகத்தின் சான்றுகளாக, வரலாறு எடுத்துக்காட்டும் தொன்மைமிக்க நாகரிகம் சுமேரிய நாகரிகம். இந்த நாகரிக காலத்தில் பாபிலோனியாவுக்கும் (சுமேரியா) ஆசிரியாவுக்கும் (அக்காடு) அடிக்கடி போர் நடப்பது இயல்பான ஒன்று. அவர்கள் ஒருவரையொருவர் வெற்றிகொண்டு நீண்ட நாட்கள் அரசாட்சி செய்தனர்.

அவர்கள் எழுதிவைத்த ஆப்பு வடிவிலான களிமண் எழுத்து வடிவம் புதைபொருள் ஆய்வாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டன. அந்த களிமண் எழுத்துச் சுவடியில் அந்நாட்டை ஆண்ட அரச பரம்பரையினரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதில் பிரளயத்துக்கு (அக்காலத்தில் பிரளயம் ஏற்பட்டிருக்க வேண்டும்) முந்தைய அரசர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு இவர்கள் 2,41,200 வருடங்கள் ஆட்சிசெய்தனர் என்று கூறப்பட்டுள்ளது. அதன்படி ஒவ்வொருவரும் 30,150 வருடங்கள் ஆட்சி செய்ததாகக் கொள்ளவேண்டும்.

பிரளயத்துக்குப் பிந்தைய காலத்தில் அரசாண்டவர்கள் பட்டியலில் 23 அரசர்கள் 24,510 ஆண்டுகள் 3 மாதம் 31/2 நாட்கள் அரசாட்சி செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. *(French Excaution, Sumer and Akkad kings list. The first dynasty fo kish)* இதன் மூலம் ஒவ்வொரு அரசரும் 10651/2 ஆண்டுகள் அரசாட்சி புரிந்திருக்க வேண்டும்.

கால்டிஸ நாட்டின் அரச பரம்பரை ஒன்றில் 12 அரசர்கள் 2310 வருடங்கள் ஆட்சி செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொருவரும் 1921/2 வருடம் ஆட்சி செய்தி ருப்பார்கள். *(The first dynesty of Erich German Excaution at Wartea)* இவர்கள் பட்டியலிலும் சில தெய்வங்களின் பட்டியல் அரசரது பெயர்களுடன் இணைத்து கூறப்படுகிறது.

நமது சங்க கால அரசர்கள் பட்டியலில் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், குன்றம் எறிந்த முருகவேள், நிதியின் கிழவனும் என்று கூறப்படுவது போல கால்டிஸ பரம்பரையில் சூரியதேவனின் மகனான மெஸ்கி-அக்-க-ஸெ-யிர் மற்றும் ஆட்டிடையனாகிய லூகல்பாணிட் எனும் தெய்வப் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. மேலும் துமிலி (ஈதட்த்தடி) என்றோர் கடவுள் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றொரு பட்டியலில் 4 அரசர்கள் 177 ஆண்டுகள் அரசாண்டதாக, அதாவது ஒவ்வொருவரும் 40-க்கும் சற்று அதிகமான ஆண்டுகள் ஆட்சி. *(The first dynasty of cr. Excaution fo Sir lonard wooldy)*

இதில் முதல் பட்டியலைத் தவிர்த்து ஏனையவற்றை வரலாற்று ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். இதில் காலத்தை விட்டுவிட்டு அரசர்களை ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் நமது சங்க கால எண்ணிக்கைப்படி பார்த்தால்

முதற் சங்கத்தை நடத்திய அரசர்களின் சராசரி ஆட்சிக் காலம் 50 வருடங்களாகவும், இடைச் சங்க காலத்தைப் போற்றிப் பேணியவர் ஆட்சிக்காலம் சராசரி 62 வருடங்களாகவும், கடைச்சங்க காலப் புரவலராம் அரசர்தம் ஆட்சிக் காலம் சராசரி 37 வருடங்களாகவும் இருப்பதால் இதைக் கற்பனை என்று தள்ளுதல் அறிவுடைமையாகாது.

அன்றைக்கு கலிங்கம் என்று அழைக்கப்பட்ட இந்நாளைய ஒடிசாவில் உள்ள பூரி ஜெகந்நாதர் ஆலயத்தில் அந்த நாட்டை ஆண்ட பழைய மன்னர்கள் பட்டியல் காணப்படுகிறது. அவை,

1. சங்கர தேவர் ஆட்சி 400 ஆண்டுகள் கி.மு. 1807 முதல் 1407 வரை
2. மகேந்திரவர்மர் ஆட்சி 215 ஆண்டுகள் கி.மு. 1037 முதல் 882 வரை
3. இஷ்ட தேவர் ஆட்சி 134 ஆண்டுகள் கி.மு. 688 முதல் 538 வரை
4. பஜ்ரதேவர் ஆட்சி 117 ஆண்டுகள் கி.மு. 538 முதல் 421 வரை
5. நரசிங்க தேவர் ஆட்சி 115 ஆண்டுகள் கி.மு. 426 முதல் 306 வரை
6. கிருஷ்ண தேவர் ஆட்சி 122 ஆண்டுகள் கி.மு. 306 முதல் 144 வரை
7. போஜதேவர் ஆட்சி 127 ஆண்டுகள் கி.மு. 184 முதல் 57 வரை

இவைகளையும் வரலாற்று ஆசிரியர்கள் ஒதுக்கிவிடவில்லை. காலத்தை கணக்கில் எடுத்துக் கொண்டனர். எனவே தலை, இடை, கடைச் சங்கங்களின் உண்மைத் தன்மையை உணரும் பொருட்டு ஆய்வுகள் மேற்கொள்வது எத்தகு சரியான செயலோ, அதேபோல பற்பல கருத்துகளின் நிலைமையை ஆய்ந்து, முடிவை மேற்கொள்ள துணிவதும் அறிவுடைமையாம்.

இனி, சேர, சோழ, பாண்டியர் எனும் முடியுடை மூவேந்தர் மரபென்பது கடைச்சங்க காலத்து நிலையெனக் கொண்டால் முதல், இடைச் சங்கங்களின் புரவலர் தமிழ் மன்னர் (பாண்டியர்) என்றாகிறது. மேலும் சங்க காலங்களில் பாண்டியனின் கை, ஏனைய இருபாலரினும் சற்றே ஓங்கி யிருந்தமையும் இதற்குக் காரணமெனக் கொள்ளலாம்.

மலிதிரை யூர்ந்து தன்மண்கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வில்நீக்கி புகழ் பொறித்த
...........................................................................

*(முல்லைக்கலி 104)*

*தனது நாட்டின் ஒரு பகுதியினைக் கடல்கொண்ட காரணத்தால் அதனை ஈடுசெய்ய பாண்டியர் வில், புலி, கொடிகளை அகற்றி தனது கயல் கொடியைப் பறக்கவிட்டார் எனும் பொருள்தரும் இக்கலிவெண்பா அன்றைய சூழலை உணர்த்தவல்லதாம்.*

*நெட்டிமையார் என்ற புலவர், பாண்டியனை வாழ்த்திசைக் கும்போது 'பஃறுளியாற்று மணல்போல வாழ்க!' என்று வாழ்த்துவதாக இலக்கியச் சான்றுகள் கூறுகின்றன.*

*'மதுரை' எனும் பெயர்ச்சொல் சற்றே பிந்தையதாக இருப்பதை ஏற்பதில் தவறில்லை. சங்கம் போன்றே இச் சொல்லும் பின்னாளில் அமைந்திருக்க வாய்ப்புண்டு. 'கூடல்' என்ற பழைய பெயரும் இலக்கியத்தில் மதுரைக்கு காணப்படுவதால் அதுவே முதற்பெயராக இருக்கலாம். கடல்கோளினால் பிரிந்து தவித்தவர் மீண்டும் ஒன்று கூடிய இடமெனும் பொருளில் அது 'கூடல்' நகரெனும் பெயர் பெற்றிருக்க வாய்ப்புண்டு. மதுரை பிற்காலப் பெயராக இருத்தலும் சரியானதே. எனவே சங்கங்கள் இருந்தது எனும் செய்திக்கு மறுப்பு தெரிவித்து நிறுத்தப்பட்ட காரணங்கள் யாவும் ஏற்புடையவை அன்று எனும் முடிவுக்கு, தமிழாய்ந்த அறிஞர்களை அழைத்துச் செல்லும் மறுப்புச் செய்திகள் இதுகாறும் இங்கே எடுத்தியம்பப்பட்டன.*

*இனிக் கடைச்சங்க காலத்தின் இறுதியில் இந்த மண்ணில் உருவான மாற்றங்களைப் பற்றிய ஆய்வின்வழி அச்சங்க காலம் இருந்த கால அளவைச் சற்று ஆய்வோம்.*

# 2

# கடைச்சங்க காலம்

கடைச்சங்க காலத்தைப் பற்றிய கணிப்புகளில் சான்றோர்கள் பலரும் வெவ்வேறு கருத்துகளை உரைத்துள்ளனர். டாக்டர் கால்டுவெல் கடைச் சங்ககாலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கருதியுள்ளார். இல்லை எட்டாம் நூற்றாண்டே என்று சொல்கிறார் திரு. எல்.டி. சாமிக்கண்ணுப் பிள்ளை. இவர்களுக்கு மாறாக திரு. வெங்கையா, திரு. மு. இராகவையங்கார் ஆகியோர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டே கடைச் சங்க காலம் என முடிவாகச் சொல்கின்றனர். டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் மற்றும் திரு. வி. கனகசபை பிள்ளை ஆகியோர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டே கடைச்சங்க காலத்தின் இறுதிக் காலம் என்கின்றனர். இல்லை கி.பி. முதல் நூற் றாண்டுதான் இறுதிக்காலம் என்பது எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை அவர்களின் கருத்து. இதனை ஆமோதிக்கின்றனர் கா. சுப்பிரமணியப் பிள்ளை, வி.ரா. இராமச்சந்திர தீட்சிதர், டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் ஆகியோர்.

கடைச்சங்க காலம் கி.மு. 300 முதல் கி.பி. 200 வரையிலான காலம் அல்லது கி.மு. 200 முதல் கி.பி. 300 வரை என்று த.ச. துரைசாமிப் பிள்ளை கூறுகின்றார். இவ்வாறு பலரும் பல கருத்துக்களை முன்வைத்தபோதும் அவைகளை விரிவாக ஆராய முற்பட்டால் இறுதியாக கடைச்சங்க காலம் பல்லவர்களின் வருகைக்கு முன்னர் (கி.பி.300) அமைந்திருக்க வேண்டும் என்பதே முடிவாகிறது.



**சேர, சோழ, பாண்டியர்**

*இனிக் கடைச்சங்க காலத்து தமிழக அரசியல் வரலாற்றை ஆய்ந்தோமானால் சங்கச் செய்யுள்களிலிருந்து கிடைக்கும் தகவல்கள் கடைச்சங்க காலத்து இறுதியில் அரசாண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் பெயர்களை தெளிவாக்கு கின்றது. சங்க நூல்களின் தகவலின்படி கடைச்சங்க கால கடைசி சேர அரசனின் பெயர் குட்டுவன் சேரல் எனப்படும் கோக்கோதை மார்பன் என்பதாகும்.*

*கோக்கோதை மார்பனின் இளம்வயதுப் பெயர்தான் குட்டுவன் சேரல் என்பதும். அவனது தந்தையாகிய சேரன் செங்குட்டுவன் தன் மீது பதிற்றுப்பத்து நூலிலுள்ள ஐந்தாம் பத்து பாடல் பாடிய பரணருக்கு 'உம்பர்காடு' எனும் நாட்டின் ஒரு பகுதி வருவாயினையும் தனது மகன் குட்டுவன் சேரலையும் பரிசாக அளித்தான் என்பது செய்தி. இது பதிற்றுப்பத்து பதிகத்தில் குறிக்கப்பட்டுள்ளது.*

*இங்கே புலவரான பரணருக்கு தனது மகன் குட்டுவன் சேரலைப் பரிசாக அளித்தான் என்பதன் பொருள் அவரிடம் கல்வி கற்க அனுப்பி வைத்தான் என்று கொள்ளல் வேண்டும். சிறுவயதில் குட்டுவன் சேரலாக இருந்த இவன் முடிசூடிக் கொண்ட பின்னர் கோக்கோதை மார்பன் எனப் பெயர் பெற்றான் என்று கொள்ளலாம்.*

*கடைச்சங்க காலத்தில் சேர அரசர்களின் இளைய வழி வந்த 'பொறையர்' எனும் பிரிவினர் கொங்கு நாட்டை ஆட்சிப் புரிந்தனர். 'கணைக்காலிரும்பொறை' என்பவரே கடைச்சங்க காலத்தின் கடைசி ஆட்சியாளர். இவர் கோக்கோதை மார்பனின் தாயாதி உறவினர். சமகாலத்தைச் சேர்ந்தவர்கள். கணைக்காலிரும்பொறைக்கும், சோழன் செங்கணானுக்கும் இடையே நடைபெற்ற போரில் கணைக்காலிரும்பொறை தோல்வியுற்று சிறைப்பிடிக்கப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டு மீண்டும் கொங்கு நாட்டை அரசாண்டான்.*



**ராபர்ட் கால்டுவெல்**

*சோழன் செங்கணானுக்கு கட்டுப்பட்டு கணைக்காலிரும் பொறை ஆட்சி செய்தான் என்ற இந்தச் செய்தியின்படி சேர வேந்தன் கோக்கோதை மார்பன், சோழன் செங்கணான் மற்றும் கணைக்காலிரும்பொறை ஆகிய மூவரும் சம காலத்தவர் என்றாகிறது.*

*கடைச்சங்க காலத்தின் இறுதியில் பாண்டிய நாட்டை ஆண்ட வேந்தன் நெடுஞ்செழியன். இவன் கண்ணகி காலத்தில் வாழ்ந்த பாண்டியன் நெடுஞ்செழியன் அல்ல. அவனுக்குப் பின்பு வந்தவன். இவனை தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்றே வரலாறு உரைக்கிறது. இந்த நெடுஞ்செழியன் சேரநாட்டுக் கடற்கரையோரத்தில் பெரியாற்றின் முகத்துவாரத்தில் அமைந்த முசிறிப்பட்டினத்தை (கொடுங்கல்லூர்) முற்றுகையிட்டு அங்கிருந்த ஒரு தெய்வத் திருமேனியை எடுத்துக்கொண்டு மதுரை திரும்பினான் என்று அகநானூறு உரைக்கின்றது (அகம் 57: 14-16, 149: 11-14) ஆக முன்னர் கூறப்பட்ட மூவருடன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் சமகால அரசர்கள் என்ற முடிவுக்கு வருகிறார் மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள்.*




**சங்க கால தமிழகம்**

*ஆயின், கடைச் சங்கத்தின் கடைசிப் பாண்டியன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி (கானப்பெரெயில் என்பது காளையார் கோவிலிலுள்ள வெல்லுதற்கரிய பழைய அரண்) என்றும் அவர் கானப்பேரெயிலை அழித்து அதனை ஆட்சி செய்த வேங்கை மார்பனை அடக்கிய செய்தியினை ஐயூர் மூலங்கிழார் (புறம்-21) பாடியுள்ளார். இவ்வரசனுடன் சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியும், சேரமான் மாவெண்கோவும் நட்புடன்*

ஒருங்கிருந்தபோது அவர்களை அவ்வையார் (புறம்-367) பாடியுள்ளார். எனவே இவர்களே கடைச்சங்க காலத்து இறுதி அரசர்கள் என்பது கா.அப்பாத்துரையார் முடிவு.

தமிழ் மொழியின்பால் பற்றுக்கொண்டு பல்வேறு ஆய்வுகள் நடத்தி, பெருமை சேர்த்த டாக்டர் கால்டுவெல் குறிப்பிட்ட காலக்கெடுவை முன்னரே பார்த்தோம். ஆனால் இவ்விடத்தில் அவரது கருத்தை ஏற்பதற்கில்லை. ஒருவேளை அது சரியாக இருப்பின் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதலாக தொடர்ந்து பெரும் செல்வாக்குடன் திகழ்ந்த சைவ சமயக் குரவர் நால்வருக்கும், கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பு சிறப்பு பெற்றிருந்த முதல் மூன்று ஆழ்வார்களுக்கும், ஏனைய ஆழ்வார்கள் பலருக்கும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய மேற்கணக்கு நூல்கள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்கள் தமது பாசுரங்களில் மேற்கணக்கு நூல்களில் இருந்து பல்வேறு மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளனர். மேலும் அந்நூல்களின் கருத்துக்களையும் எழுத்துக்களையும் தனித்தனி பாசுரங்களிலும் பதிகங்களிலும் அமைத்துத் தந்துள்ளார்கள். அவர்கள் சங்க வரலாற்றையும் எடுத்து குறிப்புணர்த்தியும், வெளிப்படையாகவும் பொறித்துள்ளனர். எனவே இவற்றையெல்லாம் ஆய்வு செய்யுமிடத்து டாக்டர் கால்டுவெல்லின் கருத்து எவ்வகையிலும் பொருத்தமற்றது.

“ஆடித் திங்கள் பேரிருட் பக்கத்து
அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்எரி உண்ண”

என்று சிலப்பதிகாரத்தில் வரும் சில வான நூல் குறிப்புகளைக் கொண்டு திரு. எல்.டி. சாமிக்கண்ணு பிள்ளை அவர்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டே (கி.பி. 756 ஜூலை 23-ம் நாள்) என்று குறிப்பிடுகிறார். பிள்ளை அவர்கள் கூறிய காலவரையறை பொருந்தாதென்று திரு. கே.ஜி. சங்கரய்யர் அந்த சோதிடக் குறிப்புகளை ஆய்ந்து பார்த்து மறுப்புத் தெரிவித்துள்ளார்.

மேலும் அப்பர் தமது தேவாரத்தில் “நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி” எனப் பாடியுள்ளார். இதன்மூலம் அப்பர் பெருமானுக்கு, நக்கீரர் வரலாறு தெரிந்திருக்கிறது. அப்பர், சம்பந்தர், சிறுத்தொண்டர் ஆகியோர் சம காலத்தவர். இவர்களுள் சிறுத்தொண்டர், வாதாபிப் போரை நடத்தியவர். அப்போர் நடைபெற்ற காலம் கி.பி. 642 என்பது வரலாற்று ஆய்வு தரும் முடிவு. ஆதலால் அப்பர் காலம் கி.பி. 642 என்றே கொள்ளலாம். அப்பருக்கு நக்கீரர் வரலாறு தெரிந்திருப்பதால் சங்க காலம் கி.பி. 642-க்கு முன்னதாக அமைந்திருக்க வேண்டும். ஆதலால் சாமிக்கண்ணு பிள்ளையின் கருத்தையும் இங்கே ஏற்பதற்கில்லை.

*நந்தர்கள் தம் பெரிய நிதியத்தை, கங்கை நதியில் ஒளித்து வைத்திருந்தமை, மௌரியர்கள் தென்னாட்டுப் படையெடுப்பு ஆகிய வரலாற்றுச் செய்தியினை (அகநானூறில் வருபவை) முன்னிறுத்தி ஆதாரமாக்கி கடைச்சங்க காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டென்று திரு. மு.இராகவையங்கார் குறித்து வைத்துள்ளார். இவை புராணச் செய்திகளாக இருக்க வேண்டும் என்றும், வரலாற்றுச் செய்திகளாக இருக்க வாய்ப்பில்லை என்றும் திரு. வையாபுரிப்பிள்ளை தமது 'இலக்கியச் சிந்தனை' நூலில் குறிப்பிடுகிறார்.*

*மு. இராகவையங்கார் மௌரிய படையெடுப்பை குப்தர் படையெடுப்பாகக் கருதி, சேரன் செங்குட்டுவனின் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்றும் அவனைப் பாடும் பதிற்றுப்பத்து நூலும் அக்காலத்து நூலே என்றும் கூறுகின்றார். அவ்வாறு நோக்கின் இவரது கருத்துப்படி சிலப்பதிகாரத்தின் காலமும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு எனக் கொள்ளல் வேண்டும். அவ்வாறெனின் சேரன் செங்குட்டுவன் காலத்தவனாகிய கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன் ஆகிவிடுகிறான்.*

*ஆனால் இலங்கையின் வரலாற்றை விளக்கும் 'மகா வம்சம்' என்ற நூல் கயவாகு என்ற பெயரில் சிங்களத் தீவில் இரண்டு மன்னர்கள் இருந்ததை ஒப்புக்கொள்கிறது. அதில் முன்னவர் இரண்டாம் நூற்றாண்டையும், இரண்டாமவர் பன்னிரண்டாம் நூற்றாண்டையும் சார்ந்தவர்கள். வேறு கயவாகு மன்னர்கள் எவரும் இலங்கைத் தீவை அரசாட்சி செய்யவில்லை. எனவே சிலப்பதிகாரம் குறிப்பிடும் கயவாகு மன்னர் இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவராகவே இருத்தல் நிச்சயம். இதன்மூலம் இராகவையங்காரின் ஐந்தாம் நூற்றான்டு முடிவையும் ஏற்பதற்கில்லை.*

*இது தவிர சங்க நூல்களோ, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களோ தமிழ் நிலத்தை ஆண்ட பல்லவர்களைப் பற்றி யாதொன்றும் குறிப்பிடவில்லை. பல்லவர்கள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இடையில் தொண்டை நாட்டையும் நடுநாட்டையும் கைப்பற்றிப் பேரரசர்களாக ஆட்சி புரிந்து வந்துள்ளனர். இவர்கள் இந்நிலை அடையுமுன் பல்வேறு போர்களை நடத்தியிருக்க வேண்டும். அதுபற்றிய குறிப்புகள் ஏதும் சங்க இலக்கியங்களில் காணப்பெறவில்லை.*

*மூவேந்தர்களையும் வேளிர்களையும், மோரியர், நந்தர் போன்ற வடபுலத்து மன்னர்களையும் பாடிய தமிழ்ப் புலவர்கள், பல்லவர் தமிழ்நாட்டை ஆண்ட செய்தியினைக் குறிப்பிடாமல் விட்டது சிந்திக்கக் கூடியதே. எனவே சங்கப் புலவர்கள், பல்லவர் வருகைக்கு (கி.பி. 300) முன்னர் வாழ்ந்து வந்தவர்கள் என்று கொள்ளுதல் சரியே.*

எது எவ்வாறாயினும் கடைச்சங்கம் முடிவடைந்ததாகக் கருதப்படும் கி.பி. 250-க்குப் பின்பு தமிழ்வாழ் நல்லுலகில் மாபெரும் ஆட்சிமாற்றம் நடைபெற்றுள்ளது. தமிழ் நிலத்துக்கு அப்பால் வேற்றுப் பகுதியிலிருந்து இங்கே படையெடுத்து வந்த அயலார் முடியுடை மூவேந்தர்தம் மண்ணை ஆக்கிரமித்து கைக்கொண்டனர். அந்தச் சூழலில் இங்கே அரசாண்ட மூவேந்தர்தம் குடிவழி அரசர்கள் யாவர் என்னும் கேள்விக்கு பல்லாண்டுக் காலம் பதில் கிடைக்க வில்லை.

# 3

# களப்பிரர் வருகை

சேரன் செங்குட்டுவன் கி.பி. 2-ம் நூற்றாண்டில் கங்கை சமவெளிவரை படை நடத்திச் சென்று அங்கிருந்த குஷாணர்கள் மற்றும் சாகரை தென்னாட்டிற் புக இயலாமல் தடுத்தான். இம்முயற்சியில் அவனுக்கு ஆந்திரப் பேரரசரும் உறுதுணையாய் இருந்தார். ஆனால் 2-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் மக்கள் எழுச்சியுடன் பரவலாய் இடம்பெயரத் துவங்கினர்.

தென்னாட்டின் வடமேற்கில் இருந்த பல குடிகள் இந்த மக்கள் எழுச்சியால் உந்தப்பட்டு, தெற்கு நோக்கிப் புலம் பெயர்ந்தனர். சேர நாடு வலிமையுடன் இருந்த காலம் வரை இதுபோன்ற எழுச்சி தடுக்கப்பட்டிருந்தது. அது வலுவிழந்த காரணத்தால் கன்னட நாட்டெல்லையிலிருந்த களப்பிரர் என்றவோர் பண்படாக் குடி தமிழ் நிலத்தின் மீது படர்ந்தேறியது. இதனால் சேர, சோழ நாடுகளுடன் பாண்டி நாடும் நிலைகுலைந்தன.

தமிழ் மன்னர்களை முறியடித்து இந்நிலத்தை தமது ஆட்சி அதிகார எல்லைக்குள் கொண்டுவந்த இந்த களப்பிரர்கள், அரசாட்சி நடத்திய காலம் பற்றியச் செய்தி ஏதும் அறியாமற் போனதால், அக்காலம் தமிழக வரலாற்றின் மூடி மறைக்கப்பட்ட காலமாக விளங்கியது. அதனால் களப்பிரர் காலம் இருண்ட காலம் எனும் வழக்கு பரவலாயிற்று.

கி.பி. 20-ம் நூற்றாண்டு வரையிலான காலம் வரை களப்பிரர் எனும் ஆட்சியாளர்களைப் பற்றிய செய்தி அறியப்படாமல் இருந்தது. பாண்டியரின் வேள்விக்குடிச் செப்பேடு கிடைத்த பின்புதான், இந்த மண்ணை சில நூற்றாண்டுகள் ஆட்சி செய்தவர்கள் களப்பிரர்கள் என்னும் வேற்று மரபினர் என்ற உண்மை உலகறிந்தது. திரு. கே.ஜி. சங்கரன் அவர்கள் வட்டெழுத்தில் அமைந்த வேள்விக்குடிச் செப்பேட்டை இக்காலத் தமிழ் எழுத்தில் செந்தமிழ்த் திங்களிதழில் (மாத இதழ்) வெளியிட்ட பின்னரே இதை உணர முடிந்தது. அதன் பின்னர் இந்திய சாசன இலாகா 1923-ம் ஆண்டில் 'எபிகிராபியா இந்திகா' என்னும் ஆங்கில வெளியீட்டில் வேள்விக்குடிச் செப்பேட்டை வெளியிட்டது. அதன்பின்பு சில ஆண்டுகள் செல்ல, தளவாய்புரச் சாசனம் கிடைத்ததும் களப்பிரர்கள் பற்றிய செய்திக்கு மேலும் அது வலு சேர்த்தது.

சங்க காலத்துக்குப் பின்னர் முடியுடை மூவேந்தர்கள் தம் வலுவிழந்ததும் தமிழகம் பல்வேறு குறுநில மன்னர்களின் ஆட்சியில் பிளவுபட்டு கிடந்ததும் அதன் காரணமாகவே வேற்றிடத்து மக்களின் தலைமையிலான ஆட்சி இங்கே உருவாகியதும் இதுவரை கிடைத்துள்ள சான்றுகள் நமக்கு விளக்கப்போதுவன.

களப்பிரர் வேறு; (களப்பாழர்) களம்பாளர் வேறு என்று சில வரலாற்று அறிஞர்கள் கருத்து தெரிவிக்க, இல்லை இருவரும் ஒருவரே என்று கருத்து தெரிவித்தனர் திரு. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியும், திரு.மு. இராகவையங்காரும். ஆனால் வெவ்வேறு என்று கருதிய திரு. டி.வி. சதாசிவ பண்டாரத்தார் தமது கருத்துக்கு வலு சேர்க்க எழுதுகையில், "அன்றியும் தமிழ்நாட்டுக் குறுநில மன்னர் குடியினராகிய முத்தரையர் என்போர் களப்பிரரேயாவர் என்று சிலர் கூறுவது சிறிதும் ஏற்புடையதன்று. களப்பாள் என்ற சோனாட்டு ஊரொன்றில், முற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த அரசியல் தலைவன் ஒருவன் களப்பாளன் என்று சிறப்பித்து வழங்கப் பெற்றமையால் அவன் வழியினர் களப்பாளர் எனவும் களப்பாளராயர் எனவும் குடிப்பெயர் பெற்று பெருமையோடு வாழ்ந்து வருவாராயினர். எனவே தமிழராகிய களப்பாளரும் ஏதிலராகிய களப்பிரரும் ஒருவரேயாவரென்னும் முடிவு எவ்வாற்றானும் ஒத்துக் கொள்ளத்தக்கதன்று" (பாண்டியன் வரலாறு - டி.வி. சதாசிவ பண்டாரத்தார்)

இவ்வாறு சதாசிவ பண்டாரத்தார் தமது கருத்தை வலுவாக வலியுறுத்திப் பேசிய நாட்களில், தளவாய்புரச் செப்பேடு வெளிச்சத்துக்கு வரவில்லை. அச்செப்பேடு கிடைக்கப் பெற்ற பின்பு களப்பிரரும், களப்பாளரும் ஒருவரே என்பது தெளிவானது. பாண்டிய மன்னன் பராந்தகன் வீர நாராயணனின் முன்னோர் களப்பிரர் ஆட்சியினை முறியடித்து, திரும்பவும் பாண்டியர் நல்லாட்சி நிலைக்கச் செய்தனர் எனும் கருத்தை விதைக்கும் அச்செப்பேட்டு வரிகள்

"...தென்மதுராபுரஞ் செய்தும் ஆங்கதினில்லருந் தமிழ்
நற்சங்கம் இரீஇத் தமிழ்வளர்த்தும் ஆலங்கானத்
தமர்வென்று ஞாலங்காவல் நன்
செய்தியும் கடிராறு கவினலங்கற் களப்பாழர்
குலங்களைந்தும் முடிசூடிய முரண்
மன்னர் ஏனைப் பலரு முன்னிகந்த பின் இடையா
றையும் எழில் வெண்பைக் குடி
யிலும் வெல்கொடி எடுத்த குடைவேந்தன்

*றிருக்குலத்துக் கோமன்னர் பலர்க*

*ழிந்த பின்..... (வரி 99)*

*.......களப்பாழரைக் களைகட்*

*டமற்றிரண்டோன் மாக்கடுங்கோன்*

*மானம் பேர்த்தருளிய கோன்''*

*(த.பு. செப்பேடு வரி 131-132)*

*களப்பாழரும் களப்பாளரும் ஒருவரே என்பதை ஐயமின்றி எடுத்துரைத்து திரு. சதாசிவ பண்டாரத்தாரின் கருத்தை மறுக்கின்றது. இங்கே வேள்விக்குடி செப்பேடு களப்பிரர் என்று குறிப்பிட்ட இனத்தை தளவாய்புரச் செப்பேடு களப்பாழர் என்று எடுத்துக்காட்டுகிறது.*

*"கடிராறு கவனலங்கல் களப்பாழர் குலங்களைந்தும்" என்றும் "களப்பாழரைக் களைகட்ட மற்றிரண்டோன் மாக்கடுங்கோன் மானம் பேர்த் தருளியகோன்" என்றும் செப்பேடு தெளிவுடன் உரைக்கும் பாங்கு ஐயங்களகலச் செய்கிறது. களப்பிரரும், களப்பாழரும் ஒன்றெனக் கண்ட பின்பு இவர்கள் வந்தேறிய வரலாற்றைச் சற்று ஆய்வோம்.*

# 4

# களப்பிரர்களின் மூலம் - சில ஆய்வுகள்

கி.பி. முதலாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் வட இந்தியப் பகுதியில் குறிப்பாக மராட்டியம் மற்றும் ஆந்திரப் பகுதிகளில், வலிமைமிக்க பேரரசாக அதிகாரம் செலுத்தி வந்தவர் சாதவாஹனர்கள் என்னும் அரசக் குடியினர். இவர்களது வீழ்ச்சியைத் தொடர்ந்து வட இந்தியப் பகுதியில் குப்த அரச பரம்பரையினரும் தெற்கே ஆந்திர மண்ணில் பல்லவ வம்சாவளியினரும் தங்களது ஆதிக்கத்தை வலுவாக்கத் தொடங்கினர். இதுதவிர பல்வேறு குறுநில அரசுகளும் தங்களை சுதந்திர அரசுகளாகப் பிரகடனம் செய்துகொள்ளத் தென்பட்டனர்.

ஆந்திரத்தில் ஆளுமை செலுத்திய பல்லவ அரசானது சிவஸ்கந்த வர்ம பல்லவனின் ஆட்சிக் காலத்தில் தனது படையெடுப்பை தெற்கு நோக்கி நீட்டித்து தனது அரசின் எல்லையை தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் வரை கொண்டு வந்தார். இவரது புதல்வன் விஷ்ணுகோபன் காலத்திலும் இந்த நீட்சி வலுவானது. இவர்கள் தங்கள் தலைநகராக பெல்லாரியை தேர்வுசெய்து அங்கிருந்து ஆட்சியை நடத்தினர். (கி.பி. 340-355) விஷ்ணுகோபன் பெல்லாரியில் இருந்து காஞ்சிபுரம் வருகைபுரிந்து அங்குள்ள அந்தணர்களுக்கு (வேத பண்டிதர்கள்) பல்வேறு பரிசுகள் அளித்ததாகச் செப்புப் பட்டயத்தில் பொறித்து வைத்துள்ளான்.

கி.பி. 250-ல் சாதவாஹனர்களின் ஆட்சி முடிவுக்கு வந்த பின்பு, வட இந்தியாவில் வலிமைபெற்ற குப்த பேரரசின் திறம் வாய்ந்த பேரரசர் சமுத்திர குப்தர் வட இந்தியப் பகுதியில் பலவற்றையும் தனது ஆட்சிக்கு உட்படுத்தியதுடன் ஆந்திரத்துக்கும் தனது படைகளை அனுப்பி வெற்றிகொள்ள திட்டமிட்டான். அவ்வகையில் ஆந்திர பல்லவ அரசின் கடைசி அரசனான விஷ்ணுகோபனைத் தோற்கடித்து காஞ்சிபுரம் வரை குப்தர்கள் ஆட்சியை பரவலாக்கினான் சமுத்திர குப்தன். (கி.பி. 355)

காஞ்சியை வென்ற சமுத்திர குப்தன் அதனை நேரடியாக ஆட்சி செலுத்த முனையாமல் கப்பம் செலுத்தும் வகையில் உடன்படிக்கை செய்துகொண்டு நாடு திரும்பினான். தமிழ் நிலத்தின் பழங்குடி இனமான ‘திரையர்கள்’ என்பாரிடம் குப்த அரசன் காஞ்சியின் அரசுரிமையை அளித்தான் என்று நம்பப்படுகிறது.

*(Corpus Inscriptionum inchicarum (Inscriptions of the Early Guptas) By John F. Fleet, Vol II, I Calcutta. Govt. of India Central Publications Branch 1888, 10-17)*

"காஞ்சியை மற்றும் ஆந்திரத்தை பல்லவ அரசு ஆட்சி செய்த வேளையில் அவர்களுக்கு ஆந்திரத்தில் கிருஷ்ணா மாவட்டத்தின் கீழைப் பகுதியில் அதாவது அமராவதி அருகே ஒரு புதிய தலைநகரம் உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்தச் சூழலில் அங்கே வாழ்ந்து வந்த பூர்வீகக் குடியினருக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே மோதல் உருவானது.

அரசின் வலுவான அடக்குமுறையை தாக்குப்பிடிக்க முடியாமல் பூர்வகுடிகள் (முரட்டுத்தனமான நாகரிகத் தேர்ச்சியற்றவர்கள்) தங்கள் இருப்பிடத்தை துறந்து மேலும் தெற்கு நோக்கி பரவலாக முன்னேறத் தொடங்கினர். அவ்வாறு அவர்கள் சென்றடைந்த பகுதிகளில் ஆட்சியில் இருந்தவர்களுடன் ஒத்துப்போக முடியாமல் மோதலை மேற்கொண்டு அவர்களை வீழ்த்தி தங்களை அங்கு நிலைப்படுத்திக் கொண்டனர். இதுவே களவர் (களப்பிரர்) இனத்தின் வருகை பற்றிய வரலாறாக இருக்க முடியும். பிராமணீய எதிர்ப்புக் கொள்கையினை மேற்கொண்டு ஒழுகிய இவர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை இவர்களது வீழ்ச்சிக்குப் பின்பு பிராமண ஆளுமை கொண்டோர் அழித்துவிட்டனர்." என்பது டாக்டர் அய்யங்கார் அவர்களின் கருத்து.

## களப்பிரர் - வடுகர் இன ஒற்றுமை

சங்க இலக்கியங்கள் பரவலாக மேற்கோள் காட்டும் ஓர் இனமாக, முழுமையான நாகரிகம் அடையாத மூர்க்க குணம் படைத்த ஓரினமாக வேங்கடமலை மற்றும் அதன் சுற்றுப் பகுதியில் இந்த களப்பிர இனத்து மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். பழங்குடிகளாக சங்க இலக்கியங்கள் சுட்டிக் காட்டும், பாவத்திரி, புல்லி, திரையர் வகுப்புகளைச் சார்ந்த இவர்கள் கால்நடைகளைத் திருடும் வர்க்கமாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பழங்குடி மக்கள் பௌத்த சமய சார்புடையவர்கள் என்றும் சாதவாகனர்களின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, குப்தர்களின் மேலாதிக்கம் தொடரவே இவர்கள் தென்னிந்தியப் பகுதி முழுமையாகப் பரவி ஆட்சிபுரியத் துவங்கினர். பௌத்த சமய சார்புமிக்க இவர்கள் பிராமண எதிர்ப்புக் கொண்டவர்களாக இருந்த காரணத்தால், இவர்கள் ஆட்சி செய்த காலம் முழுவதும் தமிழகத்தின் இருண்ட காலம் என பிராமணீய வரலாற்று ஆசிரியர்களால் குறிக்கப்பட்டது. அதேநேரம் இவர்களைப் பற்றிய சில குறிப்புகள் பௌத்த மத நூலாசிரியர்கள் எடுத்துக்காட்டுவதால் களப்பிரர் குலம் பற்றிய சிறியதோர் வெளிச்சம் வரலாற்றில் தனிக்கீற்றாக உமிழ்கிறது.

இவர்கள் பழைய நாட்களில் பல்வேறு அரசுகளின் படைப் பிரிவில் குறிப்பாக மௌரிய அரசுப் படையில் அங்கம் வகித்துள்ளனர். தமிழ் இலக்கியங்களில் இவர்கள் 'வடுகர்' என்றே குறிப்பிடப்படுகின்றனர். மூர்க்க

குணம் கொண்ட இந்த இனத்தவர் தாங்கள் வசித்து வந்த நிலப்பகுதியை ஒட்டி, கிழக்குப் பகுதி வடுகர் எனவும், மேற்குப் பகுதி வடுகர் எனவும் தங்களுக்குள் பிரிவுபட்டனர்.

இவ்வாறு தனித்தனியே வாழத் தலைப்பட்ட இவ்விரு பிரிவினரும் அவரவர் சார்ந்த நிலப்பகுதியை ஒட்டி மொழி மற்றும் கலாசார மாறுதலை அடையவும் தவறவில்லை. அதன்படி கிழக்குப் பகுதியில் வாழ்ந்த வடுக இனத்து மக்கள் தெலுங்கு மொழி பேசுபவர்களாகவும் மேற்குப் பகுதி மக்கள் கன்னடம் பேசும் நிலைக்கு உந்தப்பட்டதுடன் பெயர் மாறி கோசர் எனும் பெயரால் அறியப்படுபவர்களாகவும் வழிமாறிப் போனார்கள்.

வடபகுதிக்குச் சென்ற இந்த வடுக கோசர்கள், மராட்பர் என்று அழைக்கப்பட்டு பின்னாட்களில் அது மருவி மராத்தியா என்ற விளிப்பெயரால் அழைக்கப்பட்டனர். வடபுலம் சார்ந்த தெலுங்கு வடுக இனத்து மக்கள் கலிங்கத்துப் பகுதியில் (ஒரிசா) ஓடர்கள் அல்லது ஓரியர்கள் என்று தடம் மாறினார்கள். கோசர்களின் (கன்னட வடுகர்) முதல் அரசு, சேர நாட்டில் துளு நாடு என்னும் பகுதியில் அமைந்ததென தமிழ் இலக்கியச் சான்றுகள் கூறுகின்றன.

துளு நாட்டிலிருந்து அவர்கள் (மைசூர்) எருமை நாட்டுக்கு முன்னேறினார்கள். எருமை எனும் பெயரிலான வடுகத் தலைவரின் பெயரால் அந்த நாடு எருமை நாடு எனப்பட்டது. இவன் தலையாலங்கானம் போரின்போது பாண்டியன் நெடுஞ்செழியனை எதிர்த்துப் போரிட்டவன். சேர நாட்டிலிருந்து மெல்ல மெல்ல இந்த இனம் இடம்பெயர்ந்து பாண்டிய, சோழ நாடுகளை வளைத்தது.

சேர நாட்டில் அந்த நாளில் வழக்கத்திலிருந்த பிராமணீய ஆதிக்க மனப்பான்மை இவர்களின் மூலம் (பரசுராமர் கேரளத்தை (சேர நாடு) உருவாக்கினார் என்ற கதை வழியாக வட இந்திய பிராமண ஆதிக்கம் மேலோங்கிய நிலை) தமிழ் நிலத்திலும் புகுந்து தமிழ் நிலத்து மக்கள் வருணாசிரம தர்மம் எனும் மேல்ஜாதி, கீழ்ஜாதி பிரிவுக்கு இலக்காயினர்.

ஆங்கிலேய ஆட்சியாளர்கள் ஆரியர்கள் மற்றும் பிராமணர்கள் பற்றிய தொடர்பு குறித்து குழப்பம்கொண்டு பிராமணர்களை, வடக்கிலிருந்து வந்தவர்கள் என்றும் இந்திய இனத்தில் முக்கியப் பங்கு வகிப்பவர் என்றும் வரலாற்றில் எழுதி வைத்தனர். ஆனால் பிராமணீய மேலாதிக்கம் இங்கே சேர நாட்டிலிருந்துதான் களப்பிர ஆட்சியாளர்கள் மூலம் பரவியிருக்க வேண்டும் என்பது புலனாகிறது. படிப்படியாக அது சோழ, பாண்டிய நாடுகளுக்கு, கன்னட வடுக பிராமணர் களால் திணிக்கப்பட்டது என்றும் கருதமுடிகிறது.

*இரண்டாம் புலிகேசியின் அவையில் கன்னடத்தில் எழுதப்பட்ட 'மனுஸ்மிருதி' எனும் பிராமண நூல் போற்றப் பட்டது. அதன்படி மானவ குலம் அல்லது மானவ தர்மம் அனைவருக்கும் போதிக்கப்பட்டது. வடுக ஆட்சியாளர்கள் இதன் மூலம் பிறப்பு முகமான தீண்டாமை நிலைப்பாட்டை தமிழ் நிலத்தில் சோழ, பாண்டிய அரசுப் பகுதிகளில் திணித்தனர் என்று கருத இடமுண்டு.*

*வரலாற்று ஆய்வாளர் திரு. புரபசர் ராமசாமி அய்யங்காரின் கருத்துப்படி, களப்பிரர்கள் கல்புரிஸ் எனும் இந்தோ ஆரிய வம்சாவளியைச் சார்ந்தவர்கள் என்று குறிப்பிடுகிறார்.*

*முடிராஜா – முத்துராஜா – களப்பிரர் – கல்புரிஸ் (இந்தோ ஆரியர்) என்பது அவரது கணிப்பு. இந்தோ ஆரிய வம்சத்தின் வழித்தோன்றல்களான 'கல்புரிஸ்' என்னும் மத்திய இந்தியப் பகுதியில் வாழ்ந்த மக்களின் வழிவந்தவர்களே களப்பிரர். இவர்களது மதம் ஜைனம் மற்றும் சைவம்.*

*ஆரியத் தொடர்புகொண்டவர்களான 'கல்புரிஸ்' வம்சாவளியினருக்கு புராண நாயகர்களான கிருஷ்ணன், சிசுபாலன் ஆகியோருடனும் அவர்கள் சார்ந்த சத்திரிய வம்சத்துடனும் தொடர்பு இருப்பதாகவும் நம்பப்படுகிறது.*

*சில வரலாற்று ஆய்வாளர்கள் முத்தரையர் (முடிராஜா) களப்பிரர் வழிவந்தவர்கள் என்றும், இவர்கள் கர்நாடகத்தின் மேலைப் பகுதியில் (ஹம்பி பகுதி) மற்றும் திருப்பதி (வேங்கடமலை) மலைப்பகுதியிலும் வாழ்ந்து வந்தவர்கள் என்றும், இந்தப் பகுதியே இராமாயணத்தில் குறிப்பிடும் 'தண்டகாருண்யம்' எனும் வனப்பகுதி என்றும் குறிப்பிடு கின்றனர்.*

*இவர்கள் சமண மதச்சார்பு கொண்டவர்கள். அடிப்படை யில் கல்புரிஸ் அரசர்கள் ஜைன மதத்தை ஆதரிப்பவர்கள். வேள்விக்குடி செப்பேடு மற்றும் நாயன்மார்கள் புராணம் இதற்குச் சான்று பகர்கின்றன என்கிறார் திரு. ராமசாமி அய்யங்கார். இவர்களின் வருகைக்குப் பின்னர் சமண மதம் இங்கே (தமிழ் நிலத்தில்) தழைத்தோங்கியது. கல்புரி வம்சத்தின் கிளை வழியினர் என்றே இவர்களைக் கொள்ளலாம். கல்புரி வம்ச அரசர்கள் (மத்தியப் பிரதேசம்) சமணத்தை ஆதரித்தனர். இவர்கள் இராஷ்டிரகூடர் அரச பரம்பரையினருக்கும் நெருக்கமானவர்கள். இராஷ்டிரகூடர்கள் சமண சமய நம்பிக்கைக் கொண்டவர்கள். இராஷ்டிரகூட அரசர் விஜ்ஜாலா மற்றும் அவரது அமைச்சர் குழாம் பலரும் சமணத்தைத் தழுவியர்கள். ரச்சமய்யா என்ற கல்புரி அரசின் அமைச்சர், சரவணபெலகுளாவில் தீர்த்தங்கரரின் உருவ சிலையை நிர்மாணித்தார் என்பதெல்லாம் புரபசர் ராமசாமி அய்யங்கார் எடுத்துக்காட்டும் குறிப்புகள்.*

*களப்பிரர்கள் கர்நாடக மாநிலம் நந்தி மலையிலிருந்து ஆட்சிபுரிந்த வடுக கர்நாடக களப்பிரர் என்றும் அவர்களது நாடு களவர நாடு என்று (தற்போது*

கோலார் பகுதியில் சிக்பல்பூர்) அறியப்பட்டது எனவும் கருத்து நிலவுகிறது. அதற்கு ஆதாரமாக,

*அருள்புரி பெரும்புகழ் அச்சுதர் கோவே!*

*இணையை ஆதலின் பனிமதி தவழும்*

*நந்தி மாமலைச் சிலம்ப*

*நந்திநிற் பரவுதல் நாவலர் கரிதே!*

*யாப்பருங்கலம் - அமிர்தசாகரனார்*

*(பழைய உரை) பக்கம்-363*

மற்றும்

*"அருளுடை ஒருவ! நிற்பரவுதும் எங்கோ*

*இருளறு திகிரியொடு வலம்புரித் தடக்கை*

*ஒருவனை வேண்ட இருநிலம் கொடுத்த*

*நந்தி மால்வரைச் சிலம்பு நந்தி*

*ஒற்றைச் செங்கோல் ஓசிஇக்*

*கொற்ற வெண்கொடை நிழற்றுக எனவே...."*

*(யாப்பருங்கலம் - அமிர்தசாகரர் (பழைய உரை) அதிகாரம் 83 பக்கம் 325-326, International Institute of Tamil studies Publication)*

*"நிகரில சோழ மண்டலத்துக் களவர நாட்டு நந்திமலை*

*மேல்மஹா நந்தீஸ்வரம் உதயமகாதேவருக்கு"*

*(Epigraphic Carratiea Vol 10. Chick-Ballpur Inscription no. 21)*

எனும் எடுத்துக்காட்டுகள் களப்பிரர் நந்திமலையை உறைவிடமாகக் கொண்டு ஆட்சிபுரிந்தவர்கள் என்பதை விளக்கப்போதுவன.

இனி களப்பிரர்கள் வேங்கடமலைப் பகுதியில் வாழ்ந்த குறுபர் அல்லது குறவர் இனத்து மக்களின் வழித் தோன்றல்களே என்னும் கருத்தும் சில ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ளனர். அவ்வகையில் திரு. ராகவாச்சாரியார் குறிப்பிடும்போது, பொய்கை ஆழ்வார், சங்கராச்சாரியார் (ஆதிசங்கரர்)

ஆகியோரது குறிப்புகளின்படி, வேங்கடமலை யானைகள் நிறைந்த வனப் பகுதியாகவும், அங்கே யானை களைப் பிடித்து பழக்கும் வலிமைமிக்க இனமாக, குறுபர் அல்லது குறவர் இனத்து மக்கள் வாழ்ந்து வந்ததாகவும் உணர முடிகிறது. ஆழ்வார்கள் குறிப்பிடும் தமிழ் குறவர் குலத்தினர் இந்த குறுபர் இனத்தின் மருவிய பெயராக இருத்தல் வேண்டும் என்று கருதும் ராகவாச்சாரியார், அதற்குச் சான்றாக, குறவர் இனப் பெயருடன் முடிவுறும் பல்வேறு பகுதிகள் கர்னூல், மைசூர், சேலம், கோயம்புத்தூர், நீலகிரி பகுதிகளில் இருப்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

அவை குறுபாலகோட்டா, குறுபால்பட்டி, குறுபாகல்புரம், குறும்பபாளையம், குறும்பப்பட்டி, குறும்பரஹல்லி ஆகியவையாம். பல்லவர்கள் வருகைக்கு முன்னர் குறுபர்கள் அல்லது குறவர்கள் என்னும் இந்த இனத்து மக்கள் திருமலை (வேங்கட) மலைப்பகுதியில் தங்களது ஆதிக்கம் கொண்டிருந்தனர் என்பது இவரது கணிப்பு. இதுபோன்ற கணிப்புகள் பல இருந்தபோதும் களப்பிரர் சற்றேறக் குறைய மூன்று நூற்றாண்டுகள் இந்த மண்ணில் தங்கள் சுய ஆதிக்கத்தை நடத்தியிருந்தனர் என்பதை கருத்திற்கொண்டு அனைத்து ஆய்வுகளையும் முன்னிறுத்தி அவர்களைப் பற்றி அறிந்துகொள்ள முயற்சி செய்வதே தற்போதைக்கு அறிவுடைமை.

# 5

## களப்பிரர் எப்பகுதியினர்?

களப்ரர், களப்பிரர், களப்பரர், களப்பாளர், களப்பாழர், கள்வன், கலியரசர் எனப் பல்வேறு விதமாக குறிக்கப்படும் இம்மரபினரை பொதுவாக களப்பிரர் என்றே அழைக்கின்றனர். இவர்கள் தமிழ் மரபைச் சேர்ந்தவர்கள் அல்ல. அதேநேரம் இவர்கள் ஆரியர்களும் அல்ல. இவர்கள் வட இந்தியப் பகுதியில் இருந்து தமிழ்நாட்டுக்கு குடியேறியவர்கள் என்று கருதுகிறார் திரு.சதாசிவ பண்டாரத்தார். அவர்தம் கருத்தாக "....அன்னோர் (களப்பிரர்) பிராகிருதம், பாலி ஆகிய மொழிகளைத் தமக்குரிய மொழிகளாகக் கொண்டு ஆதரித்துள்ளமையால் அம்மரபினர் தமிழர் அல்லர் என்பதும் வடபுலத்தினின்றும் போந்த ஏதிலர் ஆவார் என்பதும் நன்கு தெரியப்படும்'' என்று உரைக்கிறார்.

இவர்கள் பௌத்த, சைன (சமண) மதங்களை ஆதரித்து வந்தனர். இந்த மதங்களின் 'தெய்வ பாஷை' அதாவது இறை வணக்க மொழியென்பது பிராகிருதம். (சூரசேனியும் பாலி மொழியும்) ஆதலால் இயற்கையாகவே இந்த பிராகிருத மொழிகள் வலுப்பெற்று விளங்கின. அதேநேரம் பிராகிருதம் இவர்களது (களப்பிரர்) தாய்மொழியல்ல; கன்னட மொழியே தாய்மொழி. இவர்கள் தமிழ் நிலத்துக்கு அருகாமையில் இருந்த கன்னட வடுகர் இனத்தைச் சார்ந்த மரபினர். ஆதலால் இவர்கள் வட இந்தியாவிலிருந்து வந்த ஆதிக்க சக்திகள் அல்ல. கன்னடர் என்பதால் இவர்களும் திராவிட இனம் சார்ந்தவர்களே.

இனி இவர்கள் கன்னடரே எனினும் வட வேங்கடத்தி லிருந்து குடிபெயர்ந்தவர்கள் என்ற கருத்தும் நிலவுகிறது. பழந்தமிழ் நிலத்தின் வடவெல்லையாக வேங்கடமலை குறிக்கப்படுகிறது.

'வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்'

என்ற பனம்பாரனார் கூற்றை முன்னரே கண்டோம். வேங்கட நாட்டை ஆண்ட சிற்றரசன் 'கள்வர் கோமான் புல்லி' என்று அழைக்கப்பட்டு வந்துள்ளார்.

"கள்வர் என்பதை களவர் என்றும் படிக்கலாம். பழைய ஏட்டுச் சுவடிகளில் புள்ளியிட வேண்டிய எழுத்துக்களுக்குப் புள்ளி இடாமலே எழுதும் வழக்கம்

இருந்தது. ஆகவே இந்தச் சொல், கள்வர் என்பதா களவர் என்பதா என்பதை அறுதியிட்டுக் கூறமுடியவில்லை" என்று எடுத்துச் சொல்கிறார் திரு. மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள். இச்சொல்லை கள்வர் என்று ஏற்றுக்கொண்டு அது களப்பிரரையே குறிக்கிறது என்று எழுதினார் திரு. மு. இராகவையங்கார். டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்காரும் இக்கருத்தையே வழிமொழிகிறார்.

வேங்கட நாட்டை ஆண்ட களவர் அல்லது கள்வர்தான் (புல்லி அரசர்) களப்பிரர் என்று ஐயப்பாடின்றி அடித்துச் சொல்கிறார் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார். ஆனால் "இவ்விருவர் கருத்துக்களும் ஏற்கத்தக்கதன்று. வேங்கட நாட்டிலிருந்து ஆட்சிபுரிந்த களவர் அல்லது கள்வர் என்பவர் தமிழர். களப்பிரரோ தமிழரல்லாதோர். கன்னடர் மற்றும் சங்க காலத்து வேங்கட நாடு தொண்டை மண்டலத்து பகுதியாக தமிழ்நாட்டுடன் கலந்திருந்தது. ஆகவே தமிழராகிய களவர் (கள்வர்) வேறு. கன்னடராகிய களப்பிரர் ஆக இவர்கள் இருக்க முடியாது. கள்வர் (களவர்) வேறு களப்பிரர் வேறு என்று தமது கருத்தை பதிய வைக்க முயன்றுள்ளார் திரு. மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள்.

ஆனால் வேங்கடமலைத் தலைவன் 'கள்வர் கோமான் புல்லி' எனும் தகவல், அவன் தமிழகத்தின் வடவெல்லையான வேங்கடப் பகுதியின் தலைவன் என்று அறுதியிட்டுச் சொல்லவில்லை. வேங்கடத்தின் தென்பகுதி தமிழ் நிலத்தில் இருந்தது எனின் அதன் வடபகுதி வேற்று நிலத்தில் அமைந்திருத்தல் இயல்பே. அவ்வாறெனின் புல்லி அவ்வட பகுதியில் அரசாண்ட தலைவனாக இருப்பதில் வியப்பில்லை அன்றோ! வேற்று மொழி பேசுபவனாக இருந்தபோதும் இவன் தமிழ் அறிந்தவன். தமிழ்ப் புலவர்களைப் பெரிதும் ஆதரித்துள்ளான்.

"புடையலங் கழற்காற் புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந் தார்க்கு
மொழிபெயர் தேஎம்"

(அகம் 295)

'மொழிபெயர் தேயம்' என்பது தமிழ் புலவர்கள் அவனது நாட்டைக் குறிக்க பயன்படுத்திய சொல் - இதிலிருந்து அவன் தமிழ் நிலத்தைச் சேர்ந்தவன் அல்ல என்பது தெளிவாகிறது. இனி இந்த புல்லியானவன் மழநாட்டை வென்றவன் எனும் செய்தியினைக் குறிக்கும் அகப்பாடல்,

*“கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்*

*மழபுலம் வளத்திய மாவளர் புல்லி*

*விழவுடை விழுச்சீர் வேங்கடம்”*

(அகம், 61)

தமிழ் நிலத்தில் அமைந்திருந்த மழநாட்டை (இன்றைய சேலம், தருமபுரி மாவட்ட பகுதிகள்) வெற்றிகொண்டான் எனும் செய்தியை தெளிவுபட எடுத்துரைக்கிறது.

சங்க காலத்தின் இறுதியில் தமிழ் மண்ணில் முடியுடை மூவேந்தர் ஆட்சி சிதறுண்டு குறுநில மன்னர்கள் ஆதிக்கம் பெருத்ததால் மழநாடு போன்ற சிறு நாட்டை வேங்கடத் தலைவன் புல்லி எளிதில் வென்று இங்கே கால் பதிக்க ஏதுவாயிற்று.




**மொழிபெயர் தேயம்**

*“...................வடுகர்*

*பிழியார் மகிழர் கலிசிறந்தார்க்கும்*

*மொழிபெயர் தேஎம்”*

எனும் வரிகளிலிருந்து வடுகர் வாழும் இடமே மொழி பெயர் தேயம் அங்கு கலி எக்காளமிடுகிறது என பொருள் விளங்குகிறது. கலி என்பது கலி குலத்தைக் குறிப்பது. கலி அரசன் கள்வர் கோமான் புல்லி ஆட்சி புரிவதைத்தான் புலவர்

இங்கே குறிப்பிடுகிறார். வடுகர் நாட்டு கள்வர் குலஞ் சார்ந்தவன் எனினும் தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் அளவுக்கு தமிழ் அறிவு கொண்டவன் என்பதும் தெளிவாகிறது.

தென்னகத்து (தமிழகம்) முடியுடை மூவேந்தர் செல்வாக்கு இழந்தபின், குறுநில மன்னர்கள் செல்வாக்கு பெற்றனர். இந்தச் சூழலை சாதகமாக்கி வேங்கட மலையிலிருந்து தென் நிலம் நோக்கி நுழைந்து இங்கிருப்பவர்கள் மீது ஆக்கிரமிப்புச் செய்தனர் களப்பிரர்களில் ஒரு பிரிவினர். அத்தகு படையெடுப்பின் முதல் கட்டந்தான் இங்கே மழ நாட்டை வெற்றிகொண்ட நிகழ்வாகும். இதனைத் தொடர்ந்து சோழ நாடு, பாண்டிய நாடு, சேர நாடு என அடுத்தடுத்து அவர்களின் படையெடுப்பில் தமிழகத்தில் தங்களது ஆட்சியை விரிவுபடுத்தினர். ஆனால் இவர்கள் தொண்டை நாட்டில் நுழையக் காலம் பிடித்தது. காரணம் அங்கே பல்லவர்கள் வலிமை பெற்றிருந்தனர்.

இனி இந்தக் களப்பிரர்கள் வேங்கட மலை நாட்டு வடுக இனமென்று கொண்டாலும் கன்னடம் தாய்மொழியாகக் கொண்ட காரணத்தால் இவர்களின் ஆதியிருப்பிடம் எதுவென ஆய்ந்து கண்டறிய வேண்டியுள்ளது.

தற்போது கருநாடக மாநிலத்தில் அமைந்துள்ள சரவண பெலகுளா எனும் பகுதி அந்நாளில் கள்பப்பு நாடு அல்லது கழ்பப்புநாடு என்று விளங்கிற்று. கழ்பப்பு (களப்பு) என்பதை சமஸ்கிருதத்தில் 'கடவப்ர' என்று கூறினார்கள். இந்த பகுதியில் அமைந்துள்ள சந்திரகிரி மலையின் பழைய பெயர் 'களபப்புபெட்ட' (பெட்ட எனின் மலை) என்பதாகும் (கர்நாடக- இதிஹாஸதர்ஸன் பக்கம்- 13,14)

ஆக களப்பிரர்கள் கருநாடக மண்ணின் மைந்தர்கள் என்பது தெளிவாகிறது. இவர்கள் நாளடைவில் கோலாரிலுள்ள நந்திமலை, தமிழகத்தின் வடவெல்லையான வேங்கடமலை ஆகிய பகுதிகளில் குடியேறி ஆட்சியுரிமைப் பெற்றனர். அவ்வகையில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் வேங்கடமலைத் தலைவனாக வள்ளல் கள்வர் கோமான் புல்லி இருந்ததும், அவனே மழநாட்டை (தமிழகத்தின் பகுதி) வென்று இங்கே களப்பிரர் நுழைவுக்கு வழியமைத்ததும் தெரியவருகிறது.

இவ்வாறு தமிழ் நிலத்தில் காலூன்றிய களப்பிரர்கள் படிப் படியாக பல்லவர்கள் ஆட்சி செய்த தொண்டை மண்டலம் தவிர்த்து ஏனைய சோழ, பாண்டிய, சேர அரசுகளின் நிலப் பகுதியைக் கைப்பற்றி அரசாட்சியை நிறுவினர். முன்னரே எடுத்துக்காட்டிய குறிப்புப்படி சேர, சோழ, பாண்டிய முடியரசர்கள் வலுவிழந்து குறுநில மன்னர்கள் ஆட்சி நிலவியதால், களப்பிரர்கள் மிக எளிதாக தங்கள் எல்லையை பரவலாக்க முடிந்தது.




சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தில் மூர்த்திநாயனார் புராணத்தைச் சொல்லுமிடத்து அப்போது பாண்டிய நாட்டை அரசாண்ட மன்னன், கன்னட நாட்டு அரசர் என்று குறிப்பிடுகிறார். "கானக் கடிசூழ் வடுகக் கருநாடர் மன்னன்" என்பது அவர் வாக்கு.

இங்கே 'வடுகக் கருநாடர் மன்னன்' என்பதன் பொருள் இவன் வடுக நாடாகிய (கருநாடக) கன்னட நாட்டு அரசன் என்பதாகும். கன்னட நாட்டினை அந்த காலத்தில் முழுமையாக ஒரே அரசன் ஆட்சி செய்யவில்லை. வெவ்வேறு பகுதிகளை வெவ்வேறு அரசர்கள் ஆட்சி புரிந்தனர்.

பிற்கால நூலாகிய கல்லாடம் 'மதுரை வவ்விய கருநாடர் வேந்தன்' என்று குறிப்பிடுகிறது. ஆனால் மதுரையை ஆட்சி செய்த கன்னட நாட்டு மன்னன் எப்பகுதியைச் சேர்ந்தவன் என்பதைப் பெரிய புராணமோ கல்லாடமோ விளக்கவில்லை. அவர்கள் கன்னட நாட்டில் 'களபப்பு' என்ற நாட்டையாண்ட சிற்றரசர் எனும் செய்தி கன்னட நூல் மற்றும் அங்குக் கிடைத்த கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகிறது.

"மௌரியப் பேரரசர் அசோகரின் பாட்டனார் சந்திரகுப்த "மௌரியன் தமது அரசாட்சியைத் துறந்து சமண மதத்தைச் சார்ந்து பத்ரபாகு எனும் சமண முனிவருடனும், அவரது சீடர்களுடனும் தென்னாடு வந்து 'களபப்பு' எனும் நாட்டிலுள்ள களபப்பு மலையில் தங்கினர் என்பதனை சமண சமய நூலாகிய 'வட்டாராதனெ' என்னும் நூல் சுட்டிக் காட்டுகிறது. (வட்டாரதனெ, பத்ரபாஹீ பட்டாராகதெ) அவர்கள் கழ்பப்பு (களப்பு) நாட்டுக்கு வந்தார்கள் என்று இந்நூல் கூறுகின்றது. கழ்பப்பு என்பதும் கள்பப்பு என்பதும் ஒன்றெண முன்னரே கண்டோம்.

மேலும் ஹொஸகோட்ட தாலுகாவில் கிடைத்துள்ள பழைய வீரகல் சாசனம் கன்னட மொழியில் பழைய கன்னட எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இதில் களப்பிர இராச்சியம் பற்றிக் கூறப்படுகிறது.

"ஸ்வஸ்திஸ்ரீ மதுராளக் களவரதிரு ராஜ்யதல்

மள்ளே கவுண்டரும் சாவா காவுண்டுரு துயீநாத

பல்கனிளலுதுவ காமுண்டஸத்த எர்ரதயக் கர்ளனபூழ்திகம்"

*(Epi. car. vol IX. Hoskote 13p. 198)*

இதன் மூலம் (களபப்பு நாடு) களவர இராச்சியம் முந்தைய மைசூர் தேசத்தில் இப்போதுள்ள 'சரவணபெலகுலா' எனும் வட்டாரத்தில் அமைந்திருந்தது என அறிய முடிகிறது. வேறு சில சாஸனங்களில் கள்வர் நாடு மற்றும் களப்பிரர் நாடு எனும் பெயர்களும் காணக் கிடைக்கின்றன. *(Epi. car. vol IX. Hoskote 13p. 198)*

இந்த களபப்பு இராச்சியம் மைசூர் தேசத்தில் (கோலார்) கோலாலபுரம் வரை பரவியிருந்தது. கோலாலபுரத்திலுள்ள நந்திமலை களப்பிரரின் மலை என்று கூறப்படுகிறது. *(Epi. car. vol. X chintamani 9)* இதுமட்டுமன்றி பழைய தமிழ் செய்யுட்கள் சில தமிழகத்தை ஆட்சி செய்த களப்பிரர்களை நந்தி என்னும் நந்திமலையை உடையவர் என்றும் கூறுகின்றன.




**சரவணபௌகுலா**

"நந்திமால் வரைச் சிலம்பு நந்தி"

"புகழ்துறை நிறைந்த பொருவேல் நந்தி"

ஆகிய சொற்றொடர்கள் இதனை உணர்த்துகின்றன. களப்பிரர்கள் துவக்க காலம் முதற்கொண்டு தன்னாட்சி பெற்றவர்களாக இருந்திருக்கவில்லை என்பது வேறு சில சான்றுகள் மூலம் உணரமுடிகின்றது.

கருநாடக மாநிலம் பேலூர் தாலுகாவில் 'ஹல்மிடி' எனும் இடத்தில் காணப்பட்ட கல்வெட்டொன்று கடம்ப அரசரான காகுஸ்தன் (கி.பி. 425-450) களப்போரருக்கு பகைவன் என்று எடுத்துக் கூறுகிறது. (Mysore Archaelogical Report 1936, No 16)

மேலும் களப்பு நாட்டின் அரசனான திண்டிகன் என்பவன் மேலைக் கங்க அரசனான ஸ்ரீபுருஷனின் அனுமதி பெற்று ஒரு தானத்தை அளித்தான் என்ற சாசனச் செய்தி ஒன்றும் உள்ளது. (Mysore Archaelogical Report 1927. No. 118). இதனால் களபப்பு நாட்டரசர் சில காலம் கங்க அரசருக்கு கட்டுப்பட்டவர்களாக இருந்துள்ளனர் என்பது தெரியவருகிறது. இவ்வாறான தகவல்கள் களப்பிரர்கள் கன்னட தேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்பதும், அவர்கள் தங்களது பகுதியிலிருந்து இடம்மாறி ஏறத்தாழ கி.பி. 250-ல் அல்லது அதற்குச் சற்று பின்னர் தமிழகத்துள் நுழைந்து பின்பு படிப்படியாக சேர, சோழ, பாண்டிய மண்டலங்களைத் தங்கள் ஆட்சிக்குள் கொண்டு வந்தனர் என்பதும் தெளிவாகிறது.

இது தவிர களப்பிரர்களைப் பற்றிய ஆய்வு மேற்கொண்ட வரலாற்று மற்றும் தமிழ் அறிஞர்கள் சிலர் மேற்கு கங்கர் களுக்கும், களப்பிரர்களுக்கும் இடையே தொடர்பு காட்ட முயன்றுள்ளனர். ஆனால் அவை மேற்குறிப்பிட்ட அரசியல் நிமித்தமான தொடர்புகளேயன்றி அதனிலும் வேறாக ஏற்க ஏதுமில்லை. அதேநேரம் தமிழகத்தின் வலிமை பெற்ற முத்தரையர் இனத்துடன் களப்பிரர்களை இணைத்து ஒரு சில ஆய்வுகளும் இங்கே நடத்தப்பட்டுள்ளன.

# 6

# முத்தரைய மன்னர் சுவரன்மாறன்

கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழக வரலாற்றில் முத்தரையர்கள் ஓரளவு வலிமை மிகுந்த சக்தியாக இருந்து வந்துள்ளனர். எட்டு மற்றும் ஒன்பதாம் நூற்றாண்டு கால வரையறையில் தஞ்சையை அடுத்துள்ள வல்லம், நியமம் ஆகிய பகுதிகள் அவர்களது தலைநகரங்களாக இருந்தன.

முத்தரைய மன்னர்களுள் புகழ்மிகுந்தவர் சுவரன்மாறன். இவன் பல்லவ மன்னன் தெள்ளாறெறிந்த நந்திவர்மனுக்கும், பாண்டிய மன்னன் மாறஞ்சடையனுக்கும் சமகாலத்தில் இருந்தவன். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு இவனது காலம். தனது காலத்தில் பல்வேறு போர்களில் ஈடுபட்டு ஊர்கள் பலவற்றை வென்று தம் நாட்டுடன் இணைத்துள்ளான். கொடும்பாளூர், மணலூர், திங்களூர், காந்தளூர், அழுந்தியூர், காரை, மறங்கூர், அண்ணல்வாயில், செம்பொன்மாரி, வெண்கொடை, புகழி, கண்ணனூர் ஆகிய பகுதிகள் இவன் வென்றவை.

இம்மன்னன் ‘நியமம்’ எனும் ஊரில் ‘பிடாரி’ அன்னைக்கு கோயில் கட்டியிருக்கிறான். அக்கோயில் கட்டிய செய்தியினை வெளிப்படுத்தும் நோக்கில் உருவாக்கிய கல்வெட்டில் தனது பட்டப் பெயர்களையும் தான் வென்ற ஊர்களின் பெயரினையும் பொறிக்கக் கட்டளை பிறப்பித்துள்ளான்.

‘சுவரன் மாறன்வன் எடுப்பித்த பிடாரி கோயில்

அவனெறிந்த ஊர்களு மவன் பேர்களும் அவனைப்

பாடினார் பேர்களும் இத்தூண்கண் மேலேழுதின இவை’

என்று ‘செந்தலை’யில் ஒரு தூணில் பொறிக்கப்பட்டுள்ளதை இன்றும் காண முடிகிறது. அதே தூணின் மறுபக்கத்தில் அவனது பட்டப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவ்வாறு பொறிக்கப்பட்டுள்ள பட்டப் பெயர்களில் “கள்வர் கள்வன்” என்பதும் ஒன்றாம். இதன்மூலம் இவன் களப்பிரரை வென்றிருக்கக் கூடும் என்பது கணிக்க முடிகிறது.

# 7

# கள்வர் கள்வன்; சில விளக்கங்கள்

'கள்வர் கள்வன்' என்ற பட்டப் பெயர் பலராலும் பல விதமாகப் பொருள் காணப்பட்டது. டி.ஏ. கோபிநாதராவ் முதலான சில வரலாற்று ஆசிரியர்கள் இச்சொல்லுக்கு களப்பிரர்களின் தலைவன் என்றே பொருள் கண்டனர். அவ்வாறு பொருள் கண்டதன் விளைவாக சுவரன்மாறன் என்ற முத்தரையர் மன்னனும் களப்பிரர் இனத்தவன் என்ற முடிவுக்கு வந்தனர். இரா. இராகவையங்கார் போன்றோர் களப்பிரர்களும் முத்தரையர்களும் வெவ்வேறு இனத்தவர் என்றே கூறினர். முத்தரையர் என்னும் நூலில் நூலாசிரியர் கள்வர் கள்வன் என்பதற்கு கள்வர்களுக்கு கள்வன், கள்வர்களின் எதிரி என்று பொருள்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அதை மறுக்கும் வகையில் 'கள்வர் கள்வன்' எனும் சொல்லை களப்பிரர்களுக்கெல்லாம் களப்பிரனாக விளங்கினான் எனப் பொருள் காணவேண்டும் என்றும், மன்னாதி மன்னன் சூராதி சூரன், வில்லாதி வில்லன் ஆகிய சொற்களுடன் இதை ஒப்பிட்டு பார்த்திடல் வேண்டுமென்றும் இராசசேகர தங்கமணி எழுதியுள்ளார். (ம. இராசசேகர தங்கமணி, பாண்டியர் வரலாறு, பக்கம்-194)

இவர் எடுத்துக் கூறியுள்ள ஒப்பீட்டுச் சொற்கள் மன்னாதி மன்னன், சூராதி சூரன், வில்லாதி வில்லன் ஆகிய மூன்றும் அவரது வாதத்துக்கு சற்றும் பொருத்தம் இல்லாதவை. மன்னாதி மன்னன் எனின் மன்னர்களுக்கெல்லாம் மன்னன் என்றும் சூராதி சூரன் எனின் சூரர்களுக்கெல்லாம் சூரன் என்றும், வில்லாதி வில்லன் என்றால் ஏனைய வில்லாளிகளையெல்லாம் வெல்லக்கூடிய ஆற்றல் பெற்றவன் என்றும் பொருளாகிறது. அவ்வாறெனில் கள்வர் கள்வன் என்பதை கள்வர்களையெல்லாம் வெல்லக்கூடிய கள்வன் என்றுதானே பொருள்கொள்ள வேண்டும். கால காலன் என்றொரு சொல் உண்டு. அதனை எமனையெல்லாம் நடுங்கச் செய்யும் எமன் என்றுதானே பொருள் கூறுகின்றனர். அதுபோன்று கண்டர் கண்டன் என்று சொல்லுக்கு கண்டர்களை எல்லாம் வென்று அடக்கியவன் என்று தானே வரலாற்றாசிரியர்கள் பொருள் புகலுகின்றனர் என்று கூறுகிறார் நடன காசிநாதன் தமது களப்பிரர் என்றநூலில்.

இனி இராசசேகர தங்கமணி பொருள் கொள்வது போல, கள்வர் கள்வன் என்ற சொற்றொடர் கள்வரின் தலைவன் என்று ஆகிவர எவ்வித இலக்கண நியாயமும் புலப்பட வில்லை. அவ்வாறு ஓர் வழக்கம் இருந்திருப்பின் ஏனைய அரசர்களும் தங்கள் தலைமைத் தன்மையை பறைசாற்ற சோழர், சோழன்

என்றோ பாண்டிய பாண்டியன் என்றோ பல்லவர் பல்லவன் என்றோ எங்கேனும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். ஆனால் அதுபோன்ற செய்தி இதுவரை எங்கும் கிடைத்தபாடில்லை. ஆதலால் திரு. தங்கமணியாரின் கூற்று எவ்வகையிலும் ஏற்கக் கூடியதாக இல்லை.

களப்பிரர்களும், முத்தரையரும் வெவ்வேறானவர் என்ற செய்திக்கு ஆதாரமாக மற்றுமோர் ஆதாரத்தை இங்குக் குறிப்பிட வேண்டும். முதலாம் நரசிம்மவர்மன் களப்பிரர்களை வென்றான் என்ற செய்தி பல்லவர் செப்பேடுகள் மூலம் அறிய முடிகிறது. அதேநேரம் முத்தரையர்கள் பல்லவ அரசுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசாக பல்லவ அரசின் தலைமைக்கு அடங்கியவராக இருந்து வந்துள்ளனர் என்ற செய்தியும் காணக்கிடைத்துள்ளன. (டாக்டர் இரா. நாகசாமி, செங்கம் நடுகற்கள்)

மேலும் இரண்டாம் நந்திவர்ம பல்லவ மல்லனைக் காஞ்சிபுரத்தில் பல்லவர்தம் அரியாசனத்தில் அமர்த்த துணை புரிந்தவர்களில் ஒருவன் எனக் காடக முத்தரையன் என்பவன் குறிக்கப்படுகிறான் (S.I.I. vol. IV. No 135, Section 1)

ஆனால் பல்லவர்களின் செப்பேடுகளில் ஒன்றான பட்டத்தாள மங்கலச் செப்பேட்டில் (பட்டயம்) நந்திவர்ம பல்லவ மன்னனின் கால்களில் வீழ்ந்து வணங்குவதற்குரிய வாய்ப்பை எதிர்ப்பார்த்து காத்திருந்தவர்களில் களப்பிரனும் ஒருவன் என்று குறிக்கப்பட்டுள்ளது. இவ்வகை செய்தி களிலிருந்து, களப்பிரர்கள் எப்போதும் பல்லவர்களின் எதிரிகள் என்பதும், முத்தரையர்கள் தொடக்க காலம் முதல் பல்லவர்களுக்கு உதவும் நட்புக்குரிய சிற்றரசர்களாகவும் இருந்திருக்கின்றனர் என்பதும் அதனால் களப்பிரர்களும், முத்தரையர்களும் வெவ்வேறானவர்கள் ஒருபோதும் ஓரினத்தாரல்ல என்பதும் உறுதியுடன் உரைக்க முடிகிறது.

இதுதவிர கருநாடகத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் சிலவற்றில் கலிகுலன், கலி தேவன் போன்ற பெயர் குறிப்புக்கள் இடம்பெற்றிருப்பதால் களப்பிரர்கள் கருநாடகத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்கின்ற திடமான நம்பிக்கை வலுக்கின்றது. களப்பிரர்களும், கலியரசர்கள் என்று அழைக்கப்பட்டதற்கான சான்றுகள் இருப்பதால் இது மேலும் வலு சேர்க்கின்றன. எனினும் இன்றைக்கு (களப்பறையர்கள் என்று அழைக்கப்படுபவர்களே அந்நாளில் களப்பிரர் எனப்பட்டனர் எனக் கருதுவோரும் உண்டு (தமிழக வரலாறும் பண்பாடும் By செல்லம் வே.தி.) அது தவிர இவர்கள் கோசர்கள் வழிவந்தவர்கள் என்றும், (பண்டைத் தடையம் பகுதி கோசர்தான் களப்பிரரோ, நடன காசிநாதன், மா.சுந்தரமூர்த்தி) உழவர் வழி வந்தவர்கள் என்றும், (கலப்பையால் உழுவதால் உழவர்கள் கலமர் என அழைக்கப்பட்டு அதுவே களமர் எனத் திரிந்து பின்பு களப்பிரர் என மருவியது. பின்னர் களப்பறையர் என்றாயிற்று) பல்வேறு

கருத்துகள் இங்கே உலவியபோதும் களப்பிரர்கள் கன்னட மண்ணின் வழித்தோன்றல்கள் திராவிட இனஞ்சார்ந்த, அதேசமயம் தமிழரல்லாத வேற்றுப் பகுதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இங்கே வந்தேறி சில நூற்றாண்டுகள் (கி.பி. 250 அல்லது அதற்கு சில காலம் பின்பு) தமிழ் மண்ணை முழுமையாகவும், பின்னர் சில நூற்றாண்டுகள் ஆங்காங்கே சிதறுண்டும் ஆட்சிபுரிந்தனர். இதுவே எவ்வகையிலும் ஏற்கக்கூடிய உண்மை என்பதே இதுவரைப் பார்த்த குறிப்புகள் உணர்த்தக் கூடியவை.

# 8

# களப்பிரர்கள் (வந்த) காலம்

களப்பிரர்கள் யார் என்ற கேள்விக்குப் பதில் கிடைத்த போதிலும் இவர்கள் இங்கே எப்போது வந்தனர் என்ற கேள்விக்கு விடை காண்பதில் அறிஞர் பெருமக்கள் பல்வேறு நிலைகொண்டுள்ளனர். தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சி துவங்கிய காலம் கி.பி. 275-ல் என்பது பேராசிரியர் திரு. நீலகண்ட சாஸ்திரியாரின் வாதம். *(A comprehensive History of India by K.A. Nilakanda Sastri 1956. vol II p. 550)*

கி.பி. 250 அல்லது அதற்குச் சற்று பின்னர் இங்கே களப்பிரர் ஆட்சி ஏற்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்து தற்போது எழுந்தாலும் இதுபற்றிய மாற்றுக் கருத்துக்கள் இல்லாமல் இல்லை. திரு. சதாசிவ பண்டாரத்தார் கூறுகையில், களப்பிரர் ஆட்சி ஏற்பட்டது கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் என்று சொல்கிறார். (பாண்டியர் வரலாறு by சதாசிவப் பண்டாரத்தார் பக்கம் 32) திரு. எம்.எஸ் இராமசாமி அய்யங்கார் கி.பி. 6-ம் நூற்றாண்டில் உருவானதே களப்பிரர் ஆட்சி என்று கூறுவதுடன் "சங்கம் (வச்சிரநந்தி கி.பி. 470-ல் நிறுவிய திராவிடச் சங்கம்) கி.பி. 5-ம் நூற்றாண்டின் இறுதியில்தான் அமைக்கப்பட்டது. கி.பி. 6-ம் நூற்றாண்டு தொடங்கியபோது தமிழ்நாட்டின் அரசியல் விரைவாக மாறுதல் அடைந்தது. இந்தக் காலத்தில்தான் களப்பிரர் படையெடுப்பும் அவர்கள் பாண்டிய நாட்டைக் கைப்பற்றியதும் நிகழ்ந்தன" என்று எழுதுகிறார்.



**புத்தர்**

இவரது மேற்கண்ட கூற்றை மறுக்கும் திரு. மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் 'இவர் கூறுவது ஏற்கத்தக்கது அன்று. களப்பிரர்கள் தமிழகத்தை ஆட்சி செய்யத் தொடங்கிய பிறகுதான் வச்சிரநந்தியின் திராவிட சங்கம் ஏற்பட்டதே தவிர, திராவிட சங்கம் ஏற்பட்ட பிறகு களப்பிரர் ஆட்சி ஏற்படவில்லை. ஆகவே கி.பி. 6-ம் நூற்றாண்டில் களப்பிரர் ஆட்சி ஏற்பட்டது என்று இவர் கூறுவது தவறு' என்று சொல்கிறார்.

கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் துவக்கம் அல்லது இடைப் பகுதியில் களப்பிரர்கள் ஆட்சி ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயப்பாடு தேவையில்லை. இங்கே தமிழகத்தில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் மூன்றாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலும் நிலவி வந்த அரசியல் சூழ்நிலை, கன்னட நாட்டின் களப்பிரர் குலத்தவர் தமிழ் மண் மீது படையெடுத்து வர சாதகமாக அமைந்திருந்தது.

கடைச்சங்க காலத்தில் இருந்த தமிழரசர்கள் மற்றும் குறுநில மன்னர்கள் வலுவான காரணங்கள் ஏதும் இன்றி அவரவர் வலுவை காட்டுதற்கென்றே அவ்வப்போது ஒருவர் மீது ஒருவர் போர் தொடுத்து வந்த செய்திகள் சங்கச் செய்யுட்கள் உரைக்கின்றன. இவர்கள் இவ்வாறு போர் செய்வது தங்களுக்குரிய பெருமையாகவும், தகுதியாகவும் கருதிச் செயல்புரிந்தனர். ஆய கலைகள் அனைத்துள்ளும் போரிடுதலும் ஓர் கலையாகக் கொண்டு இம்மன்னர்கள் தங்களுக்குள்ளே போர் செய்து புகழடைய முயன்றனர். புலவர்கள் இவர்களைப் பாடி வரலாற்றுள் செதுக்கும் பணியுணர்ந்து பெருமிதங் கொண்டனர்.

வடக்கே இந்து மத ஆதிக்கம் சற்றே நிலை குலைந்து ஜைன, பௌத்த மேலாதிக்கம் பரவியதாலும், அங்கே ஆட்சியாளர்கள் வைதீக நடைமுறைகளான யாகம், ஹோமம் போன்றவற்றைத் துறந்து சாத்வீக நிலை கைக் கொண்டதாலும், தங்களது வைதீகச் சடங்குகளுக்கு சரியான இடம் தேடி வடக்கிருந்து ஆரிய புரோகிதர்களும், பிராமண சமூகத்தவரும் சற்றே பரவலாக தமிழகம் வந்து சேர்ந்ததும் இந்தக் கால அளவில் என்பதும் கவனிக்க வேண்டியவை.

இங்கே வந்து தங்களை நிலைப்படுத்திக் கொள்ளத் துவங்கிய அவர்கள் தமிழக மன்னர்களை, குறுநில அரசர்களை அண்டி அவர்தம் அரசியல் ஆலோசகர்களாக உருவானதுடன் பல்வேறு சடங்குகளை உருவாக்கத் தலைப்பட்டனர். அதனுள் ஒன்று போர்க்களத்துக்குச் செல்லாமல் ஒரு மன்னன் உயிர் நீத்தால் அவனது உடலை தர்ப்பைப் புல் மீது கிடத்தி வாளினால் கீறி மார்பில் விழுப்புண் உருவாக்கிய பின்னரே அடக்கம் செய்யவேண்டும் என்பது. இதன் மூலம் போர்க்களம் செல்ல வேண்டும் என்ற கட்டாயத்தை, தமிழ் அரசர்கள் மீது திணிக்கப்பட்டது.

மேலும் அந்தணர்களுக்கு ஆவினங்களை (பசுக்கள்) ஈவதும், பரிசளிப்பதும் அறத்தினுள் எல்லாம் சிறந்தவை என்ற எண்ணத்தை அந்நாளில் இந்தக் காவலர்கள் கருத்தில் ஏற்கச் செய்ததால் தம் நாட்டில் அவற்றின் (ஆவினம்) எண்ணிக்கைக் குறையும்போது அடுத்த நாட்டின் மீது படையெடுத்து அங்குள்ள ஆநிரைகளை ஓட்டி வரும் வழக்கமும் உருவானது. இதுபோன்ற சூழல்கள் இவர்களை பலவீனப்படுத்திய காரணத்தால், வேற்று நாட்டவர் பலங் குறைந்த (ஒற்றுமையற்ற) இவர்களை எளிதில் வென்று தங்கள் அதிகாரத்தை பதிக்க ஏதுவாயிற்று.

சமண (ஜைன) பௌத்த மதங்களின் ஆதிக்கம் இங்கும் ஓரளவு இருந்தது என்பதற்கு சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்கள் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. சேர இளவலான இளங்கோ அடிகள், சிலப்பதிகாரத்தை எழுதிய சமண சமயத் துறவி. இவரது சம காலத்தவரான சீத்தலைசாத்தனார், மணிமேகலை காப்பியத்தை யாத்தவர். இவரோ பௌத்த துறவி. இவ்விரு காப்பியங்களும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு அல்லது அதற்கு சற்று முன்பு உருவான இலக்கியங்கள். ஆக அக்காலத்திலேயே இங்கே சமண, பௌத்த மதங்களின் ஆதிக்கம் இருந்தது என்பது மறுக்க இயலாத உண்மை. ஆயினும் இங்குள்ள மன்னர்கள் முழுமையாக அந்த மத சார்புமிக்கவர்களாக இந்த கால அளவில் மாறவில்லை என்பது அந்தணர்களின் ஆளுமைக்கு வாய்ப்பாக அமைந்தது எனலாம்.

இனி "தமிழ்நாட்டில் ஜைன (சமண) சமயத்தை மேலும் உறுதியாக நிலைநாட்டுவதன் பொருட்டு ஜைனர் களப்பிரரை படையெடுத்து வருமாறு அழைத்தார்கள் என்று தோன்றுகிறது" என்று திரு. இராமசாமி அய்யங்கார் உரைக்கின்றார். *(Studies in south Indian jainism by M.S. Ramasamy Iyengar)* ஆயின் இதற்குரியச் சான்று ஏதும் காணப்படவில்லை. அதுமட்டுமன்றி களப்பிரர்கள் முழுமையாக சமண சமயத்தைச் சார்ந்தவர்களாகவும் இருந்ததில்லை என்பதும் சான்றாகக் கிடைத்துள்ள பாடல்கள் தெளிவூட்டுகின்றன.

"அலைகடற் கதிர்முத்தம் அணிவயிரம் அவையணிந்து
மலையுறைமா சுமந்தேந்தும் மணியணைமேல் மகிழ்வெய்தி
ஓசனைசூழ் திருநகருள் உலகொருமூன் றுடனேத்த
ஈசனையாய் இனிதமர்ந்தங் கிருடிகட்கும் இறையவர்க்கும்
அருளறமே அறமாக அயலார்கண் மயலாக
இருளறநன் கெடுத்தியம்பி இருவினை கடிந்திசினோய்!

........................ ............................... ..............."

இந்தப் பாடலின் வரிகள் களப்பிரர்களின் அரசன், சங்கு, சக்கரம் திருக்கைகளில் ஏந்திய திருமாலை வணங்கி வழிபட்டு அவனது அருள் மிகைவால் பெரும் பரப்பளவு கொண்ட (பெரிய நிலம்) புவிதனை ஆளும் பேறு பெற்றான் என்றும் அத்தகு பேறு பெற்ற களப்பிர அரசனை காத்தருள வேண்டுமென்றும் முறையிடும் வண்ணம் அமைந்துள்ளன.

மற்றொரு பாடலின் "கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்த" எனத் துவங்கும் வரிகளும் திருமாலை வேண்டுவனவாக அமைந்துள்ளது. ஆக களப்பிர மன்னர்கள் தொடக்க காலம் முதற்கொண்டு அனைவரும் சமண சமயத்தைப் பின்பற்றியிருக்க சாத்தியமில்லை என்பது தெளிவாகிறது. ஆதலால் சமணர்களின் வேண்டுகோளை ஏற்று, களப்பிரர்கள் படையெடுத்து வந்தனர் என்பது ஏற்பதற்குரியதல்ல. இனி களப்பிரர்கள் வென்ற சேர, சோழ, பாண்டியர்கள் அல்லது குறுநில மன்னர்கள் யார் யார் எனும் கேள்விக்கு விடை இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்பது வருந்தக்கூடியதே. ஆயின் வேள்விக்குடிச் செப்பேடு சாசனம் வரையறுத்து கூறும் வாசகங்கள், களப்பிரர்கள் தமிழக மூவேந்தர்களையும் அவர்தம் சிற்றரசர்களையும் வென்றனர் என்றே எடுத்தியம்புகிறது.

"அளவரிய ஆதிராஜரை அகலநீக்கி அகலிடத்தைக்
களப்பிர னென்னுங் கலிஅரசன் கைக்கொண்ட
தனை இறக்கியபின் படுகடல் முளைத்த
பருத்திபோல பாண்டியாதி ராஜன் வெளிற்
பட்டு விடுக திரவிரொளி விலக வீற்றிருந்து
வேலை சூழ்ந்த வியலிடத்துக் கோவும்
குறும்பும் பாவுடன் முருக்கிச் செங்கோலோச்சி
வெண்குடை நீழற்றங் கொளி நிறைந்த
தரணி மங்கையைப் பிறர் பாலுரிமைத்
திறவிதி னீக்கித் தண்பாலுரிமை நன்கன
மமைத்த மானம் பேர்த்த
தாளவேந்தன் னொடுங்கா மன்னரொளி

*நகரழித்த கடுங்கோ னென்னுங்*

*கதிர் வேற் றென்னன்…………………”*

*(வேள்விக்குடிச் செப்பேடு வரி 39-46)*

*இந்தப் பாடல் வரிகள் மேற்குறிப்பிட்டவாறு சேர, சோழ, பாண்டியர் என்பதை ‘அளவரிய ஆதிராஜா’ எனும் சொற்றொடரால் விளக்குகிறது. நாம் முன்னரே குறிப்பிட்டபடி சேர, சோழ, பாண்டியர்கள் வலுவிழந்து தங்களது முந்தைய முடிமன்னர் பெருமையும், நிலப்பரப்பும் வெகுவாக இழந்த காலச்சூழலே கடைச்சங்க காலத்தின் இறுதியாகவும் - அந்த காலமே களப்பிரர்கள் படையெடுத்த நாட்களாகவும் இருத்தல் வேண்டும். அது ஏறக்குறைய கி.பி. 250 அல்லது சில வருடங்கள் ஏறத்தாழ அமைந்திருத்தலே சரியாகும். ஆக களப்பிரர்கள் தமிழ் நிலத்தில் காலூன்றிய காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் துவக்கம் முதல் இடைப்பட்ட காலமெனக் கொள்ளலாம்.*

# 9

# களப்பிரர் - களப்பாழர் - கள்வர்

களப்பிரர்கள் மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. 6-ம் நூற்றாண்டு வரை வலிமைமிக்க ஆட்சியாளர்களாக இருந்துள்ளனர் என்பதும் அதன்பின் அவர்கள் பாண்டியர் களால் வெல்லப்பட்டனர் என்பதும் வேள்விக்குடிச் செப்பேடு மட்டுமின்றி தளவாய்புரச் செப்பேடு சாசனமும் விளக்கம் தருவதைக் காணமுடிகிறது.

*"... தென்மதுராபுரஞ் செய்தும் ஆங்கதினில்லருந் தமிழ்*
*நற்சங்கம் இரீஇத் தமிழ்வளர்த்தும் ஆலங்கானத்*
*தமர்வென்று ஞாலங்காவல் நன் கெய்தியும்*
*கடிஞாறு கவினலங்கள் களப்பாழர்; குலங்*
*களைந்தும் முடிசூடிய முரண்*
*மன்னர் ஏனையப்பலரு முன்னிகந்த பின்*
*இடையாறையும் எழில் வெண்பைக் குடியிலும்*
*வெல்கொடி எடுத்த குடைவேந்தன் றிருக்குலத்துக்*
*கோமன்னர் பலர் கழிந்தபின்......"*

*".......களப்பாழரைக் களைகட்ட*
*மற்றிரண்டோண் மாக் கடுங்கோன்*
*மானம் போர்த்தருளிய கோன்........."*

*(தளவாய்புரச் செப்பேடு வரி 131-132)*

இந்தப் பாடல்கள் களப்பாழர் என்றே களப்பிரர்களைக் குறிப்பிட்டு உரை நிகழ்த்துவதிலிருந்து இருவரும் ஒருவரே என்ற முடிவுக்கு வர முடிகிறது.

இனிக் களப்பிரரும் கள்வரும் ஒருவரே என்பதை உணர்த்தும் வகையிலான கல்வெட்டொன்று கண்டறியப்பட்டுள்ளது. அதுவே பொன்னிவாடிக் கல்வெட்டு. இதில்,

*"1. ஸ்வஸ்தி ஸ்ரீசந்த்ராதித்திய குலதிலகன் சா*

*2. ர்வ பௌமன் கலி திருவ (ப) கள்வனாஇன கோ-*

*3. க் கண்டன் இரவி........."*

இந்த கல்வெட்டு வரிகள் குறிப்பிடும் "கள்வனாயின கோக்கண்டன் இரவி.. " எனும் தொடர் மூலம் 'கோக்கண்டன் இரவி' எனும் அரசர் கலி அரசர் ஆவார் என அறுதியிட்டுச் சொல்லலாம்.

# 10

# களப்பிரர் பற்றிய சான்றுகள்

*களப்பிரர்கள் தமிழகத்தை கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதற்கொண்டு கி.பி. ஆறாம் நூற்றாண்டு இறுதி வரை முழுமையாக ஆட்சிபுரிந்துள்ளனர் என்ற செய்தியினை மறுப்பதற்கில்லை. எனினும் அதனை முழுமையானதோர் வரலாறாகச் சித்திரிக்கப் போதுமான அளவிற்கு ஆதாரங்கள் கிடைக்கப் பெறவில்லை என்பதே உண்மை. ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் முழுமையாகவும், அதன்பின் சில நூற்றாண்டுகள் ஆங்காங்கே சிதறுண்டும் இந்நிலத்தில் ஆட்சி செய்யும் தகுதி பெற்றிருந்த இந்த களப்பிரர் குலத்து அரசர்கள் யாவர் எனும் கேள்விக்கு விடைக்காணும் முயற்சியில் முழுமையான வெற்றி (குறைந்தபட்ச) இதுவரை எட்டப்படவில்லை.*

*களப்பிரர்கள் ஆட்சி புரிந்துள்ளனர் என்பதை எவரும் மறுத்துப் பேச இயலாவண்ணம் அவர்தம் காலத்தைப் பற்றிய ஒரு சில கணிப்புகளை எடுத்துரைக்கும் விதமாக நமக்குக் கிடைத்துள்ள வரலாற்று ஆதாரங்களான சில கல்வெட்டுகள், பட்டயங்கள் ஆகியவை உரைக்கும் செய்திகள் சற்றே வெளிச்சம் காட்டி அந்த இருண்ட காலத்தை ஊடுருவிப் பார்க்க உதவுகின்றன. அவ்வகையில் நமக்கு உதவும் சில கல்வெட்டுகளை இங்கே காண்போம்.*

### பூலாங்குறிச்சி கல்வெட்டு:

*தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் அண்மைக் காலத்தில் இராமநாதபுரம் மாவட்ட பூலாங்குறிச்சியில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அரியதோர் கல்வெட்டொன்று கண்டறியப்பட்டது. (தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அலுவலர் டி. துளசிராமன் இதனைக் கண்டுபிடித்தார்). இந்தக் கல்வெட்டு கி.பி. 3-ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. சேந்தன் கூற்றன் என்னும் ஒரு மன்னன் காலத்தில் இது எழுதப்பட்டிருக்கிறது. இந்த மன்னன் சேந்தன் எனும் அரசர்தம் மகனாக இருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. பல வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் இந்த கல்வெட்டு அக்காலத்தில் தமிழகத்தில் நிலவிய அரசியல் அமைப்பு, நீதி, நிர்வாகம், நாட்டுப் பிரிவு ஆகியவற்றை தெளிவுற எடுத்துக்காட்டுகிறது.*

இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மன்னன் கூற்றனுக்கும் சைவத் திருமறை நாயன்மார்களுள் ஒருவரான கூற்றுவ நாயனாருக்கும் ஏதேனும் தொடர்பு இருக்கக் கூடுமா என்ற ஐயத்துக்கு விடை கிடைக்கவில்லை. கல்வெட்டில் காணப்பட்டுள்ள குறிப்புகளின்படி அது மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கணக்கிட முடிகிறது. எனினும் கல்வெட்டில் காணப்படும் எழுத்து நடைமுறையைக் கருத்தில் கொண்டால் அது கி.பி. 4 அல்லது 5-ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். அவ்வாறாயின் இதில் குறிக்கப் பட்டுள்ள கூற்றன்தான், சைவ சமய நாயன்மார்களுள் ஒருவரான கூற்றுவ நாயனாராக இருக்கக் கூடுமோ என்கின்ற கேள்விக்கு விடை தெரியவில்லை. இக்கல்வெட்டு அமைந்த காலம் களப்பிரர்கள் இங்கே செல்வாக்குடன் இருந்த காலம் என்பதாலும் கூற்றுவ நாயனார் களப்பாள மன்னர் என்று கூறப்படுவதாலும் ஒருவேளை இந்தக் கூற்றனே கூற்றுவ நாயனாராக இருக்கக் கூடுமோ எனும் ஐயம் வலுவாகிறது.

## பொன்னிவாடிக் கல்வெட்டு:

அண்மைக் காலத்தில் மத்திய அரசின் (தொல்பொருள்) கல்வெட்டு இலாகாவினர், கோயம்புத்தூர் மாவட்டம் பொன்னிவாடியில் கிடைத்துள்ள கல்வெட்டு ஒன்றை வெளியிட்டுள்ளனர். இதிலுள்ள வாசகங்கள் பின்வருமாறு:

"1. ஸ்வஸ்தி ஸ்ரீ சந்த்ராதித்ய குல திலகன் சா-

2. ர்வ பௌமன் கலிநிருவ (ப) கள்வனா இன கோ-

3. க்கண்டனிரவி அடியாளாக மணியன் சேகெரி (ந)-

4. ல் லூர்த் தான் வயக்கின் நிலத்திற் பள்ளப் போ-

5. ழி (யி)ற் (நெற்) பெட்டுப் போழியின் வடக்கு மணி-

6. யன் வயக்குக்குப் போந்த சுவ(ரி)ன் மேக்கு நீர்மணி வா-

7. ய்க் (கா)லின் கிழக்கு செ(ங்)கந்(தி)டர்காக(க்) கவரு போழி உண்ணா

8. ழிகைப் புறமாக அட்டினேன்

9. மணியன் வய............."

இந்த கல்வெட்டில் கோக்கண்டன் இரவி என்னும் மன்னன் "கலிநிருப-கள்வனாயின கோக்கண்டன் இரவி" என்று குறிப்பிடப்படுகிறான். இதன்மூலம், இவன் களப்பிர மன்னருள் ஒருவன் என்பது நிரூபணமாகிறது.

'கலிநிருப' என்னும் சமஸ்கிருதச் (வடமொழி) சொல் கலி அரசன் என்றும் பொருளைத் தருவதாகும். அத்துடன் கள்வனாயின கோக்கண்டன் இரவி என்றும் குறிக்கப்பட்டுள்ளதால் கலி அரசன் கள்வன் கோக்கண்டன் இரவி என்று பொருள் கொள்ளலாம். இது வேள்விக்குடிச் செப்பேட்டில் எடுத்தாளப்படும் 'களப்பிரனென்னும் கலிஅரசன்' என்பதிலிருந்து மாறுபட்ட வடிவாகக் காணப்படுகிறது. வேள்விக்குடிச் செப்பேட்டில் காணப்பெறும் கலிஅரசன் என்பது, கல்வெட்டில் கலிநிருப என்றும், களப்பிரர் என்னும் சொல், கல்வெட்டில் 'கள்வன்' என்றும் வழங்கப்பட்டுள்ளது. ஆதலால் களப்பிரர்கள் 'கள்வர்' என்றும் அழைக்கப்பட்டனர் என்பது தெளிவாகிறது. (களப்பிரர், பக்.31, நடனகாசிநாதன்)

## சந்திர சூர்ய குலம்:

பொன்னிவாடிக் கல்வெட்டின் மூலம் கண்டன் இரவி களப்பிர வம்சாவளியைச் சேர்ந்தவன் என்பதுடன் "சந்திராதித்திய குலத்துக்குத் திலகம் போன்றவன் என்பதும் வெளிப்படுகிறது. சோழர்கள் தங்களை சூரிய குலத்தவர் என்றும், பாண்டியர் தம்மை சந்திர குலத்தவர் என்றும் தத்தம் செப்பேடுகளில் கூறிக்கொள்வர். அதுபோன்று கண்டன் இரவி 'சந்திர சூரிய குலத்தைச் சேர்ந்தவன் என்று தெரிவித்துக் கொள்கிறான்.

## வெள்ளலூர் கல்வெட்டு:

கோயம்புத்தூர் மாவட்டம் வெள்ளலூரில் கிடைத்த கல்வெட்டு மூலமும் மன்னன் கண்டன் இரவி சந்திராதித்ய குலத்தைச் சேர்ந்தவன் என்பது உறுதிப்படுகிறது.

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சந்த்ரா
2. தித்ய குல(தி)லக
3. சார்வ பௌம(னா)
4. கிய ஸ்ரீ கோக்கண்ட
5. ன் னிரவிக்குச் செ
6. ல்லா நின்ற யாண்டு
7. இருபத்து நான்

8. கு இவ்வாண்டு வெளி

9. லூர்த் தென்னூ

10. ர் நக்கனார் மண்ட

11. பத்துக்கு ஓம

12. (யிந்தர) ன்மா கலூ

13. ர் கிழெ (ழா) ன் கண்

14. னாங் காவ அனன்

15. னான் நடுவித்த

16. கற்றூண்

(Epigraphia Indica vol. XXXIII, p.41)

கல்வெட்டு காட்டும் வெளிச்சம்: கோயம்புத்தூர் மாவட்டத்தில் வெவ்வேறு பகுதியில் கிடைத்துள்ள பிற கல்வெட்டுகளில் குறிக்கப்படும் மன்னர்களில் சேர மன்னர்களைச் சார்ந்ததாகச் குறிக்கப்படுவனவற்றில் இந்த கோக்கண்டன் இரவிக்கும், அவர்களுள் ஒரு சிலருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கலாமோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. அத்தோடு ஒரு சில கல்வெட்டுகளில் காணப்பெறும் எழுத்தமைதியும் இதற்குத் துணை புரிவதாக உள்ளது. (நடனகாசிநாதன் - களப்பிரர் நூலில்)

இதில் சில கல்வெட்டுகள் கண்டன் வீர நாராயணனுடைய தாகவும் (A.R.E. 147 of 1910) ஒருசில இரவிகண்டனுடையதாகவும் (A.R.E. 252 of 64-65) சில இரவிகோதையின் காலத்தைச் சார்ந்தவையாகவும் உள்ளன.

இக்கல்வெட்டுகளின் எழுத்துப் பாங்கும், கோக்கண்டன் இரவியின் கல்வெட்டுகளின் எழுத்துப் பாங்கும் பெரும்பாலும் ஒற்றுமையுடன் காணப்படுகின்றன. ஆதலால் கோக்கண்டன் வீர நாராயணன், இரவிகண்டன், இரவிகோதை ஆகியோர் கண்டன் இரவிக்குச் சற்று முன் பின்னராக ஆட்சி செய்திருக்க வேண்டும் எனக் கருத இடமுள்ளது. அத்துடன் இவர்களது பெயர்களுக்கும் கோக்கண்டன் இரவியின் பெயருக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கக்கூடும் என்ற எண்ணமேற்படுகிறது.

இதன்மூலம் குறிப்பிட்ட அரசர்களை வரிசைப்படுத்தி பார்க்கையில் இவர்கள் கண்டன் எனும் அரசனின் வழிவந்தவர்கள் எனும் முடிவுக்கு வரலாம். அத்துடன் கண்டன் வீரநாராயணனும், கண்டன் இரவியும் உடன் பிறந்தவர்களாக

இருக்கலாம். கண்டன் இரவியின் புதல்வர்களாக இரவிகண்டனும் இரவி கோதையும் இருக்கலாம். இவர்களுக்குப் பின்பு வரகுண பராந்தகன் என்ற மன்னன் ஒருவனும் ஆட்சி புரிந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.




கண்டன் வீரநாராயணன், கண்டன் இரவி ஆகியோரின் கல்வெட்டுகளை அதனதன் எழுத்தமைதியை அடிப்படையாகக் கொண்டு ஏறக்குறைய கி.பி. 900-ம் ஆண்டாக இருக்கலாம் எனக் கருதமுடிகிறது. அவ்வாறாயின் அவர்களது தந்தையான கண்டன் கி.பி. 9-ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் ஆட்சிபுரிந்திருக்க வேண்டும். இரவி கண்டன் கி.பி.10-ம் நூற்றாண்டின் மையவாக்கிலும், இரவி கோதை கி.பி.10-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் ஆட்சி புரிந்துள்ளனர். வரகுண பராந்தகனும் பத்தாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்துள்ளான். அவனது காலத்தைச் சேர்ந்த இரண்டு கல்வெட்டுகள் கோயம்புத்தூர் மாவட்டம் பிரமியத்திலிருந்து கிடைத்துள்ளன *(A.R.E. 208 and 209 of 1920).*

இதில் ஒரு கல்வெட்டு அவனது 15-ம் ஆட்சி ஆண்டிலும், மற்றொன்று 22-ம் ஆட்சி ஆண்டிலும் பொறிக்கப்பட்டிருக் கின்றன. இவனும் தம்மைச் சந்திர சூரிய குலத்தைச் சார்ந்தவன் என்றே கூறிக் கொள்கிறான். பிரமியத்தில் காணப்படும் கல்வெட்டுகளில் இவனது கல்வெட்டுகள் தாம் மிகவும் பழமை வாய்ந்தவை என்று குறிப்பிடுகிறார் கே.வி. சுப்பிரமணிய அய்யர்.

## கல்வெட்டுகளின் இருப்பிடங்கள்:

இவர்களின் கல்வெட்டுகள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொன்னிவாடி, வெள்ளலூர், மற்றும் கீரனூர், பழனி, ஈரோடு, பிரம்மதேசம், பேரூர் ஆகிய பகுதிகளில் கிடைத்துள்ளன. இந்தக் கல்வெட்டுகளின் மூலம் கி.பி. 9-ம் நூற்றாண்டின் இறுதி வரை களப்பிரர்கள் (கோவை மாவட்டத்தில்) கொங்குநாட்டில் ஆட்சி புரிந்து வந்துள்ளனர் என்பது புலனாகிறது. அத்துடன்

இவர்களது கல்வெட்டுகள் பரவலாகக் காணப்படும் இடங்களை வைத்து கணக்கிடும்போது கொங்கு நாட்டின் முழுமையும் இவர்களது ஆட்சியின் கீழ் இருந்து வந்துள்ளது என்பது தெளிவாகிறது. இந்த கல்வெட்டுகள் மூலம் களப்பிரர் வைதீக மதத்துக்கு எதிர்ப்பானவர்கள் அல்ல என்பதும் தெரியவருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதிக்கு அருகிலுள்ள பூலாங்குறிச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளைப் பற்றி முன்னரே பார்த்தோம். இந்த கல்வெட்டின் காலம் கி.பி. 442ஆக இருக்கக்கூடும் என்றும், இதில் குறிப்பிடப்பட்டுள்ள கோச்சேந்தன் கூற்றன்- ஒல்லையூர் கூற்றம், முத்தூற்று கூற்றம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய நிலப்பரப்பை ஆட்சி புரிந்துள்ளான் என்பதும் இந்த கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.

கல்வெட்டுகளைத் தவிர பல்வேறு பகுதிகளிலிருந்து கிடைத்துள்ள செப்பேடுகள் (பட்டயங்கள்) களப்பிரர்களைப் பற்றிய செய்திகளுக்கு பெரிதும் உறுதுணையாய் நிற்கின்றன. இவர்கள் காலத்தில் இவைகள் எழுதப்பட்டவை அல்ல எனினும் இவர்கள் இங்கே ஆட்சியில் இருந்தமை பற்றிய உண்மையை உரைக்கும் உரை கல்லாக அவைகள் வரலாற்றுக்கு வடிவம் தருகின்றன. அவ்வாறு கிடைக்கப்பெற்ற செப்பேடுகள்: ‘களப்பிரர் காலம்’ என்ற வரலாற்று உண்மையை தமிழக வரலாற்றுக்கு அளித்த பேறு ‘வேள்விக்குடிச் செப்பேட்டையே’ சாரும். அதன்பின்னர் ‘தளவாய்புரச் செப்பேடும்’ அப்பணியை மேலும் உறுதி செய்தது. கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னரும் களப்பிரர்கள் இங்கே சிற்றரசர்களாய் இருந்துள்ளனர் என்பதற்கு சான்றாகப் பல்வேறு பட்டயங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

## காசாக்குடி செப்புப் பட்டயம்:

இந்த செப்புப் பட்டயம் பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணு காலத்தில் எழுதப்பட்டது. இதன்படி சிம்ம விஷ்ணு தனது ஆட்சிக் காலத்தில் மாளவத்தையும், பின்னர் களப்ர, மாளவ சோழ, பாண்டியர்களையும், சிங்கள மன்னனையும், கேரள மன்னனையும் வென்றதாகக் குறிக்கப்பட்டுள்ளது. (பல்லவர் செப்பேடுகள் முப்பது, காசாக்குடி செப்பேடுகள், சுலோகம் 20. பக்கம் 174) இதன்படி முதலில் கூறப்பட்டது மாளவர்கள் என்றால் களப்பிரர்களுக்கு அடுத்துவரும் சொல் மழவர்களைச் சுட்டுவதாக இருக்கக்கூடும் என்று கருதுவதாக அறிஞர் டி.என். சுப்பிரமணியம் கூறுவது ஒப்பக்கூடியதே. காரணம் களப்பிரர் ஆட்சி செய்த பகுதியினை அடுத்து மழநாடுதான் இருந்துள்ளது. ஆதலால் வரிசைக் கிரமமாக களப்பிரர்களை அடுத்து மழவர்கள் குறிக்கப்பட்டிருக்கலாம் என்பதே சரி.

## பல்லவர்காலச் செப்பேடுகள்:

*முதலாம் நரசிம்ம வர்மர் காலத்தில் வெளியான பட்டயங்களும் களப்பிரர் பற்றிய செய்தியினை எடுத்துக்கூறுகிறது. சிம்மவிஷ்னுவின் பேரனும் மகேந்திரவர்மனின் மகனுமான முதலாம் நரசிம்ம வர்மன் களப்பிரர்களை வென்றதாக செப்பேடு அறிவுறுத்தும் செய்தியில் "எதிரி மன்னர்களாகிய யானைக் கூட்டங்களுக்கு சிங்கம் போன்றவனும், நரசிம்ம பகவான் தாமே அரசன் உருவத்தில் பூலோகத்திற்கு வந்தவரே போன்றவனும், திரும்பத் திரும்ப, சோழ, கேரள, களப்ர பாண்டியர்களை வெற்றிகொண்டவனும்...." (பல்லவ செப்பேடுகள் முப்பது, கூரம் செப்பேடுகள் சுலோகம் 4, வரி 12, பக்கம் 55) என்று புகழப்படுகிறான். இந்தச் செய்தியில் நரசிம்ம வர்மன் பலமுறை சோழ, கேரள, களப்பிர, பாண்டியர்களை வென்றிருப்பதாகக் குறிக்கப்படுவதால், இந்த மன்னர்கள் பல்லவர்களுக்கு பெரும் இடையூறாக இருந்திருக்கக் கூடும் என்பதுடன், களப்பிரர்களும் பல்லவர்களை தொடர்ந்து எதிர்க்கக் கூடிய அளவில் வல்லமை பெற்றிருந்தனர் என்பதும் புலனாகிறது.*

## சாளுக்கியர் காலச் செப்பேடுகள்:

*களப்பிரர்கள் பல்லவர் களுக்கு மட்டுமல்லாமல் சாளுக்கிய அரசர்களுக்கும் எதிரிகளாக இருந்துள்ளனர் என்பதை சாளுக்கிய அரசர்தம் செப்பேடுகள் எடுத்துக்காட்டுகின்றன. சாளுக்கிய மன்னனான முதலாம் விக்கிரமாதித்யன் (கி.பி. 655-81) பல்லவ மன்னர்களான முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் மகேந்திரவர்மன், முதலாம் பரமேஸ்வர வர்மன் ஆகியோரை வென்றதாக ஹைதராபாத் செப்பேடு தெரிவிக்கின்றது. அவன் வழிவந்த பிற்கால மன்னர்களின் செப்பேடுகள், சோழ, பாண்டிய, கேரள அரசர்களையும் அவன் வென்றதாகப் புகழப்படுகிறான். அத்துடன் வேறு சில செப்பேடுகளில், அவன் களப்பிரர்களையும் வென்றதாகக் குறிக்கப்படுகிறான் (R.C. Majumdar, The Classical Age, Bharatiya Vidya Bhavan, series Voume III page 249)*

*இம்மன்னனின் பெருமைக்குரிய புதல்வனான வினயாதித்யன் (கி.பி. 681-96) தமது செப்பேடுகளில் பல்லவர், களப்பிரர், கேரளவர், கைஹேயர், விளர், மழவர், சோழர், பாண்டியர் ஆகியோரைத் தோற்கடித்ததாகக் கூறுகின்றனர். (Harihar grant of Vinayaditya) சாளுக்கிய பல்லவ படையெடுப்புகள் வரலாற்றில் தொடர்கதை என்பது ஒருபுறமிருக்க இவ்விரு வல்லரசுகள் இருந்த காலத்தில் களப்பிரர்களும் ஓரளவு வலிவுடன் இருந்திருக்க வேண்டும் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் சாளுக்கியர்கள் பல்லவர்களை வெற்றிகொண்ட அதே நேரம் களப்பிரர்களையும் தோற்கடித்த செய்தி சாளுக்கியர்தம் பட்டயத்தில் பரவலாகக் காணப்படுகின்றன.*

*இரண்டாம் நந்திவர்ம பல்லவனை வெற்றி கொண்டு காஞ்சி மாநகருக்குள் புகுந்த இரண்டாம் விக்கிரமாதித்ய சாளுக்கிய அரசன் அந்நகரையே அழிக்கும் வெஞ்சினத்துடன் வந்த போதும் அவனைத் தன்பால் ஈர்த்து அமைதிப்படுத்தியது இராஜசிம்ம ஈஸ்வரர் திருக்கற்றளி. அதன் அழகில் மயங்கிய விக்கிமாதித்யன் அதற்கு தனது காணிக்கையாக பொற்காசுகள் பல வழங்கினான். இவன் தனது காலத்தில் (கி.பி. 733-745) பாண்டியர், சோழர், கேரளர், களப்பிரர் மற்றும் பல சிற்றரசர்களை வென்றதாகச் செப்பேடுகள் தெரிவிக் கின்றன. (R.C. Majumdar, The Classical Age, Bharatiya Vidya Bhavan, series Voume III page 247)*

## பட்டத்தான் மங்கல (பல்லவர் கால) செப்பேடு:

*கி.பி. எட்டாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னன், இரண்டாம் நந்திவர்ம பல்லவ மன்னரும் களப்பிரர்களை வெற்றிகொண்டதாகத் தமது பட்டத்தான் மங்கலச் செப்பேட்டில் குறித்துள்ளான் "புகழ்மிக்க வலிமை கொண்டவனும் ஒளிவீசும் வாளை உருவிக் கையிலேந்தியவனும் ஒப்பற்ற தனி வீரருமான அந்த அரசன் இளைஞனாக இருக்கும்போதே ராஜ்யத்தை அடைந்து, எல்லா எதிரிகளையும் வென்று, வணங்கிய எல்லா அரசர்களுடைய முடிகளையே தன் திருவடிப் பீடமாகக் கொண்டான். அவனுடைய (அரண்மனை) வாயிற்புறத்தில் வல்லபர், களப்பிரர், கேரளர், பாண்டியர், சோழர், துளுவர், கொங்கணர், இன்னும் மற்றோர் உள்ளே நுழைந்து சேவிக்க, சமயத்தை எதிர்பார்த்து நெருங்கிக் கொண்டிருக்கின்றனர்" இதுதான் அந்த செப்பேட்டில் காணப்பெறும் சுலோகங்களின் மொழிபெயர்ப்பு (பல்லவர் செப்பேடுகள் முப்பது, பட்டத்தான் மங்கலம் செப்பேடு, சுலோகம் 7,9 பக்கம் 246)*

*இதிலிருந்து கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இடைப்பட்ட பகுதியில் சாளுக்கியர் மன்னனாகிய இரண்டாம் விக்கிர மாதித்யனும் சற்று பின்னாளில் பல்லவ மன்னன் நந்திவர்ம பல்லவனும் களப்பிரர்களை வெற்றிகொண்டுள்ளனர் என்பது தெரிய வருகிறது. ஆக கி.பி. 8-ம் நூற்றாண்டிலும் இங்கே களப்பிரர்கள் வலிமையுடன் திகழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.*

## வேலஞ்சேரிச் செப்பு பட்டயம்:

*நந்திவர்ம பல்லவனுக்குப் பின்னால் ஆட்சிக்கு வந்தவர்களில் செல்வாக்குப் பெற்றிருந்த அபராஜித பல்லவன் காலத்திலும், களப்பிரர்கள் ஓரளவு வலிமையுடன் திகழ்ந்துள்ளனர் என்பதை தமிழ்நாடு அரசு தொல்பொருள் இலாகா கண்டுபிடித்த வேலஞ்சேரிச் செப்பு பட்டயம் சுட்டிக்காட்டுகிறது.*

இதில் அபராஜிதன், களப்பிரர் குலமான ஆகாயத்தில் உலவும் சூரியனாக வருணிக்கப்படுகிறான். *(Dr. R. Nagaswamy Thiruttani and Velancheri Copper-plates, Velancheri plates of Aparajita, translation p. III)*

அபராஜித பல்லவனின் காலம் கி.பி. 870 முதல் 890 வரை என்று கருதப்படுகிறது. அவ்வாறாயின் கி.பி. 9-ம் நூற்றாண்டின் இறுதியிலும் களப்பிரர்கள் தமிழகத்தின் ஏதேனும் ஒரு பகுதியினை ஆட்சி புரிந்துள்ளனர் என்பது புலனாகிறது. இதுதவிர களப்பிரர்கள் 9-ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் கொங்கு நாட்டின் சில பகுதிகளை ஆட்சி செய்து வந்துள்ளனர் என்ற செய்திக்கு ஆதாரமாக பொன்னிவாடிக் கல்வெட்டு திகழ்கிறது. இதுநாள் வரை வரலாற்று ஆசிரியர்கள் சேரர்களாகக் கருதிய அந்த அரசர்கள் சேரர்கள் அல்ல களப்பிரர்கள் என்பது இதன் மூலம் தெரியவந்துள்ளது.

# 11

## யாப்பருங்கலம் காட்டும் களப்பிரர்

களப்பிரர்கள் தமிழகத்தை ஆட்சிபுரிந்தனர் என்ற வரலாற்றுச் செய்தியை எவரும் மறுக்க முடியாத நிலைக்கு சான்றுகள் கிடைக்கப் பெற்றபோதும், அவர்களைப் பற்றிய முழுமையான வரலாற்றுத் தடயங்கள் இதுநாள்வரை கிடைக்கவில்லை என்பது வருத்தத்துக்கு உரியதே! சங்க காலத்து சேர, சோழ, பாண்டியர்களின் வரலாறு இன்னமும் சரிவர அறிந்துகொள்ள இயலா நிலை அமைந்துள்ளபோது தமிழ் அரசர்கள் அல்லாத வேற்று இனத்து மன்னர்தம் வரலாறு முழுமையாகத் தெரிய வாய்ப்பின்றிப் போனது வியப்பில்லைதான்.

களப்பிரர்கள் தாங்கள் தமிழ் நிலத்தை முழுமையாக படை வலிமையினால் கைப்பற்றிய காலத்தில் வைதீக மதச் (இந்துமத) சார்பு அற்றவர்களாக விளங்கியிருத்தல் வேண்டுமென்றும், அதனால் இங்கே வைதீகக் காப்பாளர்களாக இருந்த (பிராமண) அந்தணர்களை கொடுமைப்படுத்தியும், அவர்களது உடைமைகளை கவர்ந்தும் ஊறு விளைவித்தனர் என்றும், அதுவே களப்பிரர்களின் வரலாற்றை புறவுலகம் அறியா வண்ணம் பிராமணர் குலத்தவரால் அழித்தொழிக்க காரணமாயிற்று என்றும் ஒரு செய்தி உலவுகிறது.

அது உண்மையாயினும் அல்லாது இருப்பினும் வரலாற்றில் இவர்கள் மூடி மறைக்கப்படுவதற்கு முழுமையான காரணம் யாதென கண்டறியப்பட வேண்டும்.

களப்பிரர்களின் போர்க்கள வெற்றியினைப் பற்றி பழமையான வெண்பா ஒன்று எடுத்துரைக்கின்றது. இவ்வெண்பா, கி.பி. 10-ம் நூற்றாண்டின் நூலாகிய ‘யாப்பருங்கலம்’ என்னும் யாப்பிலக்கண நூலின் விருத்தியுரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

‘படுபருந்தும் சூரிப்பேயும், பல்லிலங்கும் நாயும்
கொடியும் கழுகுமிவை கூடி - வடிவுடைய
கோமான் களப்பாளன் கொல்யானை போமாறு
போமாறு போமாறு போம்’

என்னும் அந்தப் பாடல் களப்பிர (களப்பாள) அரசனுடைய யானை சேனைகள் போர்க்களத்துக்குச் செல்லும்போது பிணந்தின்னிப் பிராணிகளான பருந்தும், ஓநாயும், நரி, நாய், கழுகு ஆகியவையுடன் பேய்களும் உடன் சென்றன

என்று உரைக்கின்றது. அதாவது களப்பிர அரசன் தனது எதிரிகளுடன் போரிடும்போது களத்தில் செத்துவிடும் யானைகள், குதிரைகள் மற்றும் மனித உடல்களை பிணந்தின்னிப் பிராணிகளுக்கு விருந்து படைக்கும் நிலை உருவாகும் என அவனது போர்க்கள வெற்றியைப் பறைசாற்றும் விதமாக இந்தப் பாடல் அமைந்துள்ளது.

மேலும் நான்கு பழைய வெண்பாக்களை யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் காட்டுகின்றது. அவைகள், களப்பிர அரசனால் சேர, சோழ, பாண்டிய அரசர்கள் வெல்லப்பட்டு அவர்களுக்கு தளை (விலங்கு) இடப்பட்டபோது அந்த மூவரசர்கள் பாடிய பாடல்களாகக் கருதப்படுபவை. யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் காட்டும் இந்த பாடல்கள் பிற்காலத்தில், தனிப்பாடற் திரட்டு, புலவர் புராணம் முதலான நூற்களிலும் சேர்க்கப்பட்டுள்ளன. அந்தப் பாடல்கள் யாதெனப் பார்க்கலாம்.

சேரமன்னர் பாடியது

‘தினை விதைத்தார் முற்றந் தினையுணங்கும், செந்நெல்
தனை விளைத்தார் முற்ற மதுதானாம் - கனைசீர்
முரசுணங்கும் சங்குணங்கும் மூரித் தேர்த் தானை
அரசுணங்கும் அச்சுதன்தன் முற்றத்து’

சோழ அரசன் பாடியது

‘அரசர்குல திலகன் அச்சுதன் முற்றத்தில்
அரச ரவதரித்த வந்நாள் - முரசதிரக்
கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் காற்றளையை
வெட்டிவிடும் ஓசை மிகும்’.

பாண்டியர் பாடல்

‘குறையுளார் எங்கிரார் கூர்வே லிராமன்
நிறையறு திங்கள் இருந்தான் - முறைமையால்
ஆலிக்குத்தானை யலங்குதார் அச்சுத! முன்
வாலிக் கிளையான் வரை.’

*பாண்டியன் இப்பாடல் பாடியதும் வெகுண்ட அச்சுதக் காப்பாளன் பாண்டியனுக்கு மேலும் ஒரு தளை இட்டான். மறுதளை இட்டதும் பாண்டியன் மற்றுமோர் வெண்பா பாடினான்.*

*‘குடகர் குணகட லென் றார்த்தார் குடகர்க்*
*கிடகர் வடகடலென் றார்த்தார் - வடகடலர்*
*தென்கட லென்றார்த்தார் தில்லையச் சுதானந்தன்*
*முன்கடை நின்றார்க்கும் முரசு.’*

*இந்தப் பாடல்களால் குறிக்கப்படும் களப்பிர அரசர் அச்சுதன் என்று அழைக்கப்பட்டபோதும், அச்சுதன் என்பது களப்பிர அரசர்களின் பொதுப் பெயர் என்றே எண்ணத் தோன்றுகிறது. பாலி மொழியில் எழுதப்பட்ட ஒரு பௌத்தச் செய்யுள், களப்பிர அரசர் ஒருவரை அச்சுதன் என்றே கூறுகிறது. மற்றொரு களப்பிர அரசர் தமிழ்ச் செய்யுள் ஒன்றில் அச்சுதன் என்றே குறிக்கப்படுகின்றான். ஆதலால் களப்பிரர் அரசர்கள் ஒவ்வொருவரும் அச்சுதன் என்ற பெயர் கொண்டிருந்தனர் என்பது தெரிய வருகிறது.*

*சேர, சோழ, பாண்டியர் களப்பாளரைத் (களப்பிரரை) தமிழ்ச் செய்யுளால் பாடியபடியால், களப்பிரரும் தமிழர்களே என்று திரு. பி.டி. சீனிவாச அய்யங்கார் கூறுகிறார் (History of Tamils 1929, p. 535) ஆனால் இவரது கூற்று தவறென்பது இதுகாறும் பார்த்த செய்திகள் நன்குப் புலப்படுத்தும். களப்பிரர் தமிழரல்லர் கன்னடரே என்பது இறுதியானது.*

*‘யாப்பருங்கலம்’ என்னும் செய்யுள் இலக்கண நூலின் விருத்தியுரையாசிரியர் தம்முடைய (நூலில்) உரையில் நான்கு அழகிய தமிழ்ச் செய்யுட்களை மேற்கோள் காட்டியுள்ளார். அந்த செய்யுட்கள் களப்பிர அரசர்களைப் பற்றியவை. அச்செய்யுட்களில் “கெடலரு மா முனிவர்” என்று தொடங்குகின்ற செய்யுள் அச்சுதன் என்னும் களப்பிர அரசனை காத்தருள வேண்டுமெனத் திருமாலை வேண்டுகிறது.*

**களப்பிரர் வாழ்த்துப் பாடல்**

*(அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா)*

*தரவு:*

*கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்தக்*
*கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைஇ*
*அழலவிர் சுழல்செங்கண் அரிமாவாய் மலைந்தானைத்*
*தாரோடு முடிபிதிர தமனியப் பொடிபொங்க*
*ஆர்புனல் இழிகுருதி அகலிடம் உடனனைப்பக்*
*கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்!*

*தாழிசை:*

*முரைசதிர் வியன்மதுரை முழுவதூஉம் தலைபனிப்பப்*
*புரைதொடித் திரடிண்டோப் போர்மலைந்த மறமல்லர்*
*அடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவண் நிலஞ்சேரப்*
*பொடியெழ வெங்களத்துப் புடைத்துநின் புகழாமோ?*
*கலியொலி வியனுலகம் கலந்துட னனிநடுங்க*
*வலியியல் அவிராழி மாறெதிர்ந்த மருட்கோவும்*
*மாணாதார் உடம்பொடு மறம்பதிர வெதிர்கலங்கச்*
*சேணுயர் இருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ?*
*படுமணி இனநிரைகள் பரந்துடன் இரிந்தோடக்*
*கடுமுரண் எதிர்மலைந்த காரொலி எழில்வேறு*
*வெரிநொடு மருப்பொசிய வீழ்த்துதிறல் வேறாக*
*எருமலி பெருந்தொழுவின் இறுத்ததுநின் இல்லாமோ?*

*(அம்போதரங்கம்)*

(பேரெண்)

இலங்கொளி மரகதம் எழில்மிகு வியன்கடல்

வலம்புரித் தடக்கை மாஅல் நின்னிறம்

விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்

பொருகளி றட்டோய்! புரையும் நின்னுடை

(சிற்றெண்)

கண்கவர் கதிர்மணி கனலும் சென்னியை

தண்சுடர் உறுபகை தவிர்த்த ஆழியை

ஒலியியல் உவணம் ஓங்கிய கொடியினை

வலிமிகு சகடம் மாற்றிய அடியினை

(இடையெண்)

போரவுணர்க் கடந்தோய் நீ

புணர் மருதம் பிளந்தோய் நீ

நீரகிலம் அளந்தோய் நீ

நிழல் திகழும் படையோய் நீ

(அளவெண்)

ஊழிநீ உலகுநீ உருவுநீ அருவுநீ

ஆழிநீ அருளுநீ அறமுநீ மறமுநீ

எனவாங்கு

(சுரிதகம்)

அடுதிறல் ஒருவநிற் பரவுதும் எங்கோன்

தொடுகழற் கொடும்பூட் பகட்டெழில் மார்பிற்

கயலொடு கிடந்த சிலையுடைக் கொடுவரிப்

புயலுறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்

தொன்று முதிர்கட லுலகம் முழுதுடன்

ஒன்றுபுரி திகிரி உருட்டுவோன் எனவே.

அலைகடற் கதிர்முத்தம் என்று தொடங்கும் மற்றொரு பாடல், களப்பிர அரசன் சங்கு சக்கரம் ஏந்திய திருமாலை வழிபட்டு அவன் அருளினால் பெரிய நிலத்தை ஆளும் பேறு பெற்றவன் என்றும் அந்த அரசனை அருகக் கடவுள் காத்தருள வேண்டும் என்றும் வேண்டுகிறது.

(தலையளவு அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா பெருதேவபாணி)

தரவு:

அலைகடற் கதிர்முத்தம் அணிவயிரம் அவையணிந்து

மலையுறைமா சுமந்தேந்தும் மணியணைமேல் மகிழ்வெய்தி

ஓசனைசூழ் திருநகருள் உலகொருமுன் றுடனேத்த

ஈசனையாய் இனிதமர்ந்தங் கிருடிகட்கும் இறையவர்க்கும்

அருளறமே அறமாக அயலார்கண் மயலாக

இருளறநன் கெடுத்தியம்பி இருவினை கடிந்திசினோய்!

(தாழிசை:)

துன்னாத வினைப் பகையைத் துணிசெய்யும் துணி வினையாய்

இன்னாத பகைமுனைபோல் எரித்தடக்கும் நினைப்பினால்

இருளில்லா உணர்வென்னும் இலங்கொளியால் எரித்தனையாய்

அருளெல்லாம் அடைந்தெங்கண் அருளுவதுன் அருளாமோ?

மதிபுரைமுக் குடைநீழல் மகிழ்வெய்தி அடைந்தோரைக்

கதிபொருதக் கருவரைமேல் கதிர்பொருத முகம்வைத்துக்

கொள்முனைபோல் வினைநீங்கக் குளிர்நிழற்கண் மகிழ்ந்தளிர்போல்

நின்மினீர் எனவுணர்த்தல் நிருமல நின் பெருமையோ?

மனைதுறந்து வனம்புகுமின் மலமறுக்கல் உறுவீரேல்

வினையறுக்கல் உறுவார்க்கு விழுச்செல்வம் பழுதென்றீங்

கலகில்லாப் பெருஞ்செல்வத் தமரரசர் புடைசூழ்
உலகெல்லாம் உடன்றுறவா உடைமையுநின் உயர்வாமோ

(அராகம்)

அரசரும் அமரரும் அடிநிழல் அமர்தர
முரசதிர் இமிழிசை முரணிய மொழியினை

(அம்போதரங்கம்)

(பேரெண்)

அணிகிளர் அவிர்மதி அழகெழில் அவிர்சுடர்
மணியொளி மலமறு கனலி நின்னிறம்
மழையது மலியொலி மலிகடல் அலையொலி
முழையுறை அரியது முழக்கம் நின்மொழி

(இடையெண்)

வெலற்கரும் வினைப்பகை வேரொடும் வென்றனை
சொலற்கரு மெய்ப்பொருள் முழுவதும் சொல்லினை
அருவினை வெல்பவர்க் கரும்புனை ஆயினை
ஒருவினை ஆகிஉலகுடன் உணர்ந்தனை

(சிற்றெண்)

உலகுடன் உணர்ந்தனை
உயிர்முழு தோம்பினை
நிலவுறழ் நிலத்தனை
நிழலியல் ஆக்கையை
மாதவர் தாகையை
மலர்மிசை மகிழ்ந்தனை

போதிவர் பிண்டியை

புலவருட் புலவனை

எனவாங்கு

(சுரிதகம்)

அருளுடை ஒருவ! நிற் பரவுதும் எங்கோ

இருளறு திகிரியொடு வலம்புரித் தடக்கை

ஒருவனை வேண்ட இருநிலம் கொடுத்த

நந்தி மால்வரைச் சிலம்பு நந்தி

ஒற்றைச் செங்கோல் ஓச்சிக்

கொற்ற வெண்கொடை நிழற்றுக எனவே.

'அகலிடமும் அமருலகும்' என்று தொடங்குகிற இன்னொரு பாடலில் களப்பிர அரசனின் ஆற்றல், கொற்றம், வீரம் முதலியவை புகழப்படுகிறது. அதில் இந்தக் களப்பிரர் அரசன் 'அச்சுதர்கோ' என்று குறிப்பிடப்படுகிறான். அது அச்சுத குலத்தில் பிறந்த அரசன் என்பதை சுட்டிக்காட்டுகிறது.

வண்ணக ஒரு போகு

(அராகம்)

அகலிடமும் அமருலகும் அமர்பொருதும் அறந்தோற்றுப்

புகலிடநின் குடைநிழலாய் புகுமரணம் பிறிதின்றி

மறந்தோற்று நிறங்கருகி மாற்புகழும் நிறைதளரப்

புறந்தோற்றுக் கழலார்ப்பப் பொருதகளம் வெறிதாக

மண்ணுலகும் மறிகடலும் மாமலையும் நிலைகலங்க

விண்ணுலகம் வியப்பெய்த வெஞ்சமத்துள்அலைத்தனையே

அதனால்

கனைகடல் உடைதிரை தரைபொரக் கடைந்தனை

முனைவரும் அமரரும் முறைமுறை வந்துநின்

இணைமலர் பலர்புகழ் பயில்வருதார் பண்பினை

மருளுறு துதைகதிர் மணியது

மணிநிற மருளும் நின்குடை

குடையது குளிர்நிழல் அடைகுன

உயிர்களை அளிக்கும் நின்கோல்

கோலது செம்மையிற் குரைகடல் வளாகம்

மாலையும் காலையும் மகிழ்தூங் கின்று.

*(பேரெண்)*

ஆருயிர்க் கெல்லாம் அமிழ்தின் றமையா

நீரினும் இனிதுநின் அருள்

அருளும் அலைகடலும் ஆயிரண்டும் ஒக்கும்

இருள்கொடிமேற் கொண்டாய் நினக்கு

*(சிற்றெண்)*

நீரகலம் காத்தோய் நீ நிலவுலகம் ஈந்தோய் நீ

போரமர் கடந்தோய் நீ புனையெரிமுன் வேட்டோய் நீ

ஒற்றைவெண் குடையோய் நீ கொற்றச்செங் கோலாய் நீ

பாகையந் துறைவனீ பரியவர் இறைவனீ,

எனவாங்கு

*(சுரிதகம்)*

பொருகடல் வளாகம் ஒருகுடை நிழற்றி

இருபிறப் பாளர்க் கிருநிதி ஈந்து

மனமகிழ்ந்து

அருள்புரி பெரும்புகழ் அச்சுதர் கோவே!

இனையை ஆதலின் பனிமதி தவழும்

நந்தி மாமலைச் சிலம்ப

நந்திநிற் பரவுதல் நாவலர்க் கரிதே!

இதுதவிர 'நலங்கிளர் திருமணியும்' என்று துவங்கும் இன்னொரு பாடல் செங்கோல் விண்ணவன் (விண்ணன் - விஷ்ணு) என்றும், களப்பிர அரசனது ஆட்சி ஓங்க வேண்டும் என்றும் அருகக் கடவுளை வேண்டி நிற்கின்றது. விண்ணவன் என்று குறிக்கப்படுவதால் இவ்வரசன் வைணவ சமயத்தவன் எனக் கொள்ளலாம். வைணவப் பெயராகிய அச்சுதன் (அச்சுதன் - திருமால்) என்றே களப்பிர அரசர் குறிப்பிடப்படுவதை சேர, சோழ, பாண்டிய அரசர்கள் பாடிய பாடல்கள் மூலம் உணர முடிகிறது.

பௌத்த சமயப் பெரியார்களில் பெயர் பெற்றவரான புத்த தத்த தேரர் சோழநாட்டைச் சார்ந்த தமிழர். இவர் காலம் கி.பி. 5-ம் நூற்றாண்டின் முற்பகுதி. தமிழரானபோதும் 'பாலி' மொழியில் கைதேர்ந்தவரான இவர் அம்மொழியில் புத்தவம் சாட்டகதா அபிதம் மாவதாரம், வினய வினிச்சயம், உத்தரவினிச்சயம், ரூபாரூபவிபாகம், ஜினாலங்காரம் முதலான நூல்களை எழுதியுள்ளார். இவர் தாம் எழுதிய வினய வினிச்சயம் என்ற நூலில், தாம் சோழ நாட்டுப் பூதமங்கலம் என்னும் ஊரில் வேணுதாசர் கட்டிய பௌத்த விகாரையில் தங்கியிருந்தபோது, (களப்ர) களம்ப அரசன் ஆட்சி நடைபெற்றதாகவும் அக்காலத்திலேயே அந்நூலை எழுதியதாகவும் கூறியுள்ளார். (Contemporary Buddha Gosha by A.P. Buddha datta - p. 34-70 university of ceylon Review 1945 Vol III No1)

பஸாத ஜனனே ரம்மே பாஸாதே வஸதாமயா

புத்தஸ்ஸ புத்தஸீஹேன வினயஸ்ஸ வனிச்சயோ

புத்தஸீஹம் ஸமுத்திஸ்ஸ மமஸத்தி விஹாரிம்

கதோயம் பன பிக்கூனம் ஹிதத்தாய ஸமாஸதோ

வினயஸ்ஸாவ பொத்தந்தம் ஸுகேனே வாசிரேனச

அச்சுதச்சுத விக்கந்தே களப்ப குலநந்தனே

மஹிம் ஸமனு ஸாஸந்தே ஆரத்தோ சஸமாபிதோ

இந்தச் செய்யுளில் அச்சுத விக்கந்தன் (களப்பிர) களப்ப குலத்தில் பிறந்தவன் என்று குறிப்பிடப்படுகிறான். இதுபோன்ற சான்றுகளால் களப்பிர அரசர் வைணவர் என்பதும் வைணவப் பெயராகிய 'அச்சுதன்' என்னும் சிறப்புப்

பெயரைக் கொண்டிருந்தனர் என்பதும் தெரிகின்றன என்கிறார் மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள்.

களப்பிரர்கள் சேர, சோழ, பாண்டியர்களை வென்று அரசுரிமை பெற்றதனை சான்றுகள் பல எடுத்துக் காட்டி யுள்ளன. அத்துடன் இவர்கள் அம்மூவரின் கொடிச் சின்னங்களை தங்களது கொடியில் பொறித்திருந்தனர் என்பதனைச் 'கெடலருமாமுனிவர்' என்று தொடங்கும் பாடலால் அறிய முடிகிறது. அப்பாடலின் இறுதிப் பகுதியில் வரும் வரிகளான,

அடுதிறல் ஒருவ! நிற்பரவுதும், எங்கோன்

தொடுகழற் கொடும்பூண் பகட்டெழில் மார்பிற்

கயலொடு கிடந்த சிலையுடைக் கொடுவரிப்

புயலுறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்

ஒன்றுகடல் உலகம் முழுவதும்

ஒன்றுபு திகிரி யுருட்டுவோன் எனவே

என்று முடியக் காண்கிறோம். இது, கயல் (மீன்), சிலை (வில்), கொடுவரி (புலி) ஆகிய அடையாளங்களைக் களப்பிரர்கள் கொண்டிருந்தார்கள் என்பதை தெளிவுற எடுத்துக்காட்டுகிறது. இதன்மூலம் இவர்கள் சேரனின் விற்கொடியையும், சோழனின் புலிக் கொடியையும், பாண்டியனின் மீன் கொடியையும் தங்களது கொடியாக்கிக் கொண்டிருந்தனர் என்பது தெரியவருகிறது. ஆக இம்மூன்று நாடுகளின் அடையாளங்களையும் தம்முன் கொண்டதனால் இவர்கள் இம்மூன்று நாடுகளையும் கைப்பற்றி ஆட்சி புரிந்தார்கள் என்பதை ஐயம் இன்றி அறிய முடிகிறது.

மூன்று நூற்றாண்டுகள் முழுமையாக தமிழ்நிலத்தை ஆட்சிபுரிந்த இவர்கள் எத்தனை பேர்? அவர்கள் இங்கே என்னென்ன மாற்றங்களை விதைத்தனர்? என்பதெல்லாம் இன்னமும் விடைதெரியாக் கேள்விகளாகவே உலவுகின்றன. களப்பிரர்கள் மதுரையைத் தலைநகராய்க் கொண்டு பாண்டிய நாட்டை அரசாண்டனர் என்பதையும் சோழ நாட்டினை உறையூர், காவிரிப்பூம்பட்டினம் ஆகிய பகுதிகளைத் தலைநகராய்க் கொண்டு ஆட்சிபுரிந்ததையும் அறிய முடிகிறது. சேர நாடு இவர்கள் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது எனினும் அதனை தனித்து ஆட்சிபுரிந்தனரா இல்லை பாண்டி நாட்டுடன் ஒருமித்து ஆண்டார்களா? என்பது தெளிவாக்கவில்லை. தொண்டை மண்டலத்தைத் தவிர தமிழகத்தின் ஏனைய பகுதிகள் அனைத்தும் அவர்கள் ஆட்சியில் இருந்தன. களப்பிரர்கள் தமிழகத்துக்கு

படையெடுத்து வந்த நாட்களிலேயே தொண்டை நாடு பல்லவர்கள் ஆட்சிக்கு உட்பட்டுவிட்டதால் களப்பிரர்கள் பல்லவர்களுடன் மோதலைத் தவிர்த்து ஏனைய தமிழ் நிலப்பரப்பின் மீதே கண்ணோட்டமிட்டனர். அதனால் அவர்களின் ஆட்சி தென்பெண்ணை ஆற்றுக்குத் தென்புறம் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் பரவியது.

# 12

# களப்பிரர் கால ஆட்சியாளர்கள்

களப்பிரர் காலத்தில் ஆட்சியிலிருந்த சில அரசர்களைப் பற்றிய செய்திகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக காணக் கிடைக்கின்றன. அவ்வகையில் பாண்டிய நாட்டில் களப்பிரர் ஆட்சியமைந்த காலத்தில் சில காலம் மூர்த்திநாயனார் என்னும் வணிகர் ஒருவர் ஆட்சி புரிந்ததாகப் பெரியபுராணம் எடுத்துரைக்கின்றது. சைவ சமயத் திருத்தொண்டரான மூர்த்தியார், மன்னர் ஆன வரலாற்றை, பெரியபுராணம் சுவை படச் சொல்கின்றது.

## மூர்த்திநாயனார்:

மதுரையை ஆண்ட களப்பிர மன்னன் வாரிசு இல்லாமல் மரணமடைந்தான். இந்த மன்னன் சைவ சமயத்துக்கு பெரிதும் இடையூறு விளைவித்தவன். வாரிசு இன்றி மன்னன் மரணமடையவே அக்கால வழக்கப்படி அமைச்சர்கள் பட்டத்து யானையின் கண்ணைத் துணியால் கட்டி மறைத்து நகர வீதியில் நடக்கவிட்டனர். அவ்வாறு செல்லும் யானை யாரைத் தனது முதுகில் ஏற்றிச் சுமந்து வருகிறதோ அவரையே நாட்டு அரசனாகத் தேர்வு செய்வதே அக்கால வழக்கம். நகர வீதியில் நடந்துவந்த யானை, சொக்கநாதர் ஆலயத்துக்கு அருகாமையில் நின்றிருந்த மூர்த்தியாரைத் தமது முதுகில் சுமந்துகொண்டு அரண்மனைக்குச் சென்றது. தெய்வசித்தம் இதுவென்று எண்ணிய அமைச்சர்கள் மூர்த்தியாருக்கு முடிசூட்டி மன்னராகத் தெரிவித்தனர்.

மூர்த்தியார் தமக்கு பொன்முடி வேண்டாம் என்று மறுத்தார். அவர் சிவனடியார் என்பதால் சடாமுடியுடன், திருநீறு பூசி உருத்திராட்சம் அணிந்து பட்டங் கட்டப்பட்டார். அதனால் அவர் ‘மும்மையால் உலகாண்ட மூர்த்தியார்’ என்று கூறப்பட்டார். இவர்தம் வரலாறு பெரியபுராணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. எனினும் இவர் ஆட்சிபுரிந்த ஆண்டுகள் எத்தனை என்பதோ மறுபடியும் களப்பிரர் ஆட்சி எவ்வாறு உருவானது என்பதோ பெரியபுராணம் விளக்கவில்லை.

பெரியபுராணம் உரைக்கும் மூர்த்திநாயனார் வரலாற்றில் அவர், சைவ நெறிபூண்டு ஒழுகிய வணிகர் குலத்து சிவ பக்தர் என்றும், கோவிலில் தினசரி சிவபெருமானுக்கு சந்தனக் காப்பு சார்த்துவதற்கான சந்தனத்தை அரைத்து தரும் பணியினை மேற்கொண்டிருந்தார். இந்நிலையில் பாண்டி நாட்டை கருநாடக மன்னன் ஒருவன் கைப்பற்றினான். சமண சமயத்தைச் சார்ந்த அவன் பிற

மதத்தைச் சார்ந்த ஆலயங்களில் பூசைகள் நடைபெறாதவாறு இடையூறு செய்தான். சமண மதத்தைப் பரப்பவே ஆர்வங் காட்டினான்.



**கூற்றுவநாயனார்**

இறைவனுக்கு சார்த்தப்படும் சந்தனத்துக்கான சந்தனக் கட்டைகள் கிடைக்கவிடாமல் தட்டுப்பாட்டை உருவாக்கினான். அப்பழுக்கற்ற சிவபக்தரான மூர்த்தி நாயனார் ஒருநாள் சந்தனக்கட்டை இல்லாக் காரணத்தால் தனது முழங்கையைக் கல்லில் தேய்க்கலானார். இரத்தம் பீறிட்டு ஒழுகியது. தனது (பக்தனின்) அடியவனின் துயர் பொறுக்கமாட்டாத இறைவன் 'அன்பனே எம்மிடம் நீ கொண்டுள்ள பக்தியால் செய்யத் துணிந்த இக்கொடிய செயலினை நிறுத்து. உனக்கு இன்னல் விளைவித்த அரசன் இறந்துபோவான். அவன் அரசை நீயே கைப்பற்றிக் கொண்டு எமக்குச் செய்துவரும் திருப்பணியை நன்றாக நடத்தி நம்மிடம் சேர்வாயாக!, என்று அசரீரியாகக் கூறச் செய்தார்.

அதுபோன்றே அம்மன்னன் மரணமடையவே முன்னர் கூறப்பட்டதுபோல மூர்த்தியார் மன்னராக்கப்பட்டார். திரும்பவும் இறைவழிபாடு சிறப்புடன் நடந்தேறின.

கானக் கடிசூழ் வடுகக்கரு நாடர் காவல்

மானப் படைமன்னன் வலிந்து நிலங்கொள் வானாய்

யானைக் குதிரைக் கருவிப்படை வீரர் திண்தேர்

சேனைக் கடலுங் கொடுதென் திசைநோக்கி வந்தான்

வந்துற்ற பெரும்படை மண்புதையப் பரப்பிச்

சந்தப் பொதியில் தமிழ்நாடுடை மன்னன் வீரம்
சிந்தச் செருவென்று தன்னாணை செலுத்து மாற்றால்
கந்தல் பொழில்சூழ் மதுராபுரி காவல் கொண்டான்.

(பெரியபுராணம் மூர்த்திநாயனார் புராணம் பாடல் 11,12)

இதே செய்தியினைக் கல்லாடம் என்னும் இலக்கியம்

'படைநான் குடன்று பஞ்சவன் துரந்து
மதுரை வவ்விய கருநடர் வேந்தன்
அருகர்ச் சார்ந்துநின்று அரன்பணி அடைப்ப'

என்று விவரிக்கின்றது.

## கூற்றுவ நாயனார்:

நாயன்மார்கள் அறுபத்து மூவருள் ஒருவரான கூற்றுவ நாயனார் சோழநாட்டை அரசாண்ட களப்பிர அரசர்களுள் ஒருவர். இவர் கூற்றனார் என்றும், கூற்றுவநாயனார் என்றும் அழைக்கப்படுகிறார். இவரது வரலாற்றை உரைக்கும் பெரியபுராணம் சுவைபடச் சொல்லும் செய்திகள் அழகானவை. இவர் களந்தை என்னும் பகுதியை அரசாண்டவர் என்பதை சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையில் குறிப்பிடுகிறார்.

'ஆர்கொண்ட வேர்கூற்றன் களந்தைகோன் அடியேன்' என்பதுவே அதனை உணர்த்தும் வரி.

இவர் களப்பாளர் (களப்பிரன்) குலத்தைச் சார்ந்தவர் என்று திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பி கூறுகிறார்.

"நாதன் திருவடி யேமுடி யாகக் கவித்துநல்ல
போதங் கருத்திற் பொதிந்தமை யாலதுகை கொடுப்ப
ஓதந்தரு வியஞான மெல்லாம் ஒருகோலின் வைத்தான்
கோதை நெடுவேற் களப்பாள னாகிய கூற்றுவனே!"

கால நிலைக்கேற்ப களப்பிரர்கள் வைணவர்களாகவும், (சமண) சைனர்களாகவும் தங்களது சமயச் சார்பை மாற்றி வந்துள்ளனர். கூற்றுவ

நாயனார் இவ்விரு சார்பும் அற்று சைவ சமயச் சார்புடையவராக இருந்தார். சோழ நாட்டிலிருந்த அவர், சோழர் குல அரசர்தம் முடியினைச் சூடி அரசாள வேண்டுமென விரும்பினார். களப்பிரர் ஆட்சிக் காலத்தில் பழைய சோழ அரச பரம்பரையினர் களப்பிரர்களுக்கு கீழடங்கி வாழ்ந்து வந்தனர். அவர்தம் முன்னோரது (சோழ அரசர்) மணிமுடி தில்லைவாழ் அந்தணர்களிடத்தில் இருந்தது. இதனைக் கூற்றுவ நாயனாரும் அறிவார். எனவே "முடியொன்று ஒழிய அரசர் தருவெலாம்" உடையவராக இருந்த கூற்றுவர், சோழ அரசரது பழைய முடியைத் தரித்து அரசாள விரும்பித் தில்லைவாழ் அந்தணர்களிடம் சென்றார்.

அவர்களிடம் தமக்கு சோழ அரசர்தம் மணிமுடி சூட்டி அருள வேண்டுமென கோரிக்கை விடுத்தார். ஆனால் சோழ அரசர் குடியிற் பிறந்தவர் அல்லாமல் வேற்றுக் குடியினருக்கு அம்முடி சூட்டமாட்டோம் என்று கூறிய அந்தணர்கள், சோழர் மணிமுடியை தம்முள் ஒரு குடும்பத்தாரிடம் ஒப்படைத்துவிட்டு ஏனையோர் அனைவரும் சேர நாட்டுக்குச் சென்றுவிட்டனர். (கூற்றுவநாயனார் புராணம் 4,5) அதனால் மனந்தளர்ந்த கூற்றுவனார் முடி சூடாமலேயே அரசாண்டதாகப் பெரியபுராணம் சொல்கிறது.

"மல்லல் ஞாலம் புரக்கின்றார் மணிமா மவுலி புனைவதற்கு
தில்லைவா ழந்தணர் தம்மை வேண்ட அவரும் 'செம்பியர்தம்
தொல்லை நீடுங்குல முதலோர்க் கன்றிக் கட்டோம்முடி' என்று
நல்கா ராகிச் சேரலன்தன் மலைநா டணைய நண்ணுவார்
ஒருமை உரிமை தில்லைவா ழந்தணர்கள், தம்மில் ஒரு குடியைப்
பெருமை முடியை அருமைபுரி காவல் கொள்ளும்படி இருத்தி
இருமை மரபுந் தூயவர்தாம் சேரர் நாட்டில் எய்தியபின்
வரும்ஐயுற வால்மனந் தளர்ந்து மன்றுள் ஆடும் கழல்பணிவார்"

இந்தப் பாடல்வரிகள் மேற்சொன்ன செய்திகளை எடுத்துரைக்கின்றன. இனி திருத்தொண்டர் 'புராணப் பயன்' என்னும் திருத்தொண்டர் புராண சாரத்தில், கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்,

குன்றாத புகழாளர் களந்தை வேந்தன்
கூற்றுவனார் மாற்றலர்மண் கொண்டுசூடப்
பொன்றாழு முடிவேண்டப் புலியூர் வாழும்
பூசுரர்கள் கொடாதகலப், புனித னீந்த

மன்றாடுந் திருவடியே முடியாச் சூடி

மாநிலங்காத் திறைவனுறை மாடக் கோயிற்

சென்றா சையுடன் வணங்கிப் பணிகள் செய்து

திருவருளா லமருலகஞ் சேர்ந்துளாரே!

என்று பாடுகிறார் (திருத்தொண்டர் புராணப் பயன்). இதில் கூற்றுவனாரை களந்தை வேந்தன் என்று தெரிவித்துள்ளார். இவ்வாறு கூறப்படுவதால் களந்தை எங்கிருந்தது எனும் கேள்வி எழுகிறது.

'களந்தை' சோழ நாட்டில் இருந்திருக்க வேண்டும் என்ற முடிவே இதுகாறும் எடுக்கப்பட்டு வந்துள்ளது. மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் இதையே உறுதிப்படுத்திக் கூறுகிறார். (களப்பிரர் ஆட்சியில் தமிழகம் பக்கம்-26) ஆனால் இது சோழ நாட்டுப் பகுதியாக இருந்திருப்பின் தில்லைவாழ் அந்தணர்கள் கூற்றுவனாருக்கு முடிசூடத் தயங்கியது ஏன்? அவர்கள் ஏன் சேர நாடு செல்ல வேண்டும் என்ற கேள்வியினை எழுப்புகிறார் நடன காசிநாதன்.

வரலாற்றறிஞர் கே.கே.பிள்ளை கூறுகையில் 'களந்தை' தொண்டை நாட்டைச் சேர்ந்த ஊர் என்று கருதுகிறார் (தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் பக்கம்-182)

அதேநேரம் பாண்டிய நாட்டில் களந்தை என்றதோர் பகுதி இருந்துள்ளது. அதற்கு கரவந்தபுரம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. அவ்வூர் மக்கள், பாண்டியர் அரச குலத்தவரிடம் செல்வாக்குப் பெற்றவர்கள்.

பாண்டிய மன்னன் ஜடிலவர்மப் பராந்தக நெடுஞ்சடையனிடம் உத்தரமந்திரியாக இருந்த மாறங்காரி மற்றும் இவனது உடன் பிறந்தவன் மாறன் எயினன் ஆகியோர் களந்தையைச் சேர்ந்தவர்கள் ஆவர். மேலும் இம்மன்னன் காலத்தில் இருந்த மகாசாமந்தர்களான மூர்த்தி எயினன், சாத்தங்கணபதி ஆகியோரும் இவ்வூரினின்று வந்தவர்களே. இதனை,

'ஈங்கிதனுக் காணத்தியாய்த் தாம்ரசாசனஞ் செய்வித்தான்

வாத்ய கேயசங்கீ தங்களான் மலிவெய்திய வண்களந்தை

வைத்யகுலம் விளங்கத் தோன்றி மன்னவற்கு மகாசாமந்தனாய்

மாற்றரசரை வலிதுலைக்கும் வீரமங்கலப் பேரரசனாகிய

தீரதரன் மூர்த்தி எயினன்'

என்னும் (பாண்டியர் செப்பேடுகள் முப்பதில் சீவரமங்கலச் செப்பேடு 75-81 வரிகள்) வரிகள் மூலம் அறிய முடிகிறது.

இதன்மூலம் பாண்டியர் ஆண்ட களந்தையே கூற்றுவ நாயனார் நாடாகவும் இருக்கலாம் என்றும் பாண்டிய நாட்டுக்காரரான அவருக்குச் சோழர்தம் முடியைச் சூடமாட்டோம் என்று தில்லைவாழ் அந்தணர்கள் மறுத்திருக்கலாம் என்றும் நடன காசிநாதன் உரைக்கின்றார். ஆயினும் இந்த கூற்று ஏற்கக்கூடிய நிலையில் இல்லை என்றே கூறலாம். ஏனெனில் தில்லைவாழ் அந்தணர்கள் சோழர் முடியை கூற்றுவநாயனாருக்கு மறுத்தலுக்குரிய காரணம் அவர் களப்பிரர் குலத்தவர் என்பதே அன்றி வேறல்ல.

களந்தை பாண்டிய நாட்டில் இருந்தது என்பது உண்மையே எனினும் அதுபோன்றதோர் பகுதி சோழ நாட்டில் இருந்திருக்கக் கூடாது என்று மறுப்பதற்கும் இல்லை. அதுமட்டுமின்றி பாண்டிய நாட்டவராக கூற்றுவனார் இருப்பின் அவர் சோழர்தம் மணி முடிக்காக தில்லைவாழ் அந்தணரை நாடியிருக்கவும் வாய்ப்பு குறைவே. இனிவரும் கால ஆய்வுகள் நிச்சயம் சோழநாட்டில் இருந்த களந்தை பற்றிய செய்தியினை வெளியுலகிற்கு அறிவிக்கக் கூடும் என்பதால் கூற்றுவனார் சோழ நாட்டினர் என்று கொள்வதே பொருந்தும்.

## திருமங்கை ஆழ்வார்:

வைணப் பெரியார்களுள் ஒருவரான திருமங்கை ஆழ்வார் மன்னராக இருந்து வைணவ அடியாராக (ஆழ்வார்) மாறியவர். இவர் இரண்டாம் நந்திவர்ம பல்லவமல்லனது (பரமேசுவரவர்மன்) காலத்தைச் சேர்ந்தவர் (கி.பி. 731-795) என்று கருதப்படுகிறது. (வைணவரும் தமிழும், பக்கம் 382-384) E.S. வரதராச அய்யர், Dr. R. நாகஸ்வாமி, Studies in Ancient Tamil law and Society p. 19)

"பல்லவன் மல்லையர் கோன்பணிந் தபர

மேச்சுர விண்ணக ரமதுவே"

(பெரிய திருமொழி 2-9-1)

"நந்தி பணி செய்தநகர் நந்திபுர விண்ணகரம்"

(பெரிய திருமொழி 5-10-7)

என்றெல்லாம் இவர் இரண்டாம் நந்திவர்ம பல்லவ மல்லனையே குறித்துப் பாடுவதன் மூலம் இவர், அவர் காலத்தவரே என்பது கணிப்பு.

*இவர் கள்ளர் மரபினர் என்றும், கலியன், கலிகன்றி முதலிய அடைமொழிப் பெயர் பெற்றிருப்பதாலும் களப்பிரர் இனம் சார்ந்தவர் என்பதே கணிப்பாகிறது. களப்பிரரைக் கள்வர் என்றும் அழைக்கப்படுவதால் திருமங்கை ஆழ்வாரும் களப்பிரரே என்று கருதப்படுகிறது (அரிசமய தீபம் பரகாலச் சருக்கம்).*

*களப்பிரர்களும் முத்தரையர்களும் ஒரே இனம் என்று கருதுவோர், திருமங்கையாழ்வாரை முத்தரையர் என்று கூறுவதுண்டு. செந்தலைக் கல்வெட்டில் மாறனுக்கு (சுவின் மாறன்) காணப்பெறும் பல பட்டப் பெயர்களுள் 'கள்வர் கள்ளன்' என்பதும் ஒன்றாம். அந்தப் பட்டப் பெயரைக் கொண்டு சிலர் முத்தரையர்களும் களப்பிரர்களும் ஒருவரே என்று வாதாடுவதுண்டு. ஆனால் அப்பட்டப் பெயரை கள்வர்களுக்கு கள்வன் என்ற பொருளில் உணர்ந்து முத்தரையர் களப்பிரர்களுக்கு எதிரியாவார் என்ற (நடன காசிநாதன் முத்தரையர் பக்கம் 54-55) கருத்தும் நிலவுகிறது.*



**திருமங்கை ஆழ்வார் துணைவியுடன்**

*இது எவ்வாறாயினும் திருமங்கையாழ்வார் சபர குலத்தில் பிறந்தவர் என்று 'திவ்யசூரி சரிதம்' தெரிவிப்பது கள்வர் குலத்தையே எனக் கருதப்படுவதால் அவரைக் களப்பிரர் என்று கருத வாய்ப்புண்டு. (மு. இராகவய்யங்கார், இலக்கிய சாசன வழக்காறுகள், பக்கம்-100)*

*அத்துடன் தற்காலத்தில் தஞ்சைப் பகுதியில் வாழ்ந்துவரும் கள்ளர் மரபினர் களப்பிரர்களின் வழிவந்தவர்களே என்று கருதப்படுவதாலும் திருமங்கையாழ்வாரும் களப்பிரராக இருக்கலாம் என்ற கருத்து வலுப்பெறுகிறது.*

நீலன் என்ற சிற்றரசனுக்கு மகனாகத் தோன்றிய இவரது இயற்பெயர் ‘கலியன்’ என்பது. இவர்தம் இளம்வயதிலேயே ‘நாற்கவிப் பெருமாள்’ என்னும் தமிழ்ப் புலவர்’ ஒருவரை வாதில் வென்று நாற்கவிப் பெருமாள் என்னும் பட்டப் பெயரை அப்புலவரால் அளிக்கப்பெற்றார். இதனைக் கேள்வியுற்ற சோழ மன்னன் இவரை அழைத்து மேலும் பல பரிசுகள் அளித்து சிறப்பித்தான்.

சோழ மன்னன் இவரது ஆலி நாட்டுடன் திருமங்கை என்னும் ஊரையும் சேர்த்தளித்து அந்நகரைத் தலைநகராக்கிப் ‘பரகாலன்’ என்னும் வீரப் பட்டத்தையும் அளித்து சிறப்பித்தான். திருமங்கை என்னும் ஊரைத் தம் நாட்டின் தலைநகராகக் கொண்டு (வாழ்ந்ததால்) ஆட்சிபுரிந்து வந்தமையால் இவர் திருமங்கை மன்னன் என்று அழைக்கப்பட்டார்.

ஆட்சி நிர்வாகத்தில் மூழ்கி இருந்த திருமங்கை மன்னனுக்கு வைணவ சமயத்தின் மீது பற்றுதல் ஏற்பட்டது. இறைவன் நாராயணனே, இவரை ஆட்கொண்டு காதில் மந்திரம் ஓதினார் என்று கூறப்படுகிறது. “நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்” என்று பக்திப் பரவசத்துடன் தமையுணர்ந்து வைணவத் தலங்கள்தோறும் சென்று ஆங்காங்கு உறைந்துள்ள இறைத் திருமேனி மீது பக்திப் பாசுரங்கள் பாடி மகிழ்ந்தார்.

பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் எனும் ஆறு திவ்ய நூல்கள் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்தவையாம். வைணவ ஆழ்வார்களுள் ஒருவராக மதிக்கப்பட்டு ‘திருமங்கை ஆழ்வார்’ என்று அழைக்கப்படலானார்.

ஊன்வாட வுண்ணா துயிர் காவலிட்டே
உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து
தாம்வாட வாடத் தவம்செய்ய வேண்டா
தமதா இமையோ ருலகாள கிற்பீர்,
கானாட மஞ்ஞைக் கணமாட மாடே
கயலாடு கானீர்ப் பழனம் புடைபோய்,
மேனாட மாடக் கொடியாடு தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே

(பெரிய திருமொழி 3-2-1)

## கோக்கண்டன்:

*கி.பி. 9-ம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் நிலத்தின் வடபகுதியில் பல்லவ மன்னன் அபராஜிதன் ஆட்சிபுரிந்து வந்தான். அவன் தனது செப்பேட்டில் களப்பிரரை வென்றதாகக் குறிப்பிடுகிறான். அவ்வாறெனில் கொங்கு நாட்டில் தன்னாட்சி புரிந்துகொண்டிருந்த களப்பிர மன்னன் கோக்கண்டனைத்தான் அவன் வென்றிருக்க வேண்டும். அவ்வெற்றி நிலைத்த வெற்றியாக இருந்திருக்காது. திரும்பவும் களப்பிரர் தன்னாட்சி நிறுவ முற்பட்டிருப்பர். ஆதலால் தான் அவர்கள் தங்கள் பெயரிலேயே கல்வெட்டுகளை எழுப்பியுள்ளனர்.*

*கி.பி. 9-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சோழ மன்னன் ஆதித்யன், பல்லவ மன்னன் அபராஜிதனை வென்று சோழ பல்லவ நாடுகளை இணைத்து ஆட்சிபுரியத் தொடங்கினான். இவன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அதனைக் கைப்பற்றினான் என்று கொங்குதேச ராசாக்கள் என்ற வரலாற்று நூல் குறிப்பிடுகிறது. அதில் 'சோழ வம்சத்திலே விசயாட்ராயன் மகன் ஆதித்த வர்மராயன், சோழதேசம் தஞ்சாவூரிலே பட்டம் கட்டிக்கொண்டு கொங்கு தேசத்துக்கு வந்து 'ராசா' வேடர்களைச் செயம் பண்ணித் தலைக்காடு என்ற பட்டணங் கட்டிக்கொண்டு இந்த இராச்சியங்களிலேயே அநேக அக்கரகாரம் சர்வமானியமாய் தருமம் பண்ணி அந்த அரசை ஆண்டனை' என்று குறிக்கப்பட்டுள்ளது (சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் வரலாறு தொகுதி I)*

*இதன்மூலம் மன்னன் அபராஜிதனுக்காக ஆதித்யன் களப்பிரனை வென்றிருக்கலாம். அதனால்தான் அபராஜிதன் தான் களப்பிரனை வென்றதாகக் கூறிக்கொள்ள, ஆதித்யன் கல்வெட்டுகள் ஏதும், கொங்கு நாட்டில் அவன் படையெடுத்துச் சென்றதைக் கூறாமல் இருக்கின்றன என்று யூகிக்க இடம் ஏற்படுகிறது. (நடனகாசிநாதன், களப்பிரர், பக்கம். 36)*

*இது எவ்வாறாயினும் ஆதித்யன் களப்பிரனாகிய கோக்கண்டனை வென்றுள்ளான். அதன் காரணமாகத்தான் "பல்யானை கோக்கண்டன்" என்ற பட்டப் பெயரை ஆதித்யனுக்கு திருநெய்த்தானம் கல்வெட்டில் காணமுடிகிறது. இருப்பினும் இவ்வெற்றி நிலைத்திருக்கவில்லை என்பதையே கோக்கண்டனின் புதல்வர்கள் சுயேச்சையாக கல்வெட்டுகள் பொறித்திருப்பதன்மூலம் தெரிந்துகொள்ளலாம்.*

*ஆதித்யன் கொங்கு நாட்டிலிருந்து பொன் கொண்டு வந்து தில்லைச் சிற்றம்பலத்துக்கு பொன் வேய்ந்தான் என்று திருத்தொண்டர் திருவந்தாதி கூறுகிறது. (திருத்தொண்டர் திருவந்தாதி பாடல் 65). ஆனால் இவன் கொங்கு*

நாட்டைப் படையெடுத்துச் சென்று தாக்கியதாகச் செப்புப் பட்டயங் களிலோ கல்வெட்டுகளிலோ செய்திகள் ஏதும் காண முடிய வில்லை. பிற்கால நூலான கொங்கு தேச ராசாக்கள் மட்டுமே இதைக் குறிப்பிடுகின்றன. அதுபோன்றே பராந்தகனின் கல்வெட்டுகள் சிலகொங்கு நாட்டில் காணக்கிடைத்த போதும் அந்நாட்டின் மீது படையெடுத்துச் சென்ற ஆதாரம் ஏதும் கிடைக்கவில்லை.

எனவே நடனகாசிநாதன் குறிப்பிடுவதுபோல பல்லவ மன்னன் அபராஜிதனுக்காவே ஆதித்யன் கொங்கு நாடு மீது படையெடுத்துச் சென்றுள்ளான் என்று கொண்டால், இந்த ஐயப்பாட்டுக்கு விடைகொள்ளலாம். களப்பிரரை அபராஜிதன் வென்றுள்ளான் என்பதற்கு வேலஞ்சேரி செப்பேடு சான்றாகிறது. "களப்பிரர் என்ற ஆகாயத்தில் உலவும் சூரியனாகத் திகழ்ந்தான்" என்ற சொற்றொடர் களப்பிரரை அபராஜிதன் வென்றதையே குறிப்பிடுகிறது.

ஆதித்யன் பின்னாளில் அபராஜிதனை வென்ற பிறகு அபராஜிதன் வெற்றிகொண்ட பகுதிகளும் ஆதித்யனின் ஆட்சியின்கீழ் வந்துவிட்டது என்பதால் பராந்தகன் காலத்திலும் அப்பகுதி சோழர் ஆட்சியிலேயே இருந்து வந்துள்ளது என்பதை மறுக்கமுடியாது.

இவ்வாறு பிற மன்னர்களின் வெற்றிச் செய்திகளின் நிழலில் இங்கொன்றும் அங்கொன்றுமாய் மங்கிய ஒளிவீசும் களப்பிரர் பற்றிய செய்தித் துளிகள் அவர்களது முழுமையான வரலாற்றை வடித்தெடுக்கப் போதுமானவையாக இல்லை என்பதே வெளிப்படையான உண்மை.

# 13

# களப்பிரர் காலத்தில் பிற அரசுகள்

## 1. இரேணாட்டுச் சோழர்

தமிழகம் களப்பிரர் வசமாகி மூவேந்தர்கள் முடி துறந்த வேளையில் சேர, சோழ, பாண்டியர்கள் களப்பிரர்களுக்கு கட்டுப்பட்டு சிற்றரசராய் இருந்திருக்க வேண்டும். அத்தகு சூழலில் சோழ நாட்டு மன்னர்குல வாரிசு ஒருவன் தமிழகத்துக்கு வடக்குப் பகுதியில் இருந்த வடுக (தெலுங்கு) நாட்டுக்குச் சென்று அங்கோர் சிறு ஆட்சிப் பகுதியினை அமைத்துக்கொண்டு அரசாண்டான். அவன் அமைத்த அந்த நாட்டை அவனது தொடர் பரம்பரையினர் சில நூற்றாண்டுகள் வரை ஆட்சிபுரிந்தனர். கல்வெட்டு சாசனங்கள் மற்றும் செப்பேடுகள் இந்த வரலாற்றுச் செய்தியினை அறிவிக்கின்றன.

சோழர்கள் அவ்வாறு அரசமைத்து ஆட்சிபுரிந்த நாட்டிற்கு ‘இரேணாடு ஏழாயிரம்’ என்று பெயர். தற்போதைய கடப்பா, கர்நூல் மாவட்டங்கள் அடங்கிய பகுதியே அந்நாளில் இரேணாடு ஏழாயிரம் என அறியப்பட்டது. இப்பகுதியை ஆட்சி செய்த சோழர்கள் இரேணாட்டுச் சோழர் என்று அழைக்கப்பட்டனர். சோழர் என்ற பெயர் நாளடைவில் திரிந்து ‘சோடர்’ என்று வழங்கப்படலாயின. பிற்காலத்தில் இரேணாட்டு சோடர் என்றும் தெலுங்கு சோடர் என்றும் இவர்களது பெயர் மாறின. தமிழரான அந்த சோழ அரசு மரபினர், தம் நாட்டு மொழியாகிய தெலுங்கையே ஆட்சிமொழியாகக் கொண்டு தமது கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகள் என அரசுத் தரப்பு செய்திகளைத் தெலுங்கிலேயே பொறித்தனர். காலப்போக்கில் அவர்களும் தெலுங்கராகவே மாறிப்போனார்கள்.

இருப்பினும் தாங்கள் வடித்த கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும், தமது பரம்பரை சோழ நாட்டுத் தமிழ் பரம்பரை என்பதைக் குறிப்பிட்டுள்ளனர். அதிலும் காவிரிக்கு அணை கட்டிய கரிகாற்சோழனின் குலத்தவர் என்றும், உறையூரிலிருந்து வந்தவர்கள் என்றும் தங்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளனர். சோழ அரசின் அடையாளச் சின்னமான புலிக் கொடியையே இவர்களும் கொண்டிருந்தனர். இதனால் இந்த பரம்பரையினர் சோழர்குலப் பரம்பரையினரே என்பதில் ஐயமில்லை. சோழர்கள் ஆட்சியில் இருந்த காரணத்தால் அப்பகுதி சோழநாடு என்றும் சோழிய நாடு என்றும் சோனாடு என்றும் பலவாறாக அழைக்கப்பட்டது.



**யுவான் சு வாங்**

*சீன தேசத்து யாத்திரிகரான யுவான்சுவாங் தமது குறிப்பில், இரேணாட்டைக் குறிப்பிட்டுள்ளார். பௌத்த மதத்தவரான இவர் இரேணாட்டை குறிப்பிடும்போது சு-லி-ய என்று எழுதியுள்ளார். சு-லி-ய என்பது சோழிய அல்லது சோழ என்பதின் திரிபெனக் கருதலாம். இந்திய தேசத்தில் தல யாத்திரை மேற்கொண்ட யுவான்சுவாங், ஆந்திராவிலுள்ள அமராவதியில் சிலகாலம் தங்கியிருந்த பின்பு தென்திசை யாத்திரை மேற்கொண்டு தொண்டை மண்டலத்திலுள்ள காஞ்சி நகருக்கு வந்து தங்கினார். இவர் கி.பி. 639-40 ஆண்டு கால அளவில் அமராவதியிலும், காஞ்சியிலும் தங்கியிருந்ததாகத் தெரிகிறது. அமராவதியிலிருந்து காஞ்சிக்கு வரும் வழியின் இடையே சு-லி-ய நாடு இருந்தது என்பது அவரது யாத்திரைக் குறிப்பில் காணப்படும் செய்தி.*

*யுவான்சுவாங் இவ்வாறு எழுதியிருந்தது விடை தெரியாப் புதிராகவே முன்னர் இருந்தது. தொண்டை நாட்டுக்கு தென் திசையில் காவிரி ஆறு பாயும் சோழ நாடு இருந்தது என்பதை அறிவோம். ஆயின் யுவான்சுவாங் தொண்டை நாட்டுக்கு வடக்கே சோழ நாடு இருந்ததாகக் குறிப்பிட்டதை ஆயும்போது அவருக்கு தவறு நேர்ந்திருக்கக் கூடுமோ என்ற ஐயம் ஏற்பட்டது இயல்பே. ஆனால் அவருக்கு தவறு நேரவில்லை! உண்மையைத்தான் குறிப்பிட்டுள்ளார் என்பதை விளக்கும் விதமாக அண்மைக் காலத்தில் கடப்பா மாவட்டத்தில் கிடைத்த கல்வெட்டுகளும், செப்பேடுகளும் அப்பகுதியினை சோழ குலத்து அரசர் ஆட்சிபுரிந்திருந்தனர் என்னும் வரலாற்றுச் செய்தியினை உரைக்கின்றன. இதனால் தொண்டை நாட்டுக்கு வடக்கில் சோழநாடு இருந்த தாக திர்சுவாங் குறிப்பிட்டது உண்மை என்றாகிறது.*

சு-லி-ய என்று அவர் குறிப்பிடுவது சோழரின் ஆட்சியில் இருந்த இரேணாட்டையே என்பது புலனாகிறது. தமிழ்நாட்டின் வட எல்லையாக சிறப்பிக்கப்பட்ட வட வேங்கடத்துக்கு வடமேற்காக தற்போது அமைந்துள்ள கடப்பா, கர்நூல் மாவட்டங்கள்தான் அன்றைக்கு இரேணாடு என்றும் சோழியநாடு என்றும் பெயர்பெற்றிருந்தது என்பதை இன்று அறிய முடிகிறது. இது அண்மைக்காலம் வரை வெளிச்சத்துக்கு வராமல் இருந்துள்ளது என்பதும் சிந்திக்கக் கூடியதே.

இனி இவர்கள் தங்களைக் கரிகாற்சோழனின் பரம்பரை யினர் என்று சொல்வதால் கரிகாற்சோழன் காலந்தொட்டு இவர்கள் இப்பகுதியினை ஆண்டிருக்கலாம் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால் கி.பி. முதலாம் நூற்றாண்டில் இருந்த கரிகாற்சோழன் தமிழகத்துக்கு வடக்கிலிருந்த பகுதிகளை வென்றான் என்று சங்கச் செய்யுட்கள் கூறுகின்றன. ஆகவே அவர் காலந்தொட்டு இரேணாட்டை சோழர்கள் ஆண்டனர் என்று சிலர் கருதுகின்றனர். சோழன் கரிகாலன் பெற்ற வெற்றிகள் போர்க்கள வெற்றியே அன்றி, அவன் தான் வென்ற நாடுகளைத் தனது ஆட்சியில் வைத்து அரசாளவில்லை. ஆகவே இரேணாட்டு சோழர்கள் கரிகாலன் காலத்திலிருந்து ஆட்சிபுரிந்தனர் என்பது ஏற்கத் தக்கதன்று. களப்பிர அரசர்கள் சோழநாட்டை கைப்பற்றி அரசாண்டபோது அவர்களுக்கு கீழடங்கியிருந்த சோழ பரம்பரையைச் சேர்ந்த சோழன் ஒருவன் இரேணாட்டை வென்று தன் ஆட்சியின்கீழ் கொண்டு வந்தான் என்பதும், அவனது பரம்பரையினர் தொடர்ந்து அந்நாட்டை அரசாண்டனர் என்பதும் வரலாற்று உண்மை என்று தோன்றுகிறது என்பது திரு. மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் கருத்து (களப்பிரர் ஆட்சியில் தமிழகம், மயிலை சீனிவேங்கடசாமி, பக்கம் 30)

## இரேணாட்டுச் சோழர் சாசனங்கள்:

கடப்பா மாவட்டம் ஜம்மல மடுகு தாலுகாவிலுள்ள கோசினெபள்ளி கிராமத்தில் ஒரு களத்துமேட்டில் கருங் கற்றூண் ஒன்று உள்ளது. இத்தூணின் மூன்று பக்கங்களிலும் தெலுங்கு எழுத்தில் சாசனம் எழுதப்பட்டுள்ளது. இதில் சோழ மகாராசன் என்னும் அரசனது பெயர் காணப்படுகிறது. இவ்வரசன் கரிகாற் சோழனின் பரம்பரையில் சூரிய குலத்தில் காசிப கோத்திரத்தில் பிறந்தான் என்று தன்னைக் கூறிக் கொள்கிறான் (408 of 1904)

இதே தாலுகாவில் முட்டனூருக்கு அருகில் சிலம் கூரிலிருந்து வருகின்ற சாலையின் ஓரத்தில் உள்ள கருங்கற் சாசனம் சோழமகாராசன் ஆதித்த பட்டாரகருக்கு நிலத்தையும் பொன்னையும் தானஞ்செய்த செய்தியினைக் கூறுகிறது. (405 of 1904)

*இந்த ஊரில் உள்ள சிவன் கோயில் முற்றத்தில் கிடக்கின்ற கல்லில், சோழ அரசனுடைய கல்வெட்டெழுத்து சாசனம் காணப்படுகிறது. இந்த சாசனக் கல்லின் மேற்புறத்தில் சாசன எழுத்துக்கு மேலாக, வாலைச் சுருட்டிக் கொண்டு நிற்கின்ற புலியின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. சோழரின் அடையாளமே புலி உருவம் என்பதால் இரேணாட்டுச் சோழரும் புலி அடையாளம் கொண்டுள்ளனர் என்பதும் அதனால் அவர்களும் சோழ குலத்தவரே என்பதும் புலனாகிறது. (406 of 1904)*

*கடப்பா மாவட்டம் ஜம்மலமடுகு தாலுகாவில் பெத்தமுடியம் என்னும் ஊரில் சிதைந்துபோன கல் எழுத்து சாசனம் ஒன்று காணப்படுகிறது. இந்த சாசனத்தில் சோழ மகாராசன் என்னும் பெயர் காணப்படுகிறது. சாசனக் கல்லின் மேற்புறத்தில் புலியின் உருவம் வாய் திறந்து உருமியவாறு நிற்பதுபோல் பொறிக்கப்பட்டுள்ளது. (351 of 1905). இதே மாவட்டத்தில் சமயபுரம் தாலுகாவில் சிலம்கூறு என்னும் ஊரில் ஒரு வயலில் உடைந்து கிடக்கின்ற கற்றூண் ஒன்றில் தெலுங்கு எழுத்து சாசனங்கள் காணப்படுகின்றன. இதில் சோள மஹா தேவுலு (சோழ மகாதேவர்) என்னும் பெயர் காணப்படுகின்றன. (396 of 1904)*

*இவ்வூர் அகத்தீஸ்வரர் கோவிலின் முன்புறத்தில் வீழ்ந்து கிடக்கின்ற கற்றூணில் மூன்று பக்கங்களில் தெலுங்கு எழுத்து சாசனம் எழுதப்பட்டுள்ளது. விக்கிரமாதித்ய சோள மஹாராஜுலு எளஞ்சோள மஹாதேவி (இளஞ்சோழ மகாதேவி) என்னும் சோழ அரசர் அரசியின் பெயர்கள் காணப்படுகின்றன. (400 of 1904)*

*கலமள்ள என்னும் ஊரில் உள்ள கென்ன கேசவ கோவிலின் முற்றத்தில் உடைந்து கிடக்கின்ற கற்றூணின் இரண்டு பக்கங்களில் தெலுங்கு எழுத்து சாசனம் காணப்படுகிறது. இதில் இரேணாட்டு அரசன் தனஞ்சயேண்டு என்பவன் பெயர் காணப்படுகிறது (380 of 1904)*

*கடப்பா மாவட்டம் கமலபுரம் தாலுகா மலெபாடு என்னும் ஊருக்கு மேற்கிலுள்ள கிணற்றின் அருகில் ஒரு கற்றூண் கிடக்கின்றது. இதில் இரேணாட்டுச் சோழ அரசர்கள் சாசனம் எழுதப்பட்டுள்ளது. சித்தி ஆயிரம் இரேணாடு, ஏழாயிரம் ஆகிய நாடுகளை அரசாண்ட சக்திகோமார விக்கிரமாதித்யனின் மகனான சோள மஹாராஜாதிராஜ விக்கிரமாதித்ய சதியாதி துன்று என்னும் அரசன் நிலங்களைத் தானங் கொடுத்ததை இச்சாசனம் கூறுகிறது. (399 of 1904)*

*இதே ஊரில் (மலப்பாடு) 1905-ம் ஆண்டில் இரேணாட்டுச் சோழன் புண்ணிய குமாரனுடைய செப்பேட்டு சாசனம் கிடைத்துள்ளது. இந்த செப்பேட்டு சாசனம் 'எபிகிராபியா இந்திகா' என்னும் இதழின் பதினொன்றாம் தொகுதியில் திரு. கிருஷ்ணசாஸ்திரியால் வெளியிடப்பட்டுள்ளது (Epigraphia Indica vol. XI pp. 337-46)*

இரேணிய நாட்டில் சுப்ரயோக ஆற்றின் தென்கரையில் உள்ள பிரிபாறு என்னும் கிராமத்தில் சில நிலங்களைப் போர்முகராமன் புருஷசார்த்துல புண்ணிய குமாரன் என்னும் அரசன் தானங்கொடுத்ததை செப்பேடொன்று கூறுகிறது. இந்த புண்ணிய குமாரனுக்கு மார்த்தவசித்தன், மதனவிலாசன் என்னும் சிறப்புப் பெயர்களும் இருந்தன. இவன் சூரிய குலத்தில் பிறந்த கரிகாற்சோழனின் பரம்பரையில் வந்த சோள மகாராசனின் மகன் என்றும் தனஞ்சய வர்மனின் பேரன் என்றும் தன்னை இச்செப்பேட்டில் கூறிக் கொள்கிறான். இந்த சாசனம் கி.பி. 8-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த செப்பேட்டின் தலைப்பில் புலியின் உருவம் வரையப்பட்டிருக்கிறது. இதனைக் கிருஷ்ண சாஸ்திரி, சிங்கம் என்று கூறுகிறார். திரு.வெங்கையா அவர்கள் புலி என்று சொல்கிறார். சோழர்களின் அடையாளக் குறியாக புலி சில கல்வெட்டுகளில் முன்னரே பொறிக்கப்பட்டமை பார்த்தோம்.

நன்னிச்சோடன் (நன்னிச்சோழன்) என்னும் பெயரிலான இரேணாட்டுச் சோழ அரசன் ஒருவன் தெலுங்கு மொழியில் குமாரசம்பவம் என்னும் சிறந்த செய்யுள் இலக்கியத்தைப் படைத்துள்ளான். அது சிறந்ததோர் தெலுங்கு இலக்கியமாகப் புகழப்படுகிறது. இந்நூலில் அரசன் தனது சோழ குலத்தைப் பற்றிச் சொல்கிறான். தான் கரிகால் சோழனின் பரம்பரையைச் சேர்ந்தவன் என்றும் உறையூர் சோழ மரபைச் சேர்ந்தவன் என்றும் கூறிக் கொள்கிறான். கற்கோழி கூவிற்று என்றும் கூறுகிறான். உறையூருக்கு கோழி என்னும் பெயர் உண்டு. உறையூரில் சேவற்கோழியொன்று யானையுடன் போர் செய்து வென்றதனால் உறையூருக்கு கோழி (கோழியூர்) என்ற பெயர் வந்தது என்பர். ஆனால் கல்லினால் செய்யப்பட்ட கோழி கூவிற்று என்பது வியப்பாக உள்ளது. இது ஒருவேளை உறையூர்ச் சோழர்கள் வெறுங்கல்லாய் சமைந்து நின்றதாய் பழித்துரைத்த எவர்க்கேனும் பதிலுரைப்பதாய் அமைந்த சொல்லாக இருக்கலாம். இவன் எழுதிய குமார சம்பவம் நூலில் தமிழ்ச் சொற்கள் பல விரவிக் கிடப்பதாகவும் அதன் பொருள் விளங்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

இனித் தமிழ்நாட்டை களப்பிரர்கள் ஆட்சி புரிந்தபோது இரேணாட்டை ஆண்ட சோழர்களைப் பற்றிப் பார்ப்போம். இரேணாட்டை ஆட்சிபுரிந்த சோழர்கள் தனித்துவம் பெற்ற அரசுகளாய் இருக்கவில்லை. அவர்கள் முதலில் தொண்டை நாட்டை ஆட்சிபுரிந்த பல்லவர்களுக்கு அடங்கியும், பின்னர் மேலைச் சாளுக்கியர் வலிமைபெற்று ஓங்கியபோது சாளுக்கியரைச் சார்ந்தும் வாழ்ந்தனர். பல்லவர்களுக்கு அடங்கி வாழ்ந்ததால் அவர்கள் தங்கள் பரம்பரையினருக்கு பல்லவர்தம் பெயர்களைச் சூட்டிக் கொண்டனர்.

களப்பிரர் காலத்தில் இரேணாட்டை ஆட்சிபுரிந்த தெலுங்கு சோழர்களின் காலங்களை இங்கு பார்ப்போம். ‘ஆந்திர தேசத்தின் பழைய வரலாற்று ஆய்வுகள்’

எனும் திரு.எம்.இராமாராவ் எழுதிய நூலிலிருந்து இந்த சோழர் களைப் பற்றிய செய்திகள் தெரிய வருகின்றன. கி.பி. 5-ம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு சோழன் இரேணாட்டில் சோழ அரசை நிறுவினான். இவன் முதலாம் நந்திவர்மன் என்னும் பல்லவ மன்னனின் சமகாலத்தவன். பல்லவ அரசுக்குக் கட்டுப்பட்டு ஆட்சி நடத்தியதாலோ என்னவோ இவன் தனது மகனுக்கு பல்லவ நந்திவர்மனின் பெயரையே சூட்டினான்.

நந்திவர்ம சோழன், சிம்மவிஷ்ணுவெனும் பல்லவ மன்னனின் சமகாலத்தவன். இவனும் தனது தந்தை வழியில், தன் மகனுக்கு சிம்மவிஷ்ணு பல்லவனின் பெயரைச் சூட்டினான். இவரது ஏனைய இரண்டு மகன்கள் முறையே சுந்தகனந்தன் மற்றும் தனஞ்சயன் ஆகியோராவர். சோழன் தனஞ்சயவர்மனின் ஆட்சியின்போது பல்லவன் சிம்மவிஷ்ணு பொன்னி நதி பொய்க்காது ஒழுகிய சோழ வள நாட்டை அன்று ஆட்சி செய்த களப்பிரனுடன் போர் செய்து வென்று சோழநாட்டைக் கைப்பற்றினான். அவ்வாறு சோழ நாடு பல்லவ நாட்டுடன் இணைக்கப்பட்டது. இந்த பல்லவ களப்பிரர் போரில் இரேணாட்டு தனஞ்சயவர்மன் பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணுவுக்கு துணைபுரிந்திருக்க வேண்டும். தனஞ்சய வர்மன் தனது மகனுக்கு மகேந்திர விக்கிரமன் என்று முதலாம் மகேந்திர விக்கிரம பல்லவனின் பெயரையே சூட்டினான்.

இரேணாட்டுச் சோழன் மகேந்திர வர்மன் ஆட்சிக் காலத் தில் மேலைச் சாளுக்கிய அரசனான இரண்டாம் புலிகேசி, மகேந்திரவர்ம பல்லவன் மீது படையெடுத்து தொண்டை நாட்டை, விடியாப் போர்க்களமாக மாற்றினான். இந்த படையெடுப்பு இரேணாட்டை சாளுக்கியர்களுக்கு கட்டுப் பட்டு நடக்கும் சிற்றரசாக மாற்றியிருத்தல் இயல்பு. அதனா லேயே இவன் தனது பேரனுக்கு விக்கிரமாதித்யன் என்று சாளுக்கிய அரசனின் பெயரைச் சூட்டினான் என்று அறிய முடிகிறது.

தமிழகத்தை களப்பிரர்கள் ஆட்சிபுரிந்த வேளையில், தெலுங்கு நாடான இரேணாட்டை ஐந்து சோழர்கள் ஆட்சி புரிந்தனர். இவர்கள் ஏறத்தாழ கி.பி. 475 முதல் 575 வரையிலான கால அளவில் இரேணாட்டை ஆட்சி செய்தனர். பல்லவ சிம்ம விஷ்ணு சோழநாட்டைக் கைப்பற்றிய காலத்தில் பாண்டியன் கடுங்கோன், களப்பிரர்களை வென்று பாண்டிய நாட்டை தனதுடமை ஆக்கிக் கொண்டான். இதனை வேள்விக்குடிச் செப்பேடு உணர்த்துகிறது. அதேநேரம் சோழ அரசு பரம்பரையினர் சோழ நாட்டினுள் ஆங்காங்கே களப்பிரர்களுக்கு கட்டுப்பட்டு சில ஊர்களை ஆட்சி செய்து வந்துள்ளனர். அதில் ஒரு பிரிவினர் இரேணாட்டையும் ஆண்டு வந்துள்ளனர். பாண்டியர்களைப் போல் தங்களது மண்ணை களப்பிரர்களிடமிருந்து கைப்பற்றும் பணியில் ஈடுபடவில்லை. அதனைச் செய்து முடித்தவர் பல்லவன் சிம்ம விஷ்ணுவே. அதனால் முன்னர் களப்பிரர்களுக்கு

*கட்டுப்பட்டுக் கிடந்த சோழர்கள், பின்னர் பல்லவர்களுக்கு கீழடங்கி ஆட்சி புரியலாயினர்.*

## *1. சோழராசன் (கி.பி. 475-500)*

*இந்த மன்னனின் பெயர் தெரியவில்லை. இரேணாட்டை வென்று அங்கு ஆட்சி நிறுவிய ஆதிசோழன் இவனே. இவனது காலம் முதலாம் நந்திவர்ம பல்லவன் காலம். அதனால் தன் மகனுக்கு நந்திவர்மனின் பெயரைச் சூட்டினான்.*



# 14

# களப்பிரர்கள் காலத்தில் இலங்கையின் அரசியல் சூழல்

*இன்றைக்கு இந்தியாவின் அண்டை நாடு எனச் சிறப்பிக்கப்படும் இலங்கை அந்நாளில் தமிழகத்தின் மற்றோர் பகுதியென நெருங்கிய தொடர்புடன் இருந்து வந்துள்ளது. அரசியலாலும், வாணிகத் தொடர்புகளாலும் பின்னிப் பிணைந்திருந்த காலம் அக்காலம். இந்த உறவு கி.மு. 5-ம் நூற்றாண்டிலிருந்து நிலவியதாக அறிய முடிகிறது. களப்பிரர் தமிழ் நிலத்தைக் கைப்பற்றிய காலத்து இலங்கையின் வரலாற்றை 'இலங்கை வரலாற்றுச் சுருக்கம்' என்ற நூல் மூலம் அறியமுடிகிறது. (A Short History of ceylon H.W. Codrington 1929)*

*களப்பிர அரசர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் தெளிவுறத் தெரியாதபோதும் இலங்கை அரச பரம்பரையினரின் வரலாறு தொய்வின்றித் தெளிவுறத் தொடர்ச்சியாகத் தெரிய வருகிறது. இதற்கு இலங்கை வரலாற்றைக் கூறும் 'சூலவம்சம்' என்ற நூல் உதவுகிறது.*

*களப்பிரர்கள் தமிழ்நாட்டைக் கைப்பற்றிய காலத்துக்குச் சற்று முன்னதாகவே இலங்கையின் ஆட்சியாளர்களைப் பற்றியச் செய்திகளை அறியமுடிகிறது.*

*அவ்வகையில் இலங்கையை ஆட்சிபுரிந்த அரசர்களைச் சற்று அறிய முற்படுவோம்.*

### திஸ்ஸன்:

*ஸ்ரீதாசனின் மகனாகிய இவன் சட்டம் அறிந்தவன் என்பதால் ஓகாரிக திஸ்ஸன் என்று அழைக்கப்பட்டான். இருபத்தி இரண்டு ஆண்டுகள் இவனது ஆட்சி நடைபெற்றது. இவனது ஆட்சிக் காலத்தில் இலங்கையில் மகாயான பௌத்த மதம் நுழையத் தொடங்கியது. இலங்கையில் அப்போது நடைமுறையில் இருந்துவந்த தேரவாத பௌத்தத்துக்கு முற்றிலும் மாறானது மகாயான பௌத்த மதம். எனவே மகாயான பௌத்தம் இலங்கைக்குள் நுழைந்ததும் ஓகாரிக திஸ்ஸன் தனது அமைச்சரான கபிலன் என்பவனது உதவியால் மகாயானத்தை அடக்கித் தேரவாத பௌத்தத்தை நிலைக்கச் செய்தான்.*

## அபயநாகன்:

ஒகாரிக திஸ்ஸனின் இளவல் அபயநாகன். இவனுக்கும் பட்டத்து அரசிக்கும் இடையிலான தகாத உறவை அறிந்த ஒகாரிக திஸ்ஸனால் தனக்கு ஆபத்து நேரிடும் என்று உணர்ந்த அபயநாகன், இலங்கைத் தீவிலிருந்து தப்பித்து தமிழ்நாட்டில் புகலிடம் தேடினான். தமிழ்நாட்டில் இவன் எங்கு எவரிடம் தஞ்சம் புகுந்தான் என்ற செய்தி சரிவரத் தெரியவில்லை எனினும் அந்நாளில் தமிழகத்தை ஆண்ட களப்பிரரே இவனுக்குப் புகலிடம் அளித்திருக்க வேண்டும் என்பதை மறுத்தலரிது. தமிழ்நாட்டில் சிறிது காலம் வாழ்ந்த இவன் ஒரு சேனையை உருவாக்கி இலங்கைக்குச் சென்று தனது அண்ணனுடன் போர் செய்து அவனைக் கொன்றதுடன் ஆட்சியை மட்டுமன்றி அவனது அரசியையும் தன்வயப்படுத்தி அவளையே மணந்து அரசியாக்கினான். இவனது ஆட்சி எட்டு ஆண்டு காலம் நடைபெற்றது.

## ஸ்ரீநாகன் II:

இவன் ஒகாரிக திஸ்ஸனின் மகன். இவன் இரண்டாம் ஸ்ரீநாகன் என்று அழைக்கப்பட்டான். அபயநாகன் இறந்த பின்பு இவன் இலங்கையை இரண்டு ஆண்டுகள் அரசாண்டான்.

## விஜயகுமாரன்:

ஸ்ரீ நாகனுக்குப் பின்னால் அவனது மகன் விஜயகுமாரன் அரசாட்சிக்கு வந்தான். இவனது ஆட்சிக் காலத்தில் சங்க திஸ்ஸன் தங்கபோதி, கோதாபயன் என்றும் அரசகுலமல்லாத மூன்று இலம்பக்குடியினர் அரசாங்க ஊழியராக அமர்த்தப்பட்டனர்.

## ஸ்ரீகங்கபோதி: கி.பி. 252-254

அரசுப் பணியில் அமர்ந்த இலம்பகன்னருள் ஒருவரான கங்கபோதி அரசைக் கைப்பற்றிக் கொண்டு ஸ்ரீகங்கபோதி என்னும் பெயரில் ஆட்சியிலமர்ந்தான். இவன் தனது சக ஊழியரான கோதாபயன் என்பவனைத் தனது அமைச்சர் மற்றும் நிதி காப்பாளன் பணியில் அமர்த்தினான். ஆனால் ஆட்சி செய்வதில் ஆசை கொண்ட கோதாபயன் கங்கபோதிக்கு எதிராக நாட்டில் கலகம் உருவாக்கியதுடன் பெருஞ் சேனைதனைத் திரட்டி ஸ்ரீகங்கபோதிக்கு எதிராக போர் தொடுத்தான். ஸ்ரீகங்கபோதி போரிட விருப்பமின்றி மிரண்டோடினான். ஓடியவன் கோதாபயனின் சேனைத் தலைவன் ஒருவனிடம் அடிபட்டு

மரணமடைந்தான். சேனைத் தலைவன் ஸ்ரீகங்கபோதியின் தலையை வெட்டி கோதாபயனிடம் அனுப்பி வைத்தான். அதனைத் தக்க முறையில் அடக்கஞ்செய்த கோதாபயன் தனது பெயரை மேகவண்ணாபயன் என்று மாற்றி வைத்துக் கொண்டு அரசாட்சி மேற்கொண்டான்.

## மேகவண்ணாபயன்: கி.பி. 254-267

இவன் இலங்கையை பதிமூன்று ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனது காலத்தில் இலங்கைக்குள் பேதுல்லிய மதம் (மகாயான பௌத்தம்) பரவலாயிற்று. ஏற்கனவே இருந்த தேரவாத பௌத்தத்துக்கு முற்றிலும் மாறுபட்ட பேதுல்லிய மதத்தை தடைசெய்து பழைய தேரவாத மதத்தையே ஆதரித்தான் இம்மன்னன். மகாயான பௌத்த மதஞ்சார்ந்த பௌத்த பிக்குகளை நாடு கடத்தினான். அவ்வாறு நாடு கடத்தப்பட்ட பிக்குகள் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்தனர். அந்நாளில் தமிழ்நாட்டில் சோழநாட்டில் மகாயான பௌத்த மதத் தலைவராக இருந்த சங்கமித்திரன் என்னும் தமிழ் பௌத்த பிக்கு, சிங்களத்திலிருந்து வந்த பௌத்த பிக்குகள் கூறிய செய்தியினைக் கேள்வியுற்று இலங்கைக்குப் பயணமானார். எப்படியும் தாம் சார்ந்த மகாயான பௌத்தத்தை அங்கே நிலைநிறுத்த வேண்டும் என்ற திடமான எண்ணத்துடன் சென்ற சங்கமித்திரர் மேக வண்ணனின் அவைக்குச் சென்று அங்கே இருந்த தேரவாத பௌத்தர்களுடன் சமயவாதஞ் செய்து வெற்றியடைந்தார். அவ்வாறு வெற்றிபெற்ற சங்கமித்திரரை மேகவண்ணன் ஆதரித்ததுடன் தனது மக்களான ஜேட்டதிஸ்ஸன், மகாசேனன் ஆகியோரை சங்கமித்திரரிடம் கல்வி கற்க ஏற்பித்தான். மேகவண்ணனின் காலத்துக்குப் பின்பு மகன் ஜேட்டதிஸ்ஸன் அரசனானான்.

## ஜேட்டதிஸ்ஸன்: கி.பி. 267-277

மேகவண்ணாபயனின் மூத்த புதல்வனான ஜேட்டதிஸ்ஸன் பத்து ஆண்டுகள் அரசாட்சி மேற்கொண்டான். சங்கமித்திரர் இவனது குருவானபோதும், இவனுக்கு அவரிடம் தீராப் பகையொன்று புகைந்துகொண்டிருந்தது. அதனால் சங்கமித்திரர் இவனது காலத்தில் இலங்கையிலிருந்து வெளியேறி சோழ நாட்டுக்குத் திரும்பினார்.

## மகாசேனன்: கி.பி. 277-304

பத்தாண்டு கால ஆட்சிக்குப் பின்னர் ஜேட்டதிஸ்ஸன் மரணமடையவே அவனது இளவல் மகாசேனன் மணிமுடிக்கு உரியவனானான். இந்தச் சூழலில்

தனது சீடனுக்கு முடிசூட்டு நடத்தும் பொருட்டு சோழநாட்டிலிருந்த சங்கமித்திரர் இலங்கை வந்து தமது கைகளாலேயே மகாசேனனுக்கு முடிசூட்டினார். பின்னர் புதிய அரசனின் நல்லாதரவுடன் மகாயான பௌத்த மதத்தை இலங்கையில் பரப்பும் முயற்சியில் மும்முரமானார். இதன் காரணமாக தேரவாத (ஹீனயானம்) மகாயான சமயங்களுக்கிடையிலான மதப் பூசல்கள் உருவாகின. அத்துடன் மகாசேனன் பிற மதக் காழ்ப்புணர்வுகளுக்கு ஏற்ப நடந்துகொண்டார். இவனது காலத்தில் பெயர் பெற்ற சிவன் கோவில்கள் பலவற்றை இடித்து அழித்தான் என்பது வரலாற்றில் இடம்பெற்ற செய்தி.

## ஸ்ரீ மேகவண்ணன்: கி.பி. 304-332

மகாசேனனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர் ஸ்ரீமேகவண்ணன். இவன் ஹீனயான பௌத்தத்தை (தேரவாதம்) ஆதரித்ததுடன் அது சார்பாக பல பௌத்த விகாரைகளைக் கட்டினான். இவனது ஒன்பதாம் ஆண்டு ஆட்சியின்போது கலிங்க நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட புத்தரின் பல் தாதுவினை அனுராதபுரத்தில் அமைத்து அதற்குச் சிறப்பு செய்தான். இவனது காலத்தில் வட இந்தியாவில் ஆட்சியிலிருந்தவர் சந்திரகுப்தர் (கி.பி. 345-380) அவரிடத்தே, ஸ்ரீமேகவண்ணன் இரண்டு பௌத்த பிக்குகளை தூதனுப்பி புத்த கயாவுக்கு யாத்திரை செல்லும் பௌத்த பிக்குகளுக்கு பாதுகாப்பளிக்கக் கேட்டுக் கொண்டான். இவனது ஆட்சிக்காலம் இருபத்தெட்டு ஆண்டுகள். இவனது கல்வெட்டுகள் (சாசனங்கள்) இலங்கையில் கிடைத்துள்ளன. அதில் இவனது பெயர் கிரிமேக வண்ணன் என்றும் கிரிமேகவன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சூலவம்சம் 37-ம் பரிச்சேதம் 51-99)

## ஜேட்டதிஸ்ஸன் II (கி.பி. 332-341)

ஸ்ரீமேகவண்ணனின் தம்பியான ஜேட்டதிஸ்ஸன் II தனது அண்ணனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தான். இவனது ஆட்சிக் காலம் ஒன்பது ஆண்டுகள் என்று தெரிய வருகிறது. இவன் யானைத் தந்தத்தால் அழகு மிளிரும் அற்புதக் கலை வேலைப்பாடுகள் செய்வதில் வல்லவன். தன்னிடமிருந்து வந்த அத்தகு கலைத் திறமையினைப் பலருக்கும் கற்றுத் தந்து அக்கலை வளர உதவினான்.

## புத்ததாசன் (கி.பி. 341-370)

மருத்துவக் கலையில் வல்லவனான இவன் ஜேட்ட திஸ்ஸனின் மகனாவான். மனிதர்களின் நோயைத் தீர்ப்பது மட்டுமின்றி விலங்குகளுக்கும் இவன் வைத்தியஞ் செய்தான். அவ்வகையில் ஒரு பாம்பின் நோய் தீர்த்த பெருமையும் இவனுக்குண்டு.

தனது நாட்டில் ஆங்காங்கே மருத்துவர்களை நியமனம் செய்து மக்களின் நோய் தீர்க்க ஆவன செய்தான். அதற்காக மருத்துவர்களுக்கு மருத்துவ விருத்தி நிலங்களை தானம் செய்தான். போர்க்கால காயங்களை ஆற்றுவதற்கும் மருத்துவர்களை நியமனம் செய்தான்.

இவரது காலத்தில் சிங்களவரான மகாதம்ம கீர்த்தி என்னும் புத்த பிக்கு பௌத்த சூத்திரங்களைச் சிங்கள மொழியில் மொழி பெயர்த்து தந்தார். இவ்வரசனுக்கு எண்பது மக்கள் இருந்ததாக ஒரு கூற்று உண்டு. பாஹியான் (Fa-Hian) என்ற சீன யாத்திரிகன் இவரது காலத்தில் இலங்கை வந்ததாகக் கூறப்படுகிறது. அதேநேரம் பாஹியான் இலங்கை யில் €(411-12-ம்) ஆண்டு தங்கினார் என்ற செய்தியும் உண்டு. புத்ததாச அரசன் இருபத்தொன்பது ஆண்டு கள் அரசாட்சி செய்தான் (Ibid 105-178)



## உபதிஸ்ஸன்: கி.பி. 370-412

புத்ததாசன் காலமானதும் அவனது மூத்த புதல்வன் உபதிஸ்ஸன் இலங்கை அரசனாக முடிசூட்டப்பட்டான். இவனை இரண்டாம் உபதிஸ்ஸன் என்றும் சொல்வதுண்டு. இவன் பௌத்த பள்ளிகள் (மடங்கள்) மற்றும் பௌத்த பிக்குகளுக்குத் தாராளமாக தானங்கள் செய்தான். ஊனமுற்றோர். குருடர்கள் ஆகியோருக்கும் உதவும் பொருட்டு மருத்துவமனைகள் பல அமைத்தான். இவனது ஆட்சிக் காலம் 42 ஆண்டுகள். இவனது (அரசி) இராணியானவள், கணவனின் தம்பியுடன் கூடா ஒழுக்கங் கொண்டிருந்தாள். மகாநாமன் என்ற அந்த இளவல் பௌத்த பள்ளியில் சேர்ந்து பௌத்த பிக்குவாக மாறும் எண்ணத்தில் துறவு நிலை ஏற்கும் முடிவில் இருந்தான். புத்த பள்ளியில் சேர்ந்த அவன் அங்கே துறவு பூணுவதற்கு முந்திய நிலையான ‘பப்பஜா’ என்ற நிலையில் இருந்தான். (அடுத்த நிலையான துறவு பூணும் நிலை உபசம்பதா எனப்படும்) இவனுடன் கூடா

ஒழுக்கங் கொண்டிருந்த இராணி, தன் கணவனான உபதிஸ்ஸனை குத்திக் கொலை செய்தாள். இதனை அறிந்ததும் மகாநாமன் பௌத்த பள்ளியை விட்டு வெளியேறி அரண்மனை ஏகி அரசாட்சியை ஏற்றான்.

## மகாநாமன்: கி.பி. 412-434

தனக்காகத் தனது கணவனையே கொலை செய்த தரும பத்தினி இராணியைத் தன் மனையாளாக்கிக் கொண்டு ஆட்சியில் அமர்ந்தான் மகாநாமன். இவர்களுக்கு ஒரு பெண் பிறந்தாள். அவள் பெயர் சங்கா. பட்டத்து ராணியல்லாமல் மகாநாமனுக்கு மற்றொரு மனைவியும் இருந்தாள். அவள் தமிழ் மரபைச் சேர்ந்தவள். அவளுக்கு ஒரு ஆண் மகன் பிறந்தான். அவன் பெயர் சொத்திசேனன்.

மகாநாமனின் ஆட்சிக் காலத்தில் புகழ்பெற்ற புத்த கோஷர் என்னும் பிக்கு இலங்கைக்கு வருகை புரிந்தார். இலங்கை வருவதற்கு முன்னர் இவர் ஆந்திரத்திலும், பிறகு தமிழ்நாட்டிலும் இருந்துள்ளார். தமிழ்நாட்டு பௌத்த விகாரைகளில் தங்கிய காலத்தில் அவர் பாலி மொழியில் சில பௌத்த நூல்களை எழுதினார். இவர் காஞ்சி விகாரையில் தங்கியிருந்தபோது அங்கிருந்த சுமதி, ஜோதிபாலர் ஆகிய தமிழ் பிக்குகள் அவரிடம் இலங்கை சென்று அங்கே சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ள பௌத்த மத உரை நூல்களைக் கற்குமாறு தூண்டினர். அதனால் இவர் மகாநாமன் காலத்தில் இலங்கைக்கு வந்து அங்குள்ள பௌத்த விகாரைகளில் தங்கி பௌத்த உரை நூல்களைக் கற்றார்.

அங்கே மகாவிகாரையில் இருந்த பௌத்த சங்கத் தலைவரான சங்கபாலர் என்னும் மகாதேரர் புத்த கோஷருக்குச் சிங்கள மொழியில் இருந்த திரிபிடக உரைகளைக் கூறினார். அவற்றை உணர்ந்த பின்னர் புத்த கோஷர் 'விசுத்திமக்கம்' தொடங்கிய நூற்களை பாலி மொழியில் எழுதினார். புத்த கோஷர், சோழ நாட்டிலிருந்த புகழ்பெற்ற பௌத்த துறவி ஆச்சாரியா புத்த தத்ததேரர் என்னும் தமிழ் பிக்குவின் சமகாலத்தவர். புத்தகோஷர் தமது நூலில், சோழநாட்டை அன்று அரசாட்சி செய்த களப்பிர மன்னர் அச்சுதவிக்கந்தன் என்பவரைப் பற்றிக் கூறுகிறார். மகாநாமனின் ஆட்சி இருபத்திரண்டு ஆண்டுகள் நடைபெற்றன. (Ibid 210-247)

## சொத்திசேனன்: (கி.பி. 434)

உறவுகளைக் களப்பலி கொடுத்து அரசியல் ஆதிக்கம் பெறும் தொடர்ச்சியான நடைமுறைகள்தான் இலங்கையின் அரசியலில் தொடக்கம் முதல் காணப்பட்டு வந்துள்ளது. சொத்திசேனனின் அரசியலும் அதற்கு

விதிவிலக்கல்ல. மகாநாமன் இறந்த பின் ஆண் வாரிசு என்ற முறையில் ஆட்சிக்கு வந்த சொத்தி சேனனை அவனது மாற்றாந்தாயின் மகளான சங்கா படுகொலை செய்தாள். அவன் மணிமகுடம் சூடிய நாளின் இரவுப்பொழுதே அந்த மரணமும் நடைபெற்றது. சங்காவின் தாய் தனது கணவனைக் கொன்றுதான் ஆட்சியுரிமையை மகாநாகனுக்குத் தந்தாள். அதுபோன்றே சங்கா தன் தம்பியைக் கொலை செய்து அரசுரிமையைத் தட்டிப் பறித்தாள்.

## சத்தக்காகசன்: கி.பி. 434

இவன் சங்காவின் கணவன். இவனது இயற்பெயர் ஏதெனத் தெரியவில்லை. சத்திரக்காகசன் என்பதன் திரிபே சத்தக்காகசன் ஆகும். சத்திரம் எனின் அரசனின் வெண்கொற்றக் குடை என்று பொருள். இவன் மகாநாமனின் கொற்றக்குடை ஏந்தும் அலுவலனாக இருந்திருக்க வேண்டும். சங்காவை இவனுக்கு மணம் செய்து வைத்ததால் இவன் அரசாளும் பேறு பெற்றான். சங்காவின் கணவன் என்பதால் அரசுரிமை பெற்ற இவன் ஆண்ட காலம் ஓராண்டு. இயற்கையாகவோ அன்றியோ மரணமடைந்த இவனது உடலினை அரண்மனையிலேயே கொளுத்திச் சாம்பலாக்கிய பின்பு அமைச்சர், கொள்ளைக்காரனான மித்தசேனன் என்பவனை அரசுக் கட்டிலில் ஏற்றினான்.

## மித்தசேனன்: கி.பி. 435-436

சிங்கள அரச குல வாரிசுகள் எவரும் இல்லை என்பதனாலோ என்னவோ (அல்லது அமைச்சனின் சூழ்ச்சியாகவோ இருக்கலாம்) அமைச்சன் மித்தசேனனை இலங்கையின் அரசனாக்கினான். புதிய அரசன் யாரென்று வெளித்தெரியா வண்ணம் மறைத்து வைத்து மன்னனுக்கு உடல் நலம் சரியில்லை என்ற செய்தியைப் பரப்பினான். ஆயினும் மக்களின் நிர்ப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டு மித்தசேனன் திருவிழாக் காலமொன்றில் யானை மீது ஏறி உலாவந்தான்.

இந்தச் சூழலில் தமிழ்நாட்டிலிருந்து படை திரட்டி வந்த பாண்டிய அரச குலத்து வாரிசொருவர், மித்தசேனனை போரில் கொன்று இலங்கையின் ஆட்சியினைக் கைப்பற்றினார். (Ibid 4-11)

# 15

# இலங்கையில் பாண்டியர் ஆட்சி

*தமிழ் நிலத்தை மூவேந்தர்கள் ஆண்ட கடைச்சங்க காலத்தின் இறுதியில் அவர்கள் வலிமை குன்றிய வேளையில் அவர்களை வென்று களப்பிரர்கள் ஆட்சியினைக் கைப்பற்றினர் என்பதை நாம் அறிவோம். மூவேந்தர்களின் பரம்பரையினர் சிற்றரசர்களாகச் சிதறி ஆங்காங்கே களப்பிரர்களுக்குக் கட்டுப்பட்டு திறை செலுத்தி ஆட்சி புரிந்திருக்கக்கூடும். அவர்களைப் பற்றிய சரியான தகவல்கள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் அவர்களில் ஒருவனான ஒரு பாண்டியன், இலங்கையின் அரசியல் சூழலை அறிந்துகொண்டு அந்நாட்டின் மீது படையெடுத்து சென்று அதனை வென்றிருக்க வேண்டும். இவனது சரியான பெயர் தெரியவில்லை. இலங்கை வரலாறு இவனைப் பாண்டு என்று கூறுகிறது. இவன் தானும் தனது இரு மகன்களும் ஒரு சேர இலங்கைக்கு படை நடத்தி வந்தான் என அறிகிறோம். இவனது ஆட்சி அனுராதபுரத்தை தலைமையாகக் கொண்டு நடைபெற்றது.*

## பாண்டு (பாண்டியன்): கி.பி. 436-441

*இலங்கையைப் பாண்டியன் கைப்பற்றியதும் அனுராதபுரத்தில் இருந்த சிங்கள அரச குடும்பத்தவரும் பெருங்குடி மக்களும் தெற்கே உரோகண நாட்டுக்குப் போய்விட்டார்கள். இலங்கையின் தென் கிழக்கில் இருந்த உரோகண நாடு அந்நாளில் கலகக்காரர்களின் புகலிடமாக இருந்தது. உரோகண நாடு சென்றவர்கள் தமக்கு எதிராக கலகஞ் செய்வார்கள் என்று உணர்ந்த பாண்டியன் சிங்கள நாட்டின் தென் எல்லையில் பல கோட்டைகள் அமைத்து பாதுகாப்புகளைச் செய்தான். அவ்வாறு அவன் இருபத்தியோரு கோட்டைகள் அமைத்ததாகக் கூறப்படுகிறது.*

*பாண்டியனது இலங்கை அரசு கிழக்கு, மேற்கு, வடக்குப் புறங்களில் எல்லைகளாகக் கடலும், தென்புறம் மாவிலகங்கையாறும் எல்லையாக அமைந்தது. மாவிலகங்கை என்பது இலங்கையின் பெரிய ஆறு ஆகும். இதன் சரியான பெயர் மாவாலுககங்கை என்பதாம். மா-பெரிய, வாலுகம்-மணல், கங்கை-ஆறு மாவாலுக கங்கை என்றால் பெருமணல் ஆறு என்று பொருள். மாவாலுக கங்கை என்பதே மாவிலகங்கை என்று வழங்கப்படுகிறது.*

*பாண்டியனின் ஆட்சி அமைந்த அதேவேளையில் அனுராதபுரத்திலிருந்த பௌத்த விகாரையில் ஒரு சம்பவம் அரங்கேறியது. அங்கே பௌத்த பிக்குவாக இருந்த "மௌரிய குலத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு தாதுசேனன் என்ற மருகன் (தங்கை மகன்) ஒருவன் இருந்தான். அவன் விகாரையில் பௌத்த மத நூல்களைக் கற்க வந்திருந்தான். ஆனால் அவனுக்கு நாடாளும் ஊழ் இருப்பதாக நம்பிய அந்த பிக்குவானவர் தன் மருகனுக்கு மதக்கல்வியைப் புகட்டாமல் அரசியல் நூற்களை கற்பிக்கலானார்.*

*இவ்வாறு தனக்கு எதிரானதோர் சதி விகாரையில் நடைபெறுவதை அறிந்த பாண்டிய மன்னன், அவனைப் பிடித்துவர ஆணையிட்டான். இதனை முன்னமே அறிந்து கொண்ட தாதுசேனனும், அவனது பிக்குவான மாமனும் நகரைவிட்டு வெளியேறி தெற்கு நோக்கிப் பயணித்தனர். அவர்கள் தெற்கே காண ஓயாவை (காளஓயா) கடந்து உரோகண நாட்டை அடைந்தனர். அங்கே கலகக்காரர் களுடன் கைகோர்த்துக் கொண்டு அரசுக்கு எதிராக கலகஞ் செய்ய நாள் பார்த்து காத்திருந்தனர். ஆட்சியிலிருந்த பாண்டியன் ஐந்து ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து மறைந்தான். (Ibid 11-29)*

## பரிந்தன்: (கி.பி. 441-444)

*முதற்பாண்டியன் காலமானதைத் தொடர்ந்து அவனது மகன் (மூத்த) பரிந்தன் ஆட்சிக்கு வந்தான். இவனது ஆட்சிக் காலம் வெறும் மூன்று ஆண்டுகள் என்பதோடு அதிகப்படி யான விபரங்கள் தெரியவில்லை. இவனது காலத்தில் தாதுசேனன் கலகக்காரர்களை சேர்த்துக்கொண்டு வந்து இலங்கையில் கலகஞ் செய்திருக்க வேண்டும் என்று கூறலாம்.*

## இளம்பரிந்தன்: (குட்டபரிந்தன்) கி.பி. 444-460

*பரிந்தனின் மரணத்துக்குப் பின்னர் அவனது தம்பியான இளம்பரிந்தன் ஆட்சிக்கு வந்தான். இவனைக் 'குட்டப் பரிந்தன்' என்றும் கூறுவர். இவனது ஆட்சிக் காலம் பதினாறு ஆண்டுகள். இவனது ஆட்சிக்காலத்தில் தாது சேனன் படை திரட்டி வந்து இவனுடன் போர் செய்தான். இளம்பரிந்தன் அவனை எதிர்த்து வென்றான். தாதுசேனன் தோல்வியுடன் களம்விட்டு தப்பிச் சென்றான். தாதுசேனனை போரில் ஆதரித்து கலகஞ் செய்தவர்களை இளம்பரிந்தன் அடக்கினான். இவன் பல நன்மையான காரியங்களையும் தீமையான காரியங்களையும் செய்தான் என்று சூலவம்சம் கூறுகிறது (Ibid 30-31) அது நன்மை எது? தீமை எது என்று விளக்கவில்லை. எவ்வகையிலும் கலகத்தை அடக்கியது தீமையாகாது.*

*பாண்டியன் குட்டபரிந்தன் இலங்கையின் பௌத்தமத ஒழுக்கத்தையே தானும் கடைப்பிடித்தான் என்று தெரிய வருகிறது. இவனது கல்வெட்டுச் சாசனம் பழைய தலைநகரான அனுராதபுரத்தில் தொல்பொருள் இலாகாவின் காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதில் இம்மன்னன் பரிதேவன் என்றும் பரித்தேவர் என்றும், புத்தாசன் (புத்ததாசன்) என்றும் குறிப்பிடப்படுகிறான். இவனது அரசி யானவள் பௌத்த விகாரைக்கு தானஞ் செய்ததை இந்த கல்வெட்டு கூறுகிறது. (Anuradhapura Slab Inscription of kuddha parinda by S. Paranavitana p.p. 111-115 Epigraphia Zeylanica vol. IV)*

## திரிதரன் (ஸ்ரீதரன்) கி.பி. 460

*இவனுக்கும் குட்டப் பரிந்தனுக்குமான உறவுநிலை அறியப்படவில்லை. குட்டப் பரிந்தனுக்குப் பின்னால் ஆட்சிக்கு வந்ததும் கலகக்காரர்களை எதிர்கொள்ளும் நிலைக்கு இவன் தள்ளப்பட்டான். அரசேற்ற இரண்டாம் மாதத்திலேயே தாதுசேனனின் படை இவன் மீது போர் தொடுத்தது. வழக்கம்போல தாதுசேனன் தோற்று ஓட திரிதரன் வெற்றி பெற்றான் எனினும் களத்தில் பெற்ற காயம் அவனை மாய்த்தது (சூலவம்சம் 38-ம் பரிசேதம் 32).*

## தாட்டியன்: கி.பி. 460-463

*திரிதரனின் மரணத்துக்குப் பின்பு அரசாள வந்த தாட்டியன் உறவு நிலை பற்றிய விபரமும் தெரிய வரவில்லை. அவனைத் தாட்டியன் என்றும் தாட்டிகன் என்றும் மகா தாட்டிக மகாநாகன் என்றும் மகாதானிக மகாநாகன் என்றும் பலவாறாகக் குறிப்பிடுகின்றனர். இவன் மீது படை யெடுத்து வந்த தாது சேனனை, இவன் துரத்தியடித்தான். உரோகண நாட்டிலுள்ள புகழ்பெற்ற கதிர்காமம் நகரில் தாட்டிகனின் கல்வெட்டு சாசனம் சிதைந்து காணப்படுகிறது. இச்சாசனம் இவன் கிரிவிகாரை என்னும் பௌத்த பள்ளிக்கு தானஞ் செய்ததைக் கூறுகிறது. எனவே இவனும் பௌத்த மதத்தையே சார்ந்திருந்தான் என்பதை அறியலாம். இலங்கையின் தென்கிழக்கு கோடியில் இவனது கல்வெட்டு கிடைத்துள்ளபடியால் இவன், தாதுசேனன் வசித்த உரோகண நாட்டுக்குச் சென்று அங்கு அவனுடன் போர் செய்து வெற்றிபெற்றிருக்க வேண்டும். அந்த வெற்றியின் பொருட்டே தானஞ்செய்து கல்வெட்டைப் பொறித்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. (Epigraphia Zeylanica, vol III, pp 216-219)*

*தாட்டியனுக்கும் தாதுசேனனுக்கும் இடையே போர்கள் பல நடைபெற்றிருக்க வேண்டும். இதுபற்றி சூலவம்சம் ஏதும் குறிப்பிடவில்லை. அதனால் தாதுசேனன் வழக்கம்போல வந்து மோதிச் சென்றதாகவே அவை இருக்கக்கூடும். ஆனாலும் இறுதியாக நடைபெற்ற போர் சற்று கடுமையாகவே*

*இருந்துள்ளது. இப்போரில் மகாதாட்டிக மகாநாகன் வெற்றி பெற்றபோதும் மரணமடைந்தான் என்பது வரலாறு (சூலவம்சம் 38-ம் பரிச்சேதம் 33).*

## பிட்டியன்: கி.பி. 463

*களப்பிரர் காலத்தில் இலங்கையை அரசாட்சி செய்த பாண்டிய மன்னர்களில் இவனே கடைசியானவன். இவன் ஆட்சி ஏற்ற ஏழாம் மாத அளவில், தாதுசேனனின் படையெடுப்பு நடைபெற்றது. இப்போரில் வெற்றி, தாது சேனனுக்கே. பிட்டியன் களத்தில் மாண்டான். இலங்கையின் அரசாட்சி தாதுசேனனிடம் சென்றது (Ibid 34). களப்பிரர் தமிழகத்தை ஆட்சி செய்த காலத்தில் பாண்டிய மரபினர் அறுவர் இலங்கை மண்ணை ஆட்சிபுரிந்துள்ளனர் என்பதை இவர்களின் வரலாறு நிரூபிக்கின்றது. இதன் பின்னர் களப்பிரர் ஆட்சி தமிழகத்தில் இருந்த நாட்களில் இலங்கையை ஆண்டவர்களின் வரிசையினையும் இங்கு பார்க்கலாம்.*

# 16

# பாண்டியர் மரபுக்குப் பின் இலங்கை அரசியல்

## தாதுசேனன்: கி.பி. 463-479

*மன்னன் ஆகிவிடுவோம் என்கின்ற அதீதமான நம்பிக்கையுடன் அந்த குறிக்கோளை நோக்கித் தனது பயணத்தைத் தொடங்கிய தாதுசேனன், 27 வருடங்கள் அதற்கான முயற்சியில் தளராமல் ஈடுபட்டு இறுதியில் வெற்றியினை ஈட்டினான். அத்துணை பாடுபட்டு ஈட்டிய வெற்றியினைச் சுவைத்து மகிழும் நற்பேறு அவனுக்கு சரிவர அமையவில்லை என்பது பரிதாபத்துக்குரிய செய்தி.*

*தாதுசேனன் இரு மங்கையரை மணந்திருந்தான். ஒருத்தி இவனது குலத்துக்கு சமமானவளாகவும், இன்னொருத்தி சற்றே தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவளாகவும் இருந்தனர். இருவரில் முதலானவளுக்கு ஓர் அழகிய பெண் மகளும் மொக்கல்லானன் என்ற மகனும் பிறந்தனர். தாழ்ந்த குல மனைவிக்கு மகனாகப் பிறந்தவன் கஸ்ஸபன் என்பவன். இவனது குலம் (அன்னையின்) காரணமாக அரசுரிமை இல்லை என்றாகியது.*

*தாதுசேனனுக்கு தனது மகள் மீது கொள்ளைப் பிரியம். அவளை தனது மருமகனுக்கு (தங்கையின் மகன்) திருமணஞ்செய்து கொடுத்ததுடன் அவனைத் தனது படைத் தளபதியாகவும் நியமனஞ் செய்தார். சுமுகமான இந்த வாழ்க்கை ஓட்டத்தில் திடீரென ஏற்பட்ட விபரீதச் சறுக்கல் தாது சேனனின் வாழ்வைப் புரட்டிப் போட்டது. தன் அருமை மகளை அவளது கணவன் அடித்து துன்புறுத்தினான் என்ற செய்தி தாதுசேனனை பெருஞ்சினத்தில் தள்ளியது. தாயின் பேச்சைக் கேட்டு உபதிஸ்ஸன் (தளபதி) தனது மனைவியை (சாட்டை) சவுக்கினால் அடித்து துடைகளில் இரத்தம் பீறிடும் அளவுக்கு கொடுமை செய்திருந்தான். தாதுசேனன் தன் மகள் அடிக்கப்பட்டதற்கு காரணம் என்னவென்று விசாரணை செய்தான். சொல்லக்கூடிய அளவுக்கு எவ்வித காரணமும் இல்லை என்பது தெளிவானது. தனது தங்கையின் (உபதிஸ்ஸனின் தாய்) செயலே இதற்குரிய காரணம் என்பது வெளிப்பட்டதும் பெருஞ்சினம் கொண்ட தாதுசேனன் தங்கையை நெருப்பில் தள்ளிக் கொலை செய்தான்.*

*உயிர்துடிக்கப் பதைபதைத்து நெருப்பில் வெந்து தனது தாய் மரணமடைந்த காட்சியினைக் கண்ணால் கண்ட உபதிஸ்ஸன், இதற்குக் காரணமான தாதுசேனன் மீது மனதளவில் பெருஞ்சினம் கொண்டான். அவனது சினத் தீ*

நீறுபூத்த நெருப்பாக உள்ளக் கிடக்கையில் கனன்று கொண்டிருந்தது. தாயைச் சுட்டெரித்து கொலை செய்த தாய்மாமனைப் பழிவாங்கத் தருணம் பார்த்து காத்திருந்தான் உபதிஸ்ஸன். அதற்கு முதல்படியாக அவனை ஆட்சியிலிருந்து அகற்றவேண்டும் என்பதை உணர்ந்ததும் அதற்கான காய்களை நகர்த்தத் தொடங்கினான்.




தனது திட்டத்துக்கு கருவியாக அரசனின் மகன் கஸ்ஸபனைக் கையில் எடுத்தான். ஆட்சியுரிமை மறுக்கப் பட்ட அவனுக்கு அதன் மீது ஆசையைத் தூண்டிவிட்டான். சிறுகச் சிறுக அவனது நெஞ்சில் ஆசைத் தீ மூளவிட்டான். அரசனுக்கு எதிராகக் கலகஞ் செய்து ஆட்சியைக் கைப்பற்ற திட்டம் வகுத்துத் தந்தான். அவனது முயற்சி முழுமையான வெற்றியைக் கண்டது. கஸ்ஸபன் நகரத்து மக்களைத் தன் பக்கம் ஈர்த்து, அவர்களின் உதவியுடன் தாதுசேனனைப் பிடித்து சிறையிலிட்டான். அவனைச் சார்ந்தவர்கள் அனைவரும் பல்வேறாகத் துன்புறுத்தப்பட்டனர். பட்டத்து இளவரசனான மொக்கல்லானுக்கு நஞ்சூட்டி கொலை செய்ய முயன்றான். ஆனால் இந்த முயற்சியிலிருந்து தப்பிய மொக்கல்லன் இலங்கையை விட்டு தமிழ்நாட்டுக்குச் சென்றான்.

தமிழ்நாட்டில் ஆட்சியிலிருந்த களப்பிரர் உதவிபெற்று படையெடுத்து வரும் நோக்கில் அவன் பயணம் அமைந்தது. கூரிருட்டுச் சிறையில் தள்ளப்பட்ட தாதுசேனனுக்கு சரிவர உணவு தரப்படவில்லை. மகன் நாட்டை விட்டு வெளியேறிய செய்தியும் அவனைப் பெருங் கவலை கொள்ளச் செய்தது. தனது திட்டத்தில் பெரும் பகுதி நிறைவேறியதில் மகிழ்வெய்தினான் உபதிஸ்ஸன். ஆனால் அந்த அளவுக்கு போதுமென்று விட்டுவிட அவன் தயாராக இல்லை. தாயைத் துடிதுடிக்கக் கொன்றவனுக்கு தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்ற துடிப்பு மேலோங்கியது. ஆக அதற்கான திட்டத்தைத் தீட்டினான்.

புதிதாக ஆட்சியைக் கைப்பற்றிய கஸ்ஸபனிடஞ் சென்று தனது புதிய சூழ்ச்சியை அரங்கேற்றினான். உமது தந்தை அரண்மனையில் இரகசியமாக பெருஞ்செல்வம் சேர்த்து வைத்துள்ளாரே அதுபற்றி உன்னிடம் ஏதுஞ் சொல்லவில்லையா? என்று அக்கறையுடன் விசாரித்தான். கஸ்ஸபன், அப்படியா அதுபற்றி ஏதுஞ் சொல்லவில்லையே, என்றான். அதெல்லாம் அவரது செல்ல மகன் மொக்கல்லானுக்கு கொடுக்கத் திட்டமிட்டிருப்பார். இன்னுமா உனக்கு அவரது உள்நோக்கம் புரியவில்லை? என்று பற்றவைத்தான் தளபதி. தளபதியின் வார்த்தைகளை உண்மையென நம்பிய கஸ்ஸபன் பேராசை கொண்டவனாய் தந்தையிடம் தமது ஆட்களை அனுப்பி செய்தியை அறிந்து வரக் கட்டளையிட்டான்.

இது தன்னைக் கொல்வதற்கான சூழ்ச்சி என்பதைப் புரிந்து கொண்ட தாதுசேனன் ஏவலர்களுக்கு பதிலுரை கூறாமல் "மௌனம் காத்தான். கஸ்ஸபன் வாளாவிருந்து விடவில்லை. அரசன் பதில் கூறும்வரை விடுவதில்லை என்னும் முடிவுடன் ஆட்களைத் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருந்தான். ஒரு கட்டத்தில் தனது பொறுமையினை இழந்த தாதுசேனன் 'என்னைக் காலவாபியில் நீராட அழைத்துச் சென்றால் அங்கே நான் பொருள் வைத்த இடத்தைக் காட்டுவேன்' என்றார். அரசனின் ஆட்கள் தாதுசேனன் சொன்னதை வந்து உரைக்கவே அவரை காலவாபியில் நீராட அழைத்துப் செல்லுமாறு கட்டளையிட்டான் கஸ்ஸபன்.

காலவாபியில் நீராடிய தாதுசேனன் அரசனின் ஆட்களிடம் ஏரியைக் காட்டி இதுவே நான் பொருள் மறைத்து வைத்துள்ள இடம் என்றான். கஸ்ஸபன், தாதுசேனனின் கூற்றை நம்பவில்லை. வேண்டுமென்றே பொருள் மறைத்து வைத்த இடத்தை தெரிவிக்க மறுக்கிறான் என்று சினம் கொண்டதுடன், இனியும் இவரை உயிருடன் விட்டுவைக்க வேண்டாம்! கொன்றுவிடுங்கள் என்று படைத் தளபதி உபதிஸ்ஸனுக்கு கட்டளையிட்டான்.

இறுதியில் தனது திட்டம் பலித்ததை எண்ணி மகிழ்வெய்திய தளபதி, தாதுசேனனைப் பழிவாங்கும் திட்டத்தை முழுமையாகச் செயலில் இறங்கினான். அவன் தாதுசேனனின் ஆடைகளை அகற்றி பிறந்த மேனியனாய் அரண்மனை மாடமொன்றில் நிற்க வைத்து அந்த மாடத்தை கற்களைப் பரப்பி மூடிவிட்டான். உயிருடன் தாதுசேனன் சமாதியானான். தன் தாயைக் கொன்றவனுக்கு தக்க தண்டனை அளித்தோம் என்ற நிம்மதி பிறந்தது உபதிஸ்ஸனுக்கு.

அரசாளும் பேறுண்டு என்று கண்டறிந்த தாதுசேனனின் மாமன், இப்படியோர் நிலைவரும் என்று உரைக்காமற் போனதும் ஊழென்று கொள்ளலாம்.

## கஸ்ஸபன்-I: கி.பி. 479-497

தந்தையைச் சிறையிலடைத்தும் பின்னர் கொன்றும் இலங்கை அரசின் ஆட்சிக்கு வந்த கஸ்ஸபன் பதினெட்டு ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். அரசரின் நேரடி வாரிசும் தனது தம்பியுமான மொக்கல்லானன் தமிழ்நாட்டிலிருந்து படை திரட்டித் தன்னைத் தாக்க வரக்கூடும் என்கின்ற அச்சம் உள்ளூர அவனை மிரட்டிக் கொண்டிருந்ததால் தனது பாதுகாப்புக்காகச் சீககிரி மலைமீது கோட்டை கட்டிக்கொண்டு அதனுள்ளே அமைந்த மாளிகையில் இருந்து ஆட்சி நடத்தலானான். (சீககிரி என்பது தற்பொழுது சிகிரீம் என்று அழைக்கப்படுகிறது) இந்த மலையானது அனுராதபுரத்திலிருந்து தென்கிழக்காக 38 கல் தொலைவிலும், தம்புல்லா என்னும் ஊரிலிருந்து வடகிழக்காக 10 கல் தொலைவிலும் அமைந்துள்ளது. கஸ்ஸபன் இந்த மலை மீது கட்டிய கோட்டையின் சிதைந்த வடிவம் தற்போதும் பார்க்கும் நிலையில் உள்ளன.

தமிழ்நாட்டுக்குத் தப்பித்துச் சென்ற மொக்கல்லானன் அங்கே ஆட்சியிலிருந்த களப்பிரர் ஆதரவை நாடியிருக்க வேண்டும். ஆயினும் உடனடியாக அவனுக்கு உதவி கிடைக்க வில்லை என்றே நம்பத்தோன்றுகிறது. பதினெட்டு ஆண்டுகள் அங்கு தங்கிய அவனுக்குக் கிடைத்தது பன்னிரண்டு தமிழ் நண்பர்களின் நட்பு ஒன்று மட்டுமே. போர்க் கலையில் வல்லவர்களான அவர்கள் அவனுக்கு உதவ முன்வந்தனர். நண்பர்களுடன் இலங்கைக்கு வந்து சேர்ந்த மொக்கல்லானன் அங்கே ஒரு சிறந்த படையைத் திரட்டியதுடன் அவர்களைக் கொண்டே கஸ்ஸபனின்மீது போர் தொடுத்தான். போரில் கஸ்ஸபன் தோல்வியடையும் நிலை உருவானதும் அவன் தனது பட்டத்து யானை மீது இருந்தவாறே தனக்குத் தானே கத்தியால் குத்திக் கொண்டு இறந்துபோனான். அதனால் இலங்கை ஆட்சி மொக்கல்லானன் வசம் வந்து சேர்ந்தது. (சூலவம்சம் 38-ம் பரிசேதம் 1-28)

## மொக்கல்லானன் I: (கி.பி. 497-515)

கஸ்ஸபனை வீழ்த்தி ஆட்சியைப் பிடித்த மொக்கல்லானன் பதினெட்டு ஆண்டுகள் ஆட்சியில் இருந்தான். இவன் தமிழ்நாட்டுக்குச் சென்று வந்ததும், கஸ்ஸபனை வெல்ல ஆயத்த மானதும் சூலவம்சம் இவ்வாறு உரைக்கிறது. “கஸ்ஸபனுடைய பதினெட்டாம் ஆட்சியாண்டில் மொக்கல்லானன் என்னும் வீர மன்னன் நிகந்தர்களின் செய்தியறிந்து பன்னிரண்டு வீரர்களான நண்பர்களோடு ஐம்புத் தீவிலிருந்து (இங்கே தமிழ்நாடென்று கொள்ளவேண்டும்) இங்கே (இலங்கை) வந்தான்” என்று உரைக்கிறது சூலவம்சம். நிகந்தர் என்றால் ஜைனர் அல்லது சமணர் என்று பொருள். களப்பிரர் சமண மதத்தைச் சார்ந்த காரணத்தால் அவர்களை நிகந்தர் என்று சூலவம்சம் உரைக்கின்றது. ஆதலால்

மொக்கல்லானன் தமிழ்நாட்டிலிருந்து களப்பிர அரசனின் உதவிபெற்று இலங்கை சென்றான் என்றே கொள்ள முடிகிறது.

இவன் அரசனானதும் தனது தந்தையைக் கொல்ல கஸ்ஸபனுடன் சேர்ந்து பணியாற்றியவர்கள் ஏறக்குறைய ஓராயிரம் பேரைக் கொன்றான். வேறு சிலரை அங்க சேதங்கள் (காது மூகை அரிந்து) செய்து நாடு கடத்தினான். ஒருவேளை தமிழ் மண்ணிலிருந்து எவரேனும் இலங்கைக்கு படையெடுத்து வரக்கூடும் என்ற அச்சம் இருந்ததால் இவ்வரசன் இலங்கையின் மேற்கு கரைப் பகுதியில் ஆங்காங்கே பாதுகாப்பு அரண்களை அமைத்தான்.

## குமார தாதுசேனன்: கி.பி. 515-524

மொக்கல்லானான் மறைந்ததும் அவனது மகன் குமார தாதுசேனன் ஆட்சிக்கு வந்தான். இவனும் இவனது அமைச்சர் மகனான காளிதாசன் என்பவரும் நெருங்கிய நண்பர்கள். இவனது ஆட்சிக் காலம் ஒன்பது ஆண்டுகள்.இவன் தனது நண்பனான காளிதாசன் திடீர் மரணம் அடைய நேர்ந்தபோது, அதைப் பொறுக்கமாட்டாமல் அந்த ஈமத் தீயில் விழுந்து உயிர்விட்டான் என்பது வழிவழியாகச் சொல்லப்படும் செய்தி.

## கீர்த்தி சேனன்: கி.பி. 524

குமார தாதுசேனன் மரணமடைய அவனது வாரிசு கீர்த்தி சேனன் ஆட்சிக்கு வந்தான். வெறும் 9 மாதங்கள்தான் இவனால் ஆட்சியில் இருக்க முடிந்தது. 9-ம் மாதம் இவனது தாய்மாமன் சிவன் என்பவன் இவனைக் கொலை செய்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினான். (சூலவம்சம் 41ம் பரிசேதம் 4)

## சிவன்: கி.பி. 524

தனது மருமகன் கீர்த்திசேனனைக் கொன்று ஆட்சியிலமர்ந்த சிவனை அவன் பதவியேற்ற 25-ம் நாளில் மொக்கல்லானின் மைத்துனனும் தாதுசேனனின் படைத் தளபதியுமான உபதிஸ்ஸன் கொலை செய்தான் (Ibid 5-6)

## உபதிஸ்ஸன் III: கி.பி. 525-526

தாய்மாமனும் மனைவியின் தந்தையுமான தாதுசேனனைப் பழிவாங்கிய உபதிஸ்ஸனுக்கும் அரசாளும் மோகம் உருவாகவே வழிமாறி வந்த சிவனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான். ஆட்சி கைவசமானதும் அரசியலில் தன்னை நிலைப்படுத்திக்கொள்ள தனக்கு வேண்டிய முக்கியமானவர்களை அரசு

அலுவல் பணிகளில் அமர்த்தினான். இவனுக்கு கஸ்ஸபன் என்ற ஒருமகனும், மகளொருத்தியும் இருந்தனர். மகளைச் ‘சிலாகாலன்’ என்பவனுக்கு மணம் செய்து கொடுத்தான்.

மருமகன் சிலாகாலனுக்குத் தாமும் அரசராக வேண்டும் என்ற ஆசை விசுவரூபமெடுத்து தலைவிரித்தாடியது. தனக்கென ஒரு படையைத் திரட்டிக் கொண்டு அவர் தனது மாமனார் உபதிஸ்ஸனை எதிர்த்தார். உறவுகள் ஒன்றுக்கொன்று முட்டிக்கொள்வதொன்றும் இலங்கை வரலாற்றில் புதுமை அல்லவே! வயதான உபதிஸ்ஸனால் களத்தில் இறங்கி போர் செய்வது கடினம் என்பதால் அவனது மகன் கஸ்ஸபன் சிலாகாலனை நேரிட்டான். தொடக்கத்தில் சிலமுறை கஸ்ஸபன் வெற்றி பெற்று சிலாகாலனைத் துரத்தியபோதும், மீண்டும் மீண்டும் உத்வேகத்துடன் சிலாகாலன் போர் தொடுக்கலானான். அவனது விடாமுயற்சி அவனுக்கு வெற்றியைத் தந்தது. களத்தில் சிலாகாலனின் வெற்றி கஸ்ஸபனை துவளச் செய்ததால் அவன் அங்கேயே தற்கொலை செய்து கொண்டான். மகனின் மரணச் செய்தி உபதிஸ்ஸனை மனமுடையச் செய்து மாய்த்தது. உபதிஸ்ஸனின் ஆட்சிக் காலம் ஒன்றரை ஆண்டுகள் மட்டுமே! (Ibid 7-26)

## சிலாகாலன்: கி.பி. 526-539

இலங்கை அரசியல், முறையான அரச குல வாரிசுகளால் நிரப்பப்படவில்லை. சந்தர்ப்பம் கிடைத்தவர்கள் வாய்ப்பை பயன்படுத்தி ஆட்சிக் கட்டிலில் ஏறினார்கள். சிலாகாலனும் அப்படி வந்தவனே. அரசனின் மகளை மணந்தவன் என்ற அங்கீகாரத்தில் அரசனையே எதிர்த்து ஆட்சியைப் பிடித்த இவன் ஆண்டது பதிமூன்று ஆண்டுகள். இவனுக்கு ‘அம்பாசாமணேர சிலாகாலன்’ என்றோர் பெயரும் உண்டு. இவனது பிள்ளைகள் மூவர். அவர்கள் முறையே மொக்கல்லானன், தட்டாபபூதி, உபதிஸ்ஸன் ஆகியோர்.

சிலாகாலன் தனது மூத்த மகனை ‘ஆதிபத’ என்ற சிறப்புப் பெயர்சூட்டி கிழக்கு (இலங்கை) நாடுகளின் அதிபதியாக்கினான். இரண்டாவது மகனான தட்டாபபூதியை ‘மலையராஜன்’ எனும் சிறப்புப் பெயருடன் மலை நாட்டிற்கும் இலங்கையின் தென் பகுதிக்கும் அதிபதியாக நியமித்தான். மூன்றாவது மகனான உபதிஸ்ஸனை தன்னுடனே வைத்துக் கொண்டான்.

இவனது ஆட்சிக் காலத்தில் மகாநாகன் என்னும் வழிபறிக்கொள்ளைக்காரன் ஒருவன் இருந்தான். அவனுக்கும் சிலாகாலனுக்கும் ஏற்பட்ட நட்பு அவனை அரசாங்கப் பணியாளனாக்கியது. மகாநாகனை தென்கிழக்கு நாடான உரோகண நாட்டிற்குச் சென்று வரிவசூல் செய்ய கட்டளையிட்டான் சிலாகாலன். மகாநாகன் அப்பணியைச் சிறப்புடன் நிறைவேற்றவே அரசன் அவனைப்

பாராட்டிச் சிறப்பித்து அண்ட சேனாதிபதி என்னும் விருதை நல்கி நிரந்தரமாக உரோகண நாட்டிலிருந்து வரிவசூல் செய்யும் அலுவலை அவனிடம் தந்தார். அதன்பின் உரோகண நாட்டுக்குச் சென்ற மகாநாகன் வரிவசூல் செய்து அதை தானே வைத்துக் கொண்டு அரசுக்குக் கட்டுப்படாமல் காலம் கடத்தினான். *(Ibid 69-89,26-41)*

## தட்டாபபூதி: (கி.பி. 539-540)

பதிமூன்று ஆண்டு ஆட்சியின் நிறைவில் மரணமடைந்த சிலாகாலனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வரவேண்டியவன் அவனது மூத்த மகன் மொக்கல்லானன். ஆனால் தந்தையின் மரணச் செய்தி எட்டியதும் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்குடன் தக்கண நாட்டிலிருந்து வந்து சேர்ந்த தட்டாபபூதி தன்னையே அரசன் என்று அறிவிப்பு செய்தான். அவனது இந்தப் போக்கு சகோதரன் உபதிஸ்ஸனுக்கு பிடிக்காமற் போகவே அவன் அதைக் கண்டித்தான். தப்பைச் சுட்டிக் காட்டிய தம்பிக்கு மரணத்தைப் பரிசளித்தான் தட்டாபபூதி.

தனக்குரிய அரசைக் கைப்பற்றிக் கொண்ட தட்டாப பூதியின் செயலைக் கேள்வியுற்ற மொக்கல்லானன், கிழக்கு நாட்டிலிருந்து தனது சேனையுடன் தட்டாபபூதியை எதிர்த்துப் போரிட வந்தான். இருவரது படைகளும் நேருக்கு நேர் மோதத் தயாராக நின்றன. இந்நிலைமையில் மொக்கல்லானன் தட்டாபபூதிக்கு செய்தியொன்றை அனுப்பினான். அதில் 'நம்மிருவருக்காக நடைபெறும் இப்போரில் நம் நாட்டு வீரர்கள் வீணாக மடிவதேன்? நாமிருவர் தனித்து போரிட்டு வெற்றி தோல்வியை நிர்ணயம் செய்வோம். வென்றவர் ஆட்சியைப் பெறுவோம்!' இந்த கருத்தை ஏற்றுக்கொண்ட தட்டாபபூதி அண்ணனுடன் தனித்து போரிடத் தயாரானான். இருவரும் அவரவர் யானை மீதேறி போர் செய்யத் துவங்கினர். மொக்கல்லானனின் யானை தட்டாபபூதியின் யானையைத் தனது தந்தங்களால் குத்திக் கிழித்தது. குத்துப்பட்ட யானை வலி பொறுக்காமல் புறங்கண்டு ஓடியது. தோல்வி தன்னை நெருங்குவதை உணர்ந்த தட்டாபபூதி தனது போர் வாளை உடலில் பாய்ச்சி மரணமடைந்தான். இவன் ஆட்சியில் இருந்தது ஆறு மாதம் ஆறு நாட்கள் மட்டுமே. *(Ibid 42-53)*

## மொக்கல்லானன் II: (கி.பி. 540-560)

ஆட்சியைத் தட்டிப் பறித்தவனின் ஆயுள் முடிந்ததும் முறை வாரிசான மொக்கல்லானன் அரசாட்சியை மேற்கொண்டான். இரண்டாம் மொக்கல்லானன் ஆன இவன் சுல்ல மொக்கல்லானன் என்றும் அழைக்கப்பட்டான். சுல்ல என்பதற்கு சின்ன என்று பொருள். இவனது ஆட்சிக் காலம் இருபது ஆண்டுகள். *(Ibid 54-66)*

## கீர்த்தி ஸ்ரீமேகன்: (கி.பி. 560-561)

இருபது ஆண்டுகள் அரசாட்சி நடத்திய மொக்கல்லானன் மறைந்த பின்பு அவனது இராணிகளில் ஒருத்தி ஏனைய நெருங்கிய (அரசனது) உறவினர்களை நஞ்சிட்டுக் கொன்று விட்டு அரசாட்சியைக் கைப்பற்றி அதைத் தன் மகனுக்கு தந்தாள். இவள் பட்டத்து அரசியாக இருக்க முடியாது என்பதும் இவளது மகன் முறையான வாரிசாக இருக்க வாய்ப்பில்லை என்பதும் இவள் நடந்துகொண்ட விதம் தெளிவாக்குகிறது. கீர்த்தி மேகவண்ணன் என்ற இவளது மகன் அரசனான போதும் இராணி அரசியல் முடிவுகளில் தலையிட்டு அதிகாரம் செய்தாள். இவனுக்கு முன்னர் மற்றொரு கீர்த்தி மேகவண்ணன் இருந்த காரணத்தால் இவன் குட்ட கீர்த்தி மேகவண்ணன் என்று அழைக்கப்பட்டான். இராணியின் தலையீடு அதிகமானதால் ஆட்சி முறையாக நடைபெறவில்லை.

பலவிதமான ஒழுங்கீனங்கள் நடந்தேறின. இலஞ்சம் தலைவிரித்தாடியது. வலியோர் எளியோரை வருத்திப் பிழிந்தனர். நாடெங்கும் அரசியல் குழப்பமும், கலவரங்களும் நடைபெறலாயின. இந்த அரசனின் பாட்டனாரான சிலாகால அரசனால் உரோகண நாட்டின் வரி வசூலிப் பாளராக நியமிக்கப்பட்ட மகாநாகன் இங்கே நடைபெறும் அரசியல் குழப்ப நிலையை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான். இலங்கை அரசாட்சி மீது மோகங் கொண்டிருந்த அவன், இதுதான் தக்க சமயம் என உரோகண நாட்டிலிருந்து படையெடுத்து வந்து கீர்த்தி ஸ்ரீமேகனுடன் மோதினான். இந்தப் போரில் மகாநாகன் வெற்றிபெற்று அரசாட்சியைக் கைப்பற்றினான். வெறும் பத்தொன்பது நாட்கள் மட்டுமே ஸ்ரீகீர்த்தி மேகன் அரசாட்சி செய்தான். (Ibid 91-92)

இலங்கை அரசியல் வரலாற்றை முழுமையாகத் தெரிந்து கொள்வதல்ல நமது நோக்கம். தமிழகத்தில் களப்பிரர் ஆட்சி நடந்த அந்த கால அளவில் அண்டை நாடுகளில் நடைபெற்ற ஆட்சிகள் பற்றியும் அவற்றுக்கும் தமிழ் மண்ணுக்கும் இடையிலான தொடர்பு பற்றியும் தெரிவதே நமது நோக்கம். இதுகாறும் பார்த்த இலங்கை அரசியலில் ஆங்காங்கே களப்பிரர் ஆண்ட தமிழகத்துடனான தொடர்பு மெல்லிய நூலிழையாக தென்பட்டது என்றே கொள்ள வேண்டும். இலங்கையின் அரசியலில் வஞ்சகமும் சூதும் வன்கொடுமையும் தொடர்ந்து தலைவிரித்தாடியதையே பார்க்க முடிந்தது. உறவுகள் - மனித நாகரிகம் என எதற்கும் விலை கற்பிக்காத அந்த அரசியல் வரலாற்றை இத்துடன் முடித்துக்கொண்டு களப்பிரர் தொடர்பான வேறு செய்திகளை தொடர்ந்து பார்ப்போம்.

# 17

# கோநாட்டு மன்னர்கள்

*தமிழகத்தில் கொங்கு நாட்டுப் பகுதியினை கி.பி. 10, 11-ம் நூற்றாண்டளவில் இருபெரும் மன்னர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்கள் 'கொங்கு சோழர்' என்றே வரலாற்றாசிரியர்களால் அழைக்கப்படுகின்றனர். ஆனால் இவர்கள் அவ்வாறு அழைக்கப்படுதல் தவறு. "கோனாட்டு மன்னர்கள்" என்று அழைக்கப்படுவதே பொருத்தமெனச் சொல்கிறார் கே.வி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள். அம்மன்னர்கள் தங்களைக் 'கோ' நாட்டவர் என்றே கூறிக் கொள்கின்றனர். ஆகவே இவர்கள் கோநாட்டிலிருந்து வந்து கொங்கு நாட்டை ஆண்டிருக்கலாம் என்று கருத இடமுள்ளது. இவ்விரு மன்னர்களின் பெயர்கள் முறையே (1) வீர சோழ கலிமூர்க்கன் மற்றும் (2) கலிமூர்க்க விக்கிரம சோழன் என்பதாகும். இதில் முன்னவர் தந்தையாகவும் பின்னவர் மகனாகவும் இருக்கலாம் (யார் இந்த கலி மூர்க்கன், நடனகாசிநாதன்)*

## இவர்களின் தாய்வழி:

*இவர்கள் கோ நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்தோம். அவ்வாறெனில் இவர்கள் எக்குலம் சார்ந்தவர்கள்? இருக்குவேளிரா? முத்தரையரா? கோ நாட்டில் இருக்கு வேளிர்கள் கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். அவர்களின் வழிவந்தவர்கள் இவர்கள் எனின் 'கலிமூர்க்கன்' என்ற பட்டம் அதைத் தடை செய்கிறது. ஏனெனில் இருக்குவேளிர் மன்னர்கள் எவருக்கும் இதுபோன்றதொரு பட்டம் இருந்ததில்லை. அடுத்ததாகக் கோ நாட்டில் சற்று சிறப்புடன் திகழ்ந்த மற்றோர் இனம் முத்தரையர்கள். கோநாட்டைச் சேர்ந்த திருமயத்தில்தான் முத்தரையர்களின் மிகப்பழமையான கல்வெட்டு கிடைத்துள்ளது. விடேல் விடுகு விழுப்பேரதி அரைகன் என்னும் சாத்தன் மாறனின் தாய் பெரும்பிடுகு பெருந்தேவி என்பாள் தருமயம் சத்தியகிரிநாதப் பெருமாள் கோவிலைப் புதுப்பித்ததைத் தெரிவிக்கிறது. (I.P.S. No 13) இந்த சாத்தன் மாறன் இரண்டாம் நந்திவர்மனின் காலத்தவனாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (நடனகாசிநாதன், முத்தரையர்)*

*இதுதவிர குவான்சாத்தன் என்பவனது கல்வெட்டு புதுக்கோட்டை மாவட்டம் மலையடிப்பட்டியில் கிடைத்துள்ளது. இந்த குவான்சாத்தன், பல்லவ மன்னன் நந்திவர்மனது காலத்தில் திருவாலத்தூர் மலையைக் குடைந்து கோயில்*

அமைத்து அங்கே பிடாரரை (பிடாரி) பிரதிஷ்டை செய்த செய்தியினை அந்த கல்வெட்டு புலப் படுத்துகிறது. (I.P.S. No.18). இவன் வழிவந்த சாத்தம்பூதி, சாத்தம்பழியிலி, பூதிகளரி போன்றவர்கள் இப்பகுதியிலேயே ஆங்காங்கு ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். அவர்களது ஆட்சிக் காலத்தில் இங்கே பல கோயில் திருப்பணிகளையும் நிறைவேற்றியுள்ளனர்.

மேலும் பல்லவ மன்னன் நந்திவர்மனது காலத்தில் மாற்பிடுவனார் என்னும் பேரதியரையனின் திறமைமிக்க ஊழியன் ஒருவன் வாலிவடுகன் என்னும் கலிமூர்க்க இளவரையன் என்ற பெயருடன் திகழ்ந்திருக்கிறான். அவன் தனது முயற்சியில் குன்னாண்டார் கோயிலில் ‘வாலி ஏரி’ என்ற பெயரில் ஏரி ஒன்றினை அமைத்திருக்கின்றான். (Ibid No 17). இந்த மாற்பிடுவனார் பேரதியரையன் முத்தரைய மன்னனாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (K.V. subramanya Iyer, Historical Sketches of Ancient Dekhan). முத்தரையர்கள் ‘பேரதியரையர்’ என்றும் ‘இளவரையர்’ என்றும் பட்டங்கள் பூண்டு வந்துள்ளனர். அவ்வகையில் பேரதியரையனின் அடியான் (ஊழியன்) ஆகிய வாலிவடுகன் கலிமூர்க்க இளவரையன் என்னும் பட்டம் பெற்றிருப்பதால் மாற்பிடுவனார் - பேரதியரையனுக்கோ அல்லது அவனது முன்னோரில் ஒருவனுக்கோ கலிமூர்க்கன் என்ற ஒரு பட்டப்பெயர் இருந்திருக்க வேண்டும். சோழர் காலத்தில் மன்னர்களது பெயரினைக் குறுநில மன்னர்களும் அரசியல் வலிமைபெற்ற அதிகாரிகளும் சூட்டிக் கொண்டிருப்பதைப் பரவலாகக் காணமுடியும். அதுபோன்றே பல்லவர்கள் காலத்திலும் அவர்களின் மாற்பிடுகு, விடேல்விடுகு போன்ற பட்டப் பெயர்களை அவர்தம் குறுநில மன்னர்கள் தாங்கியிருந்ததையும் காணமுடிகிறது. ஆதலால் முத்தரைய மன்னன் ஒருவன் நந்திவர்மன் காலத்தில் ‘கலிமூர்க்கன்’ என்ற பட்டப்பெயரைக் கொண்டிருந்தான் என்று எண்ண முடிகிறது. அவ்வகையில் அப்பெயர் தாங்கிய மன்னன் பெரும்பாலும் குவான் சாத்தனாக இருக்கலாம். அதனால் அந்த முத்தரையர் குலத்தைச் சார்ந்தவர்களே கொங்கு நாட்டை ஆட்சி செய்த வீரசோழ கலிமூர்க்கனும், கலிமூர்க்க விக்கிரம சோழனும் என்று கருத இடமுள்ளது.

## கலிமூர்க்கன் எனும் பெயர்க் காரணம்:

முத்தரையர்கள் பல்லவ மன்னனுக்குக் கட்டுப்பட்டவர் களாகவும் நட்பு பேணியவர்களாகவும் இருந்து வந்துள்ளனர். இதனை இரண்டாம் நந்திவர்ம பல்லவ மன்னன் காலத்தில் ‘குவாவன்’ என்னும் முத்தரையன் சமணப் பள்ளிக்கு கொடையளித்த விபரம் குறிக்கும் கல்வெட்டில் நந்திவர்மனின் ஆட்சியாண்டைக் குறித்ததிலிருந்து உணர முடியும். அதுபோன்றே நந்திவர்மன் காலத்தில் குவாவன் சாத்தன் மலையடிப்பட்டியில் குடைவரைக் கோயில் அமைத்ததும், நிருபதுங்க வர்மன் காலத்தில் சாத்தம்பழியிலி நார்த்தாமலையில் பழியிலீச்சுவரம் என்னும்

குடைவரைக் கோயிலை குடைவித்ததும் சொல்லலாம். இதன்மூலம் பல்லவ மன்னர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாகவே முத்தரையர்கள் இருந்துள்ளனர் என்பது புலனாகிறது.

ஆனால் முத்தரையர்களைப் போன்று கட்டுப்பட்ட வர்களாக களப்பிரர்கள் இருந்ததில்லை. நூற்றாண்டு காலங்கள் தமிழ் நிலம் முழுவதும் ஆட்சியில் வைத்திருந்த அவர்கள் தங்களது வலிமை குன்றி சிற்றரசர்களாக மாறிய போதும் பழைய பகையும் வெஞ்சினமும் பாராட்டி பல்லவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனை சிம்ம விஷ்ணு பல்லவன் காலந்தொட்டு அபராஜிதன் காலம் வரையிலான பல்வேறு பல்லவ மன்னர்கள் காலத்து செப்பு பட்டயங்கள் விளக்குகின்றன. களப்பிரர்களை வென்று புகழீட்டிய அந்தப் பட்டயங்கள் பல்லவர் ஆட்சியிலும் களப்பிரர் வலிமை பெற்றதை பறைசாற்றுகிறது. செந்தலைக் கல்வெட்டானது முத்தரைய மன்னன் சுவரன் மாறனின் கள்வர் கள்வன் என்ற பட்டத்தைப் பற்றிக் கூறுவதை முன்னரே பார்த்தோம். அதுபோன்றே மற்றொரு முத்தரைய மரபினன், ‘கலிமூர்க்கன்’ என்ற பட்டத்தைப் பெற்றிருக்கக் கூடும். களப்பிரர்கள் கலிஅரசர்கள் என்ற சிறப்பு பெயர் பெற்றவர்கள். அப்பேற்பட்டவர்களை நிர்மூலமாக்கியவன் அல்லது அழித்தொழித்தவன் என்பதை கலிகளுக்கே மூர்க்கன் எனும் பொருள்வரக் ‘கலிமூர்க்கன்’ எனும் பட்டப் பெயரால் நிரூபிக்க இப்பெயர் கொண்டிருக்கலாம்.

## மூர்க்கர் - மற்றோர் விளக்கம்:

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான சைவ சமயத் திருத்தொண்டர் ஒருவருக்கு ‘மூர்க்கர்’ என்ற பெயர் அமைந்திருந்தது. தொண்டை நாட்டிலுள்ள திருவேற்காட்டில் வேளாண்குடியில் பிறந்த இவர், சிவனடியார்களுக்கு உணவு படைத்து மன நிறைவு கண்டவர். இவ்வாறு அடியார்களுக்கு அமுது படைத்து, தம்மிடம் இருந்த செல்வமனைத்தையும் கரைத்த அந்த திருத்தொண்டர், தமது சூதாடும் திறமை மூலம் பொருள் ஈட்டி அடியார்களுக்கு அமுதிடும் பணியினை நிறைவேற்றி வந்தார். தனது அடியவனைச் சோதனை செய்யத் துணிந்த சிவபிரானின் செயலால் சூதாட்டத்திலும் அவருக்கு தோல்வி ஏற்பட்டது. இருந்தும் மனந்தளராமல் சூதாடுவதிலேயே பொருள் ஈட்டப் பாடுபட்டார். இதனால் இவரது எதிராளிகள் இவருடன் தகராறு செய்யத் துவங்கவே மனந்தளராத அடியார் எதிராளிகளைத் தமது உடைவாளால் குத்திப் பணியச் செய்தார். இவரது கடுஞ்சினச் செயலே இவருக்கு ‘மூர்க்கர்’ என்னும் பெயரை உருவாக்கியது. இதுபோன்றே களப்பிரர்களைச் சிறிதும் தயக்கமின்றிப் போரில் தமது வாளால் வெட்டி வீழ்த்தித் தோற்கடித்த காரணத்தால் முத்தரைய மன்னன் ஒருவனுக்கு ‘கலிமூர்க்கர்’ என்ற பட்டம் கிடைத்திருக்கலாம்.

## நில இயல்பும் நடைமுறைகளும்:

கோ நாடு என்பது கொங்கு நாட்டை ஒட்டிக் கிழக்குத் திசையில் அமைந்துள்ள நிலப்பரப்பு. இப்படி அடுத்தடுத்து அமைந்த காரணத்தால் இவ்விருபாலரும் ஒருவருடன் ஒருவர் போரிடுவது தவிர்க்க முடியாததாகவே இருந்திருக்க வேண்டும். தத்தம் நாட்டின் எல்லையை விரிவுபடுத்தும் நோக்குடன் அண்டை நாடுகள் மீது படையெடுத்து தாக்குவதென்பது அந்நாளைய வழக்கம். அதனால் பல்லவ மன்னனின் சிற்றரசாக இருந்த சோழமன்னன் ஆதித்யன் கொங்கு நாட்டை ஆண்ட களப்பிரர்களுடன் போரிட்டிருக்கிறான். பின்னர் கொங்கு நாடு சோழர் ஆதிக்கத்தில் வந்துவிட்டது. நாளடைவில் கொங்கு நாட்டை ஆளும் உரிமையினை 'கோ'நாட்டவரான முத்தரையருக்கு சோழ மன்னன் அளித்திருக்கலாம். அவ்வாறு ஆட்சிபுரியத் துவங்கியவர்கள் கோ நாட்டு மன்னர்கள் எனக் கருதலாம்.

## வீர சோழ கலிமூர்க்கன்: (கி.பி. 967-1005)

இவனது காலத்தைச் சார்ந்ததென நான்கு கல்வெட்டுகள் இதுவரை கிடைத்துள்ளன. அவை கோவை மாவட்டம் கொடுவாயிலிருந்து கிடைத்ததும் (A.R.E. III of 1920) பிரமியத்திலிருந்து கிடைத்த இரண்டு கல்வெட்டும் (Ibid 189, 204 of 1920) வள்ளி எறிச்சலிலிருந்து கிடைத்த (Damilica vol. I page) ஒன்றும் ஆகும். இவனது 14-ம் ஆண்டு ஆட்சி ஆண்டில் கொடுவாய் கல்வெட்டு பொறிக்கப்பட்டது. பிரமியக் கல்வெட்டுகள் இரண்டும் முறையே 17, 24-ம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் பொறிக்கப்பட்டவை. இவனது 38-ம் ஆண்டு ஆட்சியின்போது பொறிக்கப்பட்டதே வள்ளி எறிச்சல் கல்வெட்டு.

வீரசோழிய கலிமூர்க்கனுக்கு பின்பு ஆட்சிக்கு வந்த மிக்கவாறும் இவனது மகன் என்று நம்பப்படும் கோக்கலி மூர்க்க விக்கிரம சோழனது 40-ம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு சக ஆண்டு 967 உடன் திங்களூரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் கோக்கலிமூர்க்க விக்கிரம சோழன் கி.பி. 1005-ல் ஆட்சி புரியத் தொடங்கியிருந்தான் எனில் கோ வீர சோழ கலிமூக்கன் 38 ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்க வேண்டும். அதாவது அவன் கி.பி. 967-ல் ஆட்சிக்கு வந்திருக்க வேண்டும்.

இனி இந்த மன்னர்கள் தாங்கியுள்ள 'சோழர்' எனும் பெயர்க் காரணம் பற்றி ஆய்ந்தால், முன்னரே கூறியது போல முடியாட்சி மன்னர்தம் கீழ்படிந்து குறு நில மன்னர்களாகச் செயல்பட்டவர்களும் முடிமன்னர்தம் சிறப்புப் பெயரைத் தாங்களும் சூடிக்கொண்டுள்ளனர். அவ்வகையில் வீர சோழன் என்பது சோழ மன்னன் முதலாம் பராந்தகனின் பட்டப் பெயராகும். அவன் கி.பி. 907 முதல் 955

வரை சோழ நாட்டை ஆட்சிபுரிந்துள்ளான். அவன் காலத்து கல்வெட்டுகள் தமிழ்நாடு முழுவதும் பரவலாகக் காணப்படுகின்றன. அவ்வகையில் கொங்கு நாட்டிலும் அத்தகைய கல்வெட்டுகள் தென்படுகின்றன. பராந்தகனின் ஆட்சிக் காலத்தில் கொங்கு நாடு அவனது ஆட்சியில்தான் இருந்துள்ளது எனினும் களப்பிர மன்னனும் அங்கே தனது கல்வெட்டுகளை சுயேச்சையாகப் பொறித்து வைத்துள்ளதை பார்க்க முடிகிறது. பராந்தகனின் ஆட்சிக்குப் பின்னர் ஏறக்குறைய 12 ஆண்டுகள் கழித்து கோ நாட்டவனாகிய வீரசோழ கலிமூர்க்கன் கொங்கு நாட்டை ஆட்சிபுரியத் தொடங்கியுள்ளான். இவன் தனது பெயரில் வீரசோழன் எனக் கொண்டிருப்பது பராந்தகனுக்கு கட்டுப்பட்டு கோ நாட்டை (ஆண்டவன்) சார்ந்தவன் என்பதுடன் பின்னர் கொங்கு நாட்டை ஆளும் வாய்ப்பைப் பெற்றுள்ளான் என்பதையும் உணர முடிகின்றது.

## கலிமூர்க்க விக்கிரம சோழன்: (கி.பி. 1005-1047)

கொங்கு நாட்டை நெடுங்காலம் ஆட்சிபுரிந்தவன் என்கின்ற நிலையில் இவனது ஆட்சிக் காலத்தை ஒட்டிய ஏராளமான கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவனது 2-ம் ஆண்டு ஆட்சி முதல் 42-ம் ஆண்டு ஆட்சி வரையிலான கல்வெட்டுகள் கோயம்பத்தூர் மாவட்டம் முழுவதுமின்றி, திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுகாவிலும் கிடைத்துள்ளன. பேரூர், விஜயமங்கலம், திங்களூர், வெள்ளலூர், போளுமாம்பட்டி, திருமுருகன்பூண்டி, குமாரமங்கலம், கண்ணாடிப்புத்தூர், சோழமாதேவி, தாராபுரம், கீரனூர், களந்தை, பெரியகோட்டை, சமத்தூர் அண்ணூர், கோவில் பாளையம், பிரிமியம் ஆகிய ஊர்களில் இவனது கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

இவனது ஆட்சிக் காலம் கி.பி. 1005 முதல் 1047 வரை என்பதைப் பார்த்தோம். தனது ஆட்சிக் காலத்தில் கொங்கு நாட்டில் இருந்த முக்கியமான ஆலயங்கள் அனைத்திலும் இவனது கல்வெட்டுகளைக் காணமுடிகின்றது. அத்துடன் இவனுக்கென்று ஒரு மெய்கீர்த்தி இருந்தது என்பதும் இவனது கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

செங்கோலோச்சி வெள்ளி வெண்குடை மிளிரவேந்தி

நாடு வளம்படுத்து நையகுடி ஓம்பி

ஆறில் ஒன்றுகொண்டு அல்லவை கடிந்து

கோவிற்றிருந்து குடிபுறங்காத்து

பெற்ற குழவிக்குற்ற நற்றாய் போல்

திருமிகு சிறப்பிற் செல்லா நின்ற திரு நல்லியாண்டு

என்பது அந்த மெய்கீர்த்தியாகும்.

பிரிமியத்தில் காணப்பெறும் இவனது கல்வெட்டுகளிலிருந்து கோ நாட்டு மன்னர்களுக்கும் சோழ மன்னர்களுக்கும் இருந்த திருமண உறவு போன்ற செய்திகளையும் அறிய முடிகிறது. ஒரு கல்வெட்டில் 'நம் பிராட்டியார் வளவன் மாதேவியார் என்னும் இட்டிமுத்தர்' என்று துவங்கி அவர் அளித்த தானம் பற்றிக் கூறுகிறது. இந்த வளவன் மாதேவியார் பெரும்பாலும் கலிமூர்க்க விக்கிரம சோழனின் பட்டத்தரசியாக இருக்க வேண்டும். ஆகவேதான் 'நம் பிராட்டியார்' என்ற சொல்லாட்சி அமைந்துள்ளது. மேலும் 'வளவன் மாதேவியார்' என்ற சிறப்புப் பெயர் சோழ இளவரசி என்பதைக் குறிப்பிடுவதாகும்.

மற்றோர் கல்வெட்டு கலிமூர்க்க விக்கிரம சோழன் தனது மகள் மரணித்தபோது அவளது ஆத்மா நற்கதி அடையும் பொருட்டு அளித்த கொடைப் பற்றித் தெரிவிக்கின்றது. அதில் அவள் சோழ மன்னன் விக்கிரம சோழனின் பட்டத்தரசி என்றும் காணப்படுகிறது. சோழ மன்னன் முதலாம் இராஜேந்திரனுக்கு 'விக்கிரம சோழன்' என்ற ஒரு பெயரும் உண்டு (திருவாலங்காடு செப்பு பட்டயம் ARE 1906, part II para 18) இதன்மூலம் முதலாம் இராஜேந்திரனுக்கு, கலிமூர்க்க விக்கிரம சோழன் தனது மகளை மணம் முடித்து தந்துள்ளான் என்பது தெரிய வருகிறது.

# 18

# களப்பிரர் காலத்துச் சிற்றரசர்

களப்பிரர்கள் ஆட்சி இங்கு நடைபெற்ற காலத்தைக் கணிக்க முயன்ற அளவிற்கு அவர்களின் பரம்பரை பற்றிய விபரங்கள் தெளிவுறத் தெரியவராதபோது, அவர்கள் இருந்த காலத்தில் இம்மண்ணில் ஆட்சியதிகாரம் பெற்றிருந்தவர்களில் எவரேனும் களப்பிரர்களைப் பற்றி கோடிட்டுக் காட்டியிருக்கக் கூடும் என்கின்ற தேடுதல் அவசியமாகிறது. அவ்வகையில் நமக்குக் கிடைத்த ஒரு சான்று கொடும்பாளூர் வட்டாரத்தை ஆட்சிபுரிந்த இருக்குவேள் அரசர்கள் பற்றியது.

'கொடும்பை' என்று சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படும் கொடும்பாளூர் பாண்டிய நாட்டின் வட எல்லைக்கும் சோழ நாட்டின் தென் எல்லைக்கும் இடைப்பட்ட பகுதியாக அமைந்திருந்தது. தற்போது தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்த கொடும்பாளூர் அமைந்துள்ளது. இது புதுக்கோட்டை நகரத்திலிருந்து 25 மைல் தொலைவில் உள்ளது. பழமை வாய்ந்த இந்தப் பகுதியினைப் பற்றி சங்க நூல்களில் ஆதாரம் ஏதும் காணப்படவில்லை. அந்நாளில் இது மிழலைக் கூற்றம் எனப் பெயர் பெற்றிருந்ததாக அறிய முடிகிறது என்கிறார் மயிலை திருவேங்கடசாமி (களப்பிரர் ஆட்சியில் தமிழகம், மயிலை சீனிவேங்கடசாமி)

களப்பிரர்கள் தமிழ்நாட்டினை ஆட்சிபுரிந்த காலத்தில் இருக்குவேள் அரசர் கொடும்பாளூர் வட்டாரத்தை ஆட்சி புரிந்துள்ளனர். இவர்கள் களப்பிரர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாக இருந்துள்ளனர். பழம்பொருள் ஆய்வுத் துறையினரால் 1907-08-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கொடும்பாளூர் மூவர் கோவில் கல்வெட்டு பற்றிய அறிக்கை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. (Annual Report on Epigraphy Madras 1907-08) 1907-ல் கண்டுபிடிக்கப்பட்ட இந்த கல்வெட்டு சாசனம் இருக்குவேள் அரசர் பரம்பரை பற்றிப் பேசுகிறது.

சாசனத்தின் தொடக்கம் மற்றும் இறுதியிலான எழுத்துகள் தாங்கிய பகுதி உடைந்துபோனதன் விளைவாக இது எழுதப்பட்ட காலம் பற்றி அறிய முடியவில்லை. இந்த சாசன எழுத்துகள் சோழக் கிரந்த எழுத்தால் சமஸ்கிருத (வடமொழி) மொழியில் எழுதப்பட்டுள்ளது. இச்சாஸனத்தை ஆய்வு செய்த திரு. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் 1933-ம் ஆண்டில் கட்டுரை ஒன்றை வெளியிட்டார்.

பின்னர் அது அவரது சோழர் வரலாற்று நூலிலும் இடம்பெற்றது. *(Journal of Oriental Research, Madras 1933 pp 1-10)*. இந்த சாஸனத்தின் எழுத்துச் சீரமைப்பானது அது கி.பி. 10-ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் திரு. நீலகண்ட சாஸ்திரியார்.

ஆனால் அந்த கல்வெட்டுச் சாசனத்தை ஆய்வு செய்த ஹீராஸ் (பாதிரியார்) அடிகள் அதில் காணப்படும் வரலாற்றுச் செய்தியினை அடிப்படையாகக் கொண்டு அது கி.பி. 7-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்கின்ற முடிவை வலியுறுத்தி கட்டுரை ஒன்றை எழுதி வெளியிட்டார். *(Rev. H. Heras, Journal of the Royal Asiatic Society January 1934)*. இக்கருத்து பலராலும் ஏற்கப்பட்டது.

இவரது மாணவரான டாக்டர் எம்.ஆரோக்கியசாமி, தம் குருநாதரின் கருத்தே சரியென்பதை வலியுறுத்தி தமது 'வெள்ளாறு வட்டாரத்தின் பழைய வரலாறு' என்ற நூலில் இந்த மூவர் கோயில் சாசனத்தின் காலம் கி.பி. 7-ம் நூற்றாண்டே என உறுதிபடச் சொன்னார். இந்த சாசனத்தில் குறிப்பிடப்படும் இருக்குவேள் அரசர் 'வாதாபிஜித்' (வாதாபி நகரத்தை வென்றவன்) என்று புகழப்படுகிறான். சாளுக்கிய அரசனான இரண்டாம் புலிகேசியுடன் போரிட்டு பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மன் வாதாபியை வென்ற நிகழ்வில் பல்லவர் சார்பில் இந்த இருக்குவேள் மன்னன் பரதுர்க்க மர்த்தனனும் ஈடுபட்டு அந்த வெற்றிக்காக உழைத்திருக்க வேண்டும். அதுவே இவனுக்கு 'வாதாபிஜித்' என்னும் சிறப்புப் பெயரைத் தந்துள்ளது. வாதாபி நகரம் வெல்லப்பட்ட ஆண்டு கி.பி. 642 என்பது வரலாற்று ஆசிரியர்களின் ஏகோபித்த கருத்து என்பதால் பரதுர்க்க மர்த்தனன் கி.பி. 642-ல் வாழ்ந்த மன்னன் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இனி இவனது காலத்தை எடுத்துக்கொண்டு இவனுக்கு முன்னரும், பின்னரும் இருந்த இருக்குவேள் அரசர் காலங்களை ஓரளவு அனுமானம் செய்யலாம். தலைமுறை ஒன்று ஏறக்குறைய முப்பது ஆண்டு எனக் கணக்கிட்டு கீழ்க்கண்டவாறு அவர்தம் காலத்தைக் கணிக்கலாம் என்பது மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் கருத்து.

| | | கி.பி. |
|---|---|---|
| 1. இருக்குவேள் (பெயர் தெரியவில்லை) | - | 435-465 |
| 2. பரவீரஜித்து | - | 465-495 |
| 3. வீரதுங்கன் | - | 495-525 |
| 4. அதிவீரன் | - | 525-555 |
| 5. அறுபமன் (சங்ககிருத்து) | - | 555-585 |
| 6. நிருபகேசரி | - | 585-615 |
| 7. பரதுர்க்க மர்த்தனன் | - | 615-645 |
| 8. சமராபிராமன் | - | 645-675 |
| 9. பூதி விக்கிரம கேசரி | - | 675-705 |
| 10. பராந்தகன் | - | 705-735 |
| 11. ஆதித்திய வர்மன் | - | 735-765 |

இந்த இருக்குவேள் மன்னர்களில் முதலாவதாக வரும் ஐவர் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் அவர்தம் ஆட்சிக்குட்பட்டு சிற்றரசர்களாகக் கோலோச்சியவர்கள். ஆறு முதல் எட்டு வரையிலான எண்ணிக்கைக்கு உட்பட்டோர் பல்லவ அரசுக்குக் கட்டுப்பட்டும் ஏனைய மூவர், அக்காலத்தே சிற்றரசர் நிலையிலானாலும் சற்றே வலுப்பெற்றிருந்த சோழர் குலத்துடன் உறவுகொண்டும் இருந்துள்ளனர்.

இனி களப்பிரர் ஆட்சிக்குக் கட்டுப்பட்டு கொடும்பாளூரை அரசாட்சி செய்த இருக்குவேள் அரசரைப் பற்றிப் பார்ப்போம். இதில் முதலாவதாக பேசப்பட்ட இருக்குவேள் பெயர் சாசனத்தில் இல்லாதுபோனதால் அவன் பெயர் தெரிய வில்லை. இவன் பாண்டியனின் யானைப் படையை முறியடித்தவன் என்று பேசப்படுகிறான். களப்பிரருக்குக் கட்டுப்பட்டு இருந்தவன். அதேநேரம் களப்பிரருக்குக் கட்டுப்பட்டும், கட்டை மீறி அவ்வப்போது அவர்களுடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்த பாண்டியர்களை அடக்க களப்பிரர் மேற்கொண்ட போர் ஒன்றில் இந்த இருக்குவேள் இணைந்துகொண்டு பாண்டியரின் யானைப் படையை வென்றான் என்று அறியமுடிகிறது.

இவனுக்குப் பின்னர் வந்த பரவீரஜித்து என்பவன் வீரமிகு பகை வீரர்களைப் போரில் வென்றவன் எனும் பொருள் பொதிந்த பெயர் கொண்டவன். அடுத்து வந்த வீரதுங்கன், பின்னர் வந்த அதிவீரன் ஆகியோரது பெயர்களிலிருந்து அவர்கள் வீரஞ் செறிந்தவர்கள் என்று கொள்ளலாம். இந்த நால்வருக்குப் பின்னர் வந்த அறுபமன் என்பவனுக்கு சங்ககிருத்து (சங்கத்தைச் செய்தவன்) என்ற சிறப்புப் பெயர் இருந்தது. இதனால் இவன் ஜைன சங்கத்தை ஆதரித்தான் என அறிய முடிகிறது.

மலையத்துவஜன் என்னும் ஜைன முனிவர் தேனிமலைக் குகையில் (தேனூர் மலைக்குகையில்) தவஞ்செய்து கொண்டிருக்க கொடும்பாளூர் இருக்குவேள் அரசர் அம்முனிவரைக் கண்டு வணங்கி, அவருக்கு நிலத்தை தானஞ் செய்தான் என்று அங்குள்ள சாசனம் சொல்கிறது. (புதுக்கோட்டை சாசனங்கள் -9)

"ஸ்வஸ்தி ஸ்ரீமலையத்துவஜன் தேனூர் மலையில் தவஞ்

செய்யக் கண்டு இருக்குவேள் வந்தித்து அவிப்புறஞ் செய்த

பள்ளிச் சந்தந் நாலேகால் இவ்வறங் காத்தான் அடி

நித்தஞ் சென்னி அள"

என்பது கல்வெட்டு வாசகங்கள். இதில் தானஞ் செய்தவன் இருக்குவேள் என்று மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. பெயர் குறிப்பிடவில்லை. அவன் 'அநுபமன்' என்பவனாகத்தான் இருக்கவேண்டும் என்பதை அவனது 'சங்கிருத்து' என்ற சிறப்புப் பெயர் உணர்த்துகிறது. சங்கிருத்து எனின் ஜைன சங்கத்தைச் செய்தவன், ஆதரித்தவன் எனப் பொருள். ஆக இந்த சிறப்புப் பெயர் தானஞ் செய்தவன் இவனே என உறுதிப்படுத்துகிறது.

இவனது ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் பல்லவ அரசன் சிம்ம விஷ்ணு காஞ்சியிலிருந்து படையெடுத்து வந்து களப்பிரருடன் போரிட்டு வென்று சோழ நாட்டைக் கைப்பற்றினான். அதனால் இருக்குவேள் மன்னன் களப்பிரர் சார்பை அகற்றிப் பல்லவருக்குக் கட்டுப்பட்டு நடக்கத் துவங்கியுள்ளான். தொடர்ந்து வந்த இவனது சந்ததியினரும் பல்லவர்களையே சார்ந்து வந்துள்ளனர்.

# 19

# கண்ணுக்கெட்டிய களப்பிரர் சான்றுகள்

களப்பிரர்கள் தமிழகத்தை கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் ஆட்சி செய்யத் தொடங்கி, கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியில் முழுமையாகத் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தியுள்ளனர் என்பது வரலாற்றில் தெரியவரும் உண்மை. இந்நிலையில் பாண்டிய, பல்லவ அரசுகளின் எதிர்ப்புகளை சந்தித்த களப்பிரர்கள், ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னர் தங்கள் ஆதிக்கப் பகுதிகளை விட்டு மெல்ல மெல்ல வெளியேறும் கட்டாயம் ஏற்பட்டது. தென் தமிழ்நாட்டில் பாண்டியன் கடுங்கோனும் வடக்கே பல்லவ மன்னர் சிம்மவிஷ்ணுவும் களப்பிரர்களைக் கட்டுக்குள் கொண்டுவரும் பணியில் தீவிரமானார்கள். ஆகவே இவ்வித எதிர்ப்புகள் ஏதுமற்ற சோழ நாட்டில் வலுவாகத் தங்களை நிலைநிறுத்திக் கொண்ட களப்பிரர்கள் காலப்போக்கில் பாண்டியர்களும் பல்லவர்களும் சோழ நாட்டை கண் வைக்கத் தொடங்கியதும், அவர்தம் எதிர்ப்புக்கு முன்னே படை நடத்த முடியாமல் சோழ நாட்டைக் கைவிட்டு கொங்கு நாட்டுப் பகுதியில் குடியேறத் தொடங்கினர். கொங்கு நாட்டில் இவர்களது ஆதிக்கம் கி.பி. 10-ம் நூற்றாண்டு வரை ஓரளவு நிலைபெற்றிருந்தது. அதன்பின் பிற்காலச் சோழர்கள் கொங்கு நாட்டைக் குறிவைத்து ஆதிக்கத்தைப் படர விட்டதும் களப்பிரர்கள் தங்கள் ஆதிக்கப் பகுதிகளிலிருந்து வெளியேறும் நிலைமை உருவானது. பின்னர் அவர்களால் ஆளும் வலிமையாக உருவாக முடியவில்லை. கி.பி. 12 மற்றும் 13-ம் நூற்றாண்டளவில் இவர்களில் சிலர் அரசு அதிகாரிகள், ஊர்த் தலைவர்கள் என ஆங்காங்கே பொறுப்பு வகித்துள்ளனர்.

## சில கல்வெட்டுகள் சொல்லும் காலங்கள்:

'சிறிஞர்' எனும் ஊர் இடையள நாட்டைச் சேர்ந்தது. அவ்வூர்த் தலைவன் ஓர் களப்பாளன். பெயர் தன்னிச்சை. அவனும் பெரும்புலியூரைச் சார்ந்த ஐயாறன் அம்பலத்தாடியும் திருமுறைக்காட்டு புவனிவிடங்க தேவர் கோயிலில் இரண்டு நுந்தா விளக்கு எரிப்பதற்காக நூற்றெண்பது ஆடுகளை வழங்கியிருக்கிறார்கள். களப்பாளன் தன்னிச்சை 'சிறிஞர் கிழவன்' என்று கல்வெட்டில் குறிக்கப்படுவதால் அவன் சிறிஞரின் தலைவனாக இருத்தல் வேண்டும் என்பதை ஊகித்துணரலாம். (S.I.I. vol. XVII. No. 509). இந்தக் கல்வெட்டு கி.பி. 1000-ம் ஆண்டில் முதலாம் இராஜராஜ சோழனின் காலத்தில்

பொறிக்கப்பட்டிருப்பதால், இந்த கால அளவில் அதாவது இராஜராஜன் காலத்தில் களப்பிரர்கள் அரச பரம்பரையினர் எனும் நிலையிலிருந்து கீழிறங்கி கிராமத் தலைவன் நிலையில் தாழ்ந்து வாழ்ந்துள்ளனர் என்பதை உணர முடிகிறது.

இனி மற்றோர் கல்வெட்டு தரும் செய்தியினைப் பார்ப்போம். சோழ மாமன்னர் முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் எய்தளூர் என்னும் ஊரைச் சார்ந்த களப்பாளன் செல்லையன் தொன்னம்பி என்பான் தம் மனைவி உமை நங்கையின் நன்மையைக் கருதி கங்கை கொண்ட சோழ வளநாட்டுப் பட்டான் பாக்கை நாட்டு சோழ குலவல்லி கல்லூரில் உள்ள திருக்கண்ணீஸ்வரமுடைய மகா தேவர்க்கு நுந்தா விளக்கு எரிப்பதற்காக கொடை அளித்திருக்கிறான். இது நடைபெற்ற காலம் கி.பி. 1092. (S.I.I. vol. XVII No. 164)

அதுபோலவே குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலத்திலேயே அதாவது கி.பி. 1905-ல் மற்றொரு களப்பாளனின் மகள் தியாகவல்லி, வளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருமழைப்பாடி உடைய மகாதேவர்க்கு நுந்தா விளக்கு அமைத்த செய்தியும் தெரியவருகிறது. இந்த களப்பாளன் இராஜேந்திர சோழ வளநாட்டு வண்டாழைக் கூற்றத்துச் சிற்றாமூர் என்னும் ஊரைச் சார்ந்தவன். இவனைக் கல்வெட்டு 'சிற்றாமூர் உடையான் பெருமான் கற்பகமான களப்பாள ராஜர்' என்று குறிப்பிட்டு சொல்கிறது. (S.I.I. vol. v. No 640). 'உடையான்' என்று வருவதால் இவன் நிலம் (வயல்) படைத்தவனாக இருத்தல் வேண்டும். அவ்வாறெனின் ஓரளவு செல்வச் செழிப்புடன் திகழ்ந்திருப்பான் என்று கருத இடமுண்டு.

இனிவரும் செய்தி இரண்டாம் குலோத்துங்க சோழனின் காலத்தைச் சார்ந்தது. அந்நாளில் அதாவது கி.பி. 1133-1150 கால வரையறையில் களப்பாளன் ஒருவன் அரசு அதிகாரியாக இருந்துள்ளான். அவன் பெயர் கங்கை கொண்ட சோழன் களப்பாளன் என்பதாம். அரசனால் வரிவிலக்கு அளிக்கப்பட்டு வழங்கப்படும் நிலங்கள் சம்பந்தப்பட்டதான பட்டயங்களில் இவனது கையெழுத்தும் இன்றியமையாததாகக் கருதப்பட்டிருக்கிறது. (EP. Ind. vol. No.31) இதன் காரணத்தால் இவன் வருவாய்த்துறை சார்ந்த அதிகாரியாக இருந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

தொண்டை நாட்டிலும் ஏறக்குறைய இதே கால அளவில் நெற்குன்றம் என்ற ஊரில் களப்பாளன் ஒருவன் இருந்துள்ளான். இவன் நெற்குன்றம் கிழான் என்று குறிப்பிடப்படுவதால் இவன் அவ்வூர்த் தலைவனாக விளங்கியிருக்கலாம். அதுமட்டுமின்றி இவன் சிறந்த கவிஞர் பெருமானாகவும் திகழ்ந்துள்ளான்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள திருப்புகலூர் தலத்து இறைவன் மீது 'திருப்புகலூர் அந்தாதி' எனும் நூலை யாத்துள்ளான். அவ்வந்தாதியின் இறுதி வரியில் 'களப்பாளன் நெற்குன்ற வாணன் அந்தாதிக் கலித்துறையே!' என்று

அமைத்து அதனை எழுதியவன் நெற்குன்றவாணனே என்பதைப் புலப்படுத்தியுள்ளான்.

இவன் தனது பெயரால் திருப்புகலூரில் ஒரு சாலை அமைத்து அதில் பிராமணர்களுக்கு உணவு அளிப்பதற்காகச் சாலைப்புறமாக இறையிலி நிலம் அளித்திருக்கின்றான் என்ற செய்தி திருப்புகலூர்க் கல்வெட்டினால் தெரியவருகிறது. *(EP. Ind. vol. No. 31)*

## அச்சுதக் களப்பாளன்:

காவிரிப் பூம்பட்டினத்தை தலைநகராகக் கொண்டு களப்பிர மன்னன் அச்சுதவிக்கிராந்தன் எனும் அரசன் ஆட்சிபுரிந்துள்ளான். ஆனால் இங்கே கூறப்படும் நபர் அவனின்றும் வேறுபட்டவர். இவன் கி.பி. 12-ம் நூற்றாண்டில் சோழ நாட்டில் வாழ்ந்து வந்த சாதாரணக் குடிமகன். சிவ தத்துவ விளக்க நூலான சிவஞான போதம் என்ற நூலின் ஆசிரியரான மெய்கண்டாரின் தந்தையாரே இவன்.

## மேலும் சில சான்றுகள்:

இரண்டாம் இராஜாதி இராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் காலங்களில் இந்த மன்னர்கள் வரிவிலக்கு அளித்து வழங்கப்படும் நிலக்கொடைகளில் விழுப்பாதி ரையர், நுனம்பாதி ரையர், பாண்டியாதி ரையர், பல்லவ ரையர் போன்ற பெயர்களுடன் களப்பாள ரையர் என்பவரும் கையொப்பமிட்டிருக்கின்றார். ஆகவே களப்பாள ரையர் என்பவர் இந்த மன்னர்கள் காலத்தில் சோழ அரசு அதிகாரியாக விளங்கியிருக்கிறார் என்ற உண்மை புலப்படும். இவர் வருவாய்த்துறை அதிகாரியாக இருந்திருக்க வேண்டும். ஆதலால்தான் நன்கொடை (நிலக்கொடை) அளிக்கும்போது இவரது கையொப்பமும் தேவைப்பட்டுள்ளது.

தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் நடராஜர் கோயில் இரண்டாம் பிரகாரத்தின் மேற்குச் சுவரில் எழுதப்பட்டிருக்கும் ஒரு கல்வெட்டில், கேரள ராஜன் என்பவன் நடராஜர் கோயிலுக்கு நிலக்கொடை அளிப்பதை அரசன் அனுமதித்த செய்தியும் அந்த அனுமதிப்புப் பத்திரத்தில் விழுப்பதி ரையர், நுனம்பாதி ரையர், பாண்டியாதி ரையர், வயிராதி ரையர், நந்திய ரையர், ராஜவல்லப பல்லவ ரையர், களப்பாள ரையர், ஆகியோர் கையெழுத்திட்ட செய்தி காணப்படுகிறது. *(S.I.I. vol. III No 86)*

களப்பாள ராயன் என்ற இந்த அதிகாரி எந்தெந்த நிலங்கள் யார் யாருக்குச் சேரவேண்டும் என்று வரையறுக்கும் பெரும் பொறுப்பில் இருந்திருக்கின்றான் என்பது மற்றொரு கல்வெட்டால் புலனாகிறது. (S.I.I. vol. V No 708)

மேலும் களப்பாள ராயரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் மற்றொரு சான்று தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர், மகாலிங்கசுவாமி கோயிலின் இரண்டாவது பிரகாரத்திலுள்ள தென்புற மதிலில் எழுதப்பட்டுள்ள கீழ்க்கண்ட வரிகள் என்பதைக் காணலாம்.

"இந்நிலம் உட்பட நிலம் பதினேழரையே நாலுமாக்காணி
யும் பதினெட்டாவது முதல் இத்தேவர்க்கு திருநாமத்
துக்காணியும் தேவதான இறையிலியுமாய்
நிற்கக் கடவதாக பெறவேணுமென்று களப்பாள
ராயன் நமக்குச் சொன்னமையில் இப்படி
செய்யக் கடவதாகச் சொல்லி கணக்கிலும்
இட்டுக் கொள்ளக் கடவர்களாக வரிக்குக்
கூறு செய்வார்களுக்கும் சொன்னோம்."

இதில் பதினேழரையே நாலுமாக்காணி நிலம் திருநாமத்துக் காணியாகவும், தேவதான இறையிலியாகவும் திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமிக்குச் சேரவேண்டும் என்பதைக் களப்பாளராயன் என்ற அதிகாரி, அரசனிடம் கூற, அதன் பேரில் அரசன் அவ்வாறே ஆணை பிறப்பித்து, அதனைக் கணக்கில் குறித்துக் கொள்ளுமாறு நிலவரி நிர்ணயிக்கும் அலுவலர்களிடம் தெரிவித்துள்ளான். ஆதலால் களப்பாளராயன் என்ற அதிகாரி மூன்றாம் குலோத்துங்க சோழனின் அரசில் பெரும் பொறுப்புமிகு அதிகாரியாக இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

## சேக்கிழாரும் களப்பாளரும்:

'சேக்கிழான் பாலறாவாயன் களப்பாளராயன்' என்ற ஒருவர் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கோட்டூர் மூலஸ்தானமுடையார் கோயிலுக்கு விளக்கு எரிப்பதற்காக பொன் அளித்துள்ளான். இவன் குன்றத்தூர் நாட்டு குன்றத்தூரைச் சேர்ந்தவன் என்று தஞ்சை மாவட்டம் மன்னார்குடி வட்டாரத்திலுள்ள கோட்டூரில் காணப்படும் கல்வெட்டு தெரிவிக்கிறது. (Journal of Madras University, vol 21, No

*1. The Kalabhras in the Pandùa Country by M. Arunachalam, page 59)* சில கணிப்புகள் இவன் திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் பெருமான் இளவல் என்று எடுத்துரைக்கிறது.

இவனே மூன்றாம் இராஜராஜன் காலத்தில் திரு அறத்துறை என்னும் ஊரிலுள்ள கோயிலில் ஞானசம்பந்தர் பெருமானிடமிருந்து முத்துப் பல்லக்கு பெறும் விழாவைக் கொண்டாடும் பொருட்டு நிலக் கொடை அளித்திருக்கிறான் என்றும் தெரிய வருகிறது. *(S.I.I. vol. XVII, No 600, 602)* இவன் சேக்கிழார் பெருமானின் தம்பி என்று தெரியவருமிடத்து சேக்கிழார் வம்சமும் களப்பாளர் குலம் என்ற கணிப்புக்கு வருதல் தவறல்ல. எனவே களப்பிரர் (களப்பாளர்) ஒரு காலத்தில் ஆளும் சக்தியாக இருந்தது மாறி காலப்போக்கில் தமிழினத்தின் ஒரு பகுதியாகவே ஒன்றுகலந்து மருவியிருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது.



**சேக்கிழார்**

இதற்கான சான்றுகளில் மற்றொன்று சோழ மன்னர் மூன்றாம் இராஜேந்திரனின் காலத்தைச் சேர்ந்தது. இதுவும் ஒரு கோவில் நன்கொடை தொடர்பான கல்வெட்டு கூறும் சான்றாகும். சுத்தமல்லி வளநாட்டு, பாம்புணி கூற்றத்தில் இருந்த சிறுநாங்கூரைச் சேர்ந்த அழகப்பெருமாளான களப்பாளராயனும், பாண்டிகுலாசினி வளநாட்டு ஆற்காட்டு கூற்றத்து திருவிடைமருதூரைச் சேர்ந்த வினசயபாலனும் திருவாரூரில் ராஜாக்கள் தம்பிரான் சன்னதித் தெரு வீதியின் தெற்குப் பக்கத்தில் அழகிய திருச்சிற்றம்பலமுடையாரையும், பொற்பதிக்கு நாயக ஈஸ்வரமுடையாரையும்

எழுந்தருளி வித்ததையும், அக்கோயில்களில் பூஜை சிறப்புற நடப்பதற் காகக் கொடை அளித்ததையும் கல்வெட்டொன்று எடுத்துரைக் கிறது. இந்தக் கல்வெட்டு மூன்றாம் இராஜராஜன் காலத்தில் எழுதப்பட்டது. திருவாரூர் தியாகராஜ சுவாமி கோயில் பிரகார மேற்குச் சுவரில் இன்னமும் நல்ல நிலையில் காண முடிகிறது.

மேற்குறிப்பிட்ட கல்வெட்டில் 'அரையன் அழகப் பெருமாளான களப்பாளராயன்' என்றே குறிக்கப்பட்டுள்ளது. இவன் ஒரு குறுநில தலைவனாக இருக்க வேண்டும், என்றே கணித்துள்ளனர். கி.பி. 1251 முதல் 1278 வரை ஆண்ட சடையவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் சிதம்பரத்தில் ஒரு களப்பாள ராயன் இருந்து வந்துள்ளான். இவன் தில்லை மாகாளிக்கு சில அறக்கொடைகள் அளித்திருக்கிறான் *(Journal of Madras University, The kalabhras in the Pandia Country, by Arunachalam, page 59)*

மேலும், சோழபுரத்தைச் சேர்ந்த உத்தம சோழபுரச் சதுர்வேதிமங்கலத்தில் நுழைவாயில் மண்டபம் ஒன்றைக் களப்பாளராயர் என்பவர் வீரபாண்டியன் காலத்தில் எடுப்பித்திருக்கிறார் *(Ibid)* அம்மண்டபம் களப்பாளராயர் மண்டபம் என்று அழைக்கப்பட்டது.

கி.பி. 1403-ல் சடையவர்மன் விக்கிரம பாண்டியன் காலத்தில் தென்னாற்காடு மாவட்டம், திருச்சாபுரம் மங்கல புரீச்வரர் கோயில் கருவறையின் வடக்குப் பக்கச் சுவரில் கல்வெட்டொன்று எழுதப்பட்டுள்ளது. அது நிலக்கொடை பற்றிக் கூறும் கல்வெட்டாகும். அந்த தானத்தை (கொடை) அளித்து கையொப்பமிட்டவர்களில் களப்பாளராயன் என்பானும் காணப்படுகிறான். இவன் விக்கிரம பாண்டியன் காலத்தில் இருந்த அதிகாரியாவான். *(S.I.I. Vol. XVII No 130).*

விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவராயர் காலத்தில் வாழ்ந்த இரு சமய விளக்கம் என்னும் சிறந்த தமிழ் நூல் எழுதிய ஹரிதாசர் களப்பாளராயர் என்று குறிக்கப்படுகிறார். *(Journal of Madras University. The kalabhras in the Pandia Country, by Arunachalam page 59)*

இனி கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை தமிழகத்தை முழுமையாக ஆட்சி புரிந்த களப்பிரர்கள் பாண்டிய, பல்லவ எழுச்சியின் முன் நிலைகுலைந்து தங்கள் ஆட்சியதிகாரத்தை இழந்ததுடன் தொடர்ந்து இந்த மண்ணில் குறுநிலத் தலைவர்களாகவும், அரசு சார்ந்த உயர் அலுவலர்களாகவும், தமிழ் விற்பன்னர்களாகவும், ஆங்காங்கே தங்களை வெளிக்காட்டியிருப்பதை இதுகாறும் உரைத்த செய்திகள் நன்கு விளக்கந்தருபவை.

காலப்போக்கில் இந்த மண்ணின் மைந்தர்களுடன் ஒன்றறக் கலந்து தங்கள் முக விலாசத்தைத் தொலைத்தவர்கள் என்றே களப்பிரர்களைப் பற்றி

*முடிவெடுக்கத் தோன்றுகிறது. விஜயநகர ஆட்சியின் காலத்தில் ஆந்திர மற்றும் தெலுங்கானா பகுதிகளிலிருந்து இங்கே காலூன்றி தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்த அப்பகுதி மக்கள் இன்று வேறுபடுத்த இயலாவண்ணம் காணப்படுவது போன்றே அதினினினும் பல நூற்றாண்டு முன்னர் இங்கே வந்த களப்பிரர் இனத்து மக்கள், தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்து தமிழினமாகவே மாறியிருப்பதில் வியப்பில்லை அன்றோ!*

# 20

## களப்பிரர்களும் சமயங்களும்!

*களப்பிரர்கள் வைதீக (இந்து) மதத்துக்கு எதிரானவர்கள் என்றும், சமண, பௌத்த மதங்களின் ஆதரவாளர்கள் என்றும் பொதுவானதோர் கருத்து நடைமுறையில் இருந்து வருகின்றது. சமண சமயத்தை தமிழகத்தில் பரப்பப் பெரிதும் தீவிரமாக இருந்தவர்கள் என்றும் இங்கே வேரூன்றியிருந்த சைவ, வைணவ மதங்களை அழிக்க முயற்சித்தவர் என்றும் பலமான குற்றச்சாட்டு களப்பிரர்கள் மீது வைக்கப்படுவதுண்டு. இவைகள் அனைத்தும் அனுமானங்களே தவிர, இவர்கள் இன்ன மதத்தை ஆதரித்தவர்கள் என்று அறுதியிட்டுச் சொல்லும் நிலைக்கு வரலாற்றுத் தெளிவுகள் வசப்படவில்லை.*

*களப்பிரர்கள் இங்கே ஆட்சி செய்யத் துவங்கிய அதே கால அளவை ஒட்டியே பல்லவ ஆதிக்கமும் தொண்டை மண்டலத்தை மையப்படுத்தி உருவானது. இந்த நிகழ்வுகள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பகுதியில் நடைபெற்றதன் விளைவே கடைச்சங்கம் அழியக் காரணமாக அமைந்தது என்பது வரலாற்று ஆய்வாளர்கள் கருத்து.*

*களப்பிரர்களும், பல்லவர்களும் வேற்றுமொழிச் சார்பினராய், புறச் சமயங்களைச் சார்ந்தவர்களாய் இருந்த காரணத்தால் அவர்கள் தமிழ் மீதும் இங்கிருந்த வைதீக மதங்கள் மீதும் போதிய கவனஞ் செலுத்தவில்லை. வடமொழி, பாலி, பிராகிருதம் போன்ற மொழிகளையே இவர்கள் ஆதரித்தனர். இவர்களது ஆதிக்கம் வேரூன்றத் துவங்கிய காலத்தில் தமிழ் மற்றும் அது சார்ந்த கலை, பண்பாட்டுச் செறிவுகள் அனைத்தும் இந்த இருபாலராலும் நசுக்கப்பட்டதன் விளைவால் இந்த தமிழ் மண் முன்னெரப்போதும் கண்டிரா வீழ்ச்சியொன்றை சந்தித்தது. அதனாலேயே கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முதற்பகுதி முதல் கி.பி. ஆறாம் நூற்றாண்டு இறுதி வரையிலான காலம் தமிழகத்தின் இருண்ட காலம் என்று வரலாற்று அறிஞர்கள் சுட்டிக் காட்டினர். (The pallava by C.J. Dubreuil, p 10 Administration and Social Life under The Pallavas by Dr. C. Meenakshi, வேள்விக்குடிச் செப்பேடுகள்)*

*இனி களப்பிரர்கள் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள் என்ற கூற்றுக்கான காரணங்களைப் பார்ப்போம். முதலாவதாக இவர்களின் துவக்க கால (ஆதி) இருப்பிடமான மைசூர் மாநிலத்தில் சரவணபெலகுலா என்ற பகுதியானது சமண சமயம் தழைத்தோங்கிய பகுதி என்பது. அதனால் அங்கிருந்து வந்தவர்களான*

களப்பிரர்கள் சமணர்களாக இருக்கவேண்டும் என்பது கணிப்பு. இரண்டாவதாக இவர்கள் வந்த நாளில் தமிழகத்தில் சமண சமயம் தழைத்தோங்கி வளர்ந்திருந்த காரணத்தால் இவர்களும் சமண சமய சார்பு கொண்டவர்கள் என்பது. மூன்றாவதாக வேள்விக்குடிச் செப்பேட்டில் வேள்வி நிறைவுறச் செய்த அந்தணர்களுக்கு, பாண்டிய மன்னரால் தானமாகத் தரப்பட்ட 'வேள்விக்குடி' என்னும் ஊர் களப்பிரர் காலத்தில் திரும்பப் பெறப்பட்டுவிட்டது என்று கூறப்படுவதால் களப்பிரர் வைதீக மதத்துக்கு எதிரானவர்கள், சமண சமயத்தவர் என்று கூறப்படுகிறது. இனி இந்த காரணங்கள் அனைத்தும் சரியானவைதானா என்ற ஆய்வுக்கு வருவோம்.

முதலாவதாக களப்பிரர்கள் சரவணபெலகுலா பகுதியி லிருந்து வந்தவர்கள் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்று. ஆனால் அப்பகுதியிலிருந்து வந்தவர்கள் என்பதால் அவர்கள் சமண சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதற்கான ஆதாரங்கள் ஏதும் இதுவரை கண்டறியப்படவில்லை.




**வேள்விக்குடிச் செப்பேடு**

அடுத்து கூறப்படும் காரணம் சமண மத வளர்ச்சி. களப்பிரர்கள் இங்கு வந்த பின்புதான் சமண சமயம் செழித்தோங்கியது என்ற வாதம் ஒப்புக்கொள்ளக் கூடியதன்று. ஏனெனில் தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ் இலக்கியங் களின் தோற்றம் உருவான காலத்திலேயே இங்கே சமண, பௌத்த மதங்கள் செழிப்புடன் விளங்கி வந்துள்ளன என்பது அவ்விலக்கியங்கள் மூலம் அறிந்துகொள்ளலாம். இவ்விலக்கியங்களில் காலத்தால் முந்தியதாக அறியப்படும் தொல்காப்பியம் யாத்த

தொல்காப்பியரே சமணர் என்றொரு கருத்து நிலவுகிறது. அதனை முழுமையாக இலக்கிய உலகம் ஒப்புக் கொள்ளவில்லை எனினும் அவர் வாழ்ந்த காலத்தில் சமண சமயம் இங்கே பரவலாக விரவியிருந்தது என்பதனை மறுப்பதற்கில்லை.

"தொல்காப்பியர் சைனரென உறுதிகூற முடியாமற் போனாலும் அவர் நூல் கொண்டு தமிழ் வழக்கில் சமணக் கொள்கைகள் பரவியதென தெளிவாக அறியலாம்" என்று பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் தமது 'சமணத் தமிழ் இலக்கிய வரலாறு' என்ற நூலில் எடுத்துக் காட்டுகிறார். இதை திருக்குறளும் சமண சமய சார்பு அறநெறிகளை எடுத்துரைக்கும் பாங்கால் அக்கால அளவிலும் சமணம் தமிழகத்தில் பரவியிருந்ததை உணரலாம்.

திருக்குறளுக்குப் பின்னர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருவான இருபெருங் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை சமண, பௌத்த மத நெறிகளை காப்பியத்தின் ஊடே பரவலாகப் பேசியிருப்பதும், அதன் ஆசிரியர்களான இளங்கோவடிகள் சமண சமயத்தைச் சார்ந்தவராகவும், சீத்தலைச் சாத்தனார் பௌத்த நெறியாளராக இருந்ததையும் நோக்குங்கால் இவ்விரு மதங்கள் களப்பிரர் வருகைக்குப் பன்னெடுங்காலம் முன்பே தமிழ்நிலத்தே வேரூன்றியிருந்தது என்பது புலனாகும்.

இனி மூன்றாவதாகக் கூறப்படும் வேள்வி நிறைவு செய்யும் பொருட்டு பல் யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டிய மன்னனால் தரப்பட்ட (அந்தணர்களுக்கு) வேள்விக்குடி என்னும் ஊரைக் களப்பிரர் திரும்பப் பெற்றுக் கொண்டது சமயக் காழ்ப்பினால் என்று கூறப்பட்டாலும் அதை நிறுவப் போதிய சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை. ஆக களப்பிரர்கள் சமண சமயம் சார்ந்தவர் என்ற கணிப்பை அறுதியிட்டு சொல்வதற்கில்லை.

## களப்பிரர் பௌத்தர்களா?

முதன்முதலாக தமிழகத்தை அடைந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்ற களப்பிரர்கள் பௌத்த மதத்தைச் சார்ந்து ஒழுகியிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. ஏனெனில் கி.பி.5-ம் நூற்றாண்டில் காவிரிப் பூம்பட்டினத்தை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த அச்சுத விக்கிராந்தன் என்பான் பௌத்த சமயம் சார்ந்தவன் என்பதற்கு சான்றுகள் உண்டு. அவன் தனது ஆட்சிக் காலத்தில் பௌத்த மத சார்பு நூல்கள் பல எழுதுவதற்கு உதவி புரிந்துள்ளான் என்பதும் அதிலொன்று. காவிரிப் பூம்பட்டினம் அந்நாளில் பௌத்த மதம் சிறப்புற மேலோங்கியிருந்ததற்கு அகழ்வாய்வில் புத்தவிகாரை, புத்தபாதம் போன்ற பௌத்த மதசார்பு பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதும், மேலையூரில் கிடைத்துள்ள மைத்ரேயர் உருவமும் சான்றாக அமைகின்றன.

முன்னரே குறிப்பிட்டபடி மணிமேகலை காப்பியம், காவிரிப்பூம்பட்டினத்தில் பௌத்த மதம் அந்நாளில் பெற்றிருந்த செல்வாக்கை எடுத்துரைப்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. பௌத்தம் தமிழகத்தில் மட்டுமின்றி அண்டை நாடான இலங்கையிலும் வேரூன்றி கிளை பரப்பியிருந்தது.

இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்கும் பௌத்த மதத் துறவிகள் சென்று வந்துகொண்டிருந்ததும் வரலாறு உரைக்கும் காட்சி. பௌத்த மதத்தின் தலைமைப் பீடமாக காவிரிப்பூம்பட்டினம் உட்பட தமிழகத்தின் சில பகுதிகள் திகழ்ந்துள்ளன. இங்கிருந்து பௌத்த பிக்குகள் (துறவிகள்) சீனம் முதலிய கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று புத்த மதத்தைப் பரப்பும் செயலில் ஈடுபட்டுள்ளனர். உறையூர் (உரகபுரம்), நாகப்பட்டினம், சங்கமங்கை, பூதமங்கலம் மயூரபட்டினம், மதுரை, காஞ்சி எனப் பல்வேறு தலங்கள் பௌத்த மதம் சிறப்புறத் திகழ்ந்த இடங்களாகும். நாகப்பட்டினத்தில் கி.பி. 8-ம் நூற்றாண்டு முன்னதாகவே பௌத்த ஸ்தூபி இருந்ததாகவும் வரலாற்றுச் செய்தி உரைக்கிறது. (நடனகாசிநாதன், களப்பிரர் சமயம்).

ஆக களப்பிரர்கள் இங்கே ஆட்சியமைத்த காலத்து பௌத்த மதத்தின் ஆளுமை மேலோங்கியிருந்ததால், களப்பிரர்கள் தங்கள் சமயச் சார்பினை பௌத்தத்துடன் சேர்ந்து ஒழுகியிருத்தல் வேண்டும் என்ற கணிப்புக்கு வரலாம். அதனால் சில குறிப்பிட்ட கால அளவு இவர்கள் பௌத்த மதத்தையே தம் சமயமெனக் கொண்டிருக்க வாய்ப்பு உண்டென்ற முடிவெய்த இயலுகிறது.

## சாக்கிய நாயனார்:

பௌத்தம் மேலோங்கிய காலத்தில் வாழ்ந்த சிவதொண்டர் சாக்கிய நாயனார். இவர் பௌத்த மதம் சார்ந்தவர். பௌத்த மதத்துக்கு சாக்கியம் என்றோர் பெயருண்டு. அதனாலேயே இவர் சாக்கிய நாயனார் என்று அழைக்கப்பட்டார். பெரிய புராணத்தில் (திருத்தொண்டர் புராணம்) இவரது வாழ்வியல் பற்றி பேசப்படுகிறது. காலத்தால் இவர் கி.பி. 7-ம் நூற்றாண்டுக்கு சில நூற்றாண்டுகள் முன்னதாக வாழ்ந்தவர். தான் சார்ந்த சாக்கிய மதத்தில் இருந்தவாறே சிவனை வழிபட்ட இந்தத் திருத்தொண்டர் தொண்டை நாட்டிலுள்ள சங்கமங்கை என்னும் ஊரில் பிறந்தவர்.

இவர் காஞ்சிபுரம் சென்று அங்குள்ள பவுத்த துறவிகளில் மேன்மையானவர்களிடம் சமயக் கல்வி பயின்று, தக்க பருவம் வந்ததும் துறவு நிலை பூண்டு பௌத்த பிக்குகளுக்கான ஆடையணிந்து சமயநெறி ஒழுகத் துவங்கினார். சிறிது காலஞ்சென்றதும் இவருக்கு சிவ வழிபாடு மீது நாட்டம் ஏற்பட்டது. ஆனால் பௌத்தத்திலிருந்து விலகி சிவத்தொண்டு செய்வதென்பது இயலாச் செயல் எனும் நிலையில் பௌத்தம் அன்று வலிமை பெற்றிருந்தது.

*எனவே தனது பௌத்த பிக்கு நிலையிலேயே சிவ வழிபாட்டைத் தொடர அவர் உறுதி பூண்டார். அதன்படி ஒரு புதர் அருகே ஆதரவற்று இருந்த சிவலிங்கத்தை தம் மனதுள் அர்ச்சனை செய்தவாறு சிறு கற்களை மலர்களாக பாவித்து அந்த லிங்கத்தின் மீது விட்டெறிந்தார். இந்த பூசைக்குப் பின்னரே உணவு உட்கொள்ளும் வழக்கத்தையும் மேற்கொண்டார். இவரது இந்த செயல் பௌத்தர்களுக்கு சிவ காழ்ப்புணர்வாக தென்பட்டதால் வாளாவிருந்தனர். இது அந்நாளைய பௌத்த மத ஆதிக்கத்துக்கு உரை கல் என்றே கூறலாம்.*

**புத்ததத்த மகாதேரர்:**

*கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த இவர் சோழ நாட்டுத் தமிழர். பௌத்த மத துறவியான இவர் அந்த சமயம் சம்பந்தமான நூற்கள் பலவும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவர். தாய்மொழியாம் தமிழ் தவிர, பாலி மொழியிலும் மிகத் தேர்ச்சி பெற்றவர். இவரது பெயரில் பின் பாதியில் பொதிந்திருக்கும் 'தேரர்' என்ற சொல் பௌத்த பிக்குகளில் சிறந்தவர்க்கு அளிக்கப்படும் சிறப்பு பெயர். தேரர் மட்டுமின்றி 'ஆச்சாரியன்' என்ற சிறப்பு பெயரினையும் இவர் அடைந்துள்ளார். ஆச்சாரிய புத்த தத்தரேயர் என்றே இவர் அழைக்கப்பட்டார்.*

*கி.பி. 409-430 கால அளவில் இலங்கையை ஆட்சிபுரிந்த ஸ்ரீகுட்டனின் காலத்தில் இவர் இலங்கைக்குச் சென்று அங்கு அனுராதபுரத்திலிருந்த பௌத்த விகாரையில் (மகாவிகாரை) தங்கியிருந்தார். அங்கிருந்தபோது அவ்விகாரையின் தலைவரான சங்கபால மகாதேரரின் வேண்டுகோளை ஏற்று, இவர் உத்தரவினிச்சயம் என்னும் நூலை எழுதினார்.*

*இவர் காவிரிப்பூம்பட்டினம், உறையூர், பூதமங்கலம், காஞ்சி எனப் பல்வேறு ஊர்களில் அமைந்திருந்த பௌத்த விகாரைகளில் தங்கியிருந்தார் என்று தெரியவருகிறது. காவிரிப் பூம்பட்டினத்தில் களப்பிர அரசனின் அமைச்சராக இருந்த கண்ணதாசனின் (அவரால் கட்டப்பட்ட) பௌத்த விகாரையில் இவர் தங்கிய நாளில் தமது மாணவரான புத்தசிகா என்பவரின் வேண்டுகோளை ஏற்று 'மதுராந்த விலாசினி' என்ற நூலை எழுதினார். (இது திரிபிடகத்தினுள் ஒன்றான சூத்திர பிடகத்தில் குட்டக நிலையம் எனும் பிரிவில் புத்த வம்சம் எனும் உட்பிரிவுக்கு உரையாகும்). இந்நூலுக்கு புத்த வம்சாட்டகதா (புத்த வம்சத்தின் அர்த்தமுள்ள கதை) என்றும் மற்றொரு பெயர் உண்டு. இவர் சோழ நாட்டிலுள்ள பூதமங்கலத்தில் வேணுதாசர் என்பவர் கட்டிய பௌத்த விகாரையில் தங்கியிருந்தபோது, தமது சீடரான புத்தசிகா என்பவரின் வேண்டுகோளின்படி 'வினய வினிச்சயம்' என்னும் நூலையும் எழுதினார். இது களப்பிர அரசர் அச்சுதவிக்கந்தன் ஆட்சியில் எழுதப்பட்டது. இதுதவிர புத்ததத்த மகாதேரர் 'அபிதம்மாவதாரம்' என்னும் நூலையும் எழுதியுள்ளார். இந்நூல் திரிபிடகங்களில்*

ஒன்றான அபிதம்மபிடகத்துக்கு பாயிரம் போன்றது. சுமதி எனும் தமது மற்றொரு மாணாக்கரின் வேண்டுகோளை ஏற்று இந்நூல் இவரால் எழுதப்பட்டது. இத்துடன் ரூபாரூப விபாகம், ஜினாலங்காரம் ஆகிய நூற்களும் இவர் யாத்தவையே. அனைத்து நூல்களும் பாலி மொழியிலேயே எழுதப்பட்டன. இவரும் புகழ்பெற்ற புத்தகோஷ மகாசிரியரும் சமகாலத்தவர். இவர்கள் ஒருவரையொருவர் நேரில் சந்தித்துள்ளனர். *(Ibid)*

## சுமதி, ஜோதிபாலர்:

புத்ததத்த மகாதேரர் காலத்தில் வாழ்ந்த தமிழ் பௌத்த பெரியார்கள் (கி.பி.5-ம் நூற்றாண்டு) சுமதி, ஜோதிபாலர் ஆகியோர். காஞ்சிபுரம் பௌத்த விகாரையில் தங்கியிருந்த இவர்கள், அங்கு புத்தகோஷ ஆசாரியார் வருகை புரிந்தபோது அவரிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் ஸாரத்த பகாசினி, மனோரதபூரணீ என்னும் இரண்டு நூற்களை எழுதினார். இவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க புத்தகோஷர் இலங்கை அனுராதபுரத்திலுள்ள புத்த விகாரைக்குச் சென்று மத நூல்களை ஆய்வு செய்தார். இச் செய்தியினை இவர், தாம் எழுதிய 'மனோரத பூரணீ' எனும் நூலில்,

> ஆயாசிதோ ஸுமதினாதேரேன பத்தந்த ஜோதிபாலேன
>
> காஞ்சிபுரா திஸுமயா புப்பே ஸத்திம் வஸம்தேன

என்று குறிப்பிட்டுள்ளார். (மயிலை சீனிவேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம்)

## சங்கமித்திரர்:

இந்த பௌத்த பெரியார் சோழ நாட்டைச் சேர்ந்த தமிழர். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 4-ம் நூற்றாண்டின் முற்பாதியாகும். மகாயான பௌத்த மதத்தைச் சேர்ந்த இவர் இக்கொள்கையினை இலங்கையில் பிரசாரஞ் செய்யச் சென்றார். இவர் சென்ற நாட்களில் இலங்கையினை ஆட்சி செய்தவர் கோதாபயன் (மேகவண்ணாபயன்) என்பவர். (கி.பி. 302-315) இலங்கையில் அந்நாளில் தேரவாதம் பௌத்தம் என்ற (ஹீனயானம்) பௌத்த பிரிவே ஆதிக்கம் பெற்றிருந்தது. சங்கமித்திரரின் வருகையால் மனந் தெளிந்த அனுராதபுரம், அபயகிரி விகாரையில் இருந்த அறுபது பௌத்த பிக்குகள் மகாயான பௌத்த மார்க்கத்தை மேற்கொண்டனர். இதனைப் பொறுக்காத மகா விகாரையிலிருந்த பௌத்த பிக்குகள் (ஹீனயானப் பிரிவு) அபயகிரி விகாரை பௌத்த பிக்குகள்

மீது புகார் தெரிவிக்க அரசனிடம் சென்றனர். அரசன் அது கேட்டு சினமுற்று அபயகிரி புத்த பிக்குகள் அறுபது பேரையும் நாடு கடத்த உத்தரவிட்டான்.

அவ்வாறு நாடு கடத்தப்பட்ட பிக்குகள் சோழ நாட்டை வந்தடைந்து சங்கமித்திரரை சந்தித்தனர். விபரம் தெரிந்த சங்கமித்திரர் இலங்கை சென்று தமது மகாயானக் கொள்கையை நிலைநாட்டத் துணிவு மேற்கொண்டார். அவ்வாறே இலங்கை சென்று மகாயான பௌத்த மத கொள்கையினைப் போதனை செய்தார். தேரவாத (ஹீனயான) பௌத்த பிக்குகள் இதுபற்றி அரசனிடம் எடுத்துச் சொல்லவே அரசன் சங்கமித்திரரை அழைத்து தேரவாத பௌத்தப் பிரிவின் தலைவரான சங்கபாலருடன் சமய வாதம் செய்யுமாறு வேண்டினான்.

அவ்வண்ணமே இருவரும் அரசவையில் வாதம் மேற்கொண்டனர். வாத இறுதியில் சங்கமித்திரர் (மஹாயானம்) வெற்றி பெற்றார். இவரது ஆழ்ந்த புலமை மற்றும் அறிவுத் திறமையை மெச்சிய அரசன், தமது பிள்ளைகளான ஜேட்டதிஸ்ஸன், மகாசேனன் ஆகியோரை இவரிடம் கல்வி கற்க மாணாக்கராக்கினான். இதன் பின்பு மகாயான பௌத்தம் இலங்கையில் பரவலாயிற்று.

அரசன் கோதாபயன் மரணமுற்ற பின் மகன் ஜேட்ட திஸ்ஸன் முடிசூடினான். (கி.பி. 323-333) இவனது காலத்தில் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் சங்கமித்திரர் தமிழகம் புகுந்து சோழ நாட்டில் வசிக்கலானார். பின்னர் ஜேட்டதிஸ்ஸனின் தம்பி மகாசேனன் ஆட்சிக்கு வந்த நேரம் (கி.பி. 334-361) சங்கமித்திரர் மறுபடியும் இலங்கை சென்று தமது மகாயான பௌத்த கொள்கைகளைப் பரப்பும் பணியில் ஈடுபட்டார். இப்பணியில் இவருக்கு இலங்கை அமைச்சன் சோணன் என்பவன் உதவிகரமாக இருந்தான். இதன்மூலம் பௌத்தத்தின் மற்றொரு பிரிவான தேரவாத (ஹீனயானம்) பிரிவின் காழ்ப்புணர்வுக்கு ஆளான சங்கமித்திரர் பகைமை முற்றிக் கொல்லப்பட்டார்.

## புத்தமித்திரர்:

இப்பெயரில் அறியப்பட்ட பௌத்த தேரர்கள் பலர் இருந்துள்ளனர். இங்கே குறிப்பிடப்படும் புத்ததேரர் களப்பிரர் காலத்தில் வாழ்ந்தவர். ‘மாயவரம்’ என்று தற்போது அழைக்கப்படும் மயூரப்பட்டினத்தில் இருந்த பௌத்த விகாரை ஒன்றில் இருந்து பௌத்த போதனை செய்தவர். புத்த கோஷாசாரியார் மயூரப்பட்டினத்துக்கு வந்தபோது, இந்த புத்தமித்திரர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ‘பஞ்சசூடானீ’ என்னும் நூலினை பாலி மொழியில் எழுதினார். இந்த நூல் திரிபிடகத்தின் ஒரு பகுதியான மஜ்ஜிம நிகாயத்துக்கு உரை நூலாகும்.

## போதிதர்மர்:

இவர் காஞ்சியை அரசாண்ட பல்லவ குல இளவரசர். இளமையிலேயே பௌத்த மதத்தின் மீது ஈர்ப்புக் கொண்டு பௌத்த பிக்குவானார். பௌத்தத்தில் இவர் தியான மார்க்கம் எனும் பிரிவைச் சார்ந்தவர். இவர் இங்கிருந்து பௌத்த கொள்கைகளை பரவச் செய்யும் பொருட்டு கி.பி. 520 அல்லது 525 கால அளவில் சீன தேசம் சென்றார். சீனம், ஜப்பான் ஆகிய நாடுகளில் அவர் தமது சமயக் கொள்கையினைப் பரப்பினார். இவரது போதனைகளை சீன தேசத்தவர் 'சான்' மதம் என்றும், ஜப்பானியர் 'ஜைன்' (Zen buddhism) என்றும் கூறுவர். போதிதர்மர் சீனத்தில் இருபத்தெட்டு சமயக்குரவர்களில் ஒருவராக வைத்து போற்றப்படுகிறார். இவருக்கென்று சீன, ஜப்பான் நாடுகளில் ஆராதனை (கோயில்கள்) நிலையங்கள் உள்ளன.

## ஆசாரிய திக்நாகர்:

'தின்னாகர்' என்றும் அழைக்கப்படும் இவர் காஞ்சிபுரத்துக்கு தென் பகுதியில் இருந்த சிம்மவக்த்ரம் (தற்போதைய சீயமங்கலம் என்று கருதப்படுகிறது) எனும் ஊரில் பிறந்தார். பிராமண குலத் தோன்றலான இவர் பௌத்த நூல்கள் பல தெளிவுறக் கற்று பௌத்த பிக்குவாக மாறினார். பின்னர் வட இந்தியா சென்றார். அங்கே புகழ் பெற்ற பௌத்த ஆசிரியர் வசுபந்து என்பவரிடம் மகாயான பௌத்த நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். அதன்பின் நாளந்தா பல்கலைக்கழகம் சென்று அங்கு பல நூற்களைக் கற்றறிந்தார்.

ஆச்சாரிய திக்நாகர் தர்க்க சாஸ்திரம் சிறப்புறக் கற்றவர். நியாயப் பிரவேசம், நியாயத்துவாரம் என்னும் இரு தர்க்க நூல்களை இவர் வடமொழியில் எழுதினார். பௌத்த மதத்தின் விஞ்ஞான வாதப் பிரிவை உண்டாக்கினார் என்றொரு கூற்றுண்டு. வசுபிந்து கி.பி. 420 முதல் 500 வரை வாழ்ந்தவர் என சொல்லப்படுவதால் அவரிடம் பயின்ற இவர் காலமும் கி.பி. 5-ம் நூற்றாண்டாகவே இருத்தல் வேண்டும். இவர் தர்க்க வாதம் செய்யும் பொருட்டு பற்பல நாடுகள் சென்ற வேளையில் காலமானதாகச் சொல்லப்படுகிறது. (பௌத்தமும் தமிழும், மயிலை சீனிவேங்கடசாமி)

## காஞ்சி தருமபால ஆசாரியார்:

காஞ்சிபுரத்தில் பிறந்து வாழ்ந்த இவர் காஞ்சிபுரத்து அரசின் அமைச்சர் ஒருவரது மகன். இவருக்கு திருமணம் செய்து வைக்க பெற்றோர்கள் முயல அதற்கு உடன்பட மறுத்து பௌத்த மதத் துறவியாக மாறினார். பன்னாடுகள் சென்று

*தனது கல்வியறிவினை வளர்த்த இவர் திக்நாகரிடமும் கல்வி பயின்றுள்ளார். இவரது வட இந்தியப் பிரயாணத்தின்போது, பௌத்தர்கள் மற்றும் பிற சமயத்தவருக்கிடையே நடைபெற்ற தர்க்கத்தில் (சமயவாதம்) பௌத்தர்கள் எதிர்வாதம் செய்ய இயலாது துவண்டபோது, இவர் தாமே ஒருவனாக எதிர்நின்று வாதஞ்செய்து வெற்றி வாகை சூடினார். எதிர்வாதஞ் செய்தவர்களையும் அதற்கு தலைமை தாங்கிய அப்பகுதி அரசனையும் பௌத்த மதம் மேற்கொள்ளச் செய்தார். மஹாயான பௌத்தரான இவர் ஹீனயான பௌத்தர்களுடன் தொடர்ச்சியாக ஏழு நாட்கள் வாதிட்டு வென்று அவர்கள் மஹாயானத்தை மேற்கொள்ளச் செய்தார்.*



**போதிதர்மர்**

*இவரது கல்வித் திறமையும், புலமையும் இவருக்கு அந்நாளைய புகழ்பெற்ற நாளந்தா பல்கலைக் கழகத்தின் தலைமைப் பேராசிரியர் பதவியைப் பெற்றுத் தந்தது. கி.பி. 528 முதல் 560 வரையில் இவர் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது. இவருக்குப் பின் இவரது மாணாக்கர் சீலப்பத்திரர் நாளந்தாவின் தலைவரானார்.*

## தஞ்சை தருமபால ஆசாரியார்:

*இவர் பிறந்த ஊர் தஞ்சாவூர். இந்த தஞ்சை பாண்டி நாட்டில் இருந்த தஞ்சை 'தம்பரட்டே வசந்தேன நகரே தஞ்சா நாமகே' என்று கூறப்படுவதால் தாமிரபரணி பாயும் திருநெல்வேலிப் பகுதியில் இருந்த தஞ்சையைச் சேர்ந்தவர் என்று கருதலாம். சோழ நாட்டு தஞ்சையைச் சேர்ந்தவர் என்ற பி.ஸி.லா அவர்களின் கருத்து தவறானது. (B.C.law Geography of early Buddhism) இவர் பாலி*

மொழியிலிருந்த பௌத்த நூல்களை தெளிவுறக் கற்றவர். தமிழ், சிங்களம், பாலி மொழிகளில் கைதேர்ந்தவர். இலங்கை அனுராதபுரத்து பௌத்த விகாரையிலிருந்த திரிபிடகங்களுக்கு சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்த உரைகளைப் பயின்றதுடன், தமிழக பௌத்தப் பள்ளிகளில் இருந்த பிடக நூல்களின் தமிழ் உரைகளையும் பயின்றார்.

சூத்திரபிடகத்தின் ஐந்தாவது பிரிவாகிய குட்டக நிகாயத்தின் பல பிரிவுகளுக்கு இவர் உரை எழுதினார். இவர் எழுதிய இந்த உரைகளுக்கு 'பரமார்த்த தீபனீ' என்று பெயர். மேலும் பரமார்த்த மஞ்சுஸா, நெட்டிப கரணாட்டகதா என்னும் நூல்களையும் இவர் பாலி மொழியில் எழுதினார். இதனை,

"இதிவுத்தோதான சரியாபிடக தேரதேரீ விமானவத்து
பேதவத்து நெட்டிய்ட்டகதாயோ ஆசாரிய
தம்மபால தேரோ அகாஸீ ஸோச ஆசாரிய
தம்மபால தேரோ ஸீஹள தீபஸ்ஸ ஸமீபே தமிள நாட்டே
படராதி த்தமிஹி நிவாஸித்தா ஸீஹள தீபெ
ஏவ ஸங்க ஹேறத்வா வத்தபோ"

என்று சாசன வம்சம் எனும் நூல் இவரைப் பற்றி உரைக்கின்றது. இதன்படி ஆச்சாரிய தருமபாலர் தேரர், சிங்களத் தீவுக்கு அருகில் உள்ள தமிழ்நாட்டில் படராதித்த விகாரையில் இருந்தபோது இதிவுத்ததும் உதானம், சரியாபீடகம், தேரசாதா, தேரிசாதா, விமானவத்து, பேதவத்து நெட்டியட்டகதா என்னும் உரை நூல்களை எழுதினார் என்பதாகும். இவரது காலம் களப்பிரர்கள் ஆட்சிக் காலமான கி.பி. 6-ம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். சமண மதம் போலவே பௌத்தமும் களப்பிரர் ஆட்சி காலத்தில் தமிழ்நாட்டில் பரவியிருந்தது.

## வைணவ சமயம்:

இந்து மதத்தின் இருபெரும் பிரிவுகளில் வைணவம் சைவத்தைப் போலவே பழமையான ஒன்று. களப்பிரர்களின் அரசப் பெயர்களில் 'அச்சுதன்' எனும் சொல் தவறாமல் இடம்பெறக் காண்கிறோம். வைணவக் கடவுளான திருமாலுக்கு 'அச்சுதன்' என்றோர் பெயருண்டு.

"பச்சைமா மலைபோல் மேனிப்

பவளவாய் கமலச் செங்கண்

அச்சுதா அமரா! ரேறே!

ஆயர்தம் கொழுந்தே! என்னும்

....................... ......................"

என்ற ஆழ்வார் திருப்பாடல்கள் இதனை எடுத்தியம்புகிறது. களப்பிரர் அரசர்கள் தங்களை அச்சுத குலத்தவர் என்று கூறிக் கொண்டனர். அதாவது திருமாலின் வழிவந்தவர் என்று பொருள். திருமாலை வழிபட்டு அவரது அருளினால் மிகப் பெரிய (நாட்டை) இராஜ்ஜியத்தை பெற்றனர் என்ற செய்தியினை.

"இருளறு திகிரியொடு வலம்புரித் தடக்கை

ஒருவனை வேண்ட இருநிலம் கொடுத்த

நந்திமால் வரை சிலம்பு நத்தி"

எனும் பாடல் வரிகள் எடுத்துக் காட்டுகிறது. சங்கு சக்கரம் கையில் ஏந்திய திருமாலை வேண்டியதால் அவர் இவனுக்கு (களப்பிர அரசனுக்கு) பெரிய நிலப் பகுதியை கொடுத்தார் என்பது பொருள். இதன்மூலம் களப்பிரர்கள் திருமாலை வழிபட்ட வைணவ சமய சார்பினர் என்பதை அறிய முடிகிறது. அதேநேரம் இவர்கள் தொடர்ந்து வைணவ சார்புடையவர்களால் இருந்திருக்காமல் பௌத்த, சமண சமயங்களை அவ்வப்போது சார்ந்து ஒழுகியிருக்கவும் வாய்ப்புண்டு என்றே எண்ணத் தோன்றுகிறது.

வரலாற்று ஆசிரியர்கள் பலரும் இவர்களைச் சமண சமய சார்பாளர் என்று கொள்வது இதன்மூலம் இல்லை என்றாகிறது. அதேநேரம் அண்டை நாடான இலங்கையில் அந்நாளில் பௌத்த மதத்தின் ஆதிக்கம் தலைவிரித்தாடியது. இலங்கையை ஆண்ட மகாசேனன் என்னும் சிங்கள அரசன் அங்கிருந்த பெயர்பெற்ற சிவன் கோவில்கள் பலவற்றையும் இடித்து அழித்து அவ்விடங்களில் புத்த விகாரைகளை கட்டினான். அவ்வாறு கோகன்ன (கோகர்ண) விகாரை, எரகாவில்ல விகாரை, கலந்த விகாரை, மிக்காம விகாரை ஆகியவற்றை அவன் கட்டுவித்தான் என்று மகாவம்சம் கூறுகிறது. (மகாவம்சம் 37-ம் பரிசேதம் 40-41) இதனை,

*‘ஏவம் ஸப்பத்த லங்கதீப மிஹி*
*குதிட்ட கானம் ஆலயம் வித்தம் ஸேத்வர*
*ஸிவலிங்காயதோ நாஸேத்வர புத்த ஸாஸனம்*
*ஏவ பதிட்ட பேஸி’*

என்று கூறுகிறது. இலங்கைத் தீவெங்கும் ஆலயங்களை அழித்து சிவலிங்கம் முதலானவைகளை நாசஞ்செய்து புத்த சாசனத்தை நிறுவினான் என்பது இதன் பொருள். இதன் மூலம் அந்நாட்கள் மதப்பூசல்கள் நிறைவான காலம் என்பது தெளிவாகிறது.

**சைவ சமயம்:**

களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இங்கே சைவ சமயத்தின் செல்வாக்கு சரிந்திருந்தது என்பது உண்மையே. ஆனால் அது நிலையாக இருந்ததில்லை என்பதுடன் ஆட்சி மாற்றத்துக்கு ஏற்ப ஏற்ற இறக்கங்கள் இருந்துள்ளன என்பதும் மறுப்பதற்கில்லை. பாண்டி நாட்டில் சிவன் கோவில் வழிபாடு நடைபெறாவண்ணம் ஒரு களப்பிர அரசன் தடை செய்தான் என்று பெரிய புராணத்திலுள்ள மூர்த்திநாயனார் புராணம் விளக்குகிறது. அதே நேரம் சைவ சமயஞ் சார்ந்த ‘கூற்றுவன்’ என்னும் களப்பிர அரசன் சிவன் கோயில்களுக்கு சிறப்புகள் செய்து வழிபட்டான் என்பதைக் கூற்றுவ நாயனார் புராணம் எடுத்துக்காட்டுகிறது. ஆக களப்பிரர்கள் அனைவரும் வைதீக மதங்களை வெறுத்தவர்கள் என்று கருதுவது தவறு.

சமண, பௌத்த மதங்களின் சமயப் பிரசாரம் தலையோங்கி இருந்ததன் காரணத்தால் சைவ, வைணவ சமயங்கள் தம் செயல் இழந்து சற்றே முடங்கிக் கிடந்தன என்பதே உண்மை. கி.மு. நான்காம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தே இந்த வைதீக மதங்கள் மீது சமண பௌத்த பிரசாரகர்களின் தாக்குதல் தொடங்கியுள்ளன. பின்னாளில் ஏற்பட்ட பக்தி இயக்கமே சமண, பௌத்த மதங்களின் வீழ்ச்சிக்கு வித்திட்டு வைதீக மதங்களை வீறுகொண்டெழச் செய்தது என்பதும் வரலாற்றுச் செய்தி. அவ்வகையில் சைவ சமயத்தை செழிக்கச் செய்தவர்கள் நாயன்மார்கள் எனும் சிவத்தொண்டர்கள். வைணவத்துக்கு ஆழ்வார்கள் ஆற்றலூட்டினார்கள்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னர் வாழ்ந்த களப்பிரர்கள் வைதீக சமயத்தைச் சார்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். கி.பி. 6-ம் நூற்றாண்டில் இவர்களின் ஏகோபித்த ஆட்சி முடிவடைந்தபோதும் அதன் பின்னரும் இவர்கள்

ஆங்காங்கே சற்று வலுவுடன் ஆட்சிபுரிந்துள்ளனர். இதனைப் பல்லவ, சாளுக்கிய செப்பேடுகளும், கல்வெட்டுகளும் எடுத்துக்காட்டுகின்றன. இதில் பொன்னிவாடிக் கல்வெட்டு சிறப்பானது. அதில் கோக்கண்டன் இரவியின் அடியாள் மணியன் சேகரி என்பான் பொன்னிவாடி செங்கண்டர்க்கு (சிவபெருமானுக்கு) உண்ணாழிகைப் புறமாகப் நிலம் தானம் அளித்த விபரம் குறிக்கப்பட்டுள்ளது. கோக்கண்டன் இரவியின் அடியாள் (பணியாளன்) சிவன் கோயிலுக்கு தானம் அளித்தான் எனின் கோக்கண்டன் இரவி (களப்பிர அரசன்) சைவ மதத்துக்கு ஆதரவு அளித்திருப்பதை அறியலாம்.

இவனது காலத்தைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு வெளிலூர்த் தென்னூர் நக்கனார் மண்டபத்துக்கு ஓமயிந் திரன் மாகலூர்க் கிழான் கண்ணன் காவன் என்பவன் ஒரு கற்றூண் அளித்த செய்தி குறிக்கப்படுகிறது. இந்தக் கோயிலும் சிவன் கோயிலே. அதனால் கோக்கண்டன் இரவி சைவ சமயத்தை சிறப்புற வளர்த்துள்ளான் என்பதை உணர முடிகிறது. இதன்மூலம் பிற்காலத்திலுள்ள களப்பிரர் சைவ சமய ஆதரவாளர்களாக இருந்துள்ளதை உணர முடிகிறது. காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து ஆட்சிபுரிந்த பிற்கால களப்பிரர்கள் முருகனை (கந்தன்) வழிபட்டதை, அவர்களால் 5-ம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட தங்களது காசுகளில் மயிலில் அமர்ந்த முருகனின் படிமத்தைப் பொறித்ததன் மூலம் உணரலாம். *(The Peacock, the national bird of india by P. Thankappan Nair)*

# 21

## களப்பிரர்களின் நாணயம்

*களப்பிரர்கள் கி.பி. 3-ம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஆட்சி செய்யத் தொடங்கி ஏறக்குறைய முந்நூறு வருடங்கள் வலிமையுடன் தங்களது ஆட்சியைத் தொடர்ந்துள்ளனர். அதன் பின்னரும் கி.பி. 9-ம் நூற்றாண்டு வரை ஆங்காங்கே ஓரளவு செல்வாக்குடன் அவர்களது ஆட்சி நடைபெற்றுள்ளது. ஆக இத்தனை வருட காலம் ஆட்சி புரிந்தவர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில் நாணயங்கள் வெளியிட்டிருப்பார்கள் என்று வரலாற்று ஆய்வாளர்கள் எண்ணுவது இயல்பே.*

*அவர்கள் காலத்து காசுகள் சரிவர கைவரப் பெறாததும் மிக அரிதாகக் கிடைத்தவையாக நம்பப்படும் சில காசு களும் சரிவர வெளிச்சத்துக்கு வராததும் களப்பிரர் கால நாணயங்கள் பற்றிய நம்பகமான தகவல்களைத் திரட்ட இயலாமற்போகிறது. அதுபற்றிக் கசியும் ஓரிரண்டு செய்திகளை மட்டுந்தான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல முடிகிறது. அவ்வகையில் முன்னர் குறிப்பிட்ட முருகன் (மயிலுடன்) பொறித்த காசும் அடக்கம். இது தவிர பழங்கால நாணய ஆய்வுகளை மேற்கொள்ளும் திரு. எஸ். இராமய்யா என்பவர் எழுதி வெளியிட்ட கட்டுரை ஒன்றில் காவிரிப்பூம்பட்டினத்தில் களப்பிரர் காசு ஒன்றினை அங்குள்ள மீனவர் ஒருவரிடம் விலைக்கு வாங்கியதாகவும், அதன் முன்புறம் புத்தசைத்யமும், வேலிக்குள் இருக்கும் மரமும் காணப்படுவதாகவும், பின்புறம் கி.பி. 3-4-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமி எழுத்தில் ‘களப்ர’ என்று எழுதப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். கட்டுரையில் காசின் வரைபடம் இடம்பெறவில்லை (S. Ramaiyya, First Kalabhra Coin, Mail 1976)*



**களப்பிரர் கால நாணயங்கள்**

இனி, தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவில் கிடைத்துள்ள நாணயங்களில் ஒரு பக்கத்தில் ‘வீரகேரளஸ்ய’ என்றும் மறுபக்கத்தில் ‘கண்டராங்குஸஸ்ய’ என்றும் தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டவாறு காணப்படுகின்றன. சமீப காலத்தில் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கடப்பாக்கம் பகுதியிலும் இவை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. (நடனகாசிநாதன், களப்பிரர் காலம்)

இந்த காசுகள் (நாணயங்கள்) வெளியிடப்பட்ட அரசர் மற்றும் காலம் பற்றிய கருத்து வேறுபாடுகள் வரலாற்று அறிஞர்களிடையே நிலவுகின்றன. பெரும்பாலானவர் இது முதலாம் இராஜராஜன் காலத்தில் வாழ்ந்த சேர அரசன் வீரகேரளன் என்பவரால் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்றே கருதுகின்றனர். இத்துறையில் (நாணயவியல் ஆய்வு) ஈடுபட்டுவரும் திரு. லட்சுமி நாராயணராவ் என்பவரும் இக்காசுகள் கி.பி. 1127-ல் ஆட்சிக்கு வந்த வீரகேரளன் வெளியிட்டவை என்றே முடிவுக்கு வந்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, மதுரை நகருக்கு அருகாமையில் படியெடுத்துள்ள ஒரு கல்வெட்டில் முதலாம் இராஜராஜன் காலத்திலும் ஒரு வீரகேரளன் இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர். இதன்மூலம் நாணயங்களை வெளியிட்ட வீரகேரளன் யார் என்ற ஐயப்பாடு நிலவுகிறது.

அத்துடன் கொங்கு நாட்டுப் பகுதியினை ஆட்சிபுரிந்த அரசர்கள் சிலர், கண்டன் எனும் பெயருடன் விளங்கி யிருப்பதை முன்னரே பார்த்தோம். கண்டன், கண்டன் வீர நாராயணன், கண்டன் ரவி, இரவி கண்டன் எனப் பல்வேறு பெயர்கள் பேசப்படுகின்றன. இந்த காசுகளில் ‘கண்டராங்குஸஸ்ய’ என்ற சொல் இடம்பெற்றுள்ளதால் இங்கே குறிப்பிட்டவர்களில் எவரேனும் இந்த காசுகளை வெளியிட்டிருக்கலாம் என்ற ஐயப்பாட்டை எழுப்புகிறார் டாக்டர் இரா. நாகசாமி. ‘கண்டராங்குஸஸ்ய’ என்பதற்கு ‘கண்டன் என்பவன் அங்குசத்தைப் போன்றவன்’ என்று விளக்கம் தரப்படுகிறது. ஆதலால், இவை களப்பிரர் குலத்தைச் சேர்ந்த கொங்கு சேர மன்னர் வெளியிட்டிருக்கலாம் என்று கூறியுள்ளனர். (Dr. R. Nagaswamy, Tamil Coin age page 15-16) இக்கூற்றை மறுக்க இயலாது.

இதுதவிர மதுரை மற்றும் சுற்றுப்புறங்களில் சிறிய சதுர வடிவிலான (2 செ.மீ அளவு) 7.45 கிராம் எடை உள்ள செப்பு நாணயங்கள் கிடைத்துள்ளன. நாணயத்தின் ஒருபுறம் யானை ஒன்று நீண்ட துதிக்கையுடன் இருப்பதுபோலவும் அதற்கு மேலாக ‘களப்பிரர்’ என்று தமிழ் பிராமி எழுத்தில் பொறித்தும் காணப்படுகிறது.

# 22

# தமிழ்மொழியும் களப்பிரர் காலமும்

களப்பிரர்கள் தமிழகத்தை வந்தடைந்த வழியைப் பார்க்கும்போது, அவர்கள் கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்பது வெளிப்படை. தாய்மொழி வேறானபோதும் தாங்கள் ஆட்சிபுரிந்த பகுதியின் மொழி மீது காழ்ப்புணர்வு கொண்டு அதற்குத் தீங்கு விளைத்ததாகச் சான்றுகள் ஏதும் அறியப்படவில்லை. அவர்கள் தமிழை மட்டுமல்லாது இங்கே பரவலாக சமயப்பணி ஆற்றிவந்த சமண, பௌத்த துறவிகள் மற்றும் கல்வியாளர்களின் மொழிகளான வடமொழி, பாலி போன்ற மொழிகளுக்கும் எத்தீங்கும் விளைக்கவில்லை.

தமிழுக்கு ஆக்கம் அளிக்கும் செயலில் அவர்கள் ஈடுபடவில்லை என்றே வைத்துக்கொண்டாலும் அதன் வளர்ச்சியில் தலையிட்டு எத்தீங்கும் இழைக்கவில்லை என்பதே களப்பிரர் காலத்து தமிழ் வளர்ச்சிக்கு இடையூறு ஏற்படவில்லை என்பதற்கான சான்றாகும். தமிழ் கற்றுணர்ந்தோர் தம்முள் எவ்வித பேதமுமின்றி ஒன்று கூடி கலந்தாய்வு செய்து தமிழின் சிறப்பை சீராக்கும் வண்ணம் புதுமைமிகு இலக்கியங்கள் பலவும் உருவாகக் காரணமானார்கள்.

### வட்டெழுத்து:



தமிழ்மொழியின் எழுத்துகள் பல்வேறு வடிவ மாற்றங்களைப் பெற்றுத்தான் இன்றைய நிலையை எய்தியுள்ளது. சங்க காலத்தில் மொழி எழுத்தானது பிராமி எழுத்துவடிவில் அமைந்திருந்தது. அது காலப்போக்கில் மாற்றமடைந்து ‘வட்டெழுத்து’ எனும் வடிவம் பெற்றது. களப்பிரர் காலத்தில் தமிழ்மொழி

எழுத்துகள் வட்டெழுத்தாகவே இடம் பெற்றன. இது கி.பி.10-ம் நூற்றாண்டு வரையில் வழக்கத்தில் இருந்ததாக அறிய முடிகிறது.

பிராகிருதம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை எழுதும் பொருட்டு புது வகையான கிரந்த எழுத்துகளை சமண, பௌத்த கல்வியாளர்கள் உருவாக்கினார்கள். அவர்களிடையே இந்த எழுத்து வடிவங்கள் குமரி முதல் விந்தியம் வரை வழக்கில் இருந்தது. களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இந்த கிரந்த எழுத்துகள் சில பௌத்த, சமணத் துறவிகள் வழியே தமிழிலும் ஊடுருவின.

ஒரு மொழியின் வளர்ச்சியென்பது அதன் காலப்பழக்கத்தில் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்து சீர்மை பெறுவதென்பது இயல்பு. அவ்வகையில் நம் தாய்மொழியாம் தமிழும் தனது தோற்றத்தில் பல்வேறு மாற்றங்களை உட்படுத்தி இன்றைய நிலையினை அடைந்துள்ளது எனின் அது பொய்யன்று. சங்க காலத்தில் இம்மொழியின் எழுத்துகள் 'பிராமி' என்ற வடிவத்தால் உணரப்பட்டன. கடைச்சங்க காலத்தின் இறுதியில் அவை மாற்று வடிவம் பெற்று வட்டெழுத்து எனும் நிலை எய்திற்று.

'வட்டெழுத்துகள் தென்னகப் பிராமியினின்றும் முற்றிலும் மாறுபட்டவையாகும். இவ்வட்டெழுத்துகளே தமிழின் அடிப்படை எழுத்துகள். தொல்காப்பியம், திருக்குறள் போன்ற பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கணங்கள் அனைத்தும் இவ்வட்டெழுத்துகளாலேயே எழுதப்பட்டன' என்கிறார் தென்னிந்திய எழுத்தியல் விற்பன்னர் டாக்டர் பர்னல்.

*(South Indian Paleography pp. 47-51)*

வரலாற்றுப் பேரறிஞர் திரு. நீலகண்ட சாஸ்திரியாரும் "வட்டெழுத்துதான் கிறித்துவுக்கு முந்தைய தமிழ் எழுத்து" என்று கூறியுள்ளார்.

*(சோழர்கள் - பக்கம்-7)*

சங்க காலத்தில் வழங்கி வந்த பிராமி எழுத்து சங்க காலத்தின் இறுதியில் மாற்றம் அடையத் தொடங்கியது. இம்மாற்றம், எழுத்துக் கருவிகளின்மூலம் ஏற்பட்ட மாற்றமெனக் கொள்ளலாம். பனையோலையும் எழுத்தாணியும் அக்கால எழுது கருவிகளாக இருந்தபடியால் இம்மாற்றம் நிகழ்ந்தது.

பழந்தமிழ் நாடாகும் குமரி நாட்டில் ஒரு பகுதி, பனை மரங்கள் வளர்வதற்கமைந்த மண் வளமுடன் இருந்ததோடு, பனை மரங்கள் மிகுந்து வளர்ந்திருந்த காரணத்தினால் 'ஏழ்பனை நாடு' என்ற பெயர்பெற்றது. பனையோலையின் பயனைப் பட்டறிவாலுணர்ந்த நிலையில் அக்காலத் தமிழர், ஓலையில் கூரிய ஆணியால் வருவி எழுத்துகளை எழுதும் முறையினைக் கற்றுத்

தேர்ந்திருக்க வேண்டும். அம்முறையிலேயே ஏடுகளில் நூல்கள் எழுதப்பெறும் ஏட்டுச்சுவடி வழக்கு தோன்றித் தொடர்ந்துள்ளது.

பண்டைத் தமிழ் நாடாகிய குமரிக் கண்டத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வாழ்ந்து வந்த மக்கள், தமிழர் என்பதும் அவர்கள் சிறந்த தனித்தன்மை வாய்ந்த பண்பாட்டுடன் வளர்ச்சிப் பெற்றிருந்தனர் என்பதும், தங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழியில் ஆக்கம் உடையவர்களாகவும், வரிவடிவில் எழுதும் திறனுடையவர்களாகவும் இருந்து அதனை நிலைப்படுத்தும் முயற்சியாகத் தமிழ்ச் சங்கங்கள் நிறுவி, இலக்கண இலக்கிய, கலை நூல்கள் பலவற்றை இயற்றி, மொழிக்கு வளம் சேர்த்துள்ளனர் என்பதும் வெளிப்படை.

இவ்வாறு மொழி வளம் சேர்த்தனர் என்று கூறப்படும்போது இவர்கள் பயன்பாட்டில் இருந்த மொழி வடிவம் எவ்வாறிருந்தது? இன்றிருக்கும் நிலையை ஒத்திருந்ததா? இல்லை இதனின்றும் வேறுபட்டு காட்சியளித்ததா? என்ற கேள்விகளுக்கு பதிலாக அமைவது நமது மண்ணின் வரலாற்றை தேடித் துருவிக் கண்டறிந்த ஆய்வாளர்கள் காட்டும் கல்வெட்டுகள்.

அந்த கல்வெட்டுகள் காட்டும் பாதையிலிருந்து தமிழின் இந்நாளைய வரி வடிவத்துக்கு முந்தைய நிலை வட்டெழுத்து எனும் வரி வடிவம் என்பதை உணர முடிகிறது. தமிழின் தொன்மையான எழுத்தாகக் காணப்படும் எழுத்துகள் வட்டெழுத்தாகும். இந்த வட்டெழுத்துகள் பாண்டிய நாட்டில் சிறப்புடன் வழக்கில் இருந்துள்ளது என்பது பழைய செய்தி. இவ்வெழுத்துக்களில் பழமையான கல்வெட்டுகள் தமிழகத்தின் வடக்குப் பகுதியான வட ஆற்காடு, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அண்மைக் காலத்தில் கிடைத்துள்ளன. அவை கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குரியவை என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழகத்தின் வடபகுதியாகும் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள் நிலவும் பகுதிகளிடையே பழமையான வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. மற்றும் வடஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு, கோவை மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளிலும் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் உள்ளன.

“பல்லவர் ஆட்சியில் தொண்டை மண்டலத்தில் வட்டெழுத்து வழக்கில் இருந்துள்ளதெனக் கிடைத்துள்ள கல்வெட்டுகளால் அறிய முடிகின்றது. எனவே கிடைத்துள்ள வட்டெழுத்து கல்வெட்டுகளால் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் வடக்கே தருமபுரி முதலாக தெற்கே கன்னியாகுமரி வரையில் வட்டெழுத்து வழக்கில் இருந்துள்ளதை அறிய முடிகின்றது” (தமிழெழுத்தின் வரிவடிவம், இ.கோவிந்த ராசனார், பக்கம்-53) கல்வெட்டுகளில் இவ்வெழுத்து ‘வட்டம்’ என்று

குறிப்பிடப்பட்டிருப்பதாலும் வளைந்த கோடுகளின் வடிவமைப்பில் எழுதப்பட்டுள்ளதாலும் இது வட்டெழுத்து எனக் குறிப்பிடப்படுகிறது.

தென்காசியைச் சார்ந்த திருக்குற்றாலநாதர் கோயில் கல்வெட்டொன்றில், 'வட்டம் நீங்கலாக மற்றெல்லா கல்வெட்டுகளும்' என்று குறிக்கப்பட்டுள்ள செய்தியாலும் இப்பெயர் அறியப்படுகிறது.

பல்லவர் ஆட்சியில் வட்டெழுத்துடன் கிரந்தமும் கலந்து சொற்கள் படைக்கப்பட்டிருப்பது, பல்லவர்கள் சமஸ்கிருதத்தைப் பேசியும் எழுதியும் வந்ததோடு, தமிழ்நாட்டில் அவர்கள் ஆட்சி நிலவியபோது, தமிழ்மொழி வழக்கிற்கேற்ப வடமொழி சொற்களைப் படைப்பதற்குக் கிரந்த எழுத்துக்களைக் கையாண்ட செயலேயாகுமென்று கருத முடிகிறது.

பாண்டிய நாடு செந்தமிழ் நாடாதலால் அங்கு தமிழுக்குரிய வரிவடிவு வட்டெழுத்தாகவே தொடர்ந்ததால், வட்டெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் தமிழ் இலக்கிய, இலக்கண மரபுகளில் பிழையில்லாமல் உள்ளன என்பதைக் காணமுடிகிறது.

சேர நாட்டில் பண்டைக் காலம் முதலாக தமிழ்மொழிக்கு அமைந்த வரி வடிவம் வட்டெழுத்தாகவே தொடர்ந்து வந்துள்ளது. சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்கள் வட்டெழுத்துக்களாலேயே படைக்கப்பட்டுள்ளன. இத்தகைய வரலாற்றுச் செய்திகள் மூலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் வட்டெழுத்து வேறு வழக்கில் இருந்துள்ளமை நன்கு புலப்படுகிறது.

இதுகாறும் எடுத்தாண்ட செய்திகளின் சாரத்தை நுகர்ந்தால், வட்டெழுத்தென்பது தொன்றுதொட்டு தமிழின் வரிவடிவாக இருந்து வந்துள்ளது என்பதும் இடையே புகுந்த பிராமி எழுத்து நடைமுறை, கிரந்த எழுத்து வரிவடிவம் ஆகியவை அவ்வப்போது ஆட்சி மாற்றம் உருவாக்கி வைத்த இடைச்செருகல்கள் என்பதை உணரமுடியும். ஆக களப்பிரர்கள் ஆட்சி நடைபெற்ற மூன்று முதலான நூற்றாண்டுகள் முழுமையும் வட்டெழுத்து வரிவடிவமே தமிழின் எழுத்து வடிவாக இருந்து வந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

# 23

## பழமையும், புதுமையும்

கடைச்சங்க காலம் வரையில் தமிழில் உருவான இலக்கியங்கள் அனைத்தும் நான்கு வகைப் பாக்களாலேயே அமைந்தன. அவை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பவையாம். இதனை,

> ‘ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
> நாலியற் றென்ப பாவகை வரியே’

என்று தொல்காப்பியம் உரைக்கின்றது.

கடைச்சங்க காலத்தின் இறுதியில் களப்பிரர் ஆட்சி தமிழகத்தில் உருவானது என்பதை அறிந்தோம். அந்நாளில் சமண, பௌத்த சமயங்களின் ஆதிக்கம் பரவலாக இருந்தன என்பதும் அறிந்த செய்தியே! இச்சமயத்தார் தங்கள் சமயக் கருத்துகளை வெளிப்படுத்த பயன்படுத்திய மொழியினை ‘தெய்வ பாஷை’ என்று குறித்தனர். அவ்வகையில் பிராகிருத மொழியே தெய்வ பாஷை ஆனது. பிராகிருதம், இன்றைய வடமொழியாகக் கருதப்படும் சமஸ்கிருதத்துக்கு முன்னரே வடபுலத்தில் வழக்கில் இருந்த மொழி. இதில் பல பிரிவுகள் காணப்பட்டன. அத்தகைய பிரிவுகளில் ஒன்றான ‘சூரசேனி’ எனும் பிராகிருத மொழி சைன (சமண) சமயத்தாரின் தெய்வ பாஷையாகத் திகழ்ந்தது.

பௌத்தர்கள், தங்களது இறைமொழியாகக் கொண்டது ‘பாலி’ எனும் பிராகிருத மொழியினை. இதனால் சமணர்களும் பௌத்தர்களும் தத்தம் சமய நூற்களை முறையே சூரசேனி, பாலி ஆகிய பிராகிருத மொழிகளில் எழுதி வைத்தார்கள். அதுபோலவே தமது சமயப் பிரசாரத்திலும் அம்மொழிகளையே பயன்படுத்தினர். இதன் காரணமாக இம்மொழிகள் தமிழ் நிலத்தே பரவலாயின. களப்பிரர்கள் எம்மொழி மீதும் காழ்ப்புணர்வு கொள்ளாது நடுநிலை வகித்தமை கண்டோம். அதனால் சமயப் பிரசாரங்களின் பணி மிகவும் எளிதாயிற்று. தமிழ் கற்ற பாவலர் பலரும் இந்த பிராகிருத மொழிகள் மற்றும் சமஸ்கிருத மொழிகள் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டிருத்தலும் இயல்பானதே.

இதன் காரணமாகவே தமிழில் புதியனவாக சில பாவினங்கள் தோன்றலாயிற்று. அவைகள், தாழிசை, துறை, விருத்தம் என அழைக்கப்பட்டன. நான்கு வகைப் பாக்களுடன் இவை ஒன்றுகலந்து புதிய பல பாக்களை ஈன்றெடுத்தன. அவ்வகையில் ஆசிரியப்பாவுடன் கலந்த புதுப்பாக்கள், முறையே

ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம் எனவும், வெண்பாவுடன் கலந்தவை வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் எனவும், கலிப்பாவுடன் கலந்து கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் என்றும் வஞ்சிப்பாவுடன் துஞ்சியதால் வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம் எனவும் புதுப்பாக் குழவிகள் பரவலாகத் தமிழின் செழுமைக்குப் பணியாற்றின. புதிய ஆக்கம் தமிழின் தனித்தன்மையை எவ்வகையிலும் சிதையச் செய்யாமல் சிறப்புடன் திகழுமாறு தமிழ் அன்பர்கள் கவனமுடன் கையாண்டார்கள். ஆதலால் இந்தப் புதிய வரவுகள் தமிழின் வளர்ச்சிக்கு மேலும் உரமூட்டின என்பதே உண்மை.

## அகம், புறம் மருவிய மாற்றுக் கருத்துகள்:

பழந்தமிழ் இலக்கியங்கள் சங்ககாலந் தொட்டு மக்களின் வாழ்வியலை ஒட்டி நிகழும் செயல்பாட்டை இருவேறு பிரிவுகளாய் பகுத்து அகம், புறம் எனக் கோடிட்டுக் காட்டின. தனிமனித வாழ்வின் இன்ப துன்பங்கள், காதல், கடிமணம், இல்வாழ்க்கை துவங்கியவை அகப்பொருளுக்கு உரியனவாகவும், வீரம், விவேகம், அரசியல், போர் ஆட்சித் திறன் எனத் தொடரும் புறச்செயல்களைப் புறப் பொருளாகவும் கொண்டு தமிழ் இலக்கியங்கள் வழக்கில் இருந்தன.

ஆனால் சமண, பௌத்த மதங்களின் வளர்ச்சியும் அவர்தம் கருத்துப் பரிமாற்றங்களும், பழைய அகம், புறம் பற்றிய கண்ணோட்டத்தில் சில மாற்றங்களை உருவாக்கின. கண்ணுக்குத் தெரியும் புறப்பகைவர்களை போரில் வென்று ஈட்டும் வெற்றியைவிட, தத்தம் மனதைச் சூழ்ந்துள்ள காமம், வெகுளி, மயக்கம் என்னும் அகப் பகைவர்களை ஐம்புலன்களையும் அடக்கி வெற்றிகொள்வதே மேலான வெற்றி! எனும் கருத்தை அவர்கள் முன்வைத்தனர். அவ்வாறு அகப் பகைவரை வென்ற தீர்த்தங்கரரும் (அருகர்) புத்த பெருமானும் வெற்றி பெற்றவர்கள் (ஜினர்) என்றும் அத்தகைய வெற்றியே மனிதனை நற்கதிக்கு அழைத்துச் செல்லும் வெற்றி என்றும் சமண, பௌத்தர்கள் புறப்பொருளுக்கு புதிய விளக்கம் தந்தனர். இதன்மூலம் வழக்கமான உலகியல் நடைமுறையாம் போர்க்கள வெற்றிகளைச் சிறப்பித்து பாடுவதினும் சிறந்தது, ஜினர்களின் ஐம்புல வெற்றியைப் பாடுவதே எனும் கருத்தினை உருவாக்கினர்.

சமண, பௌத்த சமயங்களின் ஆளுமையிலிருந்து வைதீக மதங்களை மீட்க முயற்சி மேற்கொண்ட சைவ, வைணவப் பெரியார்கள் அகப்பொருளைத் தம் கையிலெடுத்துக் கொண்டார்கள். அவர்களின் கருத்துப்படி மனித வாழ்வில் சிற்றின்பத்தையே மையமாகக் கொண்டு நடைபெறும் காதல் வயப்படுதலினும் மேலானது இறைவனை தத்தம் துணையாகக் கருதி, காதலாகிக் கசிந்து மருகுதலே எனும் கருத்தை அவர்கள் முன்வைத்தனர்.

*இறைவனைத் (சிவன், திருமால்) தலைவனாகவும் அடியார்கள் (ஆண், பெண் இருபாலரும்) தலைவியாகவும் தங்களை உருவகப்படுத்தி நெஞ்சுருக பக்தியுடன் வேண்டி நின்றால் மோட்சம் (வீடு பேறு) பெறலாம் எனும் கருத்தினையே சைவ, வைணவர் அகப்பொருளுக்குரிய கருத்தாக முன்வைத்தனர். ஆனால் இக்கருத்தினை சமண, பௌத்தர்கள் ஏற்கவில்லை. அவர்கள் தம் வழியே செல்ல, வைதீக மதத்தின் நிலையில் மட்டும் மாற்றம் உருவானது. ஏறக்குறைய கி.பி. 5-ம் நூற்றாண்டில் களப்பிரர் ஆட்சி நிகழ்ந்த காலத்தில் இத்தகைய மாற்றங்கள் நடைபெற்றதெனக் கொள்ளலாம்.*

## இலக்கண (யாப்பு) நூல்கள்:

*சங்கத் தமிழ் நூல்களிலிருந்து வேறுபட்டு புதிய பாவினங்கள் உருவானதைத் தொடர்ந்து, அவற்றை முறைப்படுத்தும் வகையில் புதிய இலக்கண நடைமுறைகள் வகுக்கப்பட்டன. அதன் காரணமாகவே யாப்பிலக்கணம் (செய்யுள் இலக்கணம்) எழுதப்பட்டது. இவ்வகையில் பல புலவர்கள் செய்யுள் இலக்கணத்தை வரையறை செய்து நூல்களை வடித்தார்கள். ஆனால் அவை அனைத்தும் பிற்காலத்தில் வழக்கிழந்து போயின. எனினும் மறைவுற்ற அந்நூல்கள் பற்றிய செய்திகளுள் சில பிற்கால நூலாகிய யாப்பருங்கல விருத்தியுரையில் எடுத்தாளப்பட்டுள்ளன. அதன்மூலம் அந்த நூல்கள் பற்றிய சுருக்கமான தகவல்களைப் பெற முடிகிறது.*

## அவிநயம்:

*கி.பி. 10-ம் நூற்றாண்டு வரையில் வழக்கிலிருந்ததாகக் கருதப்படும் இந்நூலை எழுதியவர் அவிநயனார் எனும் புலவர். இவர் சமண சமயம் சார்ந்தவர் என்பது செய்தி. இந்நூலினை அவிநாயர் யாப்பு என்றும் கூறுவர். இராசப்பவுத்திரப் பல்லவ தரையன் என்னும் புலவர் இந்நூலுக்கு உரை எழுதினார். உரையாசிரியர் சிலர் இந்நூலிலிருந்து சூத்திரங்கள் சிலவற்றை மேற்கோள் காட்டியுள்ளனர். இது தவிர அவிநயப் புறனடை அல்லது நாலடி நாற்பது எனும் பெயருள்ள மற்றொரு நூலினை இதே அவிநயனார் எழுதியுள்ளார். அதுவும் காலப்போக்கில் மறைந்து போயிற்று. இவையிலுள்ள செய்யுட்கள் சிலவும் உரையாசிரியர்களால் மேற்கோள்காட்டப்பட்டுள்ளன. (மறைந்துபோன தமிழ் நூல்கள், மயிலை சீனிவேங்கடசாமி)*

## காக்கைப்பாடினியம்:

*காக்கைப்பாடினியார் எனும் புலவரால் இந்நூல் எழுதப்பட்டது. இனி இப்பெயரில் இருவேறு புலவர்கள் இருந்ததை அறிகிறோம். ஒருவர் சங்க*

காலத்தைச் சேர்ந்தவர். குறுந்தொகை, புறநானூறு மற்றும் பதிற்றுப்பத்து போன்ற சங்க நூல்களில் இவரது பாடல்கள் காணக் கிடைக்கின்றன. காக்கைப்பாடினியம் இலக்கண நூலை எழுதியவர் இவரல்ல. இவர் பிற்காலத்தவர். இவர் காக்கைப் பாடினியம் தவிர சிறுகாக்கைப் பாடினியம் என்ற மற்றொரு நூலையும் எழுதியுள்ளார். இவ்விரு நூற்களிலிருந்தும் சில சூத்திரங்களைப் பிற்கால உரையாசிரியர்கள் தங்களது உரையில் மேற்கோள் காட்டியுள்ளனர். *(Ibid)*

இவை தவிர நத்தத்தம் என்ற யாப்பிலக்கண நூலும் நக்கீரர் அடிநூல், நக்கீரர் நாலடி நானூறு என்ற நூலும், (இதை இயற்றியவர் சங்க காலத்து நக்கீரர் அல்ல) பல்காப்பியம், பல்காப்பியப் புறனடை எனும் நூற்களும், பல்காயம் என்ற நூலும் யாப்பிலக்கணம் கருதி எழுதப்பட்டு வழக்கிலிருந்தவை. ஆயின் தற்போது இவைகள் யாவும் மறைந்துபோனதால் இவைப் பற்றி பல்வேறு உரையாசிரியர்கள் எடுத்தாண்ட சிற்சில சூத்திரங்களை வைத்தே இவைகளை அறிய முடிகிறது. இவை யாவும் தோன்றிய காலம் களப்பிரர் ஆண்ட காலம் என்பதே சிந்தனைக்குரியது.

## இலக்கியங்கள்:

கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு இறுதி வரையிலான காலக்கெடுவில் களப்பிரர் இங்கே ஆட்சியில் முழுமை பெற்று இருந்ததை அறிந்தோம். அக்காலத்தில் புதுவகையான பாவினங்கள் தோன்றியதைக் கண்டோம். இப்புதிய பாவினங்களைக் கையாண்டு பல்வேறு இலக்கியங்கள் தமிழில் தோன்றியிருக்கக் கூடும். ஆனால் அவைகள் பற்றியக் குறிப்புகள் பரவலாகக் கிடைக்கவில்லை என்பதே உண்மை. இருப்பினும் வெளிச்சத்துக்கு வந்துள்ள ஒரு சில இலக்கியங்கள் பற்றியச் செய்தியினை இங்கே அறியலாம்.

## நரிவிருத்தம்:

இதனை விருத்தப் பாவினால் ஆக்கப்பட்ட நரியின் வரலாறு எனப் பொருள் கொள்ளலாம். இதன் ஆசிரியர் திருத்தக்கத்தேவர் எனும் புகழ்மிகு புலவர். இந்நூல் பற்றிய செய்தியினை கி.பி. ஏழாம் நூற்றாண்டில் திருநாவுக்கரசரால் அருளப்பட்ட தேவாரப் பதிகத்தில் காண முடிகிறது.

‘எரிபெருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவருக்க மாவது உணர்கிலர்
அரிஅயற்கு அரியானை அயர்ந்துபோய்
நரிவிருத்தம் தாகுவர் நாடரே’

(நாவுக்கரசர் தேவாரம், ஆதிபுராணத் திருக்குறுந்தொகை)

என்பது நாவுக்கரசர் கோடிட்டுக் காட்டும் செய்தி.

இந்நூலாசிரியர் திருத்தக்கத்தேவர், சோழ அரசர் குலத்தில் பிறந்தவர். இளமையிலேயே துறவறம் பூண்டு சமண சமயம் சார்ந்தவர். சமணத்தில் தேவகணம் சார்ந்த இவர் சீவகன் எனும் அரசனின் வரலாற்றை சீவக சிந்தாமணி எனும் பெயரில் பாட எண்ணி அதற்கான அனுமதி வேண்டி தனது சமய குருவின் முன்னின்றார். சீவகனின் கதையில் சிற்றின்பச் செய்திகளும், உலகியல் வழக்கும் நிரம்பியிருந்ததால் அதனைப் பாட முன்வரும் திருத்தக்கத் தேவர், தமது துறவு நிலையில் உறுதிபூண்டவராக உள்ளாரா என்பதனை சோதித்து அறிய விரும்பிய குருநாதர், அவரிடம் முதலில் நிலையாமைப் பற்றி எடுத்துரைக்கும் நூலொன்றை முதலில் எழுதுமாறு கட்டளை பிறப்பித்தார். அவ்வாறு குருவின் கட்டளையினை ஏற்று திருத்தக்கத் தேவர் எழுதிய நூலே நரிவிருத்தம்.

நரிவிருத்தம் முழுமையாகப் படித்த குருநாதர், தேவரின் துறவு நிலை மீது இருந்த ஐயப்பாட்டை அகற்றி சீவக சிந்தாமணி காவியம் படைக்க அனுமதியளித்தார். அவ்வகையில் நரிவிருத்தம், சீவக சிந்தாமணி நூலுக்கு முன்னோடியான நூல் என்பதனை அறியலாம். இந்நூல் நூறு பாக்களைக் கொண்டதாகும்.

**சீவக சிந்தாமணி:**



**மகாவீரர்**

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்றே சிறந்த காவியச் சுவை மிக்கதாகப் போற்றப்படுகிறது. இது புதிய பாவினமாகிய விருத்தப் பாக்களால் ஆனது. இதற்கு சீவகசிந்தாமணி என்பதுடன் மணநூல் எனும் பெயரும் உண்டு. இக்காப்பிய நாயகன் சீவகன் என்பான்

வர்த்தமான மகாவீரர் காலத்தில் வாழ்ந்தவன். மகாவீரர் நிர்வாணநிலை (மோட்சம்) அடைந்த காலம் தற்போது 2500 ஆண்டுகள் ஆகின்றன என்ற நிலையில் காப்பிய நாயகன் சீவகன் வாழ்நாளும் அத்துணை வருடத்துக்கு முந்தையது எனத் தெரியவருகிறது. இந்நூல் களப்பிரர் ஆட்சி தமிழகத்தே அமைந்த நாளில் கி.பி. 5 அல்லது 6-ம் நூற்றாண்டில் இயற்றப் பட்ட நூலாகும்.

நரிவிருத்தம் போன்றே, எலி விருத்தம், கிளி விருத்தம் போன்ற இரு நூல்களும் அந்நாளில் வழக்கத்தில் இருந்ததை திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல் மூலம் உணரமுடிகிறது. அவர் தமது தேவார பாசுரத்தில்,

'கூடினார் கிளியின் விருத்தம் உரைத்ததோர்
எலியின் தொழில், பாட்டுமெய் சொலிப் பக்கமே செலுத்தும்'

(திருவாசகம் 5)

என்று கூறுகிறார். நரிவிருத்தம் போன்று இந்நூற்களும் சமண சமய சார்புடையவை. இவைகள் காலப்போக்கில் மறைவுற்றன. விருத்த நூல்களான இவற்றுள் கலித்துறைகளும் உள்ளனவாக உரையாசிரியர் (வீரசோழிய) குறிப்பிட்டுள்ளார்.

## விளக்கத்தார் கூத்து:

கால ஓட்டத்தில் காணாமற்போன நூல் வரிசையில் இடம் பெறும் கூத்து சம்பந்தமான நூல் இது. இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுளினை யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் தமது உரையில் மேற்கோள் காட்டியுள்ளார். இப்பாடலில் நூலாசிரியர் விளக்கத்தினார் அச்சுதன் என்னும் களப்பிர அரசனை வாழ்த்துகிறார்.

'அடுதிறல் ஒருவநிற் பரவுதும், எங்கோன்
தொடுகழற் கொடும்பூண் பகட்டெழு மார்பிற்
கயலொடு கிடந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் பேர்வேல் அச்சுதன்
ஒன்றுகடல் உலகம் முழுவதும்
ஒன்றுபு திகிரி யுருட்டுவே னெனவே.!'

இதன்மூலம் இந்நூல் களப்பிரர் காலத்து எழுதப்பட்டது என அறியலாம்.

## பெருங்கதை:

காலத்தால் பெரிதும் பழமையான இக்காவியக் கதையினை கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மணிமேகலை காப்பியத்துள் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. இதன் மூல நூல் பிருஹத் கதை என்பதும், இதனை தக்கண தேசத்தை அரசு புரிந்த சாதவாகன அரசரின் அமைச்சருள் ஒருவரான குணாட்டியர் என்பவரே எழுதினார் என்பதும் வரலாறு. இந்த பிருஹத் கதை பிராகிருத மொழிகளுள் ஒன்றான பைசாச மொழியில் குணாட்டியர் எழுதினார்.

இந்நூல் ஏறக்குறைய கி.பி. முதல் நூற்றாண்டில் எழுதப் பட்டிருக்க வேண்டும். விந்தியமலைப் பகுதியில் பேசப்பட்ட பைசாச மொழியில் இது எழுதப்பட்டது என்பதும் இம்மொழி திராவிட மொழி இனத்தைச் சேர்ந்தது என்பதும் வரலாற்று ஆய்வாளர் கருத்து.

இவ்வாறு வழக்கில் இருந்த மூலக்கதையிலிருந்து தான் மணிமேகலை பெருங்கதையினை எடுத்தாண்டுள்ளது. ஆயினும் பெருங்கதை அல்லது உதயணன் கதை என வழங்கப்படும் (இந்நாளைய வழக்கில் இருக்கும்) நூலினை எழுதியவர் கொங்குவேள் எனும் சமணர். இவர் எழுதிய நூல் என்பதால் இது 'கொங்குவேள் மாக்கதை' என்றும் அழைக்கப்படுகிறது.

இதன் ஆசிரியர் கொங்கு நாட்டு விசயமங்கலம் எனும் ஊரில் வாழ்ந்தவர். இந்நூலின் தொடக்கம் மற்றும் முதற்காண்டம், இறுதிக் காண்டங்கள் கிடைக்கப்பெறவில்லை. திரிசொற்கள் அதிகம் விரவியுள்ள இந்நூல் ஆசிரியப் பாவினால் ஆனது. களப்பிரர் ஆட்சிக் காலத்தில் கொங்குவேளால் இது இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

கி.பி. 8-ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கை ஆழ்வார் தமது சிறிய திருமடல் எனும் செய்யுளில் இந்தப் பெருங்கதையில் தலைவியான வாசவதத்தையைப் பற்றி எடுத்துக் கூறுகிறார்.

"ஆரானும் ஆதானும் அல்லன் அவள் காணீர்

வாரார் வனமுலை வாசவ தத்தை என்று

ஆராலும் சொல்லப் படுவாள் – அவளுந்தன்

பேராயம் எல்லாம் ஒழியப் பெருந்தெருவே

தாரார் தடந்தோள் தனைக்காலன் பின்போனாள்

ஊரார் இகழ்ந்திடப் பட்டாளே"

*(திருமங்கை ஆழ்வாரின், சிறு திருமடல்)*

*சமணர்கள் பிராகிருத மொழியில் தேர்ச்சியுடையவர்கள். அம்முறையில் பெருங்கதையை இயற்றிய கொங்குவேள் எனும் சமணரும் குணாட்டியார் எழுதிய பிருஹத் கதையை படித்துணர்ந்து அதனை தமிழில் உருவாக்கம் செய்தார் என்று கொள்ளலாம். தவிர துர்வினிதன் எனும் கன்னட நாட்டு அரசன் குணாட்டியரின் பிருஹத் கதையை வட மொழியில் பெயர்த்தெழுதினார் என்றும் அதிலிருந்து கொங்குவேள் அதனைத் தமிழில் பெயர்த்தெழுதினார் என்றும் சொல்லப்படுவதுண்டு. ஆனால் இக்கருத்து ஏற்புடையதல்ல என்று வாதிடுகிறார் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள், தனது களப்பிரர் ஆட்சியில் தமிழகம் எனும் நூலில். எது எப்படியானபோதும் களப்பிரர் ஆட்சியின்போது, சமணர்கள் மற்றும் பௌத்தர்கள் சிலர் தமிழில் பல நூற்களை யாத்தனர் என்பதும் அவற்றுள் பெரும்பாலானவை வழக்கற்று மறைந்துபோயின என்பதும் மறுக்க முடியாத உண்மை.*

# 24

# களப்பிரர் காலத்து சைவ சமய இலக்கியங்கள்

*பௌத்த, சமண மதங்கள் இங்கே தத்தம் ஆதிக்க வலையினை விரிப்பதற்கு முன்புவரை, தமிழ் நிலத்தில் வைதீக மணம் கமழ ஆளுமை செலுத்திய சைவ சமயத்தின் செல்வாக்கு பௌத்த, சமணங்களின் மேலாதிக்கத்தால் பெருமை குன்றிய காலமாக களப்பிரர் காலத்தின் ஒரு பகுதி திகழ்ந்தது. இந்நிலையை மாற்றி இழந்த சைவ, வைணவ சமயங்களின் சிறப்பை வெளிக்கொணரும் முயற்சியில் அச்சமயவாதிகள் ஈடுபடலாயினர். அவ்வகையில் அவர்கள் கண்டறிந்த புதிய வழியே 'பக்தி மார்க்கம்' என்பது.*

*'பக்தி' மார்க்கத்தின் மூலம் இறைவனுக்கும் அடியவனுக்கும் இடையிலான இடைவெளியைப் பெரிதும் குறைத்து, இறைவனை வாழ்வின் ஆதாரமாக என்பதன்றி வாழ்வே இறையாக எண்ணி அவன் மீது அளப்பரிய அன்பையும், ஆசையையும் சொரிந்து கண்ணீர் மல்கி, காதல் வயப்பட்டு கசிந்துருகும் அதீத பக்தியினை இந்த மார்க்கம் போதித்தது. இம்முறையினை உலகின் முன் சரியானதென்று எடுத்தியம்பும் விதத்தில் விளக்கம் தர நூலொன்று வேண்டும் என்ற அவசியம் எழுந்தபோது, உருவானதுதான் 'இறையனார் அகப்பொருள்' அல்லது 'களவியல்' எனும் பெயர் தாங்கிய நூல். தெய்வீகக் களவியலுக்கு ஆதாரமாகச் சொல்லப்பட்ட இந்நூலை இறைவனே இயற்றி (சிவபெருமான்) வழங்கினார் என்னும் கருத்தையும் பரப்பினர். அவ்வாறாக சைவ சமய அன்பர்களின் 'பக்தி' மார்க்கமும் இங்கே மெல்லத் துளிர் விட்டு தழையத் துவங்கியது. பக்தி மார்க்கத்தின் வளர்ச்சிக்கு உதவிகரமாகப் பல்வேறு சைவ சமயச் சார்பு இலக்கியங்கள் உருவாயின. அவற்றை யாதெனக் காண்போம்.*

### காரைக்காலம்மையாரின் திருப்பதிகங்கள்:

*சைவ சமயச் சான்றோர்களில் திருப்பதிகம் பாடியவர் எனும் சிறப்புக்குரியவர்கள் திருநாவுக்கரசர் மற்றும் திருஞான சம்பந்தர் என்பது வெளிப்படை. ஆயினும் இப்பதிகங்களுக்கு முன்னோடியாக விளங்கிய ஒருவர் உண்டென்பதும் மறுக்க இயலாது. இவ்வகையில் சிவபெருமான் மீது பக்திரசஞ் சொட்டப் பதிகம் பாடிய முதன்மையாளர் காரைக்கால் அம்மையார் என்பதே பொருத்தமாகும். இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்.*

இவரது வரலாறு திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் வடித்துள்ளார். கி.பி. 5 அல்லது 6-ம் நூற்றாண்டில் இவர் வாழ்ந்திருக்கக் கூடும் என்பது கணிப்பு. பதிகங்களுக்கு முன்னோடியாக இவர் பாடியவை மூத்த திருப்பதிகம் என்று வழங்கப்படுகிறது. இவர் பாடிய மூத்த திருப்பதிகங்கள் இரண்டு. இதில் முதலாவது திருப்பதிகமானது,



**காரைக்காலம்மையார்**

'கொங்கை திரங்கி நரம்பெழுந்து...! எனத் துவங்கும் பதிகம். இது 'நட்டபாடை' பண்ணால் அமைந்தது. பதினோரு செய்யுட்களைக் கொண்டது இப்பதிகம். இரண்டாவது பதிகம் 'எட்டி இலவம் - ஈகை சூறை' என்று தொடங்குவதாகும். இது 'இந்தளம்' பண்ணைச் சேர்ந்தது. இதிலும் பதினொரு பதிகங்கள் அமைந்துள்ளன.

## அற்புதத் திருவந்தாதி:

இதனை இயற்றியவரும் காரைக்காலம்மையாரே ஆவார். இது சிவபெருமான் மீது பாடப்பட்ட அந்தாதி வகை நூல். நேரிசை வெண்பாக்களால் ஆனது. நூற்று ஒன்று செய்யுட்களால் அமைந்த இந்த இறை துதிப் பாடல்கள் பதினோராந் திருமறையில் தொகுக்கப்பட்டுள்ளன.

## திருவிரட்டை மணிமாலை:

இதுவும் காரைக்காலம்மையாரின் கைவண்ணமே! இருபது செய்யுட்களால் அந்தாதியாகப் பாடப்பட்ட இந்நூல், கட்டளைக் கலித்துறை மற்றும் வெண்பா எனும் செய்யுட்களை உள்ளடக்கியது.

## கயிலை பாதி காளத்தி பாதித் திருவந்தாதி:

நூறு செய்யுட்களைக் கொண்ட இந்நூல், நேரிசை வெண்பாவினால் அந்தாதித் தொடையாகச் செய்யப் பட்டவை. திருக்கயிலை மலையிலும், காளத்தி மலையிலும் எழுந்தருள்பாலிக்கும் இறைவன் சிவபெருமான் மீது நக்கீரத் தேவநாயனார் என்னும் புலவரால் பாடப்பபட்டது. இந்த நக்கீரர் கடைச்சங்க காலத்து நக்கீரர் அன்று. இவர் களப்பிரர் காலத்து நக்கீரர்.

## திருவலஞ்சுழி மும்மணிக் கோவை:

இந்நூலும் நக்கீரரால் எழுதப்பட்டதே. திருவலஞ்சுழியில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான் மீது பாடப்பட்ட துதிப் பாடல்கள் கொண்டவை. இது அகவல், வெண்பா, கலித்துறை எனும் முவ்வகைச் செய்யுட்களால் அந்தாதி தொடையமையப் பாடப்பட்டவை. இதில் பதினைந்து செய்யுட்கள் அமைந்துள்ளன.

## திருஈங்கோய் மலை எழுபது:

எழுபது வெண்பாக்களால் ஆன இந்நூல் ஈங்கோய் மலை மீது எழுந்தருளியுள்ள இறைவன் (சிவபெருமான்) மீது பாடப்பட்ட துதிப்பாடல்களாக அமைந்தவை. இதில் ஒரு சில பாடல்கள் மறைந்துவிட்டன. (49 முதல் 61 வரையிலானவை). இதனை யாத்தவர் கபிலதேவ நாயனார் என்ற புலவர்.

## திருவெழுக் கூற்றிருக்கை:

நக்கீரத் தேவநாயனாரால் இயற்றப்பட்ட இந்நூல் அகவற் பாவினால் அமைந்தவை. 56 அடிகளைக் கொண்டதாக அமைந்த இந்நூலின் இறுதியில் வெண்பா ஒன்றும் காணப்படுகிறது. இச்செய்யுளினை யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் தமது ஒழிபு இயல் உரையில் மேற்கோள் காட்டியுள்ளார்.

## கோபப் பிரசாதம்:

சிவபெருமான் மீது பாடப்பட்ட இந்நூல் தொண்ணூற்றொன்பது அடிகளைக் கொண்டது. அகவற் பாவால் அமைந்தது. இதனை இயற்றியவரும் நக்கீரத் தேவநாயனாரே.

**காரெட்டு:**

*நக்கீரத் தேவநாயனாரின் படைப்பான இந்நூல், எட்டு வெண்பாக்களால் மழைக்கும் (கார்) சிவபெருமானுக்கும் உவமை கூறுமுகத்தான் சிவனை வாழ்த்திப் பாடுகிறது.*

**போற்றிக் கலிவெண்பா:**

*கலிவெண்பாவினால் ஆன இந்நூலும் நக்கீரத் தேவ நாயனாரின் படைப்பாகும். சிவபெருமானைப் போற்றிப் பாடப்பட்டது.*

**பெருந்தேவபாணி:**

*நக்கீரத்தேவ நாயனார் இயற்றிய இந்நூல் அறுபத்தேழு அடிகளைக் கொண்டது. ஆசிரியப் பாவால் அமைந்த இதன் இறுதியில் வெண்பாவொன்றும் அமைந்துள்ளது.*

**திருக்கண்ணப்பத் தேவர் திருமறம்:**

*நூற்று ஐம்பத்தெட்டு அடிகளைக் கொண்ட அகவற் பாவினால் அமைந்தது. இது கண்ணப்ப நாயனாரின் வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் பாடப்பட்டது. இந்நூலின் இறுதிப் பா, வெண்பாவினால் ஆனது. இதைப் பாடியவரும் நக்கீரத் தேவநாயனாரே.*

*இனி களப்பிரர் காலத்தில் வாழ்ந்த நக்கீரத் தேவ நாயனாரும் கடைச்சங்க காலத்து நக்கீரரும் ஒருவரே என வாதிடும் போக்கும் இங்கே உலவுகிறது. நக்கீரத் தேவ நாயனார் எழுதிய நூற்கள் அனைத்தும் பதினோராந் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன. இதனை முதன் முதலாக அச்சிற் பதிப்பித்த திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்புராய செட்டியார் அவர்கள். "மதுரை கடைச்சங்கத்து தெய்வப் புலவர்களுள் ஒருவரான நக்கீரத் தேவ நாயனார் அருளிச் செய்த கயிலை பாதி காளத்தி பாதித் திருவந்தாதி" என்று குறிப்பிட்டுள்ளார். இது கால ஆய்வு மேற்கொள்ளாத வகையில் எடுத்தாளப்பட்ட தவறெனக் கொள்ளலாம்.*

**திருக்கண்ணப்ப தேவர் திருமறம் - 2:**

*நக்கீரத் தேவ நாயனார் இயற்றிய திருக்கண்ணப்பத் தேவர் திருமறம் பற்றி முன்னர் பார்த்தோம். இங்குப் பேசப்படும் திருக்கண்ணப்ப தேவர் திருமறம்*

நூலினை எழுதியவர் கல்லாட தேவ நாயனார் என்ற புலவர். முப்பத்தெட்டு அடிகளைக் கொண்ட அகவற்பாவினாலான இந்நூல் கண்ணப்ப நாயனாரின் பக்தியினைப் புகழ்ந்து பேசுகிறது. நூலாசிரியர் பற்றிய குழப்பம் இங்கும் நிலவுகிறது. களப்பிரர் காலத்து வாழ்ந்த கல்லாட தேவ நாயனாரும், கடைச்சங்க காலத்து கல்லாடர் எனும் புலவரும் ஒருவரே எனும் மாயைக்கு சிலர் ஆட்படுவதுண்டு. அது தவறென்பதை உணர்ந்து இருவரையும் வேர் பிரித்தாள வேண்டும். அகநானூறு, குறுந்தொகை, புறநானூறு என சங்க இலக்கியங்களில் தமது கைவண்ணம் பொறித்த கல்லாடனார் என்ற புலவர் களப்பிரர் காலத்து கல்லாட நாயனார் அல்ல என்பதை உணர்ந்து ஆய்வு மேற்கொள்ளல் வேண்டும்.

## மூத்த நாயனார் இரட்டை மணிமாலை:

கபிலதேவ நாயனாரால் ஆனைமுகன் மீது (விநாயகர்) பாடப்பட்ட இந்நூல் வெண்பா, கலித்துறை செய்யுட்களால் ஆக்கப்பட்டது. அந்தாதி வகையான இந்நூல் இருபது செய்யுட்களைக் கொண்டது. இது பதினோராந் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளது.

## சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை:

சிவபெருமான் மீது பாடப்பட்ட துதிப் பாடல்களின் தொகுப்பு. வெண்பா, கலித்துறை எனும் பா வகையினால் ஆனது. முப்பத்தேழு பாக்களைக் கொண்டது. ஆசிரியர் கபிலதேவ நாயனார். இந்நூல் பதினோராந் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளது.

## சிவபெருமான் திருவந்தாதி:

நூறு பாக்களைக் கொண்ட அந்தாதித் தொடையினால் அமைந்த வெண்பா பாடல்கள் இவை. இந்நூலும் கபிலதேவ நாயனார் இயற்றியதே. இந்நூலும் பதினோராந் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளது.

நக்கீரரைப் போன்றே கபிலர் பற்றியும் இங்கே ஐயப்பாடுகள் எழுந்ததுண்டு. கடைச்சங்க காலத்து தமிழ் இலக்கியங்களில் பரவலாகப் பேசப்பட்ட கபிலரும் களப்பிரர் காலத்தே சமய இலக்கியங்கள் யாத்த கபிலதேவ நாயனாரும் வெவ்வேறு நபரென்பதை உணராமல், இருவரையும் ஒன்றாகக் கருதிப் பேசுவோரும் உளர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இன்னாநாற்பது எனும் நூலை எழுதியவர் கபிலதேவ நாயனார். சங்க இலக்கியங்களான ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, குறுந்தொகை, பத்துப்பாட்டு, புறநானூறு என அனைத்திலும் தனது பங்களிப்பை நிகழ்த்திய சங்க காலப் புலவர்

*கபிலருக்கும் களப்பிரர் காலத்து கபிலதேவ நாயனாருக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.*

*மூத்த நாயனார் (விநாயகர்) இரட்டை மணிமாலை பாடியவர் களப்பிரர் காலத்து கபிலதேவ நாயனார். சங்க காலத்தில் விநாயக வணக்கம் என்பது வழக்கில் இல்லை. வித்துவான் திரு. வேங்கடராஜூலு ரெட்டியார் கூறுகையில், பிற்காலத்து நூல்களிலேயே முதலில் விநாயகர் வணக்கம் காணப்படுகிறது. இதன்மூலம் கி.பி. 6-ம் நூற்றாண்டு வரையில் தமிழ்நாட்டில் விநாயக வழிபாடு நடைபெற்றிருக்கவில்லை என்பதை அறியலாம் என்று கூறியுள்ளார்.*

*இனி கடைச்சங்க காலப் புலவருள் ஒருவரான பரணர் எனும் புலவர் சம்பந்தமாகவும் பெயர் குழப்பம் நிலவி வருவதுண்டு. களப்பிரர் காலத்தில் ஒரு பரணதேவ நாயனார் எனும் புலவர் இருந்துள்ளார். இவர் 'சிவபெருமான் திருவந்தாதி' என்ற நூலை இயற்றியவர். அந்தாதித் தொடையில் வெண்பாக்களால் ஆக்கப்பட்ட இந்நூல் இருநூறு பாக்களால் ஆனது. சங்க காலத்து பரணருக்கும், இவருக்கும் பெயர் ஒற்றுமை தவிர வேறு தொடர்பு ஏதும் இல்லை. சங்க காலத்து பரணர் அகநானூறு, புறநானூறு நற்றிணை, குறுந்தொகை என சங்ககால இலக்கியங்களுக்கு பாக்களீந்தவர். இவரது காலம் கி.பி. 2-ம் நூற்றாண்டின் முற்பகுதி.*

# 25

## பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

சமணர்களும், சைவர்களும் எழுதிய நூல்களைப் பற்றி இதுகாறும் பார்த்தோம். களப்பிரர் காலத்தில் வேறு சில நூற்களும் எழுதப்பட்டுள்ளன. அவை கீழ்க்கணக்கு நூல்கள் என்று தரம் பிரிக்கப்பட்டன. பின்னாளில் அவை பதினெட்டாக அடையாளங் காணப்பட்டன. இவற்றுள் ஒரு சில காலத்தால் முந்தியவையாக இருந்தபோதும் பெரும்பாலானவை களப்பிரர் காலத்தில் தோன்றியவை.

அவைகள்

1. நாலடியார்
2. நான்மணிக்கடிகை
3. இன்னா நாற்பது
4. இனியவை நாற்பது
5. கார் நாற்பது
6. களவழி நாற்பது
7. ஐந்திணை ஐம்பது
8. திணைமாலை நூற்றைம்பது
9. ஐந்திணை எழுபது
10. திணைமொழி ஐம்பது
11. முப்பால் (திருக்குறள்)
12. திரிகடுகம்
13. ஆசாரக்கோவை
14. சிறுபஞ்சமூலம்
15. பழமொழி
16. முதுமொழிக்காஞ்சி

17. ஏலாதி

18. கைந்நிலை ஆகியவையே.

இவற்றுள் திருக்குறள், களவழி நாற்பது, முதுமொழிக்காஞ்சி ஆகியன கடைச்சங்க காலத்தின் தொடக்கத்தில் அல்லது அந்த கால அளவில் அதாவது கி.பி. 250-க்கு முன்னதாக எழுதப்பட்ட நூற்களாகும். நாலடியார். கி.பி. 7-ம் நூற்றாண்டில் களப்பிரர் ஆட்சி முடிவுபெறும் தறுவாயில் எழுதப்பட்டவை. ஏனையவை அனைத்தும் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 3 முதல் 6-ம் நூற்றாண்டின் இடைப் பட்ட காலத்தில் எழுதப்பட்டவை என்பதில் ஐயமில்லை.

இனி கீழ்க்கணக்கு நூல்கள் அப்பெயர் பெறக் காரணமாய் அமைந்ததைப் பார்ப்போம். மனித வாழ்வில் அடைய வேண்டிய நற்பேறாக அறம், பொருள், இன்பம், வீடு பேறு என நால்வகை நலன்கள் குறிக்கப்படுகின்றன. இதில் வீடு பேறென்பது மறுமையில் பெறப்படுவது. ஏனைய மூன்றும் இம்மையில் இவ்வுலக வாழ்வின்போதே அடைய வேண்டியவை. அத்தகைய அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை எடுத்துரைக்கும் நன்னெறி விளக்க நூல்களுக்கு கீழ்க்கணக்கு நூல்கள் என்று பெயரிட்டனர். இதனை உரையாசிரியர்கள் (பழைய) பலரும் சைவ சமயக் குரவர் திருநாவுக்கரசரும் உரைத்துள்ளனர்.

திருநாவுக்கரசர் தமது திருக்குறுந்தொகை இன்னம்பர் பதிகத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

'தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அலற்று கின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே!'

இதன்படி இவ்வுலக வாழ்வில் அறம், பொருள், இன்பங்களைப் பெற்று வாழ்பவர்கள் மறுமைக்குத் தேவையான கடவுள் வழிபாட்டினைச் செய்யாது விடுத்தால் இறைவன் அதனைக் கணக்கிட்டு வைக்கிறார் என்று உணர்த்துகிறார். பன்னிரு பாட்டியலில் அறம், பொருள், இன்பம் எனும் இம்மைப் பயன்களை கீழ்க்கணக்கு என்று குறிப்பிடக் காண்கிறோம்.

'அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி
அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட வருவது கீழ்க்கணக்காகும்.'

இனி கீழ்க்கணக்கு நூல்களைப் பற்றிச் சற்று ஆய்வோம். களப்பிரர்கள் தங்களைப் பற்றியச் செய்திகளை உலகறிய ஆவண செய்யாது விடுத்தபோதும், தாங்கள் ஆட்சிபுரிந்த மண்ணின் மாந்தர்தம் மொழி மீது காழ்ப்புணர்வு கொள்ளாது அதன் ஆக்கத்துக்கு உறுதுணையாக இருந்து வந்துள்ளனர் என்பதே கீழ்க்கணக்கு நூல்களின் தோற்றம் அறிவுறுத்துகிறது.

## நான்மணிக்கடிகை:

விளம்பி நாகனார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது. இப்புலவர் விளம்பி என்னும் ஊரைச் சேர்ந்தவராக இருக்கக் கூடும் என்று அறியலாம். 104 செய்யுட்களைக் கொண்ட இது வெண்பாவால் ஆக்கப்பட்டது. வெண்பா ஒவ்வொன்றிலும் நான்கு நீதிகளைக் குறிப்பிட்டு பேசுவதால் இது நான்மணிக் கடிகை எனப் பெயர்பெற்றது. இந்நூலாசிரியர் வைணவ சமயஞ் சேர்ந்தவர் என்பதாக நூலின் கடவுள் வாழ்த்து சுட்டிக்காட்டுகிறது.

‘மதிமன்னு மாயவன் வான்முகம் ஒக்கும்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமலர் ஒக்கும் நிறம்’.

என்பது நான்மணிக்கடிகையின் கடவுள்வாழ்த்துப் பாடலாகும்.



திருநாவுக்கரசர்

## இன்னாநாற்பது:

மனித வாழ்வில் எவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ள வேண்டுமோ அவற்றை தொகுத்துக் கூறும் நூல் என்பதால் இப்பெயர் பெற்றது. நாற்பது வெண்பாக்களைப் பெற்ற இந்நூலின் கடவுள் வாழ்த்து சைவ, வைணவ கடவுளரை வாழ்த்தி வணங்குகிறது.

*'முக்கட் பகவன் அடிதொழாதார்க் கின்னா*
*பொற்பனை வெள்ளையை யுள்ளாது ஒழுகின்னா*
*சக்கரத் தானை மறப்பின்னா ஆங்கின்னா*
*சத்தியான் தாள் தொழா தார்க்கு.'*

என்பது இதன் கடவுள் வாழ்த்து. இந்த இன்னா நாற்பதை எழுதியவர் கபிலர் எனும் கபிலதேவ நாயனார். இவரே மூத்த நாயனார். இரட்டை மணிமாலை மற்றும் சிவபெருமான் திருவந்தாதி போன்ற நூற்களை எழுதியவராவார். (மயிலை சீனி வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம்) அவலம் நீங்கிய வாழ்வை வாழ விரும்புவோர்க்கு நற்றுணையாய் இந்நூல் அமைகிறது.

*"பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா" (10)*

*"வளமை யிலாளர் வனப்பின்னா இன்னா*
*இளமையுண் மூப்புப் புகல்" (27)*

*"விழுத்தகு நூலும் விழையாதார்க் கின்னா" (34)*

என்பன இந்நூல் உரைக்கும் மணிவாசகங்கள்.

## இனியவை நாற்பது:

மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் இந்நூலை இயற்றியவர். மாந்தர்தம் வாழ்வுக்கு இனியனவான நற்பொருளை உரைக்கும் நாற்பது வெண்பாக்களால் அமையப் பெற்றது. கடவுள் வாழ்த்துப் பாடலில் இவர் மும்மூர்த்திகளையும் போற்றுதலால் இவர் வேத ஒழுக்கினராதல் இருத்தல் வேண்டுமென்று சிலரும், இல்லை அருகக் கடவுளை மும்மூர்த்திகளாக குறிப்பிடுவது சமணர் வழக்கம். ஆதலால் இவர் சமணராதல் வேண்டும் என்றும் கூறுவர்.

*“பிச்சைபுக் காயினும் கற்றல்மிக இனிதே” (1)*

*“நில்லாத காட்சி நிறையில் மனிதரைப்*

*புல்லா விடுதல் இனிது” (25)*

*“மானம் படவரின் வாழாமை முன் இனிதே” (27)*

போன்றவை இனியவை நாற்பது உரைக்கும் கருத்துகள்.

‘கண்மூன் றுடையான தாள்சேர்தல் கடிதினிதே

தொன்மாண் துழாய்மாலை யானைத் தொழலினிதே

முந்துறப் பேணி முகநான் குடை யானைச்

சென்றமர்ந் தேத்தல் இனிது’

என்பது இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலாகும்.

### திரிகடுகம்:

சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றையும் திரிகடுகம் என அழைக்கிறது பிங்கல நிகண்டு சூத்திரம் (சூத்திரம் 152.) இம்மூன்று மருந்துப் பொருட்களால் ஆன திரிகடுகம் எவ்வாறு உடற்பிணியை நீக்குகிறதோ அதுபோன்று இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் அமைந்துள்ள மூன்று கருத்துகளும் மாந்தர்தம் உள்ளப் பிணியை நீக்கவல்லது என்பதை உணர்த்தும் வண்ணம் இந்நூலுக்கு இப்பெயர் அமைந்தது.

இந்நூலை இயற்றியவர் நல்லாதனார் எனும் புலவர். காப்புச் செய்யுள் உட்பட 101 வெண்பாக்களை உடையது.

*“வைத்தனை இன்சொலாக் கொள்வானும் நெய்பெய்த*

*சோறென்று கூழை மதிப்பானும் – ஊறிய*

*கைப்புஅதனைக் கட்டியென் றுண்பானும் இம்மூவர்*

*மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். " (48)*

## ஆசாரக் கோவை:

ஆன்றோர் ஒழுக்கங்களைக் கூறுவது இந்நூல்.நூறு செய்யுட்களையும் ஒரு சிறப்புப் பாயிரத்தையும் கொண்டது. இந்நூல் உண்ணல், உடுத்தல், உறங்கல், நீராடல் முதலியவற்றைப் பற்றிய விதிகளையும், இன்னின்ன செய்தால் நன்மைகள் உண்டாம் என்றும், விலக்கப்பட வேண்டியவை இன்னின்ன என்றும் அதனை மீறிச் செய்யின் விளையும் கேடுகள் பற்றியும் எடுத்தியம்புகிறது.

வெண்பாவின் வகைகளான குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா முதலிய வெண்பாக்களால் அமைந்தது இந்நூல். இதனை இயற்றியவர் பெருவாயின் முள்ளியார் என்பவராவார். இவரைக் கயத்தூர் பெருவாயில் முள்ளி எனச் சொல்லப்படுவதால் இவர் வண்கயத்தூர் எனும் ஊரைச் சார்ந்தவர் எனக் கருதப்படுகிறது.

இந்நூலுக்கு ஆரிடம் என்னும் வடநூலே மூல நூல் என்று இதன் தற்சிறப்புப் பாயிரம் கூறுகிறது. இதில் கூறப்பட்டுள்ள ஆசாரங்கள் சுக்ரஸ்மிருதியில் கூறப்பட்டவை என்று வடநூற் புலவர் கூறுவர். இந்நூல் கருத்துகள் பத்துப்பாட்டு, சிந்தாமணி, நன்னூல், இலக்கண விளக்கம் ஆகியவற்றின் உரைகளில் மேற்கோள்களாக எடுத்தாளப்பட்டுள்ளது.

“நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல்லோ
டின்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியொரு
ஒப்புர வாற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து”

ஒழுக்கங்களுக்கான எட்டு காரணங்களைத் தொகுத்துரைக்கும் பாடலாக இது அமைந்துள்ளது.

## பழமொழி நானூறு:

களப்பிரர் காலத்துக்கு முன்பே இம்மண்ணில் நிலவி வந்த ஆன்றோர்தம் பட்டறிவுச் சொற்றொடர் பழமொழியென வழங்கலாயிற்று. அத்தகைய பழமொழிகள் ஒவ்வொன்றையும் ஈற்றடியில் அமைத்துப் பாடப்பட்ட 400 பாடல்கள் அடங்கிய தொகுப்பிற்கு பழமொழி நானூறு என்ற பெயர் வந்தது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள் மற்றும் நாலடியாருக்கு

அடுத்தபடியாக பெருமை பெற்றுத் திகழ்வது இந்நூல். இதனை இயற்றியவர் முன்றுறையரையனார் எனும் புலவர். இவர் முன்றுறை எனும் ஊரையாண்ட ஒரு குறு நில மன்னர் என்று சொல்லப்படுவதுண்டு. இவரது சமயம் சமணமாகும்.

இந்நூலின்கண் பழமொழிகளுடன் பல்வேறு வரலாற்றுச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. கரிகாலன் நரைமுடி தரித்து முறை செய்தல், கடையேழு வள்ளல்கள் பற்றிய செய்தி, இதிகாசச் செய்திகள் ஆகியவையும் பரவலாகக் காணப்படுகின்றன.

"பிண்டியின் நிழற்பெருமான் அடிவணங்கிப்
பண்டைப் பழமொழி நானூறும் - கொண்டினிதா
முன்றுறை மன்னவன் நான்கடியும் செய்தமைத்தான்
இன்றுவை வெண்பா இவை!"

என்பது இந்நூலின் தற்சிறப்புப் பாயிரம் ஆகும்.

**சிறுபஞ்சமூலம்:**

தமிழ் மருத்துவம் கற்பிக்கும் கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணை வேர், சிறுமல்லி வேர், நெருஞ்சி வேர், பெருமல்லி வேர் ஆகிய பஞ்ச மூலங்கள் (ஐந்து வேர்கள்) மக்கள் பிணியாற்ற உதவுவதுபோல, இந்நூலில் அமைந்த ஒவ்வொரு செய்யுளிலும் பொதிந்துள்ள ஐந்து கருத்துகள் மாந்தர்தம் உள்ளத்து நோயைப் போக்கவல்லது என்ற காரணத்தால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் மாக்கயனார் என்பவரின் மாணவரான காரியாசான் எனும் புலவர். சமண மதஞ் சார்ந்தவர். பாயிரச் செய்யுள் உட்பட 100 செய்யுட்கள் இந்நூலில் அமைந்துள்ளன.

"முழுதுணர்ந்து மூன்றொழித்து மூவாதான் பாதம்
பழுதின்றி யாற்றப் பணிந்து - முழுதேத்தி
மண்பாய ஞாலத்து மாந்தர்க் குறுதியா
வெண்பா உரைப்பன் சில."

என்பது இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுள்.

## ஏலாதி:

ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறுவகை மருந்துப் பொருட்களும் பிணி தீர்க்கும் வல்லமையுடையவை. அவைபோன்றே மாந்தர்தம் உள்ள நோய் தீர்க்கும் வல்லமை மிக்க ஆறு கருத்துகள் அடங்கிய செய்யுட்களால் ஆன இந்நூல் ஏலாதி என்ற பெயர் பெற்று விளங்குகிறது.

இதன் ஆசிரியர் கணிமேதாவியார். இவரே திணை மாலை நூற்றைம்பதைப் பாடியவருமாவார். இந்நூலின் இறுதியில் இவர் மாக்கயனார் என்பாரின் மாணாக்கர் என்று குறிப்பிடுவதால் இவரும் காரியாசானும் ஒரு (பாட) சாலை மாணாக்கர் என அறியலாம். இதன் ஆசிரியர் கணிமேதாவியார் என்று கூறப்படுவதிலிருந்து இவர் வான இயல் நூற்களைப் பயின்றவர் என்ற கருத்தும் நிலவுகிறது. சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட இந்நூலில் 82 செய்யுட்கள் உள்ளன.

"இல்லறநூல் ஏற்ற துறவறநூல் ஏயுங்கால்
சொல்லறநூல் சோர்வின்றித் தொக்குரைத்து - நல்ல
அணிமேதை யாய்நல்ல வீட்டு நெறியுங்
கணிமேதை செய்தான் கலந்து."

என்பது இந்நூலின் பாயிரச் செய்யுள்.

## கார் நாற்பது:

இந்நூலை எழுதியவர் மதுரைக் கண்ணங்கூத்தனார் என்பவர். இன்பம் மேவிய அகத்தின் பொருட்செறிந்த முல்லைத் திணைக்குரிய நாற்பது பாடல்களை உடையது இந்நூல். இதிலுள்ள பாடல்கள் அனைத்தும் தலைவி, தோழி, தலைவன் ஆகியோரின் கூற்றுகளாக அமைந்துள்ளன. பாடல் ஒவ்வொன்றிலும் 'கார்' (மழை) பற்றிக் கூறப்படுவதால் இது கார் நாற்பது எனப் பெயர்பெற்றது. இதில் முல்லைத் திணைக் குரிய உரிப்பொருள், முதற்பொருள், கருப்பொருள்கள் ஆகியவை அழகுற கூறப்பட்டுள்ளன.

கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளன்று மனைதோறும் விளக்கிட்டு விழா எடுக்கும் வழக்கம் அக்காலத்திலேயே இருந்தமையை இந்நூலால் உணரலாம்.

*"நலமிகு கார்த்திகை நாட்டவ ரிட்ட*
*தலைநாள் விளக்கிற் றகையுடைய வாகிப்*
*புலமெலாம் பூத்தன தோன்றி சிலமொழி*
*தூதொடு வந்த மழை." (26).*

## திணைமொழி ஐம்பது:

*திணைக்குப் பத்துப் பாடல்களாக ஐந்திணைக்கும் ஐம்பது பாடல்களைக் கொண்டு இது விளங்குகிறது. இதன் திணை வைப்பு முறையானது குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்றபடி அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் சாத்தந்தையார் என்பவரது மகனாகிய கண்ணன் சேந்தனார் என்பவராவார்.*

## ஐந்திணை ஐம்பது:

*மனித நெஞ்சுள் வேரோடிய அன்பின் ஐந்திணைகளுக்குரிய ஐம்பது பாடல்களால் இந்நூல் திகழ்கிறது. திணை ஒவ்வொன்றுக்கும் பத்துப் பாடல்கள் உள்ளன. இந்நூலை இயற்றியவர் மாறன் பொறையனார் என்பவராவார். கற்பிற்கு சின்னமாகத் திகழும் முல்லையை முதலில் வைத்து அடுத்ததாக குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்ற திணைகளை வைத்து அமைக்கப்பெற்றுள்ளது இந்நூல். முல்லைத் திணையில், மாலை மயங்கும் வேளையில் ஆயன் ஊதும் குழலோசை, பிரிவாற்றாமையால் வருந்தும் தலைவியின் செவிகளில் வேலாகப் பாய்கின்ற காட்சியைக் காண முடிகிறது.*

*"தேரோன் மலைமறைந்த செக்கர்கொள் புன்மாலை*
*ஆர்ஆன்பின் ஆயன் உவந்தூதும் - சீர்சால்*
*சிறுகுழ லோசை செறிதொடி வேல்கொண்டு*
*எறிவது போலும் எனக்கு." (7)*

*என்பது அப்பாடல். மேலும் பாலை நெடு வழியில் நீரற்ற சுனையில் சிறிதளவே இருக்கும் நீரைத்தான் அருந்தாது விடின், பேடை மான் நீர் உறிஞ்சாது எனக் கருதும் கலைமான், பொய்யாக நீர் உறிஞ்சித் தன் பிணையை அருந்தச் செய்யும் அன்பு மிகுந்த காட்சி இலக்கியச் சுவைக்கே சுவை சேர்ப்பது.*

*“சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப்*

*பிணைமான் இனிதுண்ண வேண்டிக் - கலைமாத்தன்*

*கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் காதலர்*

*உள்ளம் படர்ந்த நெறி.” (38)*

## ஐந்திணை எழுபது:

*திணைக்குப் பதினான்கு பாடல்களாக அன்பின் ஐந்திணை களுக்கும் எழுபது பாடல்களைக் கொண்டு திகழ்வதால் இந்நூல் ஐந்திணை எழுபது எனப் பெயர்பெற்றது. தொல்காப்பிய முறைப்படி குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற திணை வைப்புமுறை இந்நூலில் காணப்படுகிறது. இன்று நமக்குக் கிடைக்கும் ‘ஐந்திணை எழுபது’ நூற்பாடல்கள், கடவுள் வாழ்த்து உட்பட அறுபத்து ஏழாகும். இந்நூலை இயற்றியவர் மூவாதியர் என்பவராவார். இதன் கடவுள் வாழ்த்துப் பாடல் விநாயகரை வணங்கி தொடங்குகிறது.*

*“எண்ணும் பொருளினிதே யெல்லா முடித்தெமக்கு*

*நண்ணுங் கலையனைத்து நல்குமால் - கண்ணுதலின்*

*முண்டத்தான் அண்டத்தான் மூலத்தான் ஆலஞ்சேர்*

*கண்டத்தான் ஈன்ற களிறு.”*

*என்பது இதன் கடவுள் வாழ்த்து. இதனை இந்நூலாசிரியர் எழுதவில்லை. பிற்காலத்தவர் எவரோ எழுதிச் சேர்த்தது எனக் கருதுகிறார் திரு. சதாசிவ பண்டாரத்தார். அவரது கருத்துப்படி விநாயகர் வழிபாடென்பது கி.பி. ஏழாம் நூற்றாண்டில்தான் தமிழ்நாட்டில் தொடங்கியது என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. எனவே விநாயகருக்கு வாழ்த்து சொல்லப்பட்ட செய்யுள், இந்நூலில் இடம்பெற்றிருப்பது தவறாகும். அக்கடவுள் வாழ்த்துச் செய்யுள் நூலின் புறத்தேயுள்ளமையும், அதற்கு பழைய உரை காணப் படாமையும் இவ்வுண்மையை நன்கு வலியுறுத்துதல் அறியற்பாலதாம் (தமிழ் இலக்கிய வரலாறு கி.பி. 250-600, டி.வி. சதாசிவ பண்டாரத்தார்).*

## திணை மாலை நூற்றைம்பது:

*திணை ஒன்றுக்கு முப்பது பாடல்கள் என ஐந்திணைக்கும் நூற்றைம்பது பாடல்கள் பெற்று இந்நூல் திணை மாலை நூற்றைம்பது என்ற பெயருடன் திகழ்கின்றது. இதனை எழுதியவரும் ஏலாதி எழுதிய கணிமேதாவியார் ஆவார்.*

இது தொல்காப்பிய, அகத்திணையியல் துறைகளுக்கு இலக்கியமாகத் திகழ்வதுடன், கோவைத் துறைகள் சிலவற்றிற்கும் இலக்கியமாகத் திகழும் கூறுபாடுகளைக் கொண்டுள்ளது. குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்ற முறையில் இதன் திணைகள் அமையப்பெற்றுள்ளன.

கற்பனை வளம் மிக்க நெஞ்சை ஈர்க்கும் செய்யுட்கள் இந்நூலின் சிறப்பு. திங்கள் போன்ற முகத்தில் வில்லாகிய புருவங்களையும் வேலாகிய கண்களையும் பெற்றுள்ள தலைமகளை அவளது பெற்றோர், திணைப் புனங் காப்பதற்காக வைத்துள்ளமை உண்மையில் தலைவனின் நெஞ்சத்தை காப்பதற்காகத்தான் எனப் பொருள்படும் பாடலைக் காண்போம்.



**திருமழிசை ஆழ்வார்**

*"திங்களுள் வில்லெழுதித் தேராது வேல்விலக்கித்*
*தங்களுளா ளென்னும் தாழ்வினா - லிங்கட்*
*புனங்காக்க வைத்தாற்போற் பூங்குழலைப் போந்தென்*
*மனங்காக்க வைத்தார் மருண்டு" (30)*

இப்பாடல் வரிகள்,

*"சிலையெழுதி வில்லெழுதிக் கயலெழுதிக் காமன்*
*செயலெழுதித் தீர்ந்தமுகம் திங்களோ காணீர்!"*

என்ற கானல்வரிப் பாட்டை நினைக்கத் தோன்றுகிறது.

## கைந்நிலை:

*அன்பின் ஐந்திணை பற்றிப் பேசும் இந்நூல் 60 வெண்பாக் களைக் கொண்டதாகும் ஒவ்வொரு திணைக்கும் பன்னிரண்டு பாடல்கள் வீதம் அமைந்துள்ளது. இதில் பல பாடல்கள் சிதைந்துள்ளன. இந்நூலை இயற்றியவர் மாற்றோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர்க் காவிதியார் மகன் புல்லங்காடனார் என்பவராவார். மாற்றோக்கம் என்பது கொற்கையைச் சூழ்ந்துள்ள நிலப்பகுதி என்பர். இவர் அப்பகுதியைச் சார்ந்த முள்ளிநாட்டு நல்லூரைச் சார்ந்தவராதல் வேண்டும்.*

*இந்நூலில், பாசம், ஆசை, ரசம், தேசம், இடபம், உத்திரம் ஆகிய வடசொற்கள் விரவிக் காணப்படுவதால் இது கடைச்சங்க காலத்துக்குப் பின்னர் அதாவது களப்பிரர் காலத்து தோன்றிய நூல் என்பது நன்கு புலப்படும். எனவே இதன் ஆசிரியர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் இருந்தவராதல் வேண்டும் என்று சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் கூறுவார்கள். இந்நூலை 1931-ம் ஆண்டு திரு. அனந்த ராமையர் அவர்கள் அச்சிட்டு வெளியிட்டார்கள்.*

*இதுவரை களப்பிரர்கள் இங்கே ஆட்சிபுரிந்த காலத்து உருவான கீழ்க்கணக்கு நூல்களைப் பற்றியச் செய்திகளை அறிந்தோம். நாலடியார், திருக்குறள், களவழி நாற்பது, முதுமொழிக் காஞ்சி ஆகிய இங்கே விளக்கம் பெறாத நூற்கள் அனைத்தும், களப்பிரர் காலத்துக்கு முந்தியவையாகவோ அல்லது பிந்தியவையாகவோ இருப்பதால் அவை பற்றி அலசி ஆராயப்படவில்லை. களப்பிரர் காலம் தமிழ் வளர்ச்சிக்கு எவ்வகையிலும் ஊறு விளைவிக்கும் காலமாக இருந்திருக்கவில்லை என்பதை தெளிவுபடுத்தவே இந்நூற்கள் பற்றி சற்று விளக்கமாக எடுத்துரைக்க வேண்டியதாயிற்று.ஆதலால் களப்பிரர் காலம் தமிழ்மொழியைப் பொறுத்த மட்டில் இருண்ட காலமாக இல்லாமல் இனிய காலமாகவே இருந்திருக்க வேண்டும் என்பதை இதுவரை பார்த்த செய்திகள் உரைக்கின்றன.*

# 26

## களப்பிரர் ஆட்சியில் தமிழ்ச் சங்கம்

*சமண சமயத் (சைனர்) துறவியான வச்சிரநந்தி என்பார் மதுரை நகரில் கி.பி. 5-ம் நூற்றாண்டில் (கி.பி. 470-ம் ஆண்டு) திரமிள (திராவிட - தமிழ்) சங்கத்தை அமைத்தார் என்பதை அறிய முடிகிறது. பெயரளவில் அது திரமிள (தமிழ்) சங்கம் என இருந்தபோதும், இதன் முழுமையான நோக்கமென்பது தமிழ் வளர்ச்சி அல்ல, மாறாக சமண சமயத்தின் வளர்ச்சியே நோக்கமாகக் கொண்டது என்பதையும் இங்கு உணர வேண்டும். 'சங்கம்' என்ற சொல் கூட்டம், குழு என்று பொருள் கொள்ளப்படுதல் சரியெனின், இந்த சங்கம், சமய சார்பு மிக்கவர்களின் சங்கமம் (சங்கமித்தல் - ஒன்று கூடுதல்) நடைபெற்ற இடமாகவே கருதலாம்.*

*பொதுவாகவே பௌத்த பிக்குகள் மற்றும், சமணர்கள் 'சங்கம்' என்ற சொல்லை பரவலாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். பௌத்த பிக்குகள் தங்களது குழுவிற்கு பௌத்த சங்கம் எனப் பெயரிட்டு அழைத்தனர். சங்கத் தலைவர் சங்கபாலர் எனப் பெயரிடப்பட்டார். பௌத்தர்கள் தங்களது மும்மணிகளில் ஒன்றாகச் சங்கத்தைக் கருதினர்.*

*புத்தம் சரணம் கச்சாமி,*

*சங்கம் சரணம் கச்சாமி!*

*எனும் பௌத்த பிக்குகளின் மந்திர உச்சாடனம், கௌதம புத்தரைச் சரணடைவதாகவும், பௌத்த சங்கத்தைச் சரணடைவதாகவும் பொருள் உணர்த்துகிறது. இதுபோலவே சைனர்கள் (சமணர்) தங்கள் கூட்டத்தினைச் சங்கம் என்றே அழைத்தனர்.*

*களப்பிரர்கள் இங்கே ஆட்சி அமைக்கும் முன்னர், தமிழ் நிலத்தை ஆட்சி செய்த பாண்டிய மன்னர்கள் தமிழை ஆய்ந்து அதன் வலிமைக்கு வளஞ்சேர்க்க புலவர்கள் குழாத்தை ஒருங்கிணைத்து தமிழாய்வுப் பேரவை ஒன்றை உருவாக்கினர். அந்தப் பேரவைக்கு 'சங்கம்' எனும் ஆளுமைச் சொல் பிற்காலத்தவர் சூட்டியிருக்க வேண்டும். முன்னர் அதைக் குழாம் என்றோ கழகம் என்றோ அல்லது வேறு பெயர் ஏதேனும் அமைத்தோ வழங்கியிருக்க, பிற்கால சமண பௌத்த ஆளுமைக்குப் பின்பு அவர்களின் வழக்குச் சொல்லான 'சங்கம்' எனும் சொல்லைத் தமிழ் பேரவைக்கும் நல்கி தமிழ்ச் சங்கம் என்றே*

*விளிப்பெயரிட்டு அழைக்கலாயினர். ஆயினும் பாண்டியர் அமைத்த சங்கமும் சமணர் அமைத்த சங்கமும் அதனதன் நோக்கத்தால் வெவ்வேறானவை.*

*பாண்டியர் சங்கத்து குழுமியிருந்த சான்றோராம் தமிழ்ப் புலவர்கள் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழை ஆய்ந்து அவரவர் நோக்கில் வாழ்வியலின் இருபெரும் பிரிவாம். அகம், புறம் என இரு பிரிவிற்கும் ஏற்ற கருத்துச் செறிவு செய்யுட்களை இயற்றி தமிழுக்கு வளமை சேர்த்தனர்.*

## சமணர் சங்கம்:

*சமண சமயத்தில் (சைனர்) அதன் கோட்பாடுகளை மனதிலேற்றி ஒழுகிய ஏராளமான துறவிகள் பழங்காலத்தில் இருந்து வந்துள்ளனர். இக (இவ்வுலக) வாழ்விலிருந்து விடுபட்டு வீடு பேறடையும் நோக்கில் கடுமையான நோன்புகள் நோற்று, உண்ணா நோன்பால் உடல் வருத்தி முக்தியடையும் மார்க்கத்தைக் கடைப்பிடித்தவர்கள் ஏராளம். இந்த ஜைன துறவிகளின் சங்கத்தை அந்நாளில் நான்கு பிரிவாகப் பிரித்திருந்தனர். அப்பிரிவுகள் முறையே நந்தி கணம், சேன கணம், சிம்ம கணம், தேவ கணம் என அழைக்கப்பட்டன. 'கணம்' எனின் சங்கம் எனப்பொருள். இக்கணங்களிலும், கச்சை, அன்வயம் போன்ற உட்பிரிவுகளும் இருந்தன. இந்நான்கு கணங்களில் புகழ்பெற்ற கணம் நந்தி கணமாகும். வச்சிரநந்தியார் (ஆச்சாரியார்) நந்தி கணத்தை இரு பிரிவாகப் பிரித்து இரண்டாம் பிரிவுக்கு 'திராவிட கணம்' எனப் பெயரிட்டு அதனை மதுரையில் நிறுவினார்.*

*இந்த நிகழ்ச்சி கி.பி. 470-ல் களப்பிரர் ஆட்சி நடைபெற்ற கால அளவில் நடைபெற்றது. இதுவே வச்சிர நந்தியால் அமைக்கப்பட்ட திரமிள (தமிழ்) சங்கம். இத் திரமிள சங்கத்தில் சமண சமயத் துறவிகள் மட்டுமே இடம் பெற்றிருந்தனர். இவர்தம் பணி முற்றிலும் சமயப் பிரசாரம் மேற்கொள்வதாகும்.*

*வச்சிர நந்தியின் தமிழ்ச் சங்கம் கி.பி. 470-ல் நிறுவப்பட்டது எனும் செய்தி வரலாற்று ஆசிரியர் அனைவரும் ஒப்புக் கொண்ட ஒரு செய்தி எனினும், 'பழங்கால இந்திய வரலாற்றுக்கு சைன மூலங்கள்' என்னும் நூலை எழுதிய ஜியோதி பிரசாத் ஜெயின், வச்சிரநந்தி திராவிட சங்கத்தை அமைத்தது. கி.பி. 604-ம் ஆண்டு என்று கூறுகிறார். (Jyoti Prasad Jain, The Jains Sources of the History of Ancient india 100BC 900AD 1964. pp 160, 167) இவர் இவ்வாறு கூறுவது தவறென்பது அவர் மேற்கொண்ட கணக்கு முறையால் உணரலாம்.*

*இவர் விக்கிரம ஆண்டு 526 என்பதை சாலிவாகன 526 என்று கணக்கிடுவதால் இவருக்கு இந்த தவறு நேர்ந்துள்ளது. விக்கிரம ஆண்டு 526 என்பது கி.பி. 470 அல்லது 469 ஆகும். சாலிவாகன சகம் 526 என்று கணக்கிட்டால் அது கி.பி. 604 ஆகிறது. வச்சிரநந்தி விக்கிரம ஆண்டு 526-ல்*

(கி.பி. 470) மதுரையில் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார் என்பதே சரியாகும். களப்பிரர் ஆட்சி ஏறத்தாழ கி.பி. 575-ல் முடிவுக்கு வந்துள்ளது. களப்பிரர் ஆட்சிக்குப் பின்பு கி.பி. 604-ல் வச்சிரநந்தி தமிழ்ச் சங்கம் நிறுவியிருக்க முடியாது. எனவே வச்சிரநந்தி, கி.பி. 470-ல் திராவிட சங்கத்தை நிறுவினார் என்பதே சரியாகும். (திரு. மயிலை சீனிவேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம், பக்கம் 142)

வச்சிர நந்தியின் திரமிள சங்கம், இங்குள்ள தமிழ் சமணத் துறவிகளை மையப்படுத்தி அவர்கள் மூலம் சாதாரண மக்களை சமண சமயத்துள் ஆட்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட சங்கமாகும். அன்றி தமிழ்மொழி மீதான பற்றுதல் நோக்கில் அதன் வளர்ச்சிக்காக உருவாக்கம் பெற்றதன்று. இதுபற்றி பி.டி. சீனிவாச அய்யங்கார் தமது 'தமிழர் வரலாறு' எனும் நூலில் மிகத் தெளிவாக இவ்வாறு கூறுகிறார். "நாம் அறிந்துள்ள தமிழ்ச் சங்கம் (பாண்டியரின் தமிழ்ச் சங்கம்) அன்று. வச்சிரநந்தியின் திரமிள சங்கம், என்பது சாதாரண மக்களுக்கு சைன மதத்தைப் போதனை செய்யும் பொருட்டு தமிழ்நாட்டில் சைன சமயத்தாரால் அமைக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்" *(P.T. Srinivasa Iyangar, History of the Tamil 1929, p. 247)*

இக்கருத்துக்கு மாறாக, திரு. எம்.எஸ். இராமசாமி அய்யங்கார் மற்றும் எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகியோர் வச்சிர நந்தியின் திரமிள சங்கத்தை புலவர் குழாம் அமைந்த தமிழ்ச் சங்கமென வாதிடக் காரணங்களை நிரப்பி முன் வருகின்றனர். ஆனால் அவர்களது காரணங்கள் அபத்தமானவை என்பதோடு வரலாற்றுக்கு முரணானவை என்பதனை தக்க காரணங்களுடன் விளக்கி அவர்தம் கூற்றுக்கு மறுப்புத் தெரிவிப்பதில் வெற்றிகண்டுள்ளார் திரு. மயிலை வேங்கடசாமி அவர்கள். அவர் தமது களப்பிரர் ஆட்சியில் தமிழகம் எனும் நூலில் திரு. வையாபுரிப்பிள்ளை மற்றும் இராமசாமி அய்யங்கார் ஆகியோரது கருத்துக்களுக்கு போதிய விளக்கங்கள் அளித்துள்ளமையால் அவை பற்றி இங்கு எடுத்தாளத் தேவையில்லை என விட்டு விடுவோம்.

# 27

# களப்பிரர் காலத்து கலை வளர்ச்சி

சற்றேறக்குறைய முந்நூறு வருடங்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை வகித்த களப்பிரர்கள் குலம், தாங்கள் ஆட்சிபுரிந்த கால அளவில் வாழ்வியலுடன் ஒட்டிய நுண் கலை வளர்ச்சிக்குப் போதிய ஊக்கம் அளித்திருக்கக் கூடும் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஏனைய தகவல் களைப் போலவே இதற்கும் சரியான சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை என்பதே வருந்துதற்குரிய செய்தி. சங்க காலத்திலேயே நுண் கலைகள் வளர்ச்சி பெற்றிருந்ததை சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூற்களிலிருந்து உணர முடிகிறது. அதன்பின் உருவான களப்பிரர் காலத்தில் அந்த நுண் கலைகள் மேலும் வளர்ச்சியடைந்து உயர்நிலை அடைந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆயினும் அக்கால கலை வளர்ச்சி பற்றி அறிந்துகொள்ள போதிய சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை என்பதையும் மறந்து விடலாகாது.

நுண்கலைகள் பொதுவாக ஐந்து பிரிவென்பர். அவை கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, காவியக் கலை என்பவையாம். இதில் நம் நாட்டு வழக்கப்படி கட்டிடக் கலை, சிற்பக் கலை ஆகியவை இரண்டும் ஒரு சேர சிற்பக் கலை என்றே அழைக்கப்படுகிறது. இசைக் கலையில், கூத்து, நாடகம் போன்ற பிரிவுகளும் உண்டு. இனி களப்பிரர் காலத்து கலை வளர்ச்சி பற்றிக் காண்போம்.

### கட்டடக் கலை:

சைவம், வைணவம் போன்ற வைதீக மதங்களுடன், சமணம், பௌத்தம் போன்ற சமயங்களும் ஒருசேர தடம் பதித்து, தமிழ் மண்ணில் தன்னாட்சி செய்த காலம் களப்பிரர் காலம். எனவே இக்காலத்தில் இங்கே கட்டடக் கலை வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். நிச்சயமாக இச்சமய சார்பு கோயில்கள், விகாரைகள் போன்ற இறைத் தலங்கள் இக்காலத்தில் உருவாகியிருக்க சாத்தியமுண்டு. ஆனால் அவை செங்கல், மரம், சுண்ணாம்பு, இரும்பு என்பன போன்ற பொருட்களால் கட்டப்பட்டவை எனின் இந்நாள் வரை நிலைத்திருக்கச் சாத்தியமில்லை.

கருங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படும் கற்றளிக்கோயில் கட்டடங்களும், பாறைகளைக் குடைந்து அமைக்கப்படும் குகைக்

கோயில்களும் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் உண்டாகியிருக்கவில்லை. அவை மிகவும் பிற்காலத்தில் மகேந்திர (முதலாம்) வர்மன் காலத்தில்

கி.பி. 7-ம் நூற்றாண்டில் உருவாகத் தொடங்கியவை. 'கி.பி. ஆறாம் நூற்றாண்டுடன் முடிவுக்கு வந்த களப்பிரர் காலத்துக்குப் பின்பு வாழ்ந்த (கி.பி.7-ம் நூற்றாண்டு) திருநாவுக்கரசர் மற்றும் திருஞானசம்பந்தர் ஆகியோர் தங்களது தேவாரப் பதிகங்களில் கூறுகின்ற கோயிற் கட்டட வகைகளான கரக்கோயில், தாழற்கோயில், கொகுடிக்கோயில் பெருங்கோயில், இளங்கோயில், மாடக்கோயில், தூங்கானை மாடம் மணிக்கோயில் முதலான கட்டட வகைகள் களப்பிரர் காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் இந்த கட்டட வகையெல்லாம் திடீரென கி.பி. 7-ம் நூற்றாண்டில் தோன்றியிருக்க முடியாது. அக்காலத்தில் அவை செங்கற் கட்டடங்களாக இருந்திருக்கக் கூடும். பின்னர் கி.பி. 7-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் முதல் மாமல்லன் நரசிம்ம வர்மன் எனும் பல்லவ அரசன் காலத்தில் மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்ட பஞ்சபாண்டவர் ரதங்கள் முதலான கோயில் அமைப்புகள், அவன் காலத்துக்கு முன்னர் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் அல்லது அதற்கு முன்பு இருந்த செங்கற் கட்டடங்களின் மாதிரியைக் காட்டுகிற பாறைக்கல் அமைப்புகள், இந்த பாறைக் கற்கோயில்களில் பல அகநாழிகை (கர்ப்பகிருகம்) இல்லாமலே கட்டடத்தின் மேற்புறத் தோற்றம் மட்டும் பாறையில் அமைத்து கட்டப் பட்டுள்ளன. ஆகையால் மாமல்லபுரத்து இரதக் கோயில்கள் செங்கற் கட்டடங்களாக இருந்த பழைய கோயில்களின் தத்ரூப உருவ அமைப்புகள் என்பதில் ஐயமில்லை. (மயிலை சீனிவேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம்)

இனி களப்பிரர்கள் ஆண்ட காலத்து, இங்கே சமணரும் பௌத்தரும் தத்தம் சமய வழிபாட்டுக்கென சமணப் பள்ளிகளையும், பௌத்த விகாரைகளையும் கட்டியிருந்தனர் என்பதை மறுப்பதற்கில்லை. சமண சமயக் கோயில் சினகரம் என அழைக்கப்பட்டது (ஜினன்+நகரம்=ஜினகரம்). விஷ்ணு கோவில் விண்ணகரம் என்று அழைக்கப்பட்டது. அதுபோன்றே சமண, பௌத்த கோயில்கள் சேதியம் என்றும் அழைக்கப்பட்டன. அந்நாளில் பௌத்த பிக்குகள் உறைவிடமாய் திகழ்ந்த இடம் விகாரைகள் என அழைக்கப்பட்டன. அவை பெரும் பரப்பிலான கட்டடங்களைக் கொண்டு இயங்கின.

அத்தகைய விகாரைகள் காஞ்சி, நாகை, உறையூர், காவிரிப்பூம்பட்டினம் முதலான நகரங்களில் இருந்தன. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த விகாரை, நெடுஞ்சுவர்களும் பெரிய வாயில்களும் உடையதாக வெண்சுண்ணம் பூசப்பட்டு கயிலாயம் போலக் காட்சியளித்ததாகவும். அது கண்ணதாசன் என்னும் (களப்பிர அரசனின் அமைச்சன்) அமைச்சனால் கட்டப்பட்டது எனவும் அபிதம்மாவதாரம் என்னும் பௌத்த நூல் கூறுகிறது. அதுபோலவே சோழநாட்டில் பூதமங்கலம்

என்னும் ஊரில் இருந்த பௌத்த விகாரையைக் கட்டியவர் வேணுதாசன் என்று வினயவினிச்சயம் என்னும் நூல் கூறுகிறது. இவையெல்லாம் செங்கற் கட்டடங்களே.

## சிற்பக் கலை:

கட்டடக் கலையுடன் இணைத்தே சிற்பக்கலை பேசப்பட்டு வந்துள்ளது என்பதால் களப்பிரர் காலத்து சிற்பக்கலை பற்றி அறியும் சான்றுகள் வேறெதும் கிடைக்கவில்லை. மனித உருவங்களுடன் செடி, கொடி, பறவை, விலங்கு என பலவற்றையும் கலைஞன் தனது கைவண்ணத்தில் பொறித்து வைக்கும் வழக்கம் கி.பி. 7-ம் நூற்றாண்டளவில்தான் உருவானது என்பதைப் பார்த்தோம். அவ்வாறிருக்க கி.பி. மூன்று முதலான நூற்றாண்டுகளில் வழங்கிய சுதைச் சிற்ப நடைமுறைகள் இந்நாள் வரை நீண்டு நின்று நம் கண்ணுக்குக் காட்சி தருவதென்பது நடைமுறைச் சாத்தியமன்று. ஆதலால் அந்நாள் சிற்பக் கலைச் சான்றுகள் கிடைக்காமற் போனதில் வியப்பில்லை.

## ஓவியக் கலை:

வண்ணங்களால், எண்ணங்களுக்கு உயிருட்டிய கலை ஓவியக் கலை. அக்காலத்து ஓவியங்கள் பலவும் சுவர் மீது தீட்டப்பட்ட ஓவியங்களே. பௌத்த, ஜைன விகாரைகளிலும், பள்ளிகள் மற்றும் கோவில்களிலும் இதுபோன்ற சுவர் ஓவியங்கள் எழுதப்பட்டன. திருப்பரங்குன்றத்து முருகக் கடவுள் ஆலயத்தின் மணிமண்டபச் சுவர்களில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டதாக கடைச்சங்க கால பரிபாடல் உரைக்கிறது. இவையெல்லாம் அக்காலத்து ஓவியக்கலை பயன்பாட்டில் இருந்திருக்க சாத்தியம் உண்டு என்று உணரத் தூண்டுகிறதே அன்றி, களப்பிரர் காலத்து ஓவியங்கள் எனச் சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை.

## இசைக் கலை:

இசையும் கூத்தும் சங்க காலத்திலேயே சிறப்புறப் பேணப் பட்டு வந்தன என்பதை சிலப்பதிகாரம் உரைக்கின்றது. இசையெழுப்பும் பல்வேறு கருவிகளான யாழ், குழல், முழவு ஆகியவற்றின் பயன்பாட்டுடன் கூத்துக் கலையும் ஒருசேர வளர்க்கப்பட்ட பண்பாட்டு வாழ்வியலைப் பேணியவர்கள் தமிழர்கள். இந்த நடைமுறைகள் களப்பிரர் காலத்தும் தொடர்ந்து வந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. களப்பிரர் காலத்து வாழ்ந்த காரைக்கால் அம்மையார் பதிகம் எனும் இசைப் பாடல்களைப் பாடியுள்ளார். இவர் பாடிய பதிகம் முதல் பதிகம் என்று அழைக்கப்படுகிறது. திருவாலங்காட்டு சிவபெருமான் மீது பாடப்பட்டவை அந்த

பதிகங்கள். மூத்த திருப்பதிகம் என்றும் இதைக் கூறுவர் இதில் முதல் பதிகத்தின் பண் ‘நட்டபாடை’. இரண்டாவது ‘இந்தனம்’. இவர் தமது பாடல் வரிகளில் பண்களின் பெயர்களையும் இசைக் கருவிகளின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்.

“துத்தம் கைக்கிளை விளரிதாரம் உழைஇரி
ஓசை பண்கெழுமப் பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையொடு தகுணிச்சற்
துந்துமி தாளம் வீணை
மத்தளங் காடிகை முன்கை மென்தோல் தமருகம்
குடமுழா மொந்தை வாசித்
தத்தனமை வினோ டாடு மெங்கள்
அப்பனிடம் திருவாலங் காடே!”

என்பது அப்பாடல்.

களப்பிரர் காலத்து கூத்துக் கலை பற்றி ஓர் நூல் இயற்றப் பட்டிருக்கிறது. அந்நூலை விளக்கத்தனார் என்பவர் எழுதியுள்ளார். நூலின் பெயர் விளக்கத்தனார் கூத்து. இது அச்சுதன் என்னும் களப்பிரர் அரசன் காலத்தில் எழுதப்பட்ட நூல். ஆனால் இந்நூலின் கடவுள் வாழ்த்து செய்யுளைத் தவிர ஏனையவை ஏதும் கிடைக்கவில்லை.

## காவியக் கலை:

அறிவால் உணர்ந்து இன்புறும் அற்புதக் கலை காவியக் கலை. இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்கள் இன்னமும் மக்கள் மனதிடை நீங்கா இடம்பிடித்திருப்பதற்கு அவற்றுள் பொதிந்துள்ள காவியச் சுவையின் சிறப்பே காரணமாம்.

நவரசங்களையும் பிழிந்து கதை மாந்தர்கள்மூலம் கண்முன் நிறுத்தும் காவியக் கலை களப்பிரர் காலத்து சிறப்புடன் விளங்கிற்று என்பதற்கு சாட்சியமாய் திகழ்வது சீவக சிந்தாமணி மற்றும் பெருங்கதை காப்பியங்கள். சமணர்களால் இயற்றப்பட்ட இக்காவியங்களுக்குத் தமிழ் இலக்கிய வீதியில் என்றென்றும் இடமுண்டு.

# 28

## பிற்சேர்க்கை

சேர, சோழ, பாண்டியராம் மூவேந்தரை அச்சுதக் களப்பாளன் வெற்றிகொண்டு அவர்களைத் தளையிட்டு வைத்தபோது, அதனை அகற்ற வேண்டி அம்மன்னர்கள் பாடியதாகக் காணப்படும் சில வெண்பாக்களை யாப்பருங்கல விருத்தி உரை மேற்கோள்காட்டியுள்ளது. இதனை முன்னரே இந்நூலில் நாம் குறிப்பிட்டுள்ளோம். இந்நிகழ்ச்சியினை மேலும் உறுதிப்படுத்தும் வண்ணம் கிடைக்கப்பெற்ற சான்றாக ஈரோடு மாவட்டம், கொடுமணலில் கிடைத்த ஒரு ஓலைச்சுவடி கூறும் தனிப்பாடல் விளக்குகிறது. (நடன காசிநாதன் - களப்பிரர்)

இத்தனிப் பாடலில் சேர, சோழ, பாண்டியரை வென்ற அச்சுதக் களப்பாளனைத் தென்கரை நாட்டுக் களத்தூரைச் சேர்ந்த பூசல குல நல்லவன் என்பவன் வெற்றிகொண்டதால் அவனுக்கு ஆ தொண்டைமான் என்ற மன்னன் கொங்கு நாட்டில் 24 நாடுகளையும் ஆதொண்டை நாட்டில் 24 கோட்டங்களையும் பரிசாக அளித்து பட்டங்கள் பல வழங்கியமை குறிக்கப்படுகிறது.

ஆதொண்டைமான் எனக் குறிக்கப்படும் மன்னர் பல்லவ மன்னராக இருக்கலாம். எழுத்தமைதியினால் இந்த ஓலைச் சுவடி கி.பி. 18-ம் நூற்றாண்டின் இறுதி எனக் கொள்ளலாம்.

(நடனகாசிநாதன் - களப்பிரர்)

கொங்கு நாட்டுத் தனிப்பாடல்

மூலனூர் தொண்டைமானுக்குப் பட்டம் சூட்டியது.

"பார்மீதில் வருகின்ற பரிதாபி வருஷத்தில்

பங்குனிமுன் றாந்தியதியில்

பாண்டியன் சேரனுடன் சோழரைஅச் சுதக்களப்

பாளன் சிறை யில்வைத்துமே

ஆராய்ந்து வருகின்ற போர்மன்ன ரவர்வெல்வாய்
ஆதொண்ட மானழைத்து
அன்புபெறு முவெட்டு நாடுனக் கெய்தவே
ஆதொண்ட மண்டலத்தில்

தீராத இருப்பது நாலுகோட் டமுமளித்துத்
தென்திசைக் கேடுநாளில்
திறமான பூசகுல நல்லவ னெந்நாளும்
செம்பொனால் செய்தமுடியால்

தோராத வெற்றிபுனை ஆதொண்ட மான்வந்து
தொண்டைமான் நீயென்றுதான்
சூழுலகில் இருபத்து நாலுநா டுங்கண்டனது
தொண்டமாப் பட்டம் சூட்டினாரே!

காராளர் குலதிலக ராசபர மேசுவரன்
காளத்தி மலைக்காவலன்
காவேரி வாசகன் வாழரச மணவாளன்
களத்தூரில் பூசகுலனே

பாராளர் மூவர்சபை அச்சுதன் தன்னினால்
பார்வேந்தர் முடிகள் சூட்ட
பன்னிரண்டு பட்டமுள அன்றுகத் தொண்டைமான்
பலவரிசை பாரில்நல்கி.

வாராளர் வருகடல் தொண்டைமண் டலங்கொங்கு
வாளையார் ரிஷபகிரியும்
வையாறு வடகிழக்கு துகள்செய் யாறுதெற்கு
வடதிசைத் திருவேங்கடம்

சீராளர் நல்லவன் செம்பமுனை மெச்சியே
சேருமா மதுக்கரைக்கு
தென்திசைத் தொண்டைமான் அண்டநா கும்புரக்க
செயபன்றி யுள்ளளவுமே!

முன்னமொரு காவலில் சிறைவிடுக ராயர்புர
மூதூரில் வருராயர்முன்
முன்பாக வேபகுதி செல்வழிச் செலுத்திநீ
முனைபெற்ற ராயர்புதல்வன்

தன்னுடைய கைக்கிடாய்ச் செவிதனை அறுத்து
நவியினில் சங்கிலியுடன்
சவுரியத்துடனே யறுத்துநால் விடுத்தவன் யிவர்மகா
தாட்டீகன் எனமகிழ்ந்து

அன்னகரில் வருராயர் பலவரிசை நல்கியே
அருள்மூல னூர்விளங்க
அச்சுதத் தொண்டைமான் செம்பமுனைத் தொண்டைமான்
நல்லதம் பித்தொண்டைமான்

*மன்னர்சிறை விடுகுரா சத்தொண்டை மான்அருள்*

*மாந்தியப் பத்தொண்டைமான்*

*மைந்தனான வருசோழி யப்பத் தொண்டைமான்*

*மதுராதென் கரைநாடனே!"*

*(இச்சுவடியை ஈரோடு புலவர் சே. இராசு, தம்மிடம் காண்பித்து உதவியதாக நடன காசிநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.)*

# 29

## இறையனார் அகப்பொருளும் நக்கீரர் காலமும்

களப்பிரர் காலத்தில் சமண, பௌத்த சமயங்களின் ஆதிக்கம் மேலோங்கியபோது, வைதீக மதத்தின் வலிமை குன்றியதும் அதனை அடுத்து பக்தி மார்க்கம் மூலமாக வைதீக மதம் புனர்வாழ்வு பெற்றதும் முன்னரே இந்நூலில் பார்த்துள்ளோம். வைதீக மதத்தில் பக்தி மார்க்கம் தழைத்து வளர இறைவனைத் தலைவனாகவும், அவரை வணங்கும் அடியார்கள் தலைவி பாவத்திலும் சமைந்து, பாட்டுடைத் தலைவனைப் பக்திப் பரவசத்தில் மூழ்கித் திளைக்கும் மையலால் இறுகத் தழுவி முக்தி தேடும் பாங்கென இந்த பக்தி மார்க்கம் பரவலாயிற்று. அவ்வாறு இறைவனை காதல் வயப்பட்டு காணும் பக்தி நெறியினை கடைப்பிடிக்கக் காரணமாக அமைந்த நூலொன்று தேவையெனும் அவசியம் எழுந்தபோது உருவானதே இறையனார் அகப்பொருள் எனும் களவியல் நூல்.

கடைச்சங்க காலத்துக்குப் பின்னர்தான் அதாவது களப்பிரர் ஆட்சி தமிழகத்தே நிலவியபோதுதான் இந்த இறையனார் அகப்பொருள் எனும் நூல் எழுதப்பட்டது என்பதற்கு, இந்நூலின் உரைப்பாயிரம் கட்டியங் கூறுகிறது. “அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமுமென்க. அவர்களைச் சங்கம் இரீஇயனார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெரு வழுதியீறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியர் என்ப. அவன் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்திர மதுரை (இப்போதைய மதுரை) என்ப.”

இவ்வாறு உரைப்பாயிரங் கூறுவதால் கடைச்சங்க காலம் முடிந்த பிறகுதான் இறையனார் அகப்பொருள் எனும் நூல் இயற்றப்பட்டது என்பது புலனாகிறது. இனி இது எழுதப்படுவதற்கான காலத்தை உரைப்பாயிரம் உரைக்கும் வழி பார்ப்போம்.

“அக்காலத்துப் பாண்டிய நாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. (கடும் பஞ்சம்). செல்லப் பசி கடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாங் கூவி ‘வம்மின்’ யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகிறது, நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின் ஞான்று என்னை யுள்ளிவம்மின், என்றான். என அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்னறக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்னர் அரசன் ‘இனி நாடு நாடாயிற்றாகலின் நூல் வல்லாரைக் கொணர்க’

என்று எல்லா பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலே மென்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று 'என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம், எனச் சொல்லா நிற்ப, மதுரை ஆலவாயில் அழனிறக் கடவுள் சிந்திப்பான்; 'என்னை பாவம்! அரசற்கு கவற்சி பெரிதாயிற்று, அதுதானும் ஞானத்திடை யதாகலான், என்று இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத்தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்".

கடும் பஞ்சம் நீங்கி மக்கள் இயல்பான வாழ்க்கை நிலைக்குத் திரும்பியபோது, அரசன் மேற்கொண்ட முயற்சியாக மொழியறிவாளரைத் தேடும் முயற்சி சுட்டிக் காட்டப்படுகிறது. அதிலும் வாழ்வின் இன்றியமையாத பொருளதிகாரம் செய்யவல்லாரைக் கிடைத்திலது எனும் குறைபாட்டை எண்ணி மருகுவதும் காண முடிகிறது. இங்கே பொருளதிகாரம் என்பது அகத்துறைப் பொருளினைச் சுட்டிக்காட்டுகிறது. அப்பொருள் கற்க, அது ஞானத்தை நல்கும் என்று கூறப்படுகிறது. உரைப்பாயிரம் மேலும் உரைக்கும் செய்தியினைக் காண்போம்.

"இட்ட பிற்றை ஞான்று, தேவர் குலம் வழிபடுவான் தேவர் கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர் தெளித்துப் பூவிட்டுப் பீடத்தின் கீழ்ப்பண்டென்றும் அலகிடாதான் அன்று தெய்வத் தவக் குறிப்பினான் அலகிடுவனென்று உள்ளங்குளிர அலகிட்டான். இட்டாற்கு அவ்வலகினோடும் இதழ் போந்தன. போதரக் கொண்டு போந்து நோக்கினார்க்கு வாய்ப்புடைத் தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்டப் பார்ப்பான் சிந்திப்பான்; 'அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றானென்பது பட்டுச் செல்லா நின்றதுணர்ந்து நம் பெருமான் அருளிச் செய்தானாகும்' என்று தன் அகம்புகாதே கோயிற் றலைகடைச் சென்று நின்று கடைக்காப்பார்க் குணர்த்தக் கடைக்காப்பார் அரசர்க் குணர்த்த அரசன் புகுதடுகவென்று பார்ப்பானைக் கூவச் சென்று புக்கு காட்டக் கொண்டு நோக்கி, 'இது பொருளதிகாரம்! நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச் செய்தானாகற்பாலது! என்று அத்திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரை கவுரவித்து 'நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச் செய்த பொருளதிகாரம்! இதனைக் கொண்டுபோய்ப் பொருள் காண்மின்' என்றார்.

அவர்கள் அதனைக் கொண்டு போந்து கன்மாப்பலகை ஏறியிருந்தாராய் வுழி எல்லாரும் தாந்தாம் உரைத்த உரையே நன்றென்று சில நாளெல்லாஞ் சென்றன. செல்ல நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒருதலைப்படாது. நாம் அரசனுழைச் சென்று நமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டும் என்று

*கொண்டுபோந்து, அவனாற் பொருளெனப்பட்டது பொருளால் அன்றெனப்பட்டது அன்றாயொழியக் காண்டுமென, எல்லோரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென்றார். செல்ல அரசனும் எதிர் எழுந்து சென்று 'என்னை? நூற்குப் பொருள் கண்டீரோ? என, அது காணுமாறு எமக்கு ஓர் காரணிகனைத் தரல் வேண்டும்' எனப் 'போமின்' நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று. நுமக்கு நிகராவார் ஒருவர் இம்மையுனின்றே' என்று அரசன் சொல்லப் போந்து பின்னையும் கன்மாப் பலகை ஏறியிருந்து அரசனும் இது சொல்லினான்.*

*'யாங் காரணிகனைப் பெறுமாறு என்னைக் கொல்லென்று சிந்தித் திருப்புழிச் சூத்திரஞ் செய்தான் ஆலவாயிலவிர் கடைக் கடவுளன்றே! அவனையே காரணிகளையுந் தரல் வேண்டுமென்று சென்று வணங்கிடத்தும் என்று வரங்கிடப்ப, இடையாமத்து, 'இவ்வூர்' உப்பூரிகுடி கிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பான், பைங்கண்ணன் புன்மயிரான், ஐயாட்டைப் பிராயத்தான் ஒரு மூங்கைப் பிள்ளை உளன்; அவனை அன்னனென் றிகழாது கொண்டு போந்து ஆசனமேலிரீ இக்கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளா இருக்கும். அவன் குமார தெய்வம், அங்கோர் சாபத்தினாற் தோன்றினான்' என முக்காலிசைத்த குரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்றாக.*

*எழுந்திருந்து தேவர் குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரிக் குடிகிழா ருழைச் சங்கமெல்லாஞ் சென்று, இவ்வார்த்தை யெல்லாஞ் சொல்லி ஐயனாவான் உருத்திரசன் மனைத் தரல் வேண்டுமென்று வேண்டிக் கொடு போந்து, வெளியதுடீஇ, வெண்பூச்சூட்டி, வெண்சாந்தணிந்து கன்மாப் பலகையேற்றி இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப எல்லாரும் முறையே உரைப்பக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்த விடத்து ஓரோவழிக் கண்ணீர் வார்த்து மெய்மயிர் நிறுத்திப் பின்னர் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த விடத்து பதந்தோறுங் கண்ணீர் வார்த்து மெய்மயிர் சிலிர்ப்ப இருந்தான் இருப்ப ஆர்ப்பெடுத்து மெய்யுரை பெற்றாம் இந்நூற்கென்றார்.*

*"அதனால் உப்பூரிக்குடிக் கிழார் மகனாவான் உருத்திர சன்மனாவான் செய்தது இந்நூற்குரை யென்பாருமுளா; அவர் செய்திலர். மெய்யுரை கேட்டாரென்க. மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரை கண்டு, குமாரசுவாமியாற் கேட்கப்பட்டதென்க" (இறையனாரகப் பொருள், முதற் சூத்திர உரைப்பாயிரம்).*

இறையனார் அகப் பொருளின் உரைப் பாயிரம் எடுத்தாண்ட வரிகளை இங்குப் பார்த்தோம். இதன் உண்மை நிலைதனை ஆய்ந்து அறிஞர் பெருமக்கள்

பல விளக்கவுரை தந்துள்ளனர். முதலாவதாக இந்த அகப்பொருள் நூல் எழக்காரணமாக அமைந்த சூழல் எதுவென்பதைக் காண்பது முதன்மைப் பெறுகிறது. கடைச் சங்கத்தாருக்கு இலக்கண நூலாகத் தொல்காப்பியமே அமைந்ததென உரைப்பாயிரம் உரைக்கின்றது. அதேநேரம் பொருளிலக்கணம் கிடைக்கப் பெறாமல் இன்னலுற்றதாகவும் செய்தி கூறப்படுகிறது. இது எவ்வாறு நிகழ்ந்தது? அவ்வாறாயின் தொல்காப்பியப் பொருளதிகாரம் அந்நாளில் மறைந்துபோயிற்றா? தொல்காப்பியம் முழுமையாக எவ்விதக் குறைவும் இன்றி இப்போதும் திகழ்கிறது என்கின்றபோது அந்நாளில் மட்டும் அப்படியோர் நிகழ்வு ஏற்படச் சாத்தியமில்லை என்றல்லவா தோன்றுகிறது. இனி தொல்காப்பியம் இருக்க அதைப் பொருட்படுத்தாது ஆலவாயிற் கடவுள் புதிதாக அறுபது சூத்திரங்கள் அடங்கிய அகப்பொருள் நூலை ஆக்கித் தர அமைந்த காரணந்தான் என்ன?

பொருளதிகாரத்துக்கு உரைகாண வல்லார் கிடைக்காமற் போனதாக மற்றோரிடத்தில் உரைப் பாயிரம் சுட்டிக் காட்டுகிறது. அப்படியானால் தொல்காப்பியம் பொருளதிகாரத்துடன் இருந்தது என்பது தெளிவாகிறது. ஆனால் அவ்வாறு தொல்காப்பியம் இருக்க அதனைக் கண்டுகொள்ளாமல், இறைவன் அந்நூலுக்கு விளக்கவுரை எழுதித் தராமல் அல்லது அதற்குரிய வல்லாரைச் சுட்டிக் காட்டாமல் மற்றோர் புதிய நூலை 'களவியல்' எனும் பெயரில் ஆக்கித் தரக் காரணந்தான் என்ன?

சரி இந்த நூலுக்கு சங்கப் புலவர்களால் உரை காண முடிந்ததா எனின் அதுவும் இல்லை. அதற்கும் ஒரு காரணிகனைக் காட்டும் பணி ஆலவாயிற் கடவுளே மேற் கொண்டார். அக்காரணிகனும் ஊமைப்பிள்ளை அவரோ நக்கீரர் உரைதனை நல்லுரை எனவுணர்த்தி மெய் சிலிர்த்து கண்ணீர் உகுத்தார்.

இவ்வாறெல்லாம் இறையனார் அகப்பொருளாம் 'களவியல்' நூலுக்குப் பழமை கற்பித்து அதன் இயல்பு நிலையிலிருந்து மாற்றி புதியதோர் தெய்வீக நிலையை கற்பிக்கக் காரணமாக அமைந்தது. களப்பிரர் காலத்தே ஏறக்குறைய கி.பி. 5-ம் நூற்றாண்டளவில் தோன்றிய இந்நூலை அந்நாளில் உருவான பக்திமார்க்க இலக்கியங்களுக்கு முன்னோடியாக ஆதாரமாக எடுத்துக்காட்டும் முயற்சியே என்பது பல்வேறு எடுத்துக்காட்டுகளால் தமிழறிஞர்கள் முன்னிறுத்தியுள்ளனர்.

சங்க காலத்தே, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் காலத்தில் இருந்த நக்கீரர், நெடுஞ் செழியனுக்குப் பின்னர் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி காலத்து வாழ்ந்த உருத்திரசன்மானுடன் இணைத்து கதை புனைந்து இந்நூலின் பழமையை வெளிக்காட்டத் துணிந்தவர்கள், அதனுள் பொதிந்த பல்வேறு முரண்பாடு களைக் கவனிக்கத் தவறிவிட்டனர் என்பதே உண்மை.

இறையனார் அகப்பொருளின் காலம் களப்பிரர் காலம் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என்பதுடன் இதற்கு உரை கண்டவர் சங்க காலத்து நக்கீரர் அல்ல. மாறாக அந்நாளில் வாழ்ந்த நக்கீர தேவநாயனாரே ஆவார் என்பதும், இருவரையும் ஒருவராகப் பழமை கருதி இணைத்துக் காட்டி உரைப் பாயிரத்தில் உண்மைக்குப் புறம்பாக திரித்துக் கூறியுள்ளனர் என்பதும் இதன்மூலம் விளங்குகிறது.

மானிட வாழ்வில் நிகழும் காதல் நிகழ்வுதனைச் சிற்றின்பமென்றும், அதுவே இறைவன் மீது காணப்படின் பேரின்பமென்றும் வகை திரித்து வைதீக மதங்கள் தங்களின் தனித்தன்மையை நிலைநாட்ட எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவே இறையனார் அகப்பொருளின் காலம் பற்றிய முரண்பாடும். அந்நூலுடன் சங்கப் புலவர் நக்கீரரை இணைத்துக் காட்டியதும் என்பது வெள்ளிடைமலை. இந்தப் புதிய வைதீகக் கருத்துகளின் வழியே ஆழ்வார்களும் நாயன்மார்களும் இறைவன் மீது பக்தி மணம் கமழும் அகப் பொருள் பாக்களை பாடி வலம்வர மேலும் ஒரு நூற்றாண்டு காலம் காத்திருக்க வேண்டியிருந்தது என்பதும் வரலாறு காட்டும் செய்தியே.

# 30

## வீழ்ச்சியுற்ற களப்பிரர்

தொண்டை மண்டலம் நீங்கிய தமிழகத்தின் இதர பகுதிகளில் வலுமிக்க ஆதிக்க சக்தியாக சற்றேறக்குறைய முந்நூறு ஆண்டுகள் விளங்கிய களப்பிரர்கள், மண்ணின் மைந்தர்களான பாண்டியரின் எழுச்சியாலும் பல்லவர்தம் பராக்கிரமத்தாலும் தங்கள் செல்வாக்கை இழந்து இங்கே ஆண்ட நிலைமாறி அண்டிய நிலைக்கு உந்தப்பட்டதையே வரலாறு சுட்டிக்காட்டுகிறது.

தொடக்கக் காலத்தில் தாங்கள் வைணவம் சார்ந்து இருப்பினும் இங்கே பலமாக வேரூன்றியிருந்த சமண, பௌத்த சமயங்களின் ஆதரவாளர்களாகத் தங்களைக் காட்டிக்கொண்ட இவர்களில் சிலர், அச்சமயங்களை ஏற்றும் பிற சமய நெறிகளை எதிர்த்தும் அரசியல் நடத்தியதால் ஒட்டுமொத்தமாக களப்பிரர்கள், சமணர்கள் என்னும் மாயை உருவாயிற்று எனலாம்.

அதனால்தான் களப்பிரர்களை சிங்கள நூலான சூலவம்சம், நிகந்தர் (ஜைனர்) என்று குறிப்பிட்டுப் பேசுகிறது. இதனை முன்னரே இந்நூலில் குறிப்பிட்டுள்ளோம். சமண, பௌத்த மதங்கள் இங்கே பரவலாக கோலோச்சியதாய் அறியப்பட்டாலும் அவை, தமிழ் நிலத்தின் சாதாரண மக்களை முழுமையாக ஈர்ப்பதில் வெற்றிபெறவில்லை. கல்வியாளர்கள் மற்றும் செல்வந்தர்களின் ஆதரவைப் பெற்றதால் அவை ஆதிக்க சக்தியாக விளங்கி ஆட்சியாளர் களின் ஆதரவையும் பெற்றன. ஆனால் நாளடைவில் அந்த நிலை மாறியதுடன், இங்கே தொடக்க காலம் முதல் ஒழுகப்பட்டு வந்த சைவ, வைணவ மத நடைமுறைகள் தலைதூக்கும் நிலை வந்துள்ளதும், அவைகளுக்குப் பாமர மக்களிடையே இருந்த செல்வாக்கும் இம்மண்ணின் தொன்மையான ஆட்சியாளர்களுக்கு சாதகமாக உருவாகி மக்கள் எழுச்சிக்கும், மாற்றத்துக்கும் வித்திட்டன.

மக்களில் பெரும்பான்மையினருக்கு களப்பிரர் ஆட்சி மீது இருந்த எதிர்ப்பு மனப்பான்மையும், பாண்டிய மரபினரின் எழுச்சியும் அப்பகுதியில் களப்பிரர்களைக் களையெடுக்கக் காரணமாயிற்று. பாண்டியன் கடுங்கோன் என்பவன் கி.பி. 6-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் களப்பிரர்களை வென்று தாங்கள் இழந்த பாண்டிய நாட்டை மீட்டான். இச் செய்தியினை பாண்டியரின் செப்பேடு விவரிக்கின்றது.

"அளவரிய ஆதிராஜரை அகல நீக்கி
அகலிடத்தைக் களப்ரனென்னுங் கலிஅரைசன்
கைக்கொண்டதனை இறக்கிய பின்
படுகடன் முளைத்த பரிதிபோல பாண்ட்யாதி ராஜன்
வெளிற்பட்டு விடுகதி ரவிரொளி விலக வீற்றிருந்து
வேலை சூழ்ந்த வியலிடத்துக் கோவும், குறும்பும் பாவுடன்
முருக்கிச் செங்கோலோச்சி வெண்குடை நீழற்றங்கொளி
நிறைந்த தரணி மங்கையைப் பிறர் பாலுரிமை
திறவிதி நீக்கித் தன்பாலுரிமை நன்கன மமைத்த
மானம் பேர்த்த தானை வேந்தன் னெடுங்கா மன்னரொளி
நகரழித்த கடுங்கோ னென்னுங் கதிர்வேற்றென்னான்"

என்பது (வேள்விக்குடிச் செப்பேடு கூறும் செய்தி, வரி 39-46) பாண்டியர் கடுங்கோன் களப்பிரரை வென்று தம் நாட்டை மீட்டதனை தளவாய்புரச் செப்பேடும் பறைசாற்றுகிறது.

"கற்றறிந்தோர் திறல் பரவக் களப்பாழரைக் களைகட்ட
மற்றிரண்டோன் மாக்கடுங்கோன் மானம் பேர்த்தருளிய கோன்"

என்பதும் தளவாய்புரச் செப்பேடு உரைக்கும் செய்தி. (வரி 131-132)

'மானம் பேர்த்த தானை வேந்தன்' என்றும் 'மானம் பேர்த்தருளிய கோன்' என்றும் தமிழ் செப்பேடுகள் பாண்டியன் கடுங்கோனை சிறப்பித்துக் கூறுவதைப் போலவே, வடமொழி (சமஸ்கிருதம்) சுலோகமும் அவனை 'மானம் பேர்த்த கடுங்கோன்' என்றே சிறப்பிக்கின்றது. ஆதலால் மானம் பேர்த்த கடுங்கோன் என்பது அவனது சிறப்புப் பெயராக இருக்க வேண்டும். (தளவாய்புரச் செப்பேடு சுலோகம் 23, வரி 39-40)

பாண்டியன் கடுங்கோன் களப்பிரரை வென்று நாட்டைக் கைப்பற்றிய அதே கால அளவில் அல்லது அதற்கு சற்று முன்னரோ, அன்றிப் பின்னரோ தொண்டை மண்டலத்து பல்லவ வேந்தன் சிம்ம விஷ்ணு சோழ நாட்டினை களப்பிரர்களிடமிருந்து கைப்பற்றினான் என்பதனைப் பள்ளன்கோயில் செப்பேடு மற்றும் வேலூர்பாளையம் செப்பேடு ஆகியவை விளக்குகின்றன.

*“சிம்மவர்மனுடைய மகன் சிம்மவிஷ்ணு. அந்த சிம்ம விஷ்ணு மற்றொரு சிம்மவிஷ்ணு என்னும் அரசனை வென்றான். அவன் பலத்தில் வெற்றி வீரனாகிய அர்ச்சுனனைப் போன்றவன். வில் வித்தையிலும் வீரன். போரிலே வெற்றிகொள்வதில் சமர்த்தன்” என்றும்,*

*“உண்மை, தியாகம், வணக்கம் போன்ற பரிசுத்தமான நற்குணங்கள் யாரிடத்தில் உள்ளனவோ, வீர குணங்கள் யாரை அடைக்கலமாகக் கொண்டுள்ளனவோ, அந்த சிம்மவிஷ்ணு, கவேரன் மகளான காவிரி ஆற்றை மாலையாகவும், செழுமையான நெல் வயல், கரும்பு வயல்களை ஆடையாகவும், கமுகுத் தோட்டம், வாழைத் தோட்டங்களை ஒட்டியாணமாகவும் அணிந்த சோழ நாட்டைக் கைப்பற்றினான்” என்று பள்ளன்கோயில் செப்பேடு கூறுகிறது. (செப்பேடு சுலோகம் 4, 5)*

*“புகழ்வாய்ந்த திறலையுடையவனும், பகைவர்களின் ஆற்றலையடக்கும் பலமுள்ளவனுமான சிம்ம வர்மனுக்கு வெற்றி வீரனான சிம்ம விஷ்ணு மகனாகப் பிறந்தான். அவன் கமுகுத் தோட்டங்களும் நெல் வயல்களும் நிறைந்த கவரேன் மகளான காவிரி ஆற்றினால் அலங்கரிக்கப்பட்ட சோழ நாட்டைக் கைப்பற்றினான்” என்று வேலூர்ப்பாளையச் செப்பேடு கூறுகிறது. (செப்பேடு, சுலோகம் 10)*

*இவ்விரு செப்பேடுகளும் பல்லவ அரசன் சிம்ம வர்மனின் மகன் சிம்ம விஷ்ணு, சோழநாட்டை அப்போது ஆட்சி புரிந்து வந்த சிம்ம விஷ்ணு எனும் மன்னனை வென்று சோழ நாட்டைக் கைப்பற்றினான் என்று உரைக்கிறதே தவிர வெல்லப்பட்ட சிம்ம விஷ்ணு களப்பிரனா? அல்லது சோழனா என்று எடுத்துரைக்கவில்லை.*

*ஆயினும் அந்நாளில் சோழ நாடு களப்பிரர் கைகளில்தான் இருந்து வந்துள்ளது என்பதும், சோழர்கள் அடிமைப்பட்டு கிடந்தார்களே தவிர ஆட்சியதிகாரத்தில் இருந்திருக்கவில்லை என்பதும் வரலாற்று ஆய்வாளர்கள் ஆய்ந்தறிந்த உண்மை என்பதால், வெல்லப்பட்ட சிம்ம விஷ்ணு களப்பிர அரசரே என்பதில் வரலாற்று அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்படவில்லை. பல்லவர்கள் களப்பிரரை வென்று சோழ நாட்டைக் கைப்பற்றிய பின்னர் சோழர்கள் பல்லவர்களுக்கு கட்டுப்பட்டு வாழ்ந்தனர். கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் சோழர்களின் எழுச்சி விஜயாலய சோழன் மூலம் உருவாகிறது.*

*கன்னடத்தை தாய்மொழியாகக் கொண்ட களப்பிரர்கள் வடக்கே உருவான சாதவாகனர்களின் எழுச்சியின் விளைவாக தென்புலம் நோக்கி இடம்பெயரத் தலைப் பட்டனர். அவ்வாறு அவர்கள் தென்புலம் நோக்கி வருகை தந்த*

வேளையில், தென்னகத்தே முடியுடை மூவேந்தர்களாய் ஆட்சிபுரிந்த சேர, சோழ, பாண்டியர்கள் பெரிதும் நலிவடைந்த நிலையில் அவர்களிடையே மாற்றார் வலிமையை தடுத்து நிற்கும் பேராற்றல் குன்றிப் போயிருந்தது. இதுவே களப்பிரர்கள் இங்கே காலூன்றக் காரணமாக அமைந்தது. அவ்வாறு வடவேங்கடத்தின் வடபுலத்து நின்றும், கன்னட நாட்டிலிருந்தும் தமிழ் மண் மீது பரவலாகப் படை திரட்டி வந்த இம்மரபினர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இங்கே ஆட்சி செலுத்தும் உரிமை பெற்றனர்.

களப்பிரர்கள் இங்கே காலூன்றிய காலம் மூவேந்தர்கள் முடியாட்சி முடிவுக்கு வந்த காலம் மட்டுமல்ல; அந்நாளில் தமிழ் மண்ணில் முழுமையான செல்வாக்குப் பெற்றிருந்த வைதீக (சைவ, வைணவ) மதங்கள் தமது ஆளுமையை சிறுகச் சிறுக இழந்து ஜைன (சமண), பௌத்த சமயங்களின் ஆதிக்கம் வலுவான காலமும் அதுதான்.

களப்பிரர்கள் தாங்கள் இருந்த பகுதிகளில் சமண சமயத்தின் தாக்கத்தினால் பெரிதும் ஈர்ப்புற்று வந்தவர்கள் என்ற நிலையில் இங்கேயும் அதன் ஆதிக்கம் இருந்தது. அவர்களை ஆட்சிக் கட்டிலில் உறுதியுடன் நிலைப்பெற்றிருக்க துணைபுரிந்தது. சமண, பௌத்த மதங்கள் ஏறக்குறைய சகோதர மதங்கள் என்பது போல் செயல்பட்டதனால், மதம் களப்பிரர் ஆட்சியில் ஒரு தடையாக இருக்கவில்லை.

களப்பிரர் தமிழ் மண்ணில் முழுமையாக ஆதிக்கம் செலுத்தி ஒரு குடை கீழ் ஆட்சிபுரிந்திருப்பதாகக் கருதுவதற்கும் இடமில்லை. ஏனெனில் இங்கே ஆட்சிபுரிந்தவர்களில் சிலர் வைணவ சமயச் சார்பு மிக்கவர்களாகவும் தொடக்க காலத்தில் இருந்து வந்ததை மறுப்பதற்கில்லை.

'அச்சுதன்' எனும் திருமாலின் பெயரினையே களப்பிரர் அரசர்கள் தங்கள் பொதுப் பெயராகக் கொண்டிருந்தது இந்த கருத்துக்கு வலுசேர்க்கிறது. அத்துடன் தமிழ் நிலத்தின் ஒரு பகுதியாகிய தொண்டை மண்டலத்தில் பல்லவர் ஆதிக்கம் நிலைபெற்றிருந்ததும் அங்கே களப்பிரர் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சி மேற்கொள்ளாது இருந்ததும் முடிந்தவரை அமைதியுடன் ஆட்சி செலுத்தும் பாங்குடன் அவர்கள் நடந்துகொண்டதனை உணர முடிகிறது.

அத்துடன் சமண, பௌத்த மதங்கள் என்னதான் ஆதிக்க வலிமை பெற்றிருந்தபோதும் அது அந்நாள் வரை தமிழ் மண்ணில் ஆளுமை பெற்றிருந்த வைதீக மதங்களின் வேரினைக் களைந்து விதை தூவி முளைக்கும் நிலைக்கு உயரவில்லை. இந்த மண்ணின் மிகச் சாதாரணமான வாழ்வுக்குச் சொந்தக்காரர்களான ஏழைக் குடிகளிடத்தே சமய மாற்றங்கள் எவ்வித சலனத்தையும் உருவாக்கியிருக்க வில்லை. அதனால் களப்பிரரும் சரி, அவரைச்

சார்ந்த சமண சமயமுஞ் சரி, இம்மண்ணின் இதயத் தமனிக்குள் ஊடுருவிப் பிரவாகம் செய்ய இயலவில்லை என்பதே சரி.

முடிவேந்தர்களையே தங்கள் தலைவர்களாக எண்ணி வாழ்ந்து பழகியவர்களால், சில நூற்றாண்டுகளாக ஆதிக்கம் செலுத்தும் களப்பிரர் மன்னர்களைத் தங்கள் வேந்தர்களென ஆராதனை செய்ய இயலவில்லை என்பதே உண்மை. அதனால் ஆட்சியிழந்த மூவேந்தர்தம் அனுதாபிகளும் ஆதரவாளர்களும் ஆட்சி மாற்றத்துக்கான சூழலை விதைக்கும் பணியில் ஆற அமர ஈடுபட்டிருந்தனர். அதிலும் குறிப்பாகப் பாண்டிய நாட்டில் இப்பணி மிகவும் சிறப்புற நடைபெற்றது. சற்றேறக்குறைய முந்நூறு ஆண்டுகளாய் ஆட்சியில் இருக்கும் களப்பிரர்களை முறியடித்து பாண்டிய மண்ணைக் காப்பாற்ற அவர்கள் தருணம் பார்த்திருந்தார்கள்.

களப்பிரருக்கு கீழடங்கி ஆட்சிபுரிந்த பாண்டிய குலத்து வேந்தன் ஒருவன், சிங்கள மண் மீது படை நடத்திச் சென்று, அங்கேயிருந்த சிங்கள வேந்தரை வென்று அம்மண்ணில் சில தலைமுறை காலம் ஆட்சிபுரிந்ததனை இந்நூலில் வேறோரிடத்தில் விளக்கப்பட்டுள்ளது. களப்பிரரை சூல வம்சம் எனும் சிங்கள நாட்டு நூலொன்று நிகந்தர் (ஜைனர்) என்று கூறுகிறது. மொக்கல்லானன் என்ற சிங்கள அரச குமாரன் தமிழ்நாட்டுக்கு வந்து இங்கிருந்த களப்பிர அரசரின் உதவி வேண்டியபோது, அவர் அவனுக்கு சேனைத் தலைவனைத் தந்து உதவினார். இதனைத்தான் சூலவம்சம் எடுத்துக் கூறுகிறது. இதிலிருந்து களப்பிரர் அரசர்தம் சமண சமயச் சார்பும், பாண்டியர்களின் அரசியல் எழுச்சியும் புரிந்துகொள்ளலாம்.

இனி பாண்டியர்கள் மற்றும் பல்லவர் களப்பிரரை வென்ற காலம் பற்றிய ஆய்வை நோக்குவோம். இவர்கள் களப்பிரரை வீழ்த்திய காலம் ஏறத்தாழ கி.பி. 575 என்றே கருதப்படுகிறது. இதில் பாண்டியன் கடுங்கோன் கி.பி. 575 அல்லது அதற்குச் சற்று முன்னதாக களப்பிரரை வெற்றிகொண்டிருக்க வேண்டும் என்று திரு. சதாசிவ பண்டாரத்தார் கூறுகிறார். (பாண்டியர் வரலாறு, பக்கம் 34). களப்பிரர்கள் கி.பி. 590-ல் வெல்லப்பட்டனர் என்று திரு. நீலகண்ட சாஸ்திரி கருதுகிறார். (K.A.N. Sastri, The Pandiyan Kingdom). கி.பி. 575-ல் களப்பிரர்கள் வீழ்ச்சியடைந்தனர் என்று கொள்வதே சரி என்று தோன்றுகிறது என்பது திரு. மயிலை சீனிவேங்கடசாமி கருத்து (களப்பிரர் ஆட்சியில் தமிழகம், பக். 67)

இந்நிலையில் களப்பிரர் காலம் பற்றிய ஆய்வில் சற்று மாறுபாடான கருத்தை முன்வைக்கிறார் திரு. P.T. சீனிவாச அய்யங்கார். அவரது கருத்துப்படி கி.பி. 450-க்கும் 550க்கும் இடையில் களப்பிரர் ஆட்சி தமிழகத்தில் இருந்தது என்றும், கி.பி. 6-ம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியர் களப்பிரர்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினர் என்றும் கூறுகிறார். (P.T. Srinivasa Iyengar, History of the Tamils 1929, P. 534) ஏறக்குறைய 150 வருட காலம் களப்பிரர் ஆட்சி

நடைபெற்றது என்பது இவர் கணிப்பு. ஆனால் அது ஏற்புடையதல்ல. கி.பி. 250 முதல் 575 வரையிலான காலத்தில் களப்பிரர்கள் தமிழகத்தை ஆட்சிபுரிந்துள்ளனர் என்பதனை இந்நூலின் தொடக்கத்திலேயே நாம் எடுத்துக்காட்டியுள்ளோம்.

இதுபோக, பாண்டியர்கள் களப்பிரரை வென்று தம் நாட்டை மீட்டதுபோலச் சேரரும் களப்பிரரை வென்றிருக்கக் கூடும். ஆனால் அது சரியென நிறுவுவதற்குரிய சான்றுகள் கிடைத்தபாடில்லை. பாண்டிய-பல்லவ அரசர்களிடம் தங்கள் நாட்டை இழந்த களப்பிரர்கள், அதன்பின்னர் பேரரசர் நிலையிலிருந்து வீழ்ச்சியடைந்து சிற்றரசர் நிலைக்குத் தள்ளப்பட்டனர். தஞ்சாவூர், செந்தலை முதலான ஊர்களில் இவர்களது சிற்றரசு இருந்து வந்துள்ளது.

இவ்வாறு சிற்றரசர் நிலைக்குத் தள்ளப்பட்ட இவர்களைத் தான் மாமல்லன் (முதலாம் நரசிம்மவர்மன்), இரண்டாம் நந்திவர்மன் ஆகியோரும் சாளுக்கிய வேந்தர்களான முதலாம் விக்கிரமாதித்தன், விசுபாதித்தன் ஆகியோரும் வெற்றிகொண்டதாகப் பேசப்படுகிறது. இந்த களப்பிரர்கள் தமிழகத்தை முழுமையாக ஆட்சிபுரிந்த களப்பிர வேந்தர்கள் அல்ல; வலுவிழந்து சிற்றரசு நிலைக்குத் தள்ளப்பட்ட குறுநில ஆட்சியாளர்கள்.

இவ்வாறு சிற்றரசர்களாக இருந்து வந்த களப்பிரர் சந்ததியினரையே பின்னாட்களில் முதலாம் நரசிம்ம வர்ம பல்லவன் (மாமல்லன்), இரண்டாம் நந்திவர்மன் ஆகியோரும், சாளுக்கிய அரசர்களான முதலாம் விக்கிரமாதித்தியன், விஜயாதித்தியன் முதலியோரும் வெற்றிகொண்டதாக வரலாற்றில் குறிப்புகள் உள்ளன. தமிழ் நிலத்தில் (தொண்டை மண்டலம் நீங்கலாக) ஏறக்குறைய முழுமையினையும் தங்கள் ஆட்சியில் தக்கவைத்திருந்த களப்பிரர்கள், பாண்டிய, பல்லவ அரசுகளின் எழுச்சியால் தோற்கடிக்கப்பட்டு நிலை மாற்றம் கொண்ட பின் ஆங்காங்கே உதிரிகளாய்ச் சில சிற்றரசுகளைப் பேணி வாழ்ந்த நிலையில், அவர்களையும் தங்கள் அசுர பலத்தால் வெற்றிகொண்ட செய்தியினையே, பல்லவ, சாளுக்கிய மன்னர்களின் பிற்கால வரலாற்றுப் படிமங்களில் இடம்பெற்றுவிட்டன.

சிற்றரசர்களாக இருந்தவர்கள் காலப்போக்கில் மேலும் வலுவிழந்து ஊர்த் தலைவர்களாகவும், அரசு ஊழியர் களாகவும் பல்வேறு கடை, இடை, நிலைப் பொறுப்புகளை வகித்து வந்துள்ளனர் என்பது பற்றியும் இதற்கு முன் சில அத்தியாயங்களில் பார்த்துள்ளோம். களப்பிரர் சந்ததியினர், தமிழ்நாட்டில் களப்பாளர் என்னும் மரபினராக வாழ்ந்து வந்தமைக்கு சான்றுகள் கிடைத்துள்ளன. இதுபற்றிய ஆய்வுகள் நீண்டபோது இந்த களப்பாளர்கள் பிற்காலத்தே வேளாண் குலத்தவருடன் இணைந்தவராகக் கருதப்பட்டதும் சுட்டிக்காட்டப்படுகிறது. இவர்களைப் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகிறது.

*திருப்புகலூர் சாசனத்தில் 'நெற்குன்றங்கிழான்' என்ற களப்பாளர் தலைவர் ஒருவர் பேசப்படுகிறார். இவரே திருப்புகலூர் அந்தாதி பாடிய நெற்குன்றவாணன் என்பவர். இவர் ஒட்டக்கூத்தரின் சம காலத்தவர். இதுதவிர, சைவ சமய ஆச்சாரியர்களுள் முதல்வரான மெய்கண்ட தேவரின் தந்தையார் அச்சுதக் களப்பாளர் என்றறியப்படுகிறார். இவரையும் களப்பாளர் மரபினர் என்றே கணித்துள்ளனர். மேலும் விஜயநகர சாம்ராஜ்யத்தின் புகழ்பெற்ற மாமன்னர் கிருஷ்ண தேவராயரின் அமைச்சருள் ஒருவரான வடமலை யாரும், இரு சமய விளக்கம் எழுதிய இளவல் அரிதாசரும் களப்பாளர் மரபினரே. மேலும் நாயன்மார்கள் அறுபத்து மூவருள் ஒருவரான கூற்றுவ நாயனார் பற்றி முன்னரே பார்த்துள்ளோம். இவர் தமிழ்நாட்டை ஒரு குடைகீழ் ஆட்சி புரிந்தவர் என்பது சேக்கிழார் வாக்கு. நம்பியாண்டார் நம்பிகள் இவரைக் களப்பாளனாகிய கூற்றுவனே! என்று குறிப்பிடுவதால் இவர் களப்பிரர் வழிவந்தவர் என்பதை அறியலாம்.*

## முத்தரையர்-களப்பிரர்-மறவர்-க(ள்)ளவர்

*முத்தரையர் தமிழினத்து மரபினர் என்பதும் அவர்களும் இங்கே படையெடுத்து வந்த களப்பிரர்களும் ஓரினம் என்கின்ற ஆய்வு முடிவு தவறானது என்பதும் பல்வேறு சான்றுகள் மூலம் இந்நூலில் எடுத்துக் கூறியுள்ளோம்.*

*அதே நேரம் ஆந்திரா, கர்நாடகப் பகுதிகளில் வாழ்ந்த முடிராஜ் மற்றும் முத்துராஜ் இனத்தவர்களும், தமிழகத்து முத்தரைய மரபினரும் தங்களுக்குள் தொடர்புகொண்டவர்கள் என்றும், இந்த முத்துராஜ, முடிராஜ மரபினரும் களப்பிரர் இனத்தாரும் இரத்த உறவுகளே எனும் ஆய்வு முடிவும் ஒரு சிலர் முன்வைத்துள்ளனர். அவ்வகையில் களப்பிரர்களின் ஆட்சி முடிவுக்கு வந்த பின்னர், அவர்கள் இந்த நிலத்து மக்களுடன் ஒன்றுக்குள் ஒன்றாகக் கலந்து தனித்தன்மை மாறிப் பல்வேறு பிரிவாய் உருவாகியிருக்கக் கூடும் என்கின்ற கருத்தையும் ஒதுக்கிவிடுவதற்கில்லை.*

*முத்தரையர் எனும் வீர மறவர் கூட்டம் தமிழ்நிலத்தே ஆட்சியதிகார எல்லைக்குள் வளையவந்த வேளையில் அவர்களின் பின்னே அணிவகுத்த இனமாக மறவர்கள், கள்ளர்கள் எனும் பிரிவினர் அடையாளங் காணப் பட்டுள்ளனர். செய்யுந் தொழிலை வைத்து உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்ட அந்த காலகட்டத்தில், வேளாண் தொழில் புரியும் மக்கள் உயர்ந்த குடியினராக கருதப்பட, அவர்களுக்கும் சற்றே கீழானவர்களாய் இந்த கள்ளர், மறவர் ஆகியோர் சமூகத்தில் அறியப்பட்ட நாட்கள் இருந்தன. அவை நாளடைவில் மாறி அவர்கள் உயர் குடியினராய் அறியப்பட்ட காலம் ஒன்று உருவானது இதை,*

*“கள்ளரும் மறவரும் மெல்ல மெல்ல வெள்ளாளரானார்கள்.” என்ற சொற்கோவை தெளிவுபடுத்துகிறது.*

*கி.பி. 3-ம் நூற்றாண்டில் இங்கே வந்தேறிய களப்பிர இனத்து மக்கள் இங்குள்ள முத்தரையர், மறவர்கள் ஆகியோருடன் திருமண உறவை உருவாக்கிக்கொண்டு இனக் கலப்பை உருவாக்கினர். அதுபோலவே சோழ நாட்டுப் பகுதியில் வேளாண் குடிகளுடன் களப்பிரர் மற்றும் மறவர் இனத்து மக்கள் திருமண உறவு கொண்டு சோழ நாட்டு களப்பிரர்கள் உருவானார்கள். இவர்களுக்கும் பாண்டிய நாட்டு உயர் குடியினராய் கருதப்பட்ட மர நாடார் இனத்தாருக்கும் இடையே தொடர்ந்து பகைமை இருந்து வந்துள்ளது.*

*கி.பி. 8-ம் நூற்றாண்டில் களப்பிரர்கள் தங்களது வழித் தோன்றல்களாகக் கருதப்பட்ட முத்தரைய அரசர்களால் கைவிடப் பட்ட உறையூர் (சோழ) அரசுக்கு ஆதரவு தந்தனர். அதுபோலவே பாண்டிய நாட்டில் உருவான களப்பிரர் வழித்தோன்றல்கள் பாண்டிய மர நாடார்களுக்கு எதிராக சோழ அரசுக்கு தங்கள் ஆதரவைத் தந்தனர். கள்ளர், மறவர், அகமுடையார் என்னும் படை வீரர் குலத்து மக்கள் முத்துராஜா வகுப்புடன் தொன்றுதொட்டு தொடர்பு கொண்டவர்களாக இருந்து வந்துள்ளனர். இவர்கள் அனைவரும் தங்களது அரசரின் ஆணைக்கு ஏற்ப (முடிராஜ்-முத்துராஜ்) உயிர் துறக்கவும் தயங்காத போர் வீர மரபினர். இந்தக் குணம் களப்பிரர் குலத்தின் ரத்த உறவான முடிராஜா, கள்ளர், மறவர், அகமுடையார் என அனைவருக்கும் பொருந்தும். தேவர் எனும் அரச மரபினர் மறவர்கள் மற்றும் கள்ளர் இனத்திலிருந்து உருவான சந்ததியினரே என்பர்.*

*கள்ளர், மறவர், அகமுடையார் ஆகியோர் அரசுப் பணியில் அதிகாரிகளாகவும், படை வீரர்களாகவும், தளபதிகளாகவும் இருந்து வந்துள்ளனர் என்பது பல்வேறு செய்திகள் உரைக்கும் தகவல்கள். ஒரு படையில் கள்ளர்கள் பிற்பகுதியிலும், மறவர்கள் முற்பகுதியிலும் இருந்து போரிடுவர் என்பது வழிவழியாகச் சொல்லப்பட்டு வரும் செய்தி. பின்னாட்களில் அகமுடையார் பிரிவினர், காவல் துறையிலும் ‘சேர்வை’ எனப்படுவோர் அரசுப் பணியிலும் அதிகமாக இடம்பெற்றுள்ளனர்.*

*களப்பிரர்கள் இங்கே வட இந்தியப் பகுதியிலிருந்து (களப்பிரர்-களப்ரா) தென்னகத்துக்கு சமண சமயத்துடன் வரக் காரணமாக அமைந்தது, சந்திர குப்த மௌரியரின் கன்னடத்துப் படையெடுப்பே என்றும் ஒரு தகவல் உண்டு.*

*களப்பிரர்களை வென்று, சோழ நாட்டுப் பகுதியைக் கைப்பற்றிய பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணுவின் சிலையானது அவரது பட்டத்து (அரசி) மகிஷியுடன் மாமல்லபுரம் ஆதிவராஹ மண்டபத்தில் பார்க்கலாம்.*

*கி.பி. 600-ல் பாண்டிய அரசர் குலம் தழைத்து மேலோங்கிய பின்பு கி.பி. 640-ல் மாறவர்மன் அரிகேசரி பாண்டியனால் 8000 சமணர்கள் கழுவேற்றப்பட்டதாக வரலாற்றுச் செய்தி உண்டு. இந்த சமணர்கள் களப்பிர இனத்தவராக இருக்கவும் வாய்ப்புண்டு. பாண்டியர்கள் அரசாட்சி வலுவடைந்த காலகட்டத்தில் அங்கிருந்த களப்பிரர்கள் விரட்டப்பட்டு அவர்கள் தஞ்சையை ஆண்ட முத்தரையர் அரசில் இடம் பெற்றதாகவும் தகவல்கள் கூறுகின்றன.*

*மறவர் இனத்து மக்கள் வீரச்செறிவு கொண்டவர்கள். மறவர் எனும் சொல் வடமொழியினின்று வந்ததெனக் கருதப்படுகிறது. இச்சொல்லுக்கு 'கொல்' என்பது பொருளாம். அவ்வாறெனின் மறவர்- கொல்பவர் ஆகிறார். நெஞ்சுரம் மிக்க இவர்கள் தங்களது செயல் திறத்தால் அச்சொல்லுக்கு திறம் கூட்டி வாழ்ந்து வந்துள்ளனர்.*



**சந்திர குப்த மௌரியர்**

*அகமுடயார்கள் எனும் சொல் அகம் உடையார் என்ற சொல்லின் மருவிய நிலை என்பர். இவர்கள் மன்னர் குலத்தின் அந்தரங்க காவல்கள். இவர்களின் சேவை கணக்கிற்கொண்டு 'சேர்வை' எனும் பட்டம் இவர்களுக்கு வழங்கப்பட்டது.*

*'களரி' என்ற சொல் படைக் களத்துக்கான ஒரு சொல். இன்றைக்கும் அது 'களறிப்பயற்று' என்ற வீர விளையாட்டின் பெயரால் கேரளத்தின் வட பகுதி (மலபார்)யில் அறியப்பட்டு வருகிறது. களரிக்கும் களப்பிரர் இனத்துக்கும் தொடர்பு உள்ளதா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று.*

*'படை' எனும் சொல்லிலிருந்து 'படையாட்சி' என்ற சொல் உருவானதாகக் கருதப்படுகிறது. அதுபோலவே வன்னியர், மறவர், கள்ளர், அகமுடையார்*

*ஆகியோரும் வெவ்வேறு காரணப் பெயரால் உருவான இனத்தவர்களே. இப்பெயர்கள் இலங்கையில் முக்குவ (மீனவர்) குலத்திலும் சில பிரிவுகளுக்கு வழங்கப்படுகிறது. இவர்கள் அனைவரும் களப்பிரர் வழித்தோன்றல்களே என சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன.*

*இனி கொங்கு வேளாளர் இனத்து மக்களும் (கன்னடத்தைப் பேசும் பிரிவினர்) களப்பிரர் வழிவந்தவர்களே என்று கருதப்படுகிறார்கள். விவசாயம் சார்ந்து வந்த இவர்கள் தமிழகத்தின் வடகிழக்குப் பகுதிகளில் பரவலாக வசித்து (கோவை, சேலம், ஈரோடு, நீலகிரி) வரலாயினர். இவர்களை சங்க இலக்கியங்கள் வடுகர்கள் (வடபகுதி மக்கள்) என்றே அழைக்கிறது.*

*இனிச் சற்றேறக்குறைய மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தை ஆண்டு அனுபவித்த களப்பிரர் குலம், காலப்போக்கில் காணாமற் போனதாகக் கருதுவது அறிவுடைமை அல்ல. அதேநேரம் களப்பிரர்கள் தங்கள் அரசியல், ஆட்சி, அதிகாரம் ஆகியவற்றை விட்டு விட்டு சாதாரண மக்களுடன் மக்களாக ஒன்று கலந்து தமிழ் மண்ணில் முளைவிட்ட விதைகளாக மாறியிருக்க வேண்டும்.*

*கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னர் உருவான பல்வேறு அரசியல் மாற்றங்களுக்கிடையே, களப்பிர, களப்பாள அடைப்பெயர்கள் மாறி, மருவி, அவர்கள் ஒன்று கலந்த தமிழினப் பெயர்களாகவே உருவாகியிருத்தல் வேண்டும் என்றே எண்ணத் தோன்றுகிறது. சாதாரண மக்களின் ஆதரவும், நெருங்கிய தொடர்பும் இல்லாது போனதால் களப்பிரர் குலத்து அரச சந்ததியினர் மீண்டும் தமிழ் மண்ணில் தங்களது ஆட்சியை நிலைநாட்டும் வாய்ப்பினைப் பெறமுடியவில்லை என்பதையே இறுதியான முடிவெனக் கொள்ளலாம்.*

*இதுவரையிலான ஆதாரங்களின் வழியே களப்பிரர் காலத்தை அறிய முடிந்தபோதும் அவர்களது சந்ததியினர் மற்றும் ஆட்சிமுறை போன்ற அரிய தகவல்கள் போதுமான வரை கிடைக்கப் பெறவில்லை. இனிவரும் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி முடிவுகளும் புதிய கண்டுபிடிப்புகளும் அந்த வரலாற்றுச் சுவடுகள் மீது வெளிச்சம் வீசுகையில் புதிய உண்மைகள் உலகிடை ஒளிவீசும். அவற்றின் வழி அறியாமற்போன அவர்தம் வரலாற்றை அறிவோம் எனும் நம்பிக்கையுடன் களப்பிரர் காலத்தை நிறைவு செய்கிறேன்.*

# நூலாக்கம் பெற உதவியவை


The Tamils 1800 Years ago

- வி. கனகசபை பிள்ளை

History of South India

- கே.ஏ.என். சாஸ்திரி

History of India

- சத்தியநாராயண ஐயர்

தமிழ் இந்தியா

- எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை

சங்க இலக்கியங்கள், Ancient India

- Rc. மஜூம்தார்

களப்பிரர் ஆட்சியில் தமிழகம்

- மயிலை சீனிவேங்கடசாமி

பாண்டியர் வரலாறு

- ம. இராசசேகர தங்கமணி

களப்பிரர்

- நடன காசிநாதன்

Thiruttani and Velancheri coper plates, Velencheri plates of Aparajith transtaltion

- Dr. நாகசாமி

யாப்பருங்கலம், வைணவமும் தமிழும்

- E.S. வரதராச அய்யர்

Studies in Ancient Tamil Law and Society

- டாக்டர் ஆர். நாகஸ்வாமி

இலக்கிய சாசன வழக்காறுகள்

- மு. இராகவையங்கார்

முத்தரையர்

- நடன காசிநாதன்

பெரிய திருமொழி

- திருமங்கை ஆழ்வார்

எபிகிளாடிகா இந்திகா

- கிருஷ்ண சாஸ்திரி

A short History of Ceylon

- H.W. Codrington 1929

Epigraphia Zeylanica

- S. Paranavifara

Journal of the Royal Asiatic Society January 1934

- Rev. H. ஹீராஸ்

Journal of Madras University, Kalabhra in the Pandian Century

- எம். அருணாசலம்

பெரியபுராணம்,

The Peacock, the national bird of India

- P. தங்கப்பன் நாயர்

First Kalabhra Coin

- S. Ramayya

South India paleography

- டாக்டர் பர்னல்

சோழர்கள்

- திரு. நீலகண்ட சாஸ்திரியார்

தமிழ் எழுத்தின் வரிவடிவம்

- இ. கோவிந்தராசனார்

The Jains Sources of the History of Ancient India

- ஜோதி பிரஸாத் ஜெயின் மற்றும் இணையதளங்கள்.

Printed Books

- கி.பி. 20-ம் நூற்றாண்டு வரையிலான காலம் வரை களப்பிரர் எனும் ஆட்சியாளர்களைப் பற்றிய செய்தி அறியப்படாமல் இருந்தது. பாண்டியரின் வேள்விக்குடிச் செப்பேடு கிடைத்த பின்புதான், இந்த மண்ணை சில நூற்றாண்டுகள் ஆட்சி செய்தவர்கள் களப்பிரர்கள் என்னும் வேற்று மரபினர் என்ற உண்மை உலகறிந்தது.

- களப்பிரர்கள் பௌத்த, சைன (சமண) மதங்களை ஆதரித்து வந்தனர். இந்த மதங்களின் 'தெய்வ பாஷை' அதாவது இறை வணக்க மொழியென்பது பிராகிருதம். தமிழ் நிலத்தில் காலூன்றிய களப்பிரர்கள் படிப்படியாக பல்லவர்கள் ஆட்சி செய்த தொண்டை மண்டலம் தவிர்த்து ஏனைய சோழ, பாண்டிய, சேர அரசுகளின் நிலப் பகுதியைக் கைப்பற்றி அரசாட்சியை நிறுவினர்.

- களப்பிரர்கள் மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. 6-ம் நூற்றாண்டு வரை வலிமைமிக்க ஆட்சியாளர்களாக இருந்துள்ளனர். அதன்பின் அவர்கள் பாண்டியர்களால் வெல்லப்பட்டனர்.

- சோழ நாட்டில் வலுவாகத் தங்களை நிலைநிறுத்திக் கொண்ட களப்பிரர்கள், காலப்போக்கில் பாண்டியர்களும் பல்லவர்களும் சோழ நாட்டை கண் வைக்கத் தொடங்கியதும், அவர்தம் எதிர்ப்புக்கு முன்னே படை நடத்த முடியாமல் சோழ நாட்டைக் கைவிட்டு கொங்கு நாட்டுப் பகுதியில் குடியேறத் தொடங்கினர்.

- களப்பிரர்கள் தமிழுக்கு ஆக்கம் அளிக்கும் செயலில் ஈடுபடவில்லை என்றே வைத்துக்கொண்டாலும் அதன் வளர்ச்சியில் தலையிட்டு எத்திங்கும் இழைக்கவில்லை.

விகடன் பிரசுரம்

THAMIZHAKA VARALATRIL KALAPPIRAR KAALAM

₹ 135

(1st Edition)

002243